ஸ்ரீராமஜயம்.

ஸ்ரீமத்ராமாயணம்.

உத்தரகாண்டம்.

இஃது

பெங்குளூர். பேயாபிசு-ரயிட்டர்.

ம-ா-ா-ஸ்ரீ. மெய்யூர்.

சுப்பராயமுதலியார்

கேட்டுக்கொண்டபடி,

திரிசிரபுரம்.

தமிழ்த்தலைமைப்புலவராகிய

வி. கோவிந்தபிள்ளையவர்களால்

பலபிரதிகளைக் கொண்டாராய்ந்து

வழுஉக்களைக் களைந்து,

தேவர்சேனாபதிநிவாசபுத்தகநிக்ஷேபத்

தலைவராகிய

புங்கத்தூர்.

அருணாசலமுதலியார்குமாரர்

கந்தசாமிமுதலியாரால்

ம்o

திருவிருத்தம்.

ஆகூo

பால்குரிகி.

குமாரசா... ன-முற்றிற்று.

களாநிதி அச்...

பதிப்பிக்...

செ...

இரக்தாக்ஷி...

படலவட்டவணை.

படல அட்டவணை-முற்றிற்று.

பிழைதிருத்தம்.

பக்கம்.	பாட்டு.	வரி.	பிழை.	திருத்தம்.
௧௭	௧௪௮	௧	சொதி	சோதி
,,	,,	௨	சாரங்க	சார்ங்க
௨௩	௧௮	,,	கோண்டோ	கொண்டோ
௨௬	௨௯	௩	போரா	பேரா
௨௭	௫௫	௨	மீளும்	மீளும்
௩௧	௮௧	௩	ஸிர்	சீர்
௩௨	௯௮	௨	சூழ்தர	சூழ
௪௧	௨௯	௧	புரியு	புரிய
,,	௨௭	௨	இருக்கும்	இருக்க
௪௩	௬௭	௧	வணவ்கி	வணங்கி
௪௮	௯௨	௪	கர்திருவர்	கந்திருவர்
௫௫	௧௫௪	௨	விரவணை	விராவணை
௫௯	௧௫௯	,,	ரோனிறு	ரொனிறு
௬௪	௨௩௭	௪	வுற்றன	வுற்றனர்
௯௯	௨௪௯	,,	மைந்தன	மைந்தன்
௧௦௨	௩	௨	வீளம்பு	விளம்பு
௧௦௩	௮	௩	தின்று	திந்நா
௧௦௪	௨௦	௪	பிள்ளாய	பிள்ளாய்
௧௧௦	௭	௧	மரசாக்	மரசர்க்
௧௧௭	௯௪	௨	கோளே	கொளே
,,	௯௫	௧	கன்றுல்	கண்றுல்
௧௩௪	௧௨	௧	மோய்ம்பி	மொய்ம்பி
௧௪௨	௨௩	௪	டயங்கி	யடங்கி
,,	௨௪	,,	யொழிற்	பொழிற்

பிழைதிருத்தம்-முற்றிற்று.

எரியுறெஞ்சினனென்னிடையிற்றைநாடொடங்கி
மருவினீரொனின்மங்கையிருங்களுக்கடாத
கருவுண்டாமெனச்சபிப்பவக்கன்னியர்கலங்கி
வெருவியோடினர்திசைதொறும்வேறுவேறாகி. (௩௨)

அரியநான்மறைப்பொருளினையங்கையிற்கனிபோற்
றெரியுமாமுனிதிரணவிந்துவின்மடக்கன்னி
புரியுமாதவப்புலத்தியன்சாபமங்கறியாள்
கரியவார்குழற்கன்னியர்தங்களைத்தேடி. (௩௩)

பண்டுபோல்விளையாடிடப்பயமிலளெய்த
வண்டுசேர்மலர்க்குழலினன்மறையொலிகேட்டுத்
தண்டுருண்டிடைதாங்குகைத்தவமுனிதன்னைக்
கண்டலும்மவள்வயிற்றிலுண்டாயதுகருப்பம். (௩௪)

மேனியானதுவெளுத்துத்தன்விழிகளும்பசப்ப
மானிலேக்கினுண்மற்றதன்காரணமறியாள்
தான்விரைந்துபோய்த்தந்தையைவணங்கவந்தன்மை
யானகாரணமாங்கவனென்னெனவறைவாள். (௩௫)

பாங்கிமார்களைத்தேடியான்படர்வனமெய்தி
யொங்குமாதவப்புலத்தியனுறைவிடமுற்றே
னீங்கென்மேனிபோயிவ்வண்ணமாயினதென்ன
வாங்கியோகத்தினிருந்தவன்புகுந்தவாறறிந்தான். (௩௬)

அறிந்தமாமுனியரும்பெறற்கன்னியையுடன்கொண்
டிறந்தமாதவப்புலத்தியனிருப்பிடமெய்தி
நிறைந்தகேள்வியாய்நினக்கிவடாரமாகைக்குச்
சிறந்துளாள்குணவதியெனச்செப்பினன்கொடுத்தான். (௩௭)

கொடுத்தநாண்முதற்கொம்பனாள்கோதறுமுனிவற்
கடுத்தவேவல்செய்தாங்கினிதொழுகிடவந்தக்
கடுத்தவெவ்வினைகடிந்தவன்காதலிதன்மே
லெடுத்தபேரருளுடையனாயிவ்வுரையியம்பும். (௩௮)

காதன்மேவுநின்றேழியராயகன்னியைச்
சீதநீடுபூஞ்சோலையிற்றேடியான்சொல்லும்
வேதவோசைநீகேட்டலின்விச்சிரவாவென்
றே[illegible]நீதியானொருவனைப்பெறுதியாலென்றான். (௩௯)

அந்தவாசகமருண்முனிகூறலுமுவந்த
சிந்தையாடிருவயிற்றினிற்றிசைமுகன்றனக்குத்
தந்தைதோன்றியதொன்மைபோற்றவநெறிதழைப்ப
வந்துதோன்றினன்வைச்சிரவாமறைவிளங்க. (௪0)

தன்னினேர்பிறரில்லவன்றனக்கருந்தந்தை
யன்னமாமுனியறம்புரிந்தொழுகலினவற்குப்

பன்னுமாமறைபகர்பாத்துவசனத்தெய்வ
வன்னியேயெனுங்கன்னியைக்கொடுத்தனன்மகிழ்ந்து. (௫௧)

தேவவன்னியச்செய்தவமுனிவனுக்குரைத்த
வேவல்செய்தவளினிதிருந்தொழுகிடவந்தப்
பாவைதன்வயிற்றோன்றினன்பல்லுலகுள்ளோர்
யாவரும்மனமகிழ்ந்திடவெழின்மணிப்புதல்வன். (௫௨)

விரிஞ்சனேமுதலாகியவேதியருவகை
புரிந்தனெஞ்சினர்புரந்தாறுநியர்புகுந்து
தெரிந்துநோக்கிவச்சிரவணனெனப்பெயர்செப்பித்
திரிந்துபோயினர்திசைதொறுஞ்செயினைவாழ்த்தி. (௫௩)

விரிந்தவேதங்கள்விளம்பியபொருள்களின்முடிவைத்
தெரிந்துகண்டவைச்சிரவணன்செய்தவந்தன்னிற்
புரிந்தநெஞ்சினன்புரையறுமுனிவனம்புக்கான்
சரிந்துநீவினையோடிடத்தருமமுந்தழைப்ப. (௫௪)

தோயமேதனக்காகாமாகவுந்தாக்கும்
வாயுவேயுணவாகவுமன்றுபோறத்தை
யோமாகியுமிராசனனுகியுயிமஞ்
சாய்விலாதுபல்லாண்டுநின்றருந்தவஞ்சரித்தான். (௫௫)

அன்னதன்மைவைச்சிரவணனருந்தவஞ்செய்ய
முன்னைநான்முகன்றோன்றியிம்மூவுலகத்தி
துன்னையொப்பவர்யாவருமில்லையென்றுரைத்துச்
சொன்னயாவையுந்தருகுவன்சொல்லுதியென்றான். (௫௬)

இலகுமாமணியெழின்முடியிந்திரனியம
னலகிலாவலிவருணனுங்கவர்களோடொப்ப
வுலகபாலகனாகவுமொண்ணிதிநனக்குத்
தலைவனாகவும்வேண்டுவன்றுவெனத்தந்தான். (௫௭)

வரவுபோக்கினன்மனோகதியுடையதுவானத்
திரவிதேரினுநெடியதிரோமுலகுள்ளோர்
விரவியேறினும்வெளியிடமிருவதுவேகப்
புரவியில்லதுபுட்பகவிமானமுங்கொடுத்தான். (௫௮)

கொடுத்துமைந்தநீபோதெனவாசிகள்கூறி
விடுத்துவிண்ணவர்சூழ்தரவிரிஞ்சனேகியபின்
தடுக்கவொண்கலாவருளுடைத்தனபதிதனைப்பெற்
றெடுத்ததாதைக்குப்பெற்றனயாவையுமியம்பி. (௫௯)

பின்றுங்கூறுவான்பிதாமகன்பெருவரந்தக்தா
னின்னதானத்திலிருத்தியென்றியம்பலனென்றுத்
துன்னலார்களாற்றுன்றுதற்கரியதாய்த்துறக்க
மன்னதானபெருள்செனவருண்முனிகூறும் (௬௦)

வேறு.

திசைமுகன்வரமெனும்வலிகொடுதிசைதொறும்
வசைமுகம்வளர்தரமகிதலநலிதரு
நசைமுகன்வழிநகர்தனைவிடுதரணியி
னிசைமுகம்வளர்தரவெனமுனியிவைசொலும். (௪௭)

குடதிசைகுணதிசைதழுவியகுரைகட
லிடைநரைமயிருதலையிமையமதெனுமலை
வடதிசையுளதருமலையாசிதுவென
விடமுடையுலகவரிடுபெயருடையது. (௪௮)

மயிலியலுமையிளமகளெனவுடையது
குயின்மொழியவளொடுகுளிர்சடையானுறை
கயிலையையொருபுடையுடையதுகதிரவன்
வெயிலுழைவருமரமிடைதடமுடையது. (௪௯)

பகுமுகமொடுதிகழ்பகிரதியிழைதரு
மொகுமொகுமெனுமொலிமுழவொலியதுவர
வகமகிழுறுபதவளியிசைமுரற
மிகமயினடமுறுவிரிபொழிலுடையது. (௫0)

எதிரெதிர்மணிமுடியிமையவர்பொழிலுடை
வெறிமலர்மதுநுகர்விரிசிறைமதுகர
முறுதலுமதுநுகரிவரொனவுவகையொ
டுறுபதமெதிர்கொளுமரவமதுடையது. (௫௧)

மலைதலின்மனமெனவரியரவெழுமதி
குலைகுலைகுலைதருகுடுமியதுடையது
கலகலவெனவெழுகழையொடுபுனலொலி
சலசலவெனவிழுதடவொலியுடையது. (௫௨)

இனையனவெழிலுடையிமையமதெனுமலை
தனையுறுகிளையொடுதழுவுதிதழுவிய
பினையதனிடைவளர்பெருநிதியொடுமிரு
வெனமுனியிவைசொலவிசைமனமுடையவன். (௫௩)

வேறு.

எந்தையுரைத்ததுசெய்வனெனத்தனதனிருங்கிளையோடிலங்கைவிட்டுச்
சிந்தையெனுங்கடுந்தெய்வத்தேரேறித்திகழிமையக்குன்றஞ்சேர்ந்து
தந்திரமாகடறழுவத்தசக்கிரிவன்றன்னகரிவர்துசார்ந்து
மந்திரிகண்முடிசூட்டமாமணிமண்டபத்தின்மிசைமகிழ்ந்திருந்தான். (௫௪)

உழந்துயரும்பார்க்காயுலகனைத்துமுண்டுமிழ்ந்தவொருவன்முன்னு
ளழன்றிலங்கைபாழாக்கவன்றுமுதற்பாதாளமடைந்துளோர்க
ளிழந்ததனம்பெற்றவர்போலிராக்கதர்களிரைத்திண்டியிழந்ததங்கள்
பழம்பதியிற்குடிபுகுந்துபண்டுபோற்குடியிருப்பவிலங்கைவேந்தன். (௫௫)

தடையில்லாவலியில்லையரம்பையர்க்குத்தம்முலைகடம்மைத்தாங்க
விடையில்லையென்னைப்போலிமைப்பளவிலெவ்வுலகுமுட்டிமீளும்

நடையில்லையெனப்பழிக்குநன்கையடற்சூர்ப்பநகைநலத்தைக்கண்டு
விடைவல்லோனெனவிரும்புவித்துருசிங்கவனுக்குவிரும்பியீய்ந்தான்.

ஆங்கொருநாட்டசக்கிரீவனடவிமிசைவேட்டைபோமளவிலாங்கோர்
தேங்கமழ்பூங்குழலியொடுதிகழ்மணிப்பூண்மயனவனைச்சென்றுசேர
வீங்கிவளையுடனேகொண்டியாவருமில்லாவனத்துவந்தோயாவன்
பாங்குபெறவுளாயென்றதசக்கிரீவன்பகரமயன்பகரலுற்றான். (௫௭)

தாமவெம்பயத்தோயான்றயித்தியர்கோன்மகனென்னத்தருவேன்பண்டு
மாமலர்மேற்றிருவொக்கும்வடிவுடையதனுச்சனையைவாகேளுரிய
வேமபுரியென்பதெனக்கிருப்பாகயானிருமித்தவனூநாறுங்
காமமெனும்பெருங்கடற்கோர்கரைகாணுலதந்தானுண்டிருந்தகாலை. (௫௮)

அங்கவடன்மணிவயிற்றில்வந்துபிறந்தவள்வண்டோதரியென்பாளிம்
மங்கையுடன்பிறந்தோர்கள்மாயாவிதுந்துமிவில்வலியின்மிக்கா
ரிங்கிவடன்குணத்துக்குமெழிலுக்குமிகரொக்கும்வானோர்காலு [ல்லும்.
தெங்குழன்றிவ்வனத்திடைப்புகுந்தேனென்றுரைத்திங்கிவையின்சொ

குலம்வேண்டுமென்றிருப்பார்குலத்துள்ளார்கல்வியிறுற்குறையாஞானப்
பலம்வேண்டுமென்றிருப்பார்தந்தைமார்பரந்தபெருஞ்செல்வமுள்ள
தலம்வேண்டுமென்றிருப்பார்தாய்மார்களவ்வனமுநலமுஞ்சார்ந்த
நலம்வேண்டுமென்றிருப்பார்நாருழன்மங்கைமார்நலத்தின்மிக்கார். (௬௦)

பண்புடையகுடிப்பிறப்பும்பழிப்பில்லாப்பேரழகும்பரந்தகேள்வி
நுண்பொருளைநீரொழியப்பாலுகருமன்னம்போனுக்கித்திரு
மொண்பொருளுமிந்நான்குமுடையாரைக்கிடையாதிவ்வுலகந்தன்னிற்
பெண்பெறுகைதனைப்போலப்பெரியதுயர்தானுண்டோபேசுங்காலே. (௬௧)

பின்னுமயன்கூறுவனின்பேரெழிலுமவ்வனமும்பேசவேண்டா
முன்வழியுமுன்பதியுமுன்பெயருமுன்னலமுமுரைத்தியென்ன
வன்னவனுமயன்மைந்தன்மகன்மைந்தனவிலிலங்காபுரியையாளு
மன்னவன்பேர்தசக்கிரீவன்மறைகளோராயிரம்யான்வல்லேனென்றான்.

இன்னடக்கேட்டசக்கிரீவனிவைசெப்பச்சேயிழையைவளர்த்துவைத்துக்
கொண்டிருந்தபயன்பெற்றேனெனமகிழ்ந்துகுண்டிகைநீருதகஞ்செய்ய
வெண்டிசையும்போற்றுதிறலிராவணனென்றுனெழிலரக்கரொவரும்போற்ற
வண்டமருங்குழல்வண்டோதரியைமணஞ்செய்ததற்பின்மகிழ்ந்துமாமன்.

தாளார்தண்டாமரையோன்றன்மேலேவிடுமவனுயிர்கொண்டன்றி
மீளாவேலுங்கொடுத்துமயன்போகமெல்லியலையுடனேகொண்டு
தோளாறுமேழிரண்டுசுடர்முடிகளினைந்துமம்பொலிந்துதோன்ற
வாளார்திண்படைசூழமதிலிலங்கைவளநகரின்மன்னன்புக்கான். (௬௪)

மன்னும்வயிரோசனன்றன்மகன்மகளாம்வச்சிரசுவாலையென்னுங்
கன்னிதனையணிவிரக்கழற்கும்பகன்னன்கைப்பிடித்தபின்பு
தன்னெதிரில்கற்றிருவத்தலைவன்சைலூடனன்றந்தவேற்கண்
மின்னிடையாள்சரமைதனைவிளங்குபுகழ்வீடணன்றுன்விதியிற்கொண்டான்

புத்தகவிளம்பரம்.

இதனால் இசுபராசாதகங்களையடைய விரும்பும் புண்ணியவான்களுக்கு அறிவிப்பதியாதெனில் - ம-ா-ா-ஸ்ரீ. இயற்றமிழாசிரியர்-திரு. விசாகப்பெருமாளையர். வித்துவான்-கா-சபாபதிமுதலியார். புரசை-அஷ்டாவதானம்-சபாபதிமுதலியார். வித்துவான்-தி-கோவிந்தபிள்ளை. காஞ்சிபுரம்-வி-கச்சபாலையஐயர். கோயமுத்தூர்-கந்தசாமிமுதலியார் முதலிய சிறந்தவித்வான்களைக்கொண்டு ஆராய்ச்சிசெய்வித்து அச்சியற்றிமுடித்து இனவர்த்தமானியென்கிற பத்திரிகையில் பிரசுரஞ்செய்து இருக்கும் பெரியபுராணம் - கம்பராமாயணம்-எ-காண்டம் - பதார்த்தகுணசிந்தாமணி மூலமுமுரையும் - திருக்கழுக்குன்றத்தலபுராண மூலமுமுரையும் முதலிய சிறந்ததமிழ்ப்புத்தகங்களை வேண்டுகிறவர்கள் சென்னை பெத்துநாயகன் பேட்டை சின்னகடைக்கடுத்த சாலைவீதியில்-உ - வது-நம்பர்வீட்டில் ஸ்தாபித்திருக்கும் தேவர்சேனாபதி நிவாசபுத்தக விக்ஷேபத்தலைவர்களாகிய-புங்கத்தூர்-கந்தசாமிமுதலியார். அல்லது- நாகமணிமுதலியாரிடத்தில் விலைக்குப்பெற்றுக்கொள்ளலாம். அன்றியும் வெளிதேசத்தார்கள் கடிதமூலமாய் ஷை விக்ஷேபத்தலைவர்களுக்கு எழுதிக்கொள்ளுவதுடன் பணமுந்தபால் கூலியும் அனுப்பவேண்டியது பணத்துக்குபதில்தபால்முத்திரையனுப்பினால் ௦- அணா-முத்திரை அனுப்பவேண்டியது ஷை க்கு மாற்றுவட்டம்-ரூபா - கஇ-க-அணா அதிகமாயனுப்பவேண்டியதுடன் கடிதங்களை ரிஜிஸ்டர்செய்து அனுப்பவேண்டியது. ஒருவரே-க0-புத்தகம் வாங்கினால் அவாளுக்கு ஒருபுத்தகம் அதிகமாய்கொடுக்கப்படும். இப்போது பதித்துவரும் புத்தகங்கள்முடிவு ஆகாததற்குமுன் கையொப்பம் செய்யலாம்அப்படிகையொப்பம்செய்ய விருப்பமுள்ளவர்கள் ஷை விக்ஷேபத்திற்குவந்தால் கையொப்பம் செய்யலாம் வெளிதேசத்தார்கள் கடிதமூலமாய் தெரிவித்தால் உடனே அவாளுக்கு கையொப்பப்புத்தகம் அனுப்பப்படும் அதில் அவாள்கையொப்பம்செய்து கூடியதுரிதத்தில் அனுப்பிவிடவேண்டியது. அப்படிகையொப்பம்செய்வதில் விலை சரசமாயிருக்கும் என்னிடத்தில் இராத்திருசுகளைவாங்கி யனுப்பும்படியாய் பணம் அனுப்பினால்அதற்கு-ரூபா-க-இ-க-அணா கமீஷன்கொடுக்கவேண்டியது.

இங்ஙனம்.

புங்கத்தூர்கந்தசாமிமுதலியார்.

அச்சியற்றியபுத்தகங்கள்.

திருஞானசம்பந்தசுவாமிகளருளியதிருமுறை-ரு இ-புத்தகம்		க
பெரியபுராணம்-செட் சஇ	,,	உ
திருக்கழுக்குன்றத்தலபுராணமூலமுமுரையும்	,,	க
திருவிரிஞ்சைத்தலபுராணமூலமுமுரையும்	,,	க
ஷை முருகன்பிள்ளைத்தமிழ்	,,	க
பழனிக்குமரனந்தாதி	,,	க
ஷை சிவகிரிப்பதிகம்-செந்திற்பதிகம்	,,	க
ஷை குமரகுருபதிகம்	,,	க
கம்பராமாயணம்-பாலகாண்டம்	,,	க
ஷை அயோத்தியாகாண்டம்	,,	க

ஷை ஆரணியகாண்டம்		புத்தகம்.௧
ஷை கிஷ்கிந்தாகாண்டம்		,, ௧
ஷை சுந்தரகாண்டம்		,, ௧
ஷை யுத்தகாண்டம் -	செட்-௧இ	,, ௨
ஸ்ரீமத்ராமாயணம் உத்தரகாண்டம்		,, ௧
பதார்த்தகுணசிந்தாமணிமூலமுமுரையும்		,, ௧
சைவசமயவிளக்கவினாவிடை		,, ௧
திருவிசைப்பாதிருப்பல்லாண்டு		,, ௧
திருமுருகாற்றுப்படைமூலமுமுரையும்		,, ௧
கொலைமறுத்தல்மூலமுமுரையும்		,, ௧
தமிழ்நாமசாலை		,, ௧


பதிப்பித்துக்கொண்டுவரும்புத்தகங்கள்.

ஸ்ரீபாகவதமூலம்-௯௦௦௦-பாடல்		புத்தகம்-௫
பழனித்தலபுராணமூலமுமுரையும்		,, ௧
அப்பர்சுவாமிகளருளியதிருமுறை - ௫இ		,, ௧
சுந்தரமூர்த்திசுவாமிகளருளிய-திருமுறை.	௧இ	,, ௧
திருவிளையாடற்புராணமூலமுமுரையும்-	செட்.௧இ	,, ௫
திருவாய்மொழிக்குப்பிரதிபதம்-		,, ௨
உபதேசகாண்டம்உட்படகந்தபுராணம்- ௧௭௦௦௦-பாடல்.	செட்.௧இ	,, ௬
தொல்காப்பியத்தின் மூன்று அதிகாரத்திற்கும் நச்சினார்க்கினியார் இளம்பூரணர் சேனாவரையர் இவர்கள்செய்தஉரையுடன்- செட். ௧இ		,, ௫
நன்னூல்விருத்தியுரை		,, ௧
தாயுமானசுவாமிபாடல்		,, ௧
திருவாசகம்		,, ௧
திருப்போரூர்சந்நிதிமுறை		,, ௧

பதிப்பிக்கப்படும் புத்தகங்கள்.

சீவகசிந்தாமணி நச்சினார்க்கினியாருரையுடன்
பெரியபுராணவசனம்
திருவிளையாடற்புராணவசனம்
பெரியபுராணமூலமுமுரையும்
காஞ்சிபுராணச்சருக்கமூலமுமுரையும்
திருக்காளத்தித்தலபுராணமூலமுமுரையும்
சிதம்பரபுராணமூலமுமுரையும்
விருத்தாசலபுராணமூலமுமுரையும்
கோயிற்புராணமூலமுமுரையும்
பிரமோத்தரகாண்டமூலமுமுரையும்
ஞானவாசிட்டமூலமுமுரையும்
கந்தபுராணவசனம்
ஸ்ரீமஹாபாரதவசனம்-௧௮-பர்வம்
ஸ்ரீபாகவதவசனம்- ௧௨-ஸ்கந்தம்
சதாசாரி
கல்லாடமூலமுமுரையும்
ஜாதகஅலங்காரமூலமுமுரையும்

ஹரி:ஓம்.



நன்றாக குருவாழ்க குருவேதுணை.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஸ்ரீமத்ராமாயணம்

உத்தரகாண்டம்.

முதலாவது

இலங்கையழித்தபடலம்.

பாயிரம்.

வெள்ளியங்கிரியைமீதேவேரொடுமெடுத்தவீரக்
கள்ளவன்புயநாலைந்துங்கனகமாமவுலிபத்துந்
துள்ளியம்புவிமேல்வீழவொருகணைதொடுத்துவிட்ட
வள்ளலம்புயமேயன்னமலரடிவணக்கஞ்செய்வாம். (க)

வேறு.

ஒன்றாய்ப்பலவாயுளவாயிலவாயுளைப்போர்க்
கன்றாகியாமாயருவாயுருவாகியன்பு
குன்றாதஞானக்கொழுந்தாய்க்குணமூன்றிறந்து
நின்றானியாவனவனீள்கழனெஞ்சில்வைப்பாம். (உ)

புன்சொற்களேனும்புதல்வன்றரல்பொய்யிகழ்ந்த
வின்சொற்களாகக்கொளலான்முனியீங்குரைத்த
தென்சொற்றமிழும்வடசொற்றுறையுந்தெரிந்தோ
ரென்சொற்கள்பொல்லாதெனினும்மிகழார்களன்றே. (ங)

இதுக்குத்தரமில்லையிராமகதைப்பரப்பை
நதிக்குத்தரமன்னதைநன்னெறியுய்ப்பதொன்றை
யதுக்குத்தரமில்லதையாய்ப்பொருளாயவாய
மதிக்குத்தரமன்னவைவாக்கினிற்கூறலுற்றேன். (ச)

சால்காட்டவேருநெறிகண்ணுடையோர்கண்முன்னே
கோல்காட்டமெள்ளக்குருடர்க்குடக்கலாமாற்
பால்காட்டுமின்சொன்முனிப்பாவழிகாட்டவேத
நூல்காட்டிராமன்கதைமேற்றமிழ்நூற்கலுற்றேன். (௫)

நூல்.

கன்னாருலகிற்கருதார்குலக்கட்டைவாங்கித்
தன்னார்தருமந்தழைக்கத்தனிக்காவல்பூண்டு
மன்னோர்வணங்கமதிவெண்குடைமேனிழற்ற
வின்னோர்குலம்வாழவிராகவன்வீற்றிருந்தான். (௬)

கண்கால்காருஞ்செங்கமலத்தடங்காடுகாட்டத்
திண்கார்வரைபோற்றிருமேனிதிகழ்ந்துகாட்டத்
தண்காறடவத்தடம்பூண்முலைத்தையலார்கள்
வெண்சாமரைவீசிடவேதியராசிகூற. (௭)

சீரார்மணிச்சோதிதிரண்டெழுஞ்செம்பொன்மவுலி
காரார்வரைமேற்கதிரோனெழுங்காட்சிகாட்ட
வாரார்தடங்கொங்கைமடந்தையர்வாட்கண்மொய்த்த
வேரார்திருமேனியங்கிந்திரன்மேனியேய்ப்ப. (௮)

[illegible]ரொத்தமுத்தத்திரணீள்வடஞ்சேர்ந்தசன்ன
விரத்தொளியாவியவெள்ளைநிலாவையோட்டி
வாரத்தெழுஞ்செம்மணிக்கோவையலம்பிடத்தன்
காரொத்தமேனிவருஞாயிறுபோன்றுகாட்ட. (௯)

தடஞ்சேர்வலையர்தழுவுந்திருத்தோள்களுக
வடஞ்சேர்வடமந்தராமாமலைதன்னைமானப்
படஞ்சேரிமாமணிப்பஃறலைக்கோவைகோத்தப்
புடஞ்சேரொழிற்பொன்னிறவாடைபொலிந்திலங்க. (௧0)

கொடிமன்னுமாடக்குலமென்னுமயோத்தியெய்திக்
கடிமன்னுவாயிற்கடைநின்றருள்கால்நோக்கிப்
படிமன்னிவாழும்பலமன்னியர்மண்டலீகர்
முடிமன்னரெல்லாமுறையேபுகுந்தேவல்கேட்க. (௧௧)

மூவாமுனிக்கூட்டமுமுன்புமுப்பத்துமூவர்
தேவாதிபருந்திருப்பாற்கடலெய்தியெம்மைக்
காவாயெனப்போற்றிடக்கண்டுவிளங்கியின்ப
மோவாதுதான்வீற்றிருக்கும்படியொத்திருந்தான். (௧௨)

வேறு.

அந்தவேலையதனுளடங்கிய
குந்தவேலையில்வாட்கைக்கொடியவர்
நந்தவேலையடங்கலுகக்கிய
சந்தவேலைப்பொதியிற்றமிழ்முனி. (௧௩)

சித்துவாசவித்தழிச்சிவனேநேர்
பாத்துவாசன்வசிட்டன்பகைகெடத்
தாத்துவாசவன்மெய்க்குறிதாக்கினோன்
சாத்துவாசச்சுகம்புரிகோசிகன். (௧௪)

காயுர்தீவினைக்காசிபனத்திரி
தாயின்மன்றுயிர்க்கண்புடைத்தவுழியன்
ஆயஞானச்சுகத்திமுதலினோர்
நாயகன்றிருவாயிலண்ணினார். (௧௫)

வாயிலோயெம்வரவுரையென்றலும்
கோயிலெய்தியவனதுகூறிடத்
தூயவன்புகுத்திங்கெனச்சொன்னபின்
போயவன்புகுத்தப்புகுந்தாரரோ. (௧௬)

புக்கவந்தப்புராணமுனிவரை
மிக்கெழுந்தவுவகையின்மேலினித்
தொக்கபன்மணிச்சோதிமுடியுறத்
தக்கவாறடிதாழ்ந்துதராபதி. (௧௭)

ஈசனங்கமெரித்திடுநாண்முதல்
கூசனங்கள்குறுகாவருந்தவ
மாசனங்கள்மகிழ்ந்தினிதேறிட
வாசனங்கள்வழங்கியருளினான். (௧௮)

பொருந்துமாமணிபோர்த்தபொன்னாசனத்
திருந்தவர்தவிருந்தவத்தோர்களைத்
திருந்துதாமரைச்செங்கணினோக்கிநா
மருந்தவத்துக்கழிவிலையேயென்றான். (௧௯)

எங்களுக்குயிராயவிருந்தவத்
துங்களுக்கும்புத்திரர்பவுத்திரர்
தங்களுக்குமைச்சார்ந்தவர்தங்கட்கு
மங்கெவர்க்குமருந்துயரில்லையே. (௨௦)

சுந்தரச்சிலையோன்சுதையூறிய
வந்தவாசகங்கேட்டவருந்தவர்
தந்தமுள்ளத்துவகைதழைப்புற
விந்தவார்த்தையிராமற்கியம்பினார். (௨௧)

வேறு.

கும்பனிகும்பனகம்பன்மனக்கும்புவெம்போர்த்திகாயன்
உம்பருலகுகம்பஞ்செய்கும்பகன்னனுலகனைத்துந்
தம்பமானநம்பன்வனைசாய்த்தமொய்ம்பிற்றசக்கிரிவ
னிம்பருலகுதென்புலமேற்றம்பன்விகடனென்றிவரும். (௨௨)

தீயராயகாரதியருந்தேவர்க்களுமாந்தகளு
மாவைவல்லமகோதரனுமற்றனோருங்காத்தவியப்
பேயுகாயுமவருடலம்பிக்கத்தின்னச்சார்ந்தொட்ட
அயலில்விலியிருக்கத்துயருமுண்டோவெமக்கினியே. (௨௩)

மூவராலுமற்றொழிந்தமுனிவராலுமுவுலகத்
தியாவராலும்வெலற்கரியவெல்லாமாயைகளும்வல்ல
தேவராஜன்றனைப்பற்றிச்சிறையிலிட்டவிராவணியாம்
பாவகாரிசிரமறுத்தோனிருக்கவெமக்குப்பயமுண்டோ. (௨௪)

என்றுமுனிவர்தாங்கூறவிராமன்கூறுமோரிரண்டு
குன்றுமலையதிரள்புயத்துக்கும்பகன்னன்முதலானோர்
வென்றிகூரிராவணிதன்வீரநீர்கூறியவாறே
யன்றிவன்பாலவன்பெற்றவரமும்வலியுமவன்பிறப்பும். (௨௫)

இரக்கமில்லாவன்னெஞ்சத்தெல்லாமாயைகளும்வல்ல
வரக்கர்பிறப்புமவர்பெற்றவரமும்வலியுமவர்செயலும்
பரக்கவுரைமினெனவமரிற்பண்டிந்திரனுக்குடைந்தசுரர்
கரக்குங்கடலேழையும்வாக்கிக்கையாற்குடித்தமுனிகழறும். (௨௬)

வேறு.

அண்டர்நாயகனளிதிகழுந்தியாமடுவிற்
புண்டரீகனான்முகன்மகன்புலத்தியனென்போன்
மண்டலந்திகழ்திவாகரன்றேரதுவலஞ்சூழ்
விண்டலஞ்சுடர்மேருவாம்வெற்பினைச்சேர்ந்தான். (௨௭)

அந்தமாமலைச்சாரலிலருவினையகல
இந்தலோகத்திலியாவருமருந்தவமியற்றுஞ்
சந்தவார்பொழிற்றடவனஞ்சார்ந்துசார்வினைகள்
சிந்தமற்றவனருந்தவஞ்செய்கின்றவேலை. (௨௮)

நாககன்னியர்கான்மறைமுனிவர்கன்னியர்கள்
போகமேவியபொன்னுலகத்துமங்கையர்கள்
பாகுபோன்மொழிப்பங்கயமுகத்தியர்தப்
பூங்கொடியபொழில்வனநாடொறும்புகுந்து. (௨௯)

பாடுவார்புனலாடுவார்பன்மலர்பறித்துச்
சூடுவார்மலர்நாடுவார்தோழியர்தம்மைத்
தேடுவாரவர்க்கூடுவார்தேவருந்திகைப்ப
வாடுவார்விளையாடுவாராயினரடங்க. (௩௦)

இதவன்னம்வந்தேத்திழைமியார்விளையாடச்
சிந்தையானதுகலக்கிடச்செய்தவஞ்சிதைய
வந்தமாமுனியாமுலாமெனச்சீறி
வந்ததோன்றினன்மங்கையர்யாவருமருள. (௩௧)

எரியுநெஞ்சினனென்னிடையிற்றைநாடொடங்கி
மருவினீரெனின் மங்கையீருங்களுக்கடாத
கருவுண்டாகெனச்சவிப்பவக்கன்னியர்கலங்கி
வெருவியோடினர்திசைதொறும்வேறுவேறாகி. (௩௨)

அரியநான்மறைப்பொருளினையங்கையிற்கனிபோற்
றெரியுமாமுனிதிரணவிந்துவின்மடக்கன்னி
புரியுமாதவப்புலத்தியன்சாபமங்கறியாள்
கரியவார்குழற்கன்னியர்தங்களைத்தேடி. (௩௩)

பண்டுபோல்விளையாடிடப்பயமிலளெய்த
வண்டுசேர்மலர்க்குழலினாண்மறையொலிகேட்டுத்
தண்டுருண்டிடைதாய்குலைகத்தவமுனிதன்னைக்
கண்டலும்மவள்வயிற்றிலுண்டாயதுகருப்பம். (௩௪)

மேனிபானதுவெளுத்துத்தன்விழிகளும்பசப்ப
மானினேருக்கினண்மற்றதன்காரணமறியாள்
தான்விரைந்துபோய்த்தந்தையைவணங்கவத்தன்மை
யானகாரணமாய்கவனென்னெனவறைவாள். (௩௫)

பாங்கிமார்களைத்தேடிவான்படர்வனமெய்தி
யோங்குமாதவப்புலத்தியனுறைவிடமுற்றே
னீங்கென்மேனிபோயிவ்வண்ணமாயினதென்ன
வாங்கியோகத்தினிருந்தவன்புகுந்தவாறறிந்தான். (௩௬)

அறிந்தமாமுனியரும்பெறற்கன்னியையுடன்கொண்
டிறந்தமாதவப்புலத்தியனிருப்பிடமெய்தி
நிறைந்தகேள்வியாய்நினக்கிவடாரமாகைக்குச்
சிறந்துளாள்குணவதியெனச்செப்பினன்கொடுத்தான். (௩௭)

கொடுத்தநாண்முதற்கொம்பனாள்கோதறுமுனிவற்
கடுத்தவேவல்செய்தாங்கினிதொழுகிடவந்தக்
கடுத்தவெவ்வினைகடிந்தவன்காதலிதன்மே
லெடுத்தபேரருளுடையனாயிவ்வுரையியம்பும். (௩௮)

காதன்மேவுமின்றோழியாயகன்னியரைச்
சூதநீடுபூஞ்சோலையிற்றேடியான்சொல்லும்
வேதவோசைநீகேட்டலின்விச்சிரவாவென்
றோதினீதியாளொருவனைப்பெறுதியாலென்றான். (௩௯)

அந்தவாசகமருண்முனிகூறலுமுவந்த
சிந்தையாடிருவயிற்றினிற்றிசைமுகன்றனக்குத்
தந்தைதோன்றியதொன்மைபோற்றவநெறிதழைப்ப
வந்துதோன்றினன்வைச்சிரவாமறைவிளங்க. (௪0)

தன்வினைப்பிறிதில்லவன்றனக்குருத்தக்கைத
யன்னமாமுனியறம்புரிக்கொருகலைவற்றுப்
பன்னுமாமறைபகர்பாத்துவசனத்தெய்வ
வன்னியேயெனுங்கன்னியைக்கொடுத்தனன்மகிழ்ந்து. (௩௧)

தேவவன்னியைச்செய்தவமுனிவருக்குரைத்த
சேவல்செய்தவனினிதிருந்தொழுகிடவந்தப்
பாவைதன்வயிற்றோன்றினன்பல்லுலகுள்ளோர்
யாவருமனமகிழ்ந்திடவெழின்மணிப்புதல்வன். (௩௨)

விரிஞ்சனேமுதலாகியவேதியருவகை
புரிந்தநெஞ்சினர்புரந்தருறியர்புகுந்து
தெரிந்துநோக்கிவச்சிரவணனெனப்பெயர்செப்பித்
திரிந்துபோயினர்திசைதொறுஞ்சேயினைவாழ்த்தி. (௩௩)

விரிந்தவேதங்கள்விளம்பியபொருள்களின்முடிவைத்
தெரிந்துகண்டவச்சிரவணன்செய்தவந்தன்னிற்
புரிந்தநெஞ்சினன்புகாயறுமுனிவனம்புக்கான்
சரிந்துநீவிலேயோடிடத்தருமமூர்த்தழைப்ப. (௩௪)

தோயமேதனக்காகமாகவுந்துரக்கும்
வாயுவேயுணவாகவுமன்றுபோறத்தை
சேயமாகியுரோசனனுகியுமஞ்
சாய்விலாதுபல்லாண்டினின்றருந்தவஞ்சரித்தான். (௩௫)

அன்னதன்மைவச்சிரவணனருந்தவஞ்செய்ய
முன்னிலான்முன்றோன்றியிம்முவுலகத்தி
னுன்னையொப்பவர்யாவருமில்லையென்றுரைத்துச்
சொன்னயாவையுந்தருகுவன்சொல்லுதியென்றான். (௩௬)

இலகுமாமணிவெயிழின்முடியிந்திரனியம
னலகிலாவலிவருணனுங்கவர்களோடொப்ப
வுலகபாலகனாகவுமொண்ணிதிதனக்குத்
தலைவனாகவும்வேண்டுவன்றுவெனத்தந்தான். (௩௭)

கொடுத்துமைந்தநீபோதெனவாசிகள்கூறி
விடுத்துவிண்ணவர்குழுத்தாவிரிஞ்சனேகியபின்
தடுக்கவொண்கலாவருளுடைத்தனபதிதனைப்பெற்
றெடுத்ததாதைக்குப்பெற்றனயாவையுமியம்பி. (௩௮)

பின்னுங்கூறுவான்பிதாமகன்பெருவரந்தந்தா
னின்னதானத்திலிருத்தியென்றியம்பலனென்றுத்
துன்னலார்களாற்றுன்றுதற்கரியதாய்த்துறக்க
மன்னதானநீயருள்கெனவருண்முனிகூறும். (௩௯)

இலங்கைமாநகரிராக்கதரிருப்பிடமுன்னாள்
வலங்கொளாழிமாமாயனோடெதிர்மலைந்தமரிற்
கலங்கியோடியகிருதர்மேலிடைக்கரந்தா
ரலங்கன்மொய்ம்பினியக்கரிருத்திகேடென்றான். (ரு0)

என்றுகூறியதந்தையையிணையடியிறைஞ்சி
நன்றுநன்றெனமகிழ்ந்தெழிலிலங்கைமாநகரிற்
சென்றுமேவினன்சித்தர்வித்தியாதரரியக்கர்
தன்றுணைப்பெருங்கிளைதனைச்சூழ்தரத்தனதன். (ருக)

அலங்கன்மவுலியானச்சுதற்கமராழிந்தரக்கர்
கலங்கியோடியநாண்முதற்கவினழியிலங்கை
பொலங்கொள்பொன்னகராமெனப்புதுக்கியேபோற்ற
விலங்குநீண்முடியிந்திரனென்னவீற்றிருந்தான். (ருஉ)

தெண்டிரைக்கடலேழையுஞ்செங்கையால்வாங்கி
யுண்டமாமுனியிவ்வகையுரைத்திடக்கேட்ட
வண்டலம்பியதண்டுழாய்மணிமுடிதுளக்கிப்
புண்டரீகமேயனையகட்புரவலன்புகல்வான். (ருங)

இந்தமாநிலத்திராவணனாதியாமரக்கர்
முந்தையோரெலாம்புலத்தியன்வழியெனமொழிந்தா
யந்தவன்னைமேயன்றியேவேறொருவழியால்
வந்துளோர்களார்மாமுனியுரைத்தருளென்றான். (ருச)

ஏயுநீள்வரமிவ்வகைபெறுமெழிற்றனதன்
நேயமாகியநெடுமதிலிலங்கையினின்றும்
போயவாறும்வல்லரக்கர்தாம்புகுந்திடுமாறுந்
தூயமாமுனிகூறெனக்குறுமுனிசொல்லும். (ருரு)

வேறு.

ஆதிதன்பாலனைத்துலகங்களும்
பேதமாயவுயிரும்பிறந்தநா
ளோதுபல்லுயிரிற்பலவுத்தம
மேதுசெய்வோமெனவிறைகூறுவான். (ருசா)

கரக்கமின்றிக்கமலாலயத்தயன்
பரக்கநல்லுயிர்யாவும்படைத்தநா
ளிரக்கமில்லவர்யாவரையும்மிக
லரக்கராகப்படைத்தானரக்கரில். (ருஎ)

ஏதியும்பிரகேதியுமென்றுல
கோதுபேர்களுடன்பிறந்தார்களி
னீதியோன்பிரகேதிநெறிதவச்
சாதுமாற்கந்தனினின்றுசார்ந்தனன். (ருஅ)

மற்றையேதிமருவலரோடிடக்
செற்றகாலத்திளையவமைவிழிக்
கற்றைவார்குழற்கன்னிபிரபைமுன்
பெற்றபேருடையாள்கைப்பிடித்தனன். (௯)

எத்திக்குந்திறலெய்தியவேதிக்குப்
பத்திச்செம்மயிராள்பையபாருற
வத்திக்குங்கொடியாடன்வயிற்றிடை
வித்துக்கேசன்பிறந்தனன்வீரனே. (௧௦)

அந்தவீரற்கணிமணிப்பூண்முடி
யிந்திரற்குச்சரிபோன்றெழிலுடைக்
கந்தவார்குழற்சாலகடங்கடிற்
சந்திதன்மகடாரமதாயினள். (௧௧)

நீவார்குழலேரிழையாளும்வன்
டாரதார்திகழ்ந்தவரக்கனும்
கூடிமாலியுங்கூடியவன்றிலம்
பேடுமென்னப்பிரிவரிதாயினர். (௧௨)

பெருகுகாதலினுள்பெருத்தோங்கிய
வொருவனிந்திரியம்முற்றுத்தாங்கினள்
விரியும்வெண்டிரைமேவியவேலைவாய்க்
கரியமேகங்கருத்தரித்தென்னவே. (௧௩)

ஆயபேதையரிதினிற்பெற்றதோர்
சேயைநீத்துச்சிறந்ததோர்காதலன்
போயதெவ்விடம்விட்டம்புக்கன
னேயமோரிடத்தேயன்றிற்குமோ. (௧௪)

சேமமில்லாச்சிறுவனைப்போகட்டுப்
போமடந்தைபுரிந்துபின்பார்த்திலன்
வாமமேகலைமாதர்க்குமைந்தர்க்குங்
காமமிக்கதன்பின்புகண்டோற்றுமோ. (௧௫)

போயபின்பவன்பொற்கரமுட்டிதன்
வாயில்வைத்துமழையிடிப்பொத்திட
வாயமைந்தனையஞ்சலென்பாரில்லை
தாயிழந்துதனியேகதறினன். (௧௬)

இந்திராதியிமையவர்யாவரும்
வந்துகூடிமகிழ்ந்துமலர்மழை
சிந்தியீசன்றிருவுளமென்கொலென்
றந்தரத்திடைநின்றடிபோற்றிட. (௧௭)

ஊறுநீங்கியுலகோருறுவிழா
பாதியோடப்பவனியுலாவுவா
னுறுபூண்டுழனாயகிதன்னொடு
மேறுநேதியிறைவனக்கெய்தினான். (௬௮)

இரக்கமின்றியேயீன்றதாய்போகிடத்
தரிக்கிலாதழுஞ்சேயைச்சகத்தினி
லருட்கணோக்கிடுமாளுடைநாயகி
திருக்கணோக்கிச்சிவனுக்குச்செப்புவாள். (௬௯)

தாயைவிட்டுத்தனியேகதறுமிச்
சேயினுக்கருள்செய்யத்தகுமென
நாயகற்கந்நாயகிகூறலும்
பாய்புனற்சடைதாழும்பரமனும். (௭௦)

ஒல்லையீன்றவளொத்தபிராயமு
மெல்லையில்பரமாயுவுமிங்கழு
நல்லமைந்தன்பெறுகெனநல்கிவிண்
செல்லுஞ்சீரிற்றிகழ்புரநல்கினான். (௭௧)

மேயகற்பமிறைவர்தம்மெய்யுமத்
தாயொடொக்கும்பிராயமுந்தாழ்சடைத்
ஆயநக்கன்றுணைவியராகத்த
னாயவற்கமுண்டாகவருளினான். (௭௨)

எக்கணைக்குமிறந்தபெருமையன்
பொக்கணத்தன்புலியதளாடையன்
முக்கணத்தன்மொழிபெற்றழுபவ
னக்கணத்திலவனடிதாழ்ந்தனன். (௭௩)

சுந்தரத்தோட்சுகேசனெனச்சிவன்
தந்தபேரும்வலியுந்தழைத்திட
வந்தரத்தோரும்பதிசெய்ததி
லிந்திரன்போலினிதிருந்தானரோ. (௭௪)

கொங்கடங்கலர்கொன்றையெருக்காத்
திங்கடங்கியசெஞ்சடையானிடப்
பங்கடங்கியபார்ப்பதியோனரு
ளங்கடங்கலும்பெற்றவரக்கர்கோன். (௭௫)

பாடுகந்தருவக்குலப்பாவையைக்
கேடில்கீர்த்திக்கிராமணிபெற்றிடுந்
தேடுமாமணித்தெய்வவதியினை
நாடிமற்றவன்மணஞ்செய்தனன். (௭௬)

சோதிமாமணிமௌலிக்கசேசனுந்
தீதில்தெய்வவதியெனுந்தெய்வமா
மாதராருமயங்கிவளர்பெருங்
காதலென்னுங்கடல்கலாகண்டிலர். (௭௭)

மாலைதாழுமணிவரைத்தோட்ககற்
கேலவார்குழல்வல்லிவயிற்றிடை
மால்கொண்மாலியவானுஞ்சுமாலியு
மாலியும்மெனுமைந்தர்பிறந்தனர். (௭௮)

தூயதெய்வவதிவயிற்றோன்றிய
வாயமூவருமாரும்விலக்கலாத்
தீவளர்க்கெனச்செய்மருந்தொன்றிலா
நோய்வளர்த்தெனநொய்தின்வளர்ந்தனர். (௭௯)

அந்தமூவருமன்றான்றன்னிடைத்
தந்தைபெற்றவரமும்வலியுந்தஞ்
சிந்தையொன்றித்திகழ்வடமேருவாந்
சந்தநீடுதவவனஞ்சார்ந்தனர். (௮௦)

இஞ்சைபொய்களவேதம்வந்தெய்திடும்
வஞ்சபாவம்வரும்வழிமாற்றிநற்
றஞ்சநெஞ்சர்தயாவினர்தம்புல
னைஞ்சும்வென்றங்கருந்தவஞ்செய்தனர். (௮௧)

முன்னைவானவர்தானவர்முற்றுநான்
மன்னுதாபதர்மானிடர்மற்றுளோ
ரன்னமூவருந்தவங்கண்டில
தென்னதாருமோவென்னநடுங்கினர். (௮௨)

ஆயகாலத்தவர்கண்முனந்தனன்
ஆயமாமணித்தேர்மிசைத்தோன்றினு
னேயமாதவத்தீர்நும்மனத்திடை
மேயயாவையும்வேண்டுதிரீவொன்றான். (௮௩)

பூவயன்புகலப்புகல்வாரவர்
தேவராதிதிரிபுவனத்துளோ
ரேவரோருமெமக்கமர்தோற்கவுந்
தேய்வில்காலங்கள்செல்லவுஞ்செய்குவாய். (௮௪)

சிந்தையெண்ணிநீர்செப்பினயாவையுந்
தந்தனனெனத்தாமரையாசனத்
தந்தனனருளவவர்கடோன்
வந்தபூரித்தமால்வரையென்னவே. (௮௫)

ஆதிதன் விடைப்பெற்றவரத்தினல்
பீதியன்றிப்பெரும்புவனங்களை
வாதயித்தகபமெனவன்றிற
லோதுமூவருமொத்துகலிந்தனர். (அ௬)

காசில்பன்னகாடுகலங்கிட
நாசமெய்திடாநிலமானது
வாசவன் முதல்வானவரோடிட
வாசைபத்துமடிப்படுத்தாரரோ. (அ௭)

மாவலிப்புயமாலியவான்முதன்
மூவர்மூப்புவனங்களைவென்றுளோர்
தேவர்தச்சன்வருகெனச்செவ்விதிற்
கூவிமற்றவனுக்கிவைகூறினர். (அ௮)

வேறு.

நீடுபுவனமொருமூன்றுமயனுஞ்சிவனுநெடுமாலுங்
கூடியமரின்முயன்றாலுங்குறுகவரியவரணினதா
யாடலமார்பதியினமுகமிக்குநகரியமைக்கவுட
னுடுல்லோயெனவுரைப்பநன்றென்றவன்போய்நாடுவான். (அ௯)

முன்னாள்காற்றும்வாசுகியுந்தந்தம்வலியினிலேமொழிந்து
பொன்னார்வரையைவாசுகிதன்பணத்தாற்பொத்திப்புறங்காப்பத்
தன்னான்மிக்கபெருங்காற்றுத்தாக்கச்சற்றுஞ்சலியாது
விண்ணோர்முனிவர்வேண்டியிடவீரன்சற்றேமுடிசாய்த்தான். (௯0)

வாயுவியக்கமில்லாமல்வானோருலகுமண்ணுலகுங்
காயுங்கனலிலிட்டதுபோற்கலங்கிப்புழுங்கிக்கசிந்தாற்று
வேயின்பணத்தாயிரவரவைவிண்ணோர்முனிவர்வேண்டியிடச்
சாயும்படிசற்றறியாதான்சற்றேதன்றேண்முடிசாய்த்தான். (௯௧)

குலையாநிலத்தின்வடமேருக்குலையமோதியதன்றிகழ்முத்
தலையார்சிகரந்தனைமுறித்துத்தடங்காலதனைக்கொண்டுபோ
யலையார்கடலின்முன்பிட்டவந்தவிடமிம்மூவருக்கு
நிலையாம்பதியாமெனத்தச்சனினைத்தங்கதனைநிகழ்த்துவான். (௯௨)

மூலைதனத்தேகனகமலைமுதிர்ந்தசிகாமுக்குடுமிக்
கோலவரையாங்கதுபிறராற்குறுகவரியகொள்கைத்தாற்
சால்பினமைந்ததேவராலிலங்கையெனும்பேர்தரத்தக்க
தாலமனையகடுந்திறலோர்க்கதுவேநகரமாமென்று. (௯௩)

தாழ்வின்மதியுங்கதிரோனுந்தாராகணமுந்தண்முகிலுங்
கீழவாகிமேலோங்கிக்கிளர்ந்துபரந்தநகரியினைச்
சூழுமதிலுமம்மதிலைச்சூழ்ந்தகிடங்கும்புவிசூழ்ந்த
வாழிவரையுமவ்வரைசூழகல்வேலையையுமொத்துளதால். (௯௪)

ஆலயம்வல்லகமையெல்லாங்குலிசத்தாலேசிகரத்துக்கு
மிலகுமவுலியிமையவர்கோனின்னருஞ்சிறவிக்குமென
வலிகொள்பெருநீர்க்கடல்சூழ்ந்தவழியாவிலங்கையரண்டேடி
மலைகளெல்லாமல்விடத்தேதிரண்டதொக்குமணிமாடம். (௯௫)

ஆக்குமூலமுகாந்தத்திலழிக்கும்வெள்ளமறாதனக்குப்
போக்குவேணுமெனவகுத்தபோன்றபெருங்கோபுரவாயில்
காக்குமொருவாறுற்றிசையுங்காணப்போந்தகாரிருளை
நீக்குமணிவேதிகைவிருபாவிளைறத்துவிளக்குநெடுவீதி. (௯௬)

சகராகழ்ந்தநீள்வேலிதழுவுயிலங்காபுரிதன்னில்
நிகரில்கூடகோபுரநீண்டாங்கசாலையிலைநீண்ட
சிகரமாடமணிச்சோதிதிரண்டொன்றாகச்சிவந்தெல்லா
மகரவேலையுட்டிகழும்வடவாமுகத்தையொத்ததால் (௯௭)

இன்னதாயவிலங்கையினைநெறியினோக்கியெதிரில்லா
மன்னுவீரமால்யவான்சுமாலிமாலியென்றனைக்கு
மன்னர்மூவர்மகிழ்ந்தவாசாரியற்குப்பூசனைசெய்
தொன்னலார்களிடந்துடிப்பவொலிநீரிலங்கையுட்புகுந்தார். (௯௮)

யாவராலுங்கண்களினாலெட்டிப்பார்க்கவொண்ணாத
காவலிலங்கைவீற்றிருந்தகாலைக்கானக்கர்திருவப்
பாவையானநருமதைதான்பயந்தமூவர்மங்கையரில்
மூவராயவாங்கவர்க்குமுத்தவடைவின்முறைகொடுத்தார். (௯௯)

சிறந்தகாதன்மால்யவான்றனக்குஞ்சீரார்சவுந்தரிக்கும்
பிறந்தார்பெருவச்சிரமுட்டிபெரும்பாக்கன்றுன்முகப்பெயரான்
மறந்தான்பெருகுஞ்சதகத்தனியாயகோபன்மத்தன்மனத்
துறந்தானில்லாவுன்மத்தனென்றுமெழுவரனலையொடும். (௧00)

பாறுமதிக்கும்படர்செய்துதல்பணியாமணியார்கலையல்குல்
கூறுமதிக்குமிளங்கொங்கைத்துணைக்கைகசியுந்தாமலர்மேன்
மாறுமதிக்கும்வடிவுடையமங்கைவனசவிலோசனையும்
கேறுமதிக்குஞ்சுமாலிக்கும்பிறந்தாரந்தான்கெட்டோட. (௧0௧)

கிளையார்வெம்போரனலன்சீர்திகழுமனிலனரனென்போன்
வளையாவலியான்சம்பாதிமன்றுமுலகின்மைந்தர்மனத்
தளையாம்விழியாடருமதைதான்றந்தமூவர்மங்கையரி
விளையாடனக்குமாலிக்குமிவர்கள்பிறந்தாரிருவர். (௧0௨)

கூற்றமென்னக்கனலென்னக்கொதிக்குமாலமெனக்கொடியோர்
சீற்றமெனவறிவில்லோர்செல்வமென்னத்திகழுறத்தி
னூற்றின்றலைவைத்தியாதிலொன்றுகொள்ளாதே
யேற்றமானவிறைகொள்ளுமிறைவன்பாவமெனவளர்ந்தார் (௧0௩)

ஏழிற்புவனம்படைத்தோன்பாலெய்தும்வரத்தின்வலியாலே
பாழித்திரடோண்மாலியவான்சுமாலிமாலியெனும்பால
ராழித்தேராடற்சிலையாளவிலாதபெரும்படைய
ருழிக்காற்றுந்தீயும்போலுலகையழிக்கத்தொடங்கினார். (௧௦௪)

மேவிநாகர்கருவறுத்துவேலையுலகம்பொடிசெய்து
தேவர்கோமான்றனைத்துரந்துசெம்பொனுலகங்கைக்கொண்டு
பாவுமிந்தப்பல்லுலகம்படைத்துக்காத்துத்துடைக்கிற்போர்
மூவராவாரெவர்களுக்குமூவரின்றியெனமொழிந்தார். (௧௦௫)

பரவைப்புவியிலுள்ளோரும்பதிவிட்டோடித்திரளசு
ரர்கொத்துள்ளோர்யாவர்களுந்துணையில்லாதமுனிவர்களு
முரகப்புவனத்துள்ளோருமொருபற்றின்றியுலறுயரா
னரகத்துள்ளேயிடந்தழுந்திநடுங்குமுயிர்போனடுங்கினார். (௧௦௬)

கோலகாலமாயுலகங்குலையநடுங்கிக்கொதித்துவரு
மாலகாலமமுதாகவடக்கிவைத்தமணிமிடற்றன்
பாலகாலமுண்பனெனப்பற்றிப்பற்றியிழுத்திடுமக்
காலகாலன்வீற்றிருந்தகயிலைமலையைக்கண்ணுற்றார். (௧௦௭)

குவளைவிழிப்பூணிளங்கொங்கைக்கொடிமென்னுசுப்பிற்குயின்மென்சொ
லவளையிடத்துமுடியிடத்துமாறுந்தரித்தவரும்பொருளைத்
தவளநிறத்துத்தடங்கிரிமேற்றவமாமுனிவர்தற்சூழப்
பவளவரைபோற்பொலிந்திலங்கும்பரசுபாணிதனைக்கண்டார். (௧௦௮)

எந்தாய்போற்றியேறேறுமிறைவாபோற்றியேழுலகுந்
தந்தாய்போற்றியணிகொன்றைத்தாராய்போற்றிசகமுய்ய
வந்தாய்போற்றிவஞ்சகர்முன்வாராய்போற்றிமலரோனுஞ்
செந்தாமரைக்கட்டிருமாலுமானாய்போற்றிசிவாபோற்றி. (௧௦௯)

என்றுபலவும்போற்றித்தன்னிணைத்தாமரைத்தாள்பணிந்திறைஞ்சி
நின்றபாவுமவர்தம்மைநீலகண்டன்றனோக்கி
யின்றுதேவாசுராதிகளுமிருடிகளுமற்றெல்லீரு
மொன்றிவந்தகாரணமென்னுரைமினென்னவவருரைப்பார், (௧௧௦)

வன்றிண்புயத்துமாலியவான்முதலாயுள்ளவாளரக்கர்
சென்றிந்திரனைச்செருவழித்துத்தேவருலகங்கைக்கொண்ட
வென்றிவீரர்தங்குலத்தைவேரோடறுத்துவிடுதியே
லின்றுநாளையுலகங்களெல்லாமழிப்பரெனவுரைத்தார். (௧௧௧)

மல்லார்புயத்துச்சுகேசன்றன்வழியிலுள்ளவாளரக்க
ரொல்லாப்பிழையுஞ்செய்தாலுமென்னையடைந்தோராதலினால்
கொல்லேனவரையென்கையாற்கொல்லுமுபாயங்களுமெல்லாம்
வல்லோன்றிருமாலென்றவர்க்குமங்கைபாகன்விடைகொடுத்தான். (௧௧௨)

வேதநாயகன்றன்பொற்றுணையடி பணியாதொருபுரமெரித்தவன்றரித்த
தேயவன்விடுப்பத்தேவர்தானவர்கள்சித்தர்வித்தியாதரரியக்கர்
மேயகந்திருவர்விளங்குமாமுனிவர்மேதினியுள்ளவர்நாக
ராயவர்முதலோரச்சுதன்றுயிலுமணித்திருப்பாற்கடலடைந்தார். (கக௩)

நின்றுடையரக்கர்செல்வமுஞ்செருக்குந்திறலுடனுயிருஞ்சிதைந்து
நீங்கினவெங்குநிலையிலாவெவையுநிலையினைப்பெற்றனமறைக
ளோங்கினவுலகம்பிழைத்தனவென்றுமுவகையானதுதலைத்தோங்க
வாங்கவர்தம்மைக்கண்டெழுந்தாழியார்ப்பதுபோன்றதவ்வாழி. (கக௪)

முற்றைமாலியவான்சுமாலிமாலியெனும்பேரிவர்மூவருமவர்கள்
தந்தகாளையருந்தடமணித்தேருந்தானையுந்தறைப்படுமுபாயந்
தெரிந்தயாவெண்ணித்தேவர்கோன்முதலோர்திருமகள்காதலன்றன்பால்
வந்தனரென்றுமகிழ்ந்தெதிர்கோடல்போன்றனவரும்பெருந்திரைகள்.

நீடியவரக்கர்நெடும்படைக்குடைந்துநிலையழிந்தொருவழியில்லா
தோடியகாலருடைந்தமேனியர்களுறுவிடாய்கெடுப்பனென்றவர்கள்
வாடியமுகத்துமார்பினும்புயத்துமவ்வளரிளம்புன்னையின்வாசங்
கூடியசீதம்பூசவண்டுவலைகொடுப்பதொப்பதுகுளிர்தென்றல். (ககசா)

ஆயபாற்கடலையடைந்தவாங்கவர்களறிவென்றையுறுமவர்க்குங்
காயமதுலர்த்தித்தவம்புரிவார்க்குங்கமலவாசனன்முதலாய
வாயபோகியர்க்குஞ்சொல்லுமேனவுக்குஞ்சுருதிக்குந்தோன்றலில்லாது
சேயனுயடைந்தோர்க்கணியனுமாதிதேவனைத்தெரிவுறக்கண்டார். (ககஎ)

ஒருங்கியமனத்தின்யோகியருண்மையுணர்ந்தவருறுபெருந்தவத்தால்
நெருங்கியெம்மருங்குமிருந்துசேவிப்பகாரதர்நின்றுகூத்தாடப்
பெருங்கரமெடுத்துமாகதரேத்தப்பிறழ்திருப்பாற்கடன்மேலோர்
கருங்கடல்பாந்தளிடந்ததுபோலக்கிடந்ததன்கண்டுயில்வானை. (ககஅ)

தெருவயிருவர்செங்கையால்வருடச்சிவந்தசேவடிமலரானைக்
கருவரைசூழ்ந்தமின்றபின்றெளிவியைக்கட்டியபீதகவாடைத்
திருவரையானைத்திலசமுகனுனதேவருமுனிவருமுற்று
மொருவருமொழியாவுலகங்களெல்லாமுள்ளடங்குதாத்திறனை. (கககூ)

வண்டெனவிரிஞ்சன்மாமறைபாடவடவரைகொட்டையாய்ச்சூழ்ந்த
திண்டடங்கிரிகளல்லியாய்த்திசைகளிதழ்களாய்த்திகழுமிவ்வண்டப்
புண்டரிகத்தைப்புறப்படவிட்டவுந்தியாம்பொற்றடத்தானைத்
தெண்டிரைக்கடலிலெழுந்தினகரன்போற்றிகழொளியாரமார்பினனை.

வண்டடங்கிரிபூண்கட்டியதொப்பவலயங்கடழுவுதோளானைத்
தண்டாளத்தினைகையொளிதழுவும்பவளமுந்தாமரையிரண்டுங்
குண்டலமிரண்டுங்குளிர்சிலையிரண்டுங்கூடியகுளிர்மதிவதன
மண்டலத்தானைவலக்கைகேழ்க்கொடுத்துவளரொளிமணிமுடியானை (கஉக)

ஆழியுஞ்சங்குஞ்சாபமும்வாளுமடற்பெருந்தண்டுமிவ்வைவந்தஞ்
சூழவும்வந்துநின்றமெய்காப்பச்சுவணனுஞ்சுற்றும்வந்துலாவப்
பாழியாவனந்தன்போகத்திலவன்றன்பணங்களாயிரங்கொடுகவிப்ப
ஆழியாயிரங்களொருகணமாகயோகநித்திரையுகந்தானே. (கஉஉ)

இன்னதன்மையனுயிர்த்திரைகொழுநன்யோகநித்திரைசெயுங்காலை
முன்னைவானவர்கள்தானவர்முனிவர்முதலினோர்மூண்டெழுபயத்தா
லென்னதாகுங்கொலிவன்றிருவுள்ளமெனநினைந்தியாவருநிற்க
வன்னவன்குணந்தானறிந்தனவெல்லாமமரர்கோனறையலுற்றனனால்.

உலகினையெல்லாம்படைத்தளித்தழித்துமுண்டுமிழ்ந்தும்மளந்தாண்டும்
நிலையுடைவானாய்வாயுவாய்க்கனலாய்நீருடனிலனுமாயெண்ணித்
துலைவிலாவுயிராய்ச்சுடர்களாய்த்தோன்றுச்சுருதியாய்ச்சிவனயனாகி
யலகிலாவிளையாட்டாடுவாயகண்டமாயினாயாருனையறிவார். (கஉச)

பிரிவிலாவுயிருமுடலும்வாசகத்துப்பேர்கலாப்பொருளுமாங்கெனவும்
வெறியுநன்மலருமெள்ளுமெண்ணெயும்போல்விரிந்தவப்பொருள்களின்மேவிக்
கருவிமேன்முயலுங்காரியமாகிக்கண்ணுமாய்க்கருத்ததுவாகி
யறிவுமாயறியப்படுவதாயறிவாராயினாயாருனையறிவார். (கஉரு)

பொன்னிடைப்பிறந்தமாமணிமுடிக்கட்பூணதுபோலவும்புணரி
தன்னிடைப்பிறந்ததடந்திரையெனவுந்தரையினின்றெழுதுகளெனவும்
நின்னிடைப்பிறந்தசுரர்மனுசாதிமுதலபல்லுயிர்களுநீயு
மன்னியமாகியாயிலொன்றுதியாழியாயாருனையறிவார். (கஉசு)

உறப்பெரிதுணரிலுருவமாயருவாயுளவுமாயில்லையுமாகிப்
பிறப்பிலியாகிப்பிறத்திநீயாண்பெண்ணலியெனப்பேசவும்படைத்தாய்
மறப்பகையொன்றுமன்றியேயென்றும்வலிகொள்பஞ்சாயுதமெடுத்தி
யறச்சிறுகுடைத்துநின்றிறமுணர்க்கிலச்சுதாயாருனையறிவார். (கஉஎ)

பவக்கடல்கடக்கும்படியறியாதுபலபெருஞ்சமயத்தின்மயங்கி
யவத்தமேபிறந்துநசிப்பவொல்லாமகண்டமாய்வரவுபோக்கற்றுச்
சுவத்தனாய்நின்றநின்னிலையறியார்நின்னுளேதோன்றியவுலக
மவற்றினாதாரமாதியாந்தெய்வமாயினாயாருனையறிவார். (கஉஅ)

தெவ்வடலவுணவடவியையெறியத்திகிரிசங்கங்கையிற்றரித்தாய்
செவ்வடங்கோத்தமணியெனக்கோத்துத்திரியவுஞ்சிதறுவையுலகை
மொய்வடமேருவோடுமூன்றுலகைமுற்றுமுண்டாலிலைத்துயின்றோ
யவ்வடநின்றதெவ்வடமறியேனமலனேயாருனையறிவார். (கஉகூ)

கனற்றுறைநிற்றியந்தணர்க்குள்ளங்கசிந்துகண்ணீர்சொரிபத்த
ரினத்தொடுநிற்றியேவல்செய்தொழிந்தோர்யாவர்க்குமாசையினிற்றி
மனத்துறைநிற்றியோகியருக்குமாசறுதூயஞானிகட்கு
மனைத்தினுநிற்றியொருவழிப்படாதவனந்தனேயாருனையறிவார். (கங0)

ஒருமுதலாகிக்கவடுமூன்றாகியுயர்பெருஞ்சாகைகள்பலவாந்
தருவெனநின்றுந்தலைபுலதெரியாச்சமையநூல்யாவையுந்தந்தா
யருவினையாகியருவினைப்பயனுமருவினையறுபலிப்பவனு
யருவினையாக்கியருவினையறுக்குமற்புதராயாருமறிவார். (௧௩௧)

என்பனசொல்லியிந்திரனேத்துமேத்தொலியிருசெவியெய்த
வின்பநித்திரையைவிட்டுணர்ந்தருள்யோமூலகுடையவனவனா
யன்புறநோக்கியனைவரும்வந்தகாரணமென்னெனவகத்திற்
றுன்பமதொழித்துத்தொழுதகையினராய்ச்சுராதிபரிவையிவைசொன்னார்.

வரப்பெருவலியான்மாலியவானுஞ்சுமாலியுமாலியுமென்று
மிரக்கமிலரக்கரெதிரிலாப்படையரெவ்வுலகங்களுமூழி
நெருப்பெனவரிக்குநிருதர்வேரறுத்துநீடுலகங்களைநீயே
பரித்திலையாகிலினியடிதொட்டுப்படைக்கவேண்டும்படிபடுமே. (௧௩௩)

கன்றிநுங்கொடியவெஞ்சினவரக்கர்நாடொறுங்கோறலாரில்லை
யென்றிரேர்செக்கிலெட்பிழைத்தாற்போலிங்குவந்தார்களேபிழைத்தோ
மஞ்சனமேனிக்கஞ்சநாண்மலர்க்கண்ணமலமற்றொருகதியில்லோ
மன்றிரேம்வர்தன்னடியிணையடைந்தோமாழியாயபயமுன்னபயம்.௧௩௪

ஆங்கவரபயமென்றலுமஞ்சலஞ்சலென்றுகையமைத்துத்
தீங்குடையரக்கர்குலத்தைவேரறுத்துன்சிந்தைநோய்தீர்க்குவன்றிண்ணம்
நீங்கள்போயுங்களிலகளிலின்னெனவிடையனையோன்விடுப்ப
வோங்கியவமரர்போயபினரக்கர்க்குற்றனவொழிவின்றிமொழிவாம்.௧௩௫

வேறு.

இமையவரக்கராலேயுற்றதம்பிடும்பையெல்லா
முமையொருபாகத்தானுக்கோடியேயுரைத்தவாறு
நமையடர்ந்தவனாராமேவல்லைநன்றன்றுநாகத்
தமைதுயிலரியாற்சென்மினென்றவனறைந்தவாறும். (௧௩௬)

அந்தமந்திரத்தைநெஞ்சிற்கொண்டனரமரரெல்லாஞ்
செந்திருமகள்கோனுக்குத்தேவர்கள்செப்பவுங்கள்
சிந்தைநோய்தீர்ப்பன்றிண்ணமென்றருள்செய்தவாறும்
வந்துசாரணர்தாங்கூறமாலியவானுங்கேட்டான். (௧௩௭)

தம்பியர்க்குற்றதெல்லாந்தானுரைத்தவருந்தானும்
வெம்பியமனத்தராகிமேற்செயும்வினைகள்தேர்வார்
அம்புயக்கண்ணன்றன்மேலாயிலோர்குற்றமில்லை
யும்பர்களவனதுள்ளந்திருத்தியுட்படுத்துக்கொண்டார். (௧௩௮)

ஆதலாலம்மையெல்லாமடியறவெண்ணுமந்தப்
போதமிலாததேவர்பொன்னகர்பொடியதாக்கிக்
காதிமற்றவரையெல்லாங்களப்படக்கொன்றுமீள்வம்
தீதினஞ்சேனைமுன்னேசெல்கதேர்வருகவென்றான். (௧௩௯)

வீரராயுள்ளோர்மண்ணில்விண்ணுலகத்தில்யாரு
னேரெதிர்போனாயின்றிச்செப்பியகிருதர்சேனை
போரெனும்வார்த்தைகேட்டுப்பொங்கியவுவகைதாண்டி
யார்கலியுவாவுற்றென்னவாவிமிக்கெழுந்ததன்றே (கசo)

எறிபடைவீரர்பாய்மாவிருண்மதக்களிறுதிண்டேர்
செறிதலிற்பக்கம்போவிடம்பெறாதுள்ளேதேங்கி
மறிகடன்மோழைபட்டதாமெனவாயில்தோறு
முறுபடைவெள்ளந்தள்ளிப்பார்த்தவெவ்வுலகுமுட்க. (கசக)

இடருறுகருமம்பார்த்தோமென்னகாரியஞ்செய்தோமென்
றுடனடுங்கும்பரெல்லாமொளிப்பிடந்தேடியோடப்
புடைபரந்துயர்ந்தவாயிற்போக்கிடம்பெறாதவாலிற்
றடமுகில்பரந்ததென்னப்பரந்ததுதானைவெள்ளம். (கசஉ)

காலிடையணிந்தவீரக்கழலினர்கவசமிட்ட
கோலநீண்மார்பர்பட்டங்குலவியநுதலர்கொற்ற
மாலியவானுமற்றைச்சுமாலியுமாலிதானு
நீலமால்வரைபோன்மெய்யரேறினர்நெடும்பொற்றிண்டேர். (கசங)

தேரொலிகொம்புகாளஞ்செறிவளைசின்னமுழும்
பேரொலிமுழங்குபேரிமுரசொலிபெருங்கைவேழக்
காரொலிகவனமாவாங்காற்றொலியெல்லாங்கூடி
யோரொலியாகியெங்கும்பரந்ததெவ்வுலகுமோட. (கசச)

பண்ணுறுபாய்மாவேழம்படர்கொடிநெடுந்தேர்காலா
ளெண்ணுறுசேனைபார்கிழிருந்திடவெழுந்துபொங்கி
விண்ணுலகாயதெல்லாம்வெளியிடமின்றிவிம்மி
மண்ணுலகாகும்வண்ணஞ்சேர்ந்துவளர்ந்ததூளி. (கசரு)

உதிரமுமென்புமேகம்பொழிந்திடவோங்கல்சம்பித்
ததிர்படக்காகமேங்கவன்னதுன்னிமித்தங்கண்டு
மதியினிற்கொண்டுமீளார்வாளெயிற்றரக்கருந்தம்
விதியினைவெல்லவல்லார்யாவரோவினையமெண்ணி. (கசசா)

அரக்கராரம்பமெல்லாமமரர்கள்விடுத்ததூத
ருரைத்தலுமுறக்கநீக்கியுணர்ந்தெழுந்துவணப்புள்ளின்
வரைத்தடந்தோளிலேறிவானவர்வாழ்த்தவந்தச்
செருக்கிளர்படையைச்சென்றுதாக்கினான்றிருவின்கேள்வன். (கசஎ)

துன்னணிகலப்பொற்சோதிச்சுடரொளிமறைத்துத்தோன்றத்
தன்னெதிரில்லான்றோளிற்றோன்றியசாரங்கபாணி
பொன்னெடுமேருவுச்சிப்பொருசிலையோடுங்கூட
மின்னொடுந்தழுவிநின்றவிங்குகார்மேகம்போன்றான். (கசஅ)

வெற்றிசேர்வயினதேயன் விசிறிறைவேகவாயு
உற்றிடமுறிந்திண்டேருலைந்தோடுருண்டபாய்மாக்
கொற்றவாளரக்கரெல்லாங்குன்றெனக்குலைந்தவிழ்ந்தார்
பற்றருபதாகையெல்லாம்பஞ்சுபோற்பற[illegible]ன. (௧௪௯)

ஆயவைவிசமுங்காலையஞ்சனக்கிரியைமூடித்
தோயகமெல்லாம்வாரிச்சொரிவதோர்தோற்றங்காட்டித்
தீயவர்வளர்த்தசெம்பொற்சிலையினர்செறுத்தவர்து
மாயவன்றன்னைச்சூழ்ந்துவடிக்கணைதூவியார்த்தார். (௧௫௦)

ஒண்டிறலரக்கர்சேனையுவரிபோலார்த்துப்பொங்கித்
திண்டடர்தேருமாவுஞ்சினமுகக்கரியுந்தூண்டித்
தண்டுவாண்முசலங்கூர்வேல்சக்கரஞ்சூலம்பாசம்
பிண்டிபாலங்களாதிப்பெரும்படைக்கலங்கள்விட்டார். (௧௫௧)

வேறு.

தேவர்தேவனவ்வரக்கர்செய்தசெயல்கண்டுதன்றுணைக்கைசெய்துதன்
சாபமேருவைவளைத்துவிட்டசதகோடிகோடிதழல்வாளியாற்
பாவகாரிகள்விடுத்தபல்படையனைத்தையும்பொடிபடுத்தியம்
மூவரோவிவிடுமுன்பெரும்படையைமுடவாளிமழைதூவினான். (௧௫௨)

தேர்துணிந்தநிகழ்ந்தேர்கடாவினர்சிரந்துணிந்தனதுணிந்தமாத்
தார்துணிந்தசமுகந்துணிந்ததடவெண்மருப்புடையசெம்முகக்
கார்துணிந்தமருமந்துணிந்தனகரந்துணிந்தனகடந்தவிற்
போர்துணிந்தவடல்வீரர்கால்கையுடல்பொன்முடித்தொகைதுணிந்தவே.

கொள்ளிவார்கணைதுணித்தபேருடல்குரத்தினிற்பரிமிதித்தது
மள்ளராயிரவாறுமண்டியவமர்க்களத்தினிலையற்றரும்
பள்ளமோடுபெருவெள்ளமாமெனவுடைந்துபோகுபடைவெள்ளமுட்
கள்ளமேவியசுமாலிவில்லினனைகட்டிமாயவனைமுட்டினான். (௧௫௪)

எடுத்தவில்லினனெதிர்ந்தகாணினவிடுத்தாரப்பியகடுஞ்சொலன்
மடித்தவாயினன்மதித்தநெஞ்சினனிம்மாயன்வெங்குருதியக்கையிற்
குடிப்பனென்றுசினம்பன்முக்கவுயர்குன்றுபோற்புரவியொன்றுதேர்
முடுக்கிவந்துசரமாரியாலரியைமூடினனமாரோடினார். (௧௫௫)

நல்லோல்லவனிகன்றுகன்றுயிர்கெடுக்குபோர்செயுமுபாயமும்
வல்லவல்லயுனையொக்கும்வில்லிகளிம்மாநிலத்தினிலையென்றுமால்
வில்லிருந்துசரமாரியாலவன்விடுத்தவெஞ்சரம்விலக்கிவெம்
பல்லவங்கள்கொடுபாகனோடுபரிகொன்றுதேர்பொடிபடுத்தினான். (௧௫௬)

ஊழிந்தமாரோடுதானவர்களோடவோடவிடுநீள்கொடித்
தோழிந்துதமையன்றனர்ந்துவினைசெய்வதொன்றுமறியாதிடக்
காழிந்திடவிடித்ததிர்ந்துவருகாலனென்னவிடமென்னவும்
வாழிந்ததிருமேனியானைவயமாலிவந்திடைமயக்கினான். (௧௫௭)

ஆனைபாய்புரவிதேர்நெருங்கியவளப்பிலாவடலரக்கர்வெஞ்
சேனைசூழ்வுயர்தேர்கடாவிவரைமேல்கொள்சியமெனமாலிபோர்
வானைநேயனொடுமாலுமாதிரமுமன்றுவின்றுமறையப்பெருஞ்
சோனைமாரியெனவோய்விலாதசுடர்வாயவாளிமழைதூவினான். (௧௫௮)

அந்தவார்கணையையாதிநாயகனனைத்தையுந்துணியவெய்துநீள்
கந்தராருகுழன்மங்கைமாருடையகண்கள்போற்கொடியவம்பினால்
மந்தராசலமெனத்திரண்டபுயமாலிமார்புருவவெய்துதே
ருந்துபாகனொடுவாசிநாசமுறவொன்றலாதசரமுந்தினான். (௧௫௯)

மார்பினின்றுதிரவாறுமண்டிடமயங்கியொல்லையினுணர்ந்துதந்
தேரினின்றுமிழியக்குதித்துவெகுள்சிங்கமாமெனமுழங்கிவெங்
காரினின்றிடிவிழுந்தெனச்சுரர்கலங்கிடக்கலுழனெற்றிமேல்
மூரிநின்றதொருதண்டுகொண்டதிரமோதினானசுபமோதினான். (௧௬0)

நெற்றிமேலடிபடத்தளர்ந்துநிலைவின்றவீரனிலைகண்டுமால்
வெற்றிநேமியைவிடுப்பமற்றதுவிளங்குமாதிருவரன்றியு
மற்றுமோரிரவியுண்டெனக்கதுவமாலிதன்சிரமுடிக்கழுத்
தற்றுவிழவதுகண்டுவானவர்களாடினார்நிருதர்வாடினார். (௧௬௧)

மண்டலங்கிழியவாளரக்கர்கண்மயங்கிவீழவடவெற்பொடுந்
திண்டடங்கிரிகள்விண்டிடத்திகழ்திசைத்தடங்கிரிதிகைத்திட
வண்டம்விண்டதெனவஞ்சிவானவரலந்தலைப்படவகண்டமு
முண்டசெம்பவளவாயில்வைத்துவளையூதினான்கழைகொடுதினான். (௧௬௨)

மாலிபட்டுவிழமற்றவன்றமையன்மார்கள்சோகமுறமாயவன்
கோலிவிட்டசுடர்நேமியாலுமிருகூரயிற்கணைகளாலுமா
வாலமொத்தகதையாலும்வாளினுமரக்கர்தம்படையவிந்ததால்
வேலியுற்றபயிர்காலியுற்றெனவும்வேந்தரில்லுலகுமென்னவே. (௧௬௩)

வெற்றிமேவுதிகழ்சக்கரத்தின்மிசைவிண்ணிலேறுவனவீழ்பவா
யற்றபைந்தலைகளுற்றவீரமகளாடிமம்மனையையொத்தவால்
கொற்றவெண்குடையினற்றதிண்கையவைசென்றுவீழ்வகுளிர்திங்களைப்
பற்றிராகுவினையொத்தபாறுகள்பறந்தகூளிகணிறைந்தவே. (௧௬௪)

வெஞ்சுடர்க்கணைதுணித்தசெந்தலைகண்மீளவவ்வழிமுளைத்தபோ
லஞ்சடக்கெனவெழுந்தசெங்குருதியோதவேலையினையொத்ததால்
மஞ்சடர்த்தனநிறத்தநேமிபதம்வன்கரஞ்சிரமறுப்பவுள்
ளஞ்சடக்கியகிடக்குநீலநிறவாமையொத்தனரரக்கரே. (௧௬௫)

கால்களற்றவுரலொத்தலிற்சுளகுகன்னமொத்தலினுரோமநீள்
வால்களற்றனதுடைப்பமொத்தலின்மருப்புலக்கையினையொத்ததான்
மாலையொத்தநிறமால்செயக்கொடிமலர்க்கைபற்றுவதுவைக்குமுன்
கோலிநெற்குறுமிடத்தையொத்தமதகும்பிபட்டுவிழுசூழலே. (௧௬௬)

குன்றின்மேலிடிவிழுந்தெனக்கதைகொடுத்துமோதவுயர்கொற்றவம்
பொன்றுதோள்களவைதுணியவாயினவுலைந்தியானைகண்மலைந்துபோர்
வென்றிவீரர்கள்கரும்புபோறுடனெரிந்துபோயினர்விளங்குசீர்க்
கன்றுவாளொருகண்டதூறுபலகண்டமாயினர்கள்கண்டரோ. (கசுஎ)

வேறு.

அடிமாலியவானிக்கிடவடையாருயிர்தளராக்
கடிமாலியவானவ்வழிகடிதோடியகாலைக்
கொடுமாலியவான்சேனையுங்குலைந்தோடக்குலையா
நெடுமாலியவானின்றெனினின்றான்பகைவென்றான். (கசுஅ)

கட்டோய்கமழ்கண்ணித்திகழ்கண்ணன்றனையணுகாக்
கெட்டோடியபடைகொன்றவினைளர்வீரரிலெண்ணைப்
பட்டோயவுலகிற்பெரும்பழிபூண்டறநெறியை
விட்டோர்செயல்செய்தாயிதுசேவகியெனவிளம்பும். (கசுகூ)

பொரவிட்டபிலாதோரமர்புறமிட்டவர்புகுந்தோர்
காம்விட்டவெம்படையோரமர்கைவிட்டவர்அதாய்
வாவிட்டவாலிமங்கையர்வன்றேயருன்றுறவென்
அரம்விட்டவரிவர்வெங்கொலைக்குரியோரலருடவோய். (கஎ0)

நடர்தோளிருநன்கூறிடத்தாமோதரன்மொழிவா
றடைந்தோடியுமக்கஞ்சியொளித்தும்பர்களெனைமுன்
படைந்தோர்களுக்கமரஞ்சியழிந்தோடினுமுமைநான்
றடர்ந்தேகொலமுன்னேவரங்கொடுத்தேனெனச்சொன்னான். (கஎக)

நன்றேடினையில்லாதவன்றானிங்கிவைகூற
னின்றெதிர்பொருவான்றனிநின்றேனிலபேரோ
னென்றெதிர்பொராவாவெனவிருதன்னிடித்தாப்பா
யின்றேடிகலொளிவேலினைவிடுத்தானறங்கெடுத்தான். (கஎஉ)

வெவ்வேலையில்விடநாங்கியவிமலன்றருகுமரன்
கைவேலொடுவலியொப்பதுகனலாமெனக்கனலாச்
செவ்வேதிகழ்திருமார்பிடைச்சென்றங்கெதிர்தைப்ப
வவ்வேலினைப்பிடித்தச்சுதனவன்மார்பிடையெறிந்தான். (கஎங)

அஞ்சத்தியனறப்பக்கடிதனுகாருளுடையான்
கஞ்சத்திருநயனன்றிகழ்காரியோனவிடுகனல்கால்
வெஞ்சத்தியரம்பைக்கனிமேனுசியின்வெய்யோ
னெஞ்சத்தினுழைந்தோடநெடுஞ்சத்திதளர்ந்தான். (கஎச)

இறந்தானவனெனவானவரொருந்தாடுமளவி
லறங்காவுணர்ந்தனன்போலவுமுணர்ந்தானருகுல
மறங்காவலன்பிசையேவினதுசென்றவன்மணிமார்
பிறங்காதெதிர்தைத்தோடவிகலோனிதுசெய்தான். (கஎரு)

கருவிற்கிடைகுடியுங்கனைகழலான் கருமுகிறன்
னுருவிற்கிடையொருவன்றனதாதத்துமுகத்தாஞ்
செருவிற்கிடையாதோன்வலிசெறிமுட்டியிற்சாடி
யொருவிற்கிடைபாய்ந்தவ்வழியுயர்வெற்பெனநின்றான். (கஎசு)

உடையான்வலியினனச்சதனுருமேறெனவுரப்ப
விடையாதெதிர்நின்றானெதிகடல்வாய்விழவிறகாற்
புடையாவுறுபெருங்காற்றினிற்பொருதேர்கரிபரியாட்
படையானவபஞ்சாமெனப்பறந்தோடிடவறைந்தான். (கஎஎ)

மறிந்தார்சிலர்மலைபோற்பெருவாடைச்சருகிலைபோற்
செறிந்தார்சிலர்பிறிந்தார்சிலர்திகைத்தார்சிலர்வாயுப்
பறிந்தார்சிலர்பதைத்தார்சிலர்பகைத்தார்சிலர்பனைத்தோண்
முறிந்தார்சிலர்தெரிந்தார்சிலர்முடிந்தார்படையெதிர்ந்தார். (கஎஅ)

கழிந்தார்சிலர்கடலேழையுங்கலுழன்சிறைக்காற்றால்
எழுந்தார்சிலர்விழுந்தார்சிலரிளைத்தார்சிலரிழியா
வழிந்தார்சிலர்புரண்டார்சிலரரண்டார்சிலர்மிகையற்
றொழிந்தார்சிலரிரிந்தார்சிலருலைந்தாரடலரக்கர். (கஎகூ)

பாழிப்புயத்தரக்கன்பழியொடுதம்பியுந்தானு
மாழித்துயினெடுமால்படையைந்தாலுமக்கருட
னூழிப்பெருங்காற்றாலுமிவ்வுலகிற்பிழைப்பரிதென்
றேழிற்பெரும்பாதாளமதடைந்தாரிகலிடைந்தார். (கஅ0)

முன்னேமுழுவலிமாலியவானேமுதலானோர்
தந்நேர்வலிபிறரில்லவர்தாம்பாதலத்தடைந்தா
ருன்றேறொடெதிர்மலைந்தோர்புலத்தியனார்வழியுள்ளோ
ரொன்றாவிவைமுன்பின்னுமிராமற்கிவைவியம்பும். (கஅக)

ஓராவறவிருதக்குலமொழியாமலறுக்கக்
கூராழியினாற்கல்லதுகூடாததிகுணத்தோய்
நேரோதிருநெடுமாலவனியாதலினவர்தம்
வேரோடறவறுத்தாய்பிறர்வேறாரிதுசெய்வார். (கஅ௨)

இலங்கையழித்தபடலம்-முற்றிற்று.

---

௨ - வது—வரையெடுத்தபடலம்.

வேலையுண்டமாமுனிவன்விரித்துவிளம்புங்கதைகேட்டுக்
கோலமணிபொன்முடிதுளக்கிக்கொண்டல்வண்ணன்வியப்பெய்தி
யாலமனையவிராவணன்றனவதாரமுமாங்கவன்செயலும்
சாலவிருப்புற்றனன்கேட்கச்சாற்றுகென்னமுனிசாற்றும். (க)

பெருநாளக்கர்பாதாளம்போதுறையுக்காலத்தி
லொருநாள்சுமாலிதன்மகளுக்கொத்தவரனைத்தேடுவான்
குருநாண்மதிபோன்முகத்தவளைக்கூடக்கொண்டிக்குவலயத்தில்
வருநாளம்பொன்மதிலிலங்கைமன்னன்குபேரன்வரக்கண்டான். (௨)

காதற்குருசொல்வழிகாட்டக்கற்றுந்தோறுமிகப்பெருகும்
போதத்தளவும்பெருமிடவும்புட்பகத்துமிசையேறி
வேதத்தலைவரியக்கர்திகழ்விண்ணோர்குழுவருவானைக்
கோதற்றுன்றன்றுணைதயிடங்கூடுமோசையுடையானை. (௩)

திக்குவிகழிந்திரனியமன்சோர்வருணன்குபரனென
வொக்கவெவ்வையரியானையுயர்வார்சங்கபதுமநிதி
பக்கம்வந்துசேவிக்கப்பண்டுசெய்ததவத்தானைத்
தொக்கமணிசின்முடியானைச்சுமாலிகண்டிங்கிவைநினைந்தான். (௪)

வலியோரெல்லாந்தாழ்ப்பட்டுமற்றையவரோமேற்பட்டுப்
புலிவாழிடத்தேபசுவுறைந்துபோராராழித்தோராரா
யலியாயிவனேயாளுமெயந்சாதிலங்கையுட்புகுந்து
நலிவாரின்றியாசாளக்கண்டேனாராயணனாலே. (௫)

என்றுநினைந்துதன்மனத்திலெழுந்தவெறுப்பன்பாதாளஞ்
சென்றுபுகுந்துதமையருடன்செய்யுங்கருமந்தெரிந்தெண்ணி
வென்றிவேல்விற்பிறைபவளம்விளங்குந்தாளம்விளைவதனத்
தன்றுகுழறன்மகடன்னைச்சுமாலிநோக்கியிவைசொன்னான். (௬)

தக்கருணைத்தோய்பெண்பிறக்கத்தந்தைகுலமுந்தாய்குலமும்
புக்கருலமுமிவைவிளங்கும்பூமேலிருந்தபொற்பாவை
யொக்குமுருவமுடையாயிங்குன்னாலேநங்குலம்விளங்கு
மக்களுண்டாம்புலத்தியன்றன்மகனைவாணுய்வரியென்றான். (௭)

தந்தையுரைத்தவம்மாற்றந்தலைமேற்கொண்டதடங்கண்ணு
ளெந்தைகுலமையயான்முடிப்பனிதனன்றுகதிதாக
வந்தவண்ணம்வருகவெனமனத்திற்கொண்டுமாமறைதேர்
சந்தமலரோன்மகன்மகன்சேர்தானமதனைத்தானுற்றாள். (௮)

சந்தமுனிநித்தொழின்முடித்துச்சுடர்நீராலண்டெனத்தோன்ற
வைத்தகலைசவனமுலையான்மருங்குவரைத்துமலர்க்கமல
மொத்தசரணைப்பெருவிரலாலொல்கிநின்றுநிலங்கிறி
மைத்தகுழலாண்மற்றவன்முன்மலர்மேன்மடந்தையெனநின்றாள். (௯)

அன்னவவளையருமறையோனருள்நோக்கியோர்மகனீ
யென்னகருமம்போந்ததுபேரோதென்றுரைப்பச்சுமாலிபெறு
கன்னிபேர்கைகசிவந்தகருமங்கண்டுகொள்ளென்ன
மின்னிலிடைதன்கருத்தறிந்துவேதமுனிவன்விளம்புவான். (௧௦)

மைந்தர்பெறநீகாதலித்துவந்தாய்வந்தகாரியத்தைச்
சிந்தையெண்ணிநீயென்னைச்சேர்ந்தகாலந்தீதன்னின்
வந்தகுமாரர்குணத்தாலும்வாத்திறலுங்கொடியோரா
யிந்தவுலகையிடர்செய்வாரொள்ளமின்னேரிடைவிளம்பும். (௧௧)

உன்னையடைந்தன்னருள்பெற்றோர்க்குன்றன்குணத்துக்கொவ்வாத
வன்னகுமாருண்டாகலாமோவென்றாயிறைஞ்சுற
வன்னியனையசிற்றத்தன்வயிற்றிற்பிறந்தமைந்தர்களிற்
பின்னையவன்பேரறிவுடையனாகுமென்றான்பெருந்தவத்தோன். (௧௨)

இத்தத்துவங்களுரைத்தமுனியிரவிகுடபாற்றிசைவிழு
மத்தப்பொழுதிலாங்கவனையன்பானினைவின்படியனையப்
பத்துத்தலையும்பத்திரட்டிதோளுமாகப்பாரொடுக்குஞ்
சத்திக்கிரியான்றசக்கிரிவன்றான்வந்துதித்தான்றரைநடுங்க. (௧௩)

நறையார்குழலாடன்வயிற்றின்ஞாலமடங்கவிழுங்கிடினு
நிறையாவயிற்றினெடுவரைபோனீண்டவுருவனிமிர்கையன்
பிறையாரெயிற்றுப்பிலவாயன்பெருத்தவிழியனொருக்காலுங்
குறையாதெழுவெம்பசியினொடுகும்பகன்னன்பிறந்தனனால். (௧௪)

பண்ணார்மொழியாளவள்வயிற்றிற்பருத்தவிடையும்பருங்கழுத்தும்
விண்ணார்மேகத்திடியென்னவெடித்தகுரலுமுடையாளாய்க்
கண்ணார்புகையுங்கனலுமெழக்கனன்றுகாலன்கருக்குலையப்
பெண்ணாய்ப்பிறந்தாளெனவந்துபிறந்தாள்பெரியசூர்ப்பநகை. (௧௫)

மன்னுதவத்துப்புலத்தியன்றன்மரபுவிளங்கமறைவிளங்கத்
தன்னேரில்லாத்தந்தைக்குத்தக்கமகவாய்ச்சண்டாள
ரன்னோர்முன்னோரவருதித்தவந்தவயிறுசுத்தமுற
மின்னேரிடையாடன்வயிற்றில்விளங்கும்புகழ்வீடணன்பிறந்தான். (௧௬)

பாதமறைவெவ்வரவினுக்குப்பாலுநெய்யும்புகட்டிடினும்
வாதைபண்ணும்வல்விடமேவளருமாப்போன்மறைநாலும்
வேதமவையோராயிரமும்விளங்குங்கலையுந்தசக்கிரிவ
னோதவோதப்போதங்கெட்டபோதமானதோங்கியதே. (௧௭)

ஒத்தகுலத்துக்குடிப்பிறந்தோரொழுக்கங்கெடவிவ்வுலகத்து
வத்தியாமைபுலத்தியன்றன்வழிவந்தோர்பாற்கைக்கொண்டோங்
குத்துவாதைமிகவிந்துகும்பகன்னன்குவலயத்திற்
சுத்தராயமுனிவரையேகொன்றுதின்னத்தொடங்கினான். (௧௮)

வசையின்மறையோர்குடிப்பிறந்துமாதாகுலத்தின்வழிநின்று
மசையிலாற்றற்சூர்ப்பநகையாணாய்ப்பிறந்தார்பின்றொடர்ந்து
பசையினெஞ்சர்தமையெல்லாம்பத்தாவாகவசிகரித்து
மிசையிலாதார்தமையெல்லாமெடுத்துப்புடைத்துத்தின்னுமால். (௧௯)

பொய்புக்களவும்பாதகரும்பொல்லாவொழுக்குமிலவகடித்து
மெய்புக்கயாவுந்தருமமுடன்விளங்கும்பொறைபுமிலவுண்டு
செய்யுஞ்செயல்களிவையெல்லாஞ்சிட்டர்செய்யுஞ்செயலாகு
மையம்புகழ்வீடணன்மறைகளறைந்தவறத்தின்வழிநின்றான். (௨0)

அந்தவனத்திலங்கால்வாகதவழியேயொழுகுநா
ளெந்தைசரணவிணைபணிவேனென்னுமாசைதனையுந்த
வந்தவனைக்கைகசிதன்மலர்க்கணுலேநோக்கிந்தான்
றந்தசிரித்தோட்டசக்கிரிவன்றனக்குக்காட்டியிவைசொன்னாள். (௨௧)

நலஞ்சார்தெய்வப்புட்பகமூராடற்சரியகிரிமிரண்டுஞ்
சலஞ்சார்வில்லாத்தவத்தாலேசாதித்துடையோனின்றனையன்
வலஞ்சார்திரோணமைந்தாகின்வழியிலன்னோர்முன்பாண்ட
விலங்காபுரியையாள்கின்றனிவன்காணிப்போதெனவுரைத்தாள். (௨.௨)

என்றுதாய்தானிவைகூறவெயிற்றிறலெயிரழுதுக்கி
யொன்றுதவத்தாலிவனேடேயொத்தன்மிருத்தல்செய்வனெனக்
கன்றுமனத்தாய்நினைத்தேற்றிக்கறுவுமனத்தனிலேருறொடுங்
குன்றுபுனைதின்புயத்தரக்கன் *கொன்றைவனத்தைக்குறுகினான். (௨௩)

கும்பகன்னனெனத்தீயுட்கொதிக்குங்காலத்திடைநின்று
மும்பர்கடுக்கக்கார்காலத்தொவ்வாமழையினூடனனைந்துந்
தம்பம்பொருவாராசத்துச்சலியாதிருந்துஞ்சயித்துயத்தி
லம்பின்முழுகிக்கிடந்துமன்றுமாண்டுபதினாயிரங்கழித்தான். (௨௪)

திரிகாலமுணர்செய்தவத்தோர்திகைப்பவையாயிரத்தாண்டங்
கொருகால்போலவொருகான்மண்ணூன்றியொருகாலெடுத்துயர
வெரிகாலிரவிமண்டலமேறச்செயிருகைகளுமெடுத்து
வருகாலக்கால்விடவுமும்வருடமையாயிரங்கழித்தான். (௨௫)

ஓராயிரமாண்டுபவகித்துக்கழிந்தாலோரோர்தலையாகச்
சீரார்சிரமொன்பதுந்தடிந்துசெந்தீயிடையோமம்பண்ணிப்
போராவுபவாசத்தினுய்ப்பின்புமோராயிரத்தாண்டிற்
றூராமற்றைத்தலைதடியவுற்றான்பற்றித்தசக்கிரீவன். (௨௬)

அன்னகாலையயன்றோன்றியவனைநோக்கியருந்தவத்தி
லின்னையொப்பார்நீயன்றியொருவரில்லையின்காத்தால்
முன்னமரித்ததலையெல்லாமுன்புபோலமுளைத்திடுக
வென்னவலைவதான்பண்டையினுமெழிலுண்டாகவெழுந்தனவால். (௨எ)

பின்னுஞ்சொல்லும்பிதாமகன்றான்பெருந்தவத்துநீயிங்குச்
சொன்னசொன்னவரந்தருவேன்சொல்லென்றுரைக்கத்தொல்லுலகின்
மன்னுமனிதர்தமைப்பொருளாய்மனத்தினினையான்வாளரக்க
னன்றுபொருளொன்றொழியாமல்வேண்டவிரிஞ்சனுவந்தளித்தான். (௨அ)

---

* கோகன்னவன மெனவும்பாடம்.

திருமலிவன்வீடணன்மெய்தழுவிநின்றுதவஞ்செய்த
வருமைகண்டுவியப்பெய்தியாதிமூர்த்திவெளிப்பட்டுன்
னிருமைசேர்ந்தவுள்ளத்தினியைந்தவரம்வேண்டுதியென்னக்
கருமைசேராவருந்தவத்தோனகருதியினையகட்டுரைத்தான். (௨௯)

நல்லாயறத்தைக்கைவிட்டுகெடுநெறியிடும்பைவரினும்நான்
பொல்லாதனசெய்யாதொழிகபோதிப்பிரமாதிகளென்னே
வெல்லாதொழிகவரியருளல்வேண்டுமென்னவிரிஞ்சனவை
யெல்லாம்பெறுதிநீயென்றுயிறவாதிருத்தியெனவுரைத்தான். (௩௰)

கும்பகன்னன்றவங்கண்டுகுலைந்திங்கிவனேவரங்கொள்ளிற்
றம்பமில்லைநமக்கென்றுதடுமாறியசிந்தையராகி
யும்பரோடுதானவருமுயர்மாதவருமொத்தீண்டி
யெம்பிரானேகேட்டருளென்றிறைஞ்சியயனுக்கிவையுரைத்தார். (௩௧)

படைத்தாயாதிபல்லுலகம்பரிப்பான்கையிற்சிற்றரிவாள்
கொடுத்தாயாதிமுன்னமேகொடியகும்பகன்னனுக்கு
வடுத்தானில்லாவினியவரம்வழங்கினுயேலெங்களையுங்
கெடுத்தாயாதியெனத்தேவர்கிளத்தவயனிங்கிதுசெய்தான். (௩௨)

சொல்லார்கலைக்குநாயகிதன்றுய்யகமலமுகநோக்கிப்
பொல்லாவொழுக்கமிவைபூண்டுபுவனமூன்றும்பொடிசெய்து
வல்லான்கும்பகன்னனெனைவரம்வேண்டுங்காலவன்வாய்நின்
றெல்லாம்பிழைத்துத்துயில்வேண்டுமென்னும்படிநீயியற்றென்றான். (௩௩)

இந்தப்படிக்குநாமகளையிசைவித்தடவியிருந்தவஞ்செய்
யந்தக்கும்பகன்னனிடையமரர்சூழவயன்வந்தன்
சிந்தைக்கினியவரந்தருவன்செப்பென்றுரைப்பநாமகளா
ரந்தத்துயில்வேண்டுவனென்னப்பெற்றாயென்றங்கயனுரைத்தான். (௩௪)

அள்ளன்மடுவின்மூழ்கித்தாமரும்பட்டினிவிட்டலம்வந்து
முள்ளந்துய்யரல்லாருக்கொருகாரியமும்பலமாகாக்
கள்ளமனச்செய்தவக்கும்பகன்னன்கருதும்வரங்கொடுக்கும்
வள்ளன்மலரோனிடைப்பெற்றவரத்தான்மாறாத்துயில்பெற்றான். (௩௫)

சந்தமலரோன்போனதற்பின்றடந்தோட்கும்பகன்னன்றன்
சிந்தையினிற்றீங்கிவையெல்லாந்தேவர்செய்தமாயையென
நொந்தமனத்தன்முன்னோற்குமனுநூலுணர்ந்தபின்னவற்கும்
வந்ததுரைத்தபின்னவர்கள்வளர்சீர்சொல்லும்வனமடைந்தார். (௩௬)

வேறு.

ஆங்கவர்கள்பெற்றுடையவரமுமாண்மையும்வலியுமடங்கக்கெட்டுப்
பூங்கமலக்கண்ணனுக்குப்போர்தோற்றுப்பாதாளம்புக்குவீழ்ந்த
வோங்குபுயமாலியவான்சுமாலியெனப்பேர்பெற்றோருள்ளிட்டோர்கள்
தாங்கரியபேருவகைதள்ளப்போய்த்தசக்கிரிவன்றன்னைச்சார்ந்தார். (௩௭)

கொலையடுத்தருன்றென்னைக்குவவுத்தோட்டசக்கிரிவன்கும்பகன்னன்
கலையெடுத்தவளர்க்கோய்குவிடணனென்றிங்கிவரைக்கண்ணிநோக்கி
மலையடுத்தகடற்றுயிலுமச்சுதனுக்கமாிந்தவரக்கரெல்லாந்
தலையெடுக்கப்பிறந்தீர்கள்வருகவெனவுயிர்பொருந்தத்தழுவிக்கொண்டார்.

அன்னவர்களிவிருந்தவக்காலத்தசமுகனைச்சுமாலிநோக்கி
முன்னமரிற்றுமெல்லாமுகில்வண்ணன்றனக்கஞ்சிமுதுகிட்டோடிப்
பன்னகர்காடதுவாயபாதாளம்புக்கமையும்பண்டுதாமாள்
பொன்னகரத்திடைதனதன்புக்குவீற்றிருந்தமையும்பொருந்தசொன்னன்.

தன்னுக்குந்தடமலரோன்வழிவந்தசக்கிரிவன்றான்முன்பாண்ட
மன்னுக்கும்பலாதியமணம்புகுந்துமனையாளாய்வகுக்கப்பட்ட
பெண்ணுக்கும்படாதார்தம்பெருவாழ்விற்பிச்சைசெயோன்றுகாண்போய்
கண்ணுக்கும்பொறிபறக்கக்கடவிலங்கையாள்கின்றகுபேரன்காண்டி.

தேனத்தார்கெழ்மார்பன்றென்னிலங்கையாள்கின்றகுபேரன்சேர்ந்த
மானத்தாலுனக்கந்தவளகேரிவிடுகலான்சாமபேத
தானத்தாற்றுரானேற்றண்டத்தாற்கொள்ளுதிநீகொள்ளாயாகில்
வானத்தார்நகைசெய்வர்மாகன்றும்மின்வலியும்வாரமுமென்றான். (௪௧)

என்றுதாய்தந்தைதனக்கியம்பியசொற்கேட்டதசக்கிரிவனேரே
யின்றெனக்குமுத்தானேக்கன்றுமாறெங்ஙனுனென்றுகூறத்
துன்றுபுயப்பிரகத்தன்றூாதுபார்ப்பரோதூர்ந்தபோரி
லன்றுபிராதாக்களாமசார்குலமறுத்திலரோவமரனென்றான். (௪௨)

என்றுதனக்கவளியம்பக்கேட்டதசக்கிரிவனதற்கிசைந்தரீயே
சென்றுதனபதிக்கிதனைச்செப்பிவாவெனவிடுப்பவவனுஞ்சென்று
குன்றுபுரைமணிமாடகூடகோபுரவிலங்கைகுறுகிச்சீரிற்
றன்றுணையிலான்றனக்குச்சமரவாசகங்களையேதமுவச்சொன்னான். (௪௩)

உன்றுடையதம்பியாமுயர்வலாத்தோட்டசக்கிரிவனுரைத்தகேட்டி
முன்னிலங்கைநகராண்டோர்மாலியவான்முதலாயமூவர்மூத்தோர்
பின்னதனுக்குரியார்கள்யானன்றிப்பிறரில்லைப்பேசிப்பேணி
யென்னுறவுவேண்டுமேலிலங்கைநகர்தருகவெனவியம்பச்சொன்னான்.

அன்னவாசகங்கேட்டவருநிதிக்கோன்வருங்கருமமனத்திறாய்ந்
தென்னாசமென்பதியுமென்றம்பியினதன்றேயெனக்கென்றம்பி [லாந்
சொன்னபடிசெய்வனெனச்சொல்லிவிடுத்தவன்றனக்குச்சொன்னவெல்
தன்னுடையதாதைக்குத்தான்கூறக்கேட்டந்தத்தவத்தோன்கூறும். (௪௫)

முன்னாளிலென்னுடையமுதாதையாண்டநகரிலங்கையென்று
பன்னாளுமெனக்குணப்பப்பழியானகாரியநீபகர்தியென்று
சொன்னாலுமவன்கேளான்றன்மதியான்தசக்கிரிவனவனுக்கானே
னென்னானேமைந்தவுனக்கீமானகாரியங்கேளென்றுசொன்னான். (௪௬)

வேறு.

திசைமுகன்வரமெனும்வலிகொடுதிசைதொறும்
வசைமுகம்வளர்தரமகிதலநலிதரு
தசமுகன்வழிகொள்தனைவிடுதரணியி
னிசைமுகம்வளர்தரவெனமுனியிவைசொலும். (௮௭)

குடதிசைகுணதிசைதழுவியகுரைகட
லிடைநுழையிருதலையிமையமதெனுமலை
வடதிசையுளதுமலையரசிதுவென
விடமுடையுலகவரிடுபெயருடையது. (௮௮)

மயிலியலுமையினைமகளெனவுடையது
குயின்மொழியவளொடுகுளிர்சடையானுறை
கயிலையையொருபுடையுடையதுகதிரவன்
வெயினுழைவருமரமிடைதடமுடையது. (௮௯)

பருமுகமொடுதிகழ்பகிரதியிழைதரு
மொருமொருமெனுமொலிமுழவொலியதுவா
வகமகிழுறுவதவளியிசைமுரறா
மிகமயினடமுறுவிரிபொழிலுடையது. (௯0)

எறிகதிர்மணிமுடியிமையவர்பொழிலுடை
வெறிமலர்மதுநுகர்விரிசிறைமதுகர
முறுதலுமதுநுகரிவரெனவுவகையொ
டறுபதமெதிர்கொளுமரவமதுடையது. (௯௧)

இனையனவெழிலுடையிமையமதெனுமலை
தனையுறுகிளையொடுதழுவுதிதழுவிய
பினையதனிடைவளர்பெருநிதியொடுமிரு
வெனமுனியிவைசொல்விசைமனமுடையவன். (௯௨)

வேறு.

எந்தையுரைத்ததுசெய்வனெனத்தனதனிருங்கிளையோடிலங்கைவிட்டுச்
சிந்தையெனுங்கடுந்தெய்வத்தேரேறித்திகழிமையக்குன்றஞ்சேர்ந்து
தந்திரமாகடறழுவத்தசக்கிரிவன்றன்னகரிவந்துசார்ந்து
மந்திரிகண்முடிசூட்டமாமணிமண்டபத்தின்மிசைமகிழ்ந்திருந்தான். (௯௩)

உழந்துநயரும்பார்க்காயுலகனைத்துமுண்டுமிழ்ந்தவொருவன்முன்னு
ளழன்றிலங்கைபாழாக்கவன்றுமுதற்பாதாளமடைந்துளோர்க
ளிழந்ததனம்பெற்றவர்போலிராக்கதர்களினைத்தீண்டியிழந்ததங்கள்
பழம்பதியிற்குடிபுகுந்துபண்டுபோற்குடியிருப்பவிலங்கைவேந்தன். (௯௪)

தடையில்லாவலியில்லையரம்பையர்க்குத்தம்முலைகடம்மைத்தாங்க
விடையில்லையென்னைப்போலிமைப்பளவிலெவ்வுலகுமுட்டிமீளும்
நடையில்லையெனப்பழிக்குநங்கையடற்சூர்ப்பநகைநலத்தைக்கண்டு
விடைவல்லோனெனவிரும்பும்வித்துருசிங்கவனுக்குவிரும்பியீந்தான்.

ஆங்கொருநாட்டசக்கிரிவனடவியிடைவேட்டைபோமளவிலாங்கோர்
தேங்கமழ்பூங்குழலியொடுதிகழ்மணிப்பூண்மயனவனைச்சென்றுசேர
வீங்கிவளையுடனேகொண்டியாவருமில்லாவனத்துவந்தோயாவன்
பாங்குபெறவுரையென்றுதசக்கிரிவன்பகாமயன்பகரலுற்றான். (ருசு)

தாமநெடும்புயத்தோயான்றயித்தியர்கோன்மகனென்னத் தகுவேன்பண்டு
மாமலர்மேற்றிருவொக்கும்வடிவுடையதருச்சனையைவரனேரிய
வேமபுரியென்பதெனக்கிருப்பாகயானிருமித்திவ்வுநாளுங்
காமமெனும்பெருங்கடற்கோர்கரைகாணுவதஞ்ஞான்றிருந்தகாலே. (ருஎ)

அங்கவடன்மணிவயிற்றில்வந்துபிறந்தவள்வண்டோதரியென்பாளிம்
மங்கையுடன்பிறந்தோர்கண்மாயாவிதுந்துபிவில்வலியின்மிக்கா
ரிங்கிவடன்குணத்துக்குமெழிலுக்குமிகவொக்கும்வரனைக்காணு [ல்லும்.
தெங்குமுமன்றிவ்வனத்திலிடைப்புகுந்தேனென்றுரைத்திக்கிலவபின்சொ

ருலம்வேண்டுமென்றிருப்பார்குலத்துள்ளார்கல்வியினுற்குறையாஞானப்
பலம்வேண்டுமென்றிருப்பார்தந்தைமார்பரந்தபெருஞ்செல்வமுள்ள
தலம்வேண்டுமென்றிருப்பார்தாய்மார்கள்யவ்வனமுநலமுஞ்சார்ந்த
நலம்வேண்டுமென்றிருப்பார்நாருகுழன்மங்கைமார்நலத்தின்மிக்கார். ருகூ

பண்புடையகுடிப்பிறப்பும்பழிப்பில்லாப்பேரழகும்பரந்தகேள்வி
அன்பொருளைமிரொழியப்பாணுகருமன்னம்போனேக்கித்திரு
மொண்பொருளுமிங்கான்குறுடையானைக்கிடையாதிவ்வுலகந்தன்னிற்
பெண்பெறுகைதனைப்போலப்பெரியதுயர்நாளுண்டோபேசுங்காலே. (சு0)

பின்றுமயன்கூறவனின்பேரொழிலும்யவ்வனமும்பேசவேண்டா
முன்வழியுமுன்பதியுமுன்பெயருமுன்னலமுமுரைத்தியென்ன
வன்னவனுமயன்மைந்தன்மகன்மைந்தனணியிலங்காபுரியையாளு
மன்னவன்பேர்தசக்கிரிவன்மறைகளோராயிரம்யான்வல்லேனென்றான்.

இண்டடந்தோட்டசக்கிரிவனிவைசெப்பச்செவிழையைவளர்த்துவைத்துக்
கொண்டிருந்தபயன்பெற்றேனெனமகிழ்ந்துகுண்டிகைநீருதகஞ்செய்ய
வெண்டிசையும்போற்றுதிறலிராவணன்றுனெழிலரக்கரொவரும்போற்ற
வண்டமருங்குழல்வண்டோதரியைமணஞ்செய்ததற்பின்மகிழ்ந்துமாமன்.

தாளார்தண்டாமரையோன்றன்மேலவிடுமவனுயிர்கொண்டன்றி
மீளாவேலுங்கொடுத்துமயன்போகமெல்லியலையுடனேகொண்டு
தோளாறுமேழிரண்டுசுடர்முடிகளினைந்தும்பொலிந்துதோன்ற
வாளார்திண்படைகுழமதிளிலங்கைவளநகரின்மன்னன்புக்கான். (சுங)

மன்றும்வயிரோசனன்றன்மகன்மகளாம்வச்சிரச்சுவாலையென்னுங்
கன்னிதனையனிவிரக்கமுற்றும்பகன்னன்கைப்பிடித்தபின்பு
தன்னெதிரில்கந்திருவத்தலைவன்கைதாடனன்றன்றந்தவேற்கண்
மின்னிடையாள்சரமைதனைவிளங்குபுகழ்விடணன்றன்விதியிற்கொண்டான்

இந்திரனுஞ்சசியும்போலிலங்கிலைமண்டோதரியுந்தானுமேய்ந்து
சிந்தையுவந்தனுபவித்துச்செல்கின்றகாலத்துத்திருவினுள்பால்
வந்துபிறந்திடுமைந்தன்மழையிடித்ததெனவாய்விட்டழுதலோடு
மைந்தனைத்தான்வலிமேகநாதனெனப்பேரிட்டானிலங்கைமன்னன். (௬௫)

பிறையெயிற்றுப்பிலப்பேழ்வாய்ப்பெருவரைபோற்கருவுருவப்பிறழ்கட்டிண்டோட், டுருகழற்காற்றசக்கிரிவன்றேன்றலையிம்மூவுலகுஞ்சுடுவான்வேண்டி, யறுசுவைசேருண்முதலாயுள்ளவெறுஞ்சிறுகுளகையிட்டூட்டிச், சிறுநெருப்பைப்பெருநெருப்பாயாக்குவார்போல்வளர்த்தார்செவிலித்தாய்மார். (௬௬)

அன்னவன்றன்பின்பிறந்தோரதிகாயன்றிறலக்ககுமாரன்வானோர்
பொன்னகரிபொடிபடுத்தித்தனித்தனியேபூணிக்கும்போரில்வீரர்
மன்னியசீர்வச்சிரச்சுவாலைதன்மணிவயிற்றில்வரத்தோட்கும்ப
கன்னனுக்குப்பிறந்தோர்கள்காலனையொக்குங்கும்பனிகும்பனென்போர்.

பனிகாப்செங்கதிரொளியிற்பன்மணிப்பூண்பொலிந்திலங்கும்பாலரோங்கத்
தனியேநற்றவஞ்செய்துசாதித்தும்பெற்றதுயிறன்னைச்சாரக்
குனிசாபத்தசமுகனைக்கும்பகன்னன்ஞன்குறுகிக்கூறுவானிங் [ன்.
கினிதாகவெனக்குறங்கவெழுமணிமண்டபஞ்சமைப்பி யென்னச்சொன்

தென்னிலங்கைமன்னவனுந்தெய்வதச்சனுக்குரைவாறுரைப்பக்கேட்ட
வன்னவனுமகலமோரோசனையுமதற்கிரட்டிநீளம்பெற்ற
பொன்னணிமண்டபமுப்பாற்புவனத்தினில்லதுசெய்தமைப்பக்கும்ப
கன்னனதுகண்டுவந்துநெடுங்காலங்கண்டுயிலாநின்றகாலை. (௬௯)

வேறு.

பூவயன்றருவரத்தினற்புயவலிச்செருக்கா
லாவதல்லதொன்றறிகிலாவரக்கர்கோனியக்கர்
தேவர்மாதவர்சிதறிடத்துரந்துநல்லளகைக்
காவெலாம்பொடிசெய்துவெங்களிறெனத்திரிந்தான். (௭௦)

அன்னதன்மையனதிக்கிரமங்கள்கேட்டளகை
மன்னவனொருதூதனைவிடுப்பமற்றவன்போய்த்
தென்னிலங்கைநாயகன்றனைச்சென்றுகண்டுமையன்
சொன்னவாசகங்கேளெனத்தூதுவன்சொல்லும். (௭௧)

சொல்லும்போதறவிளிவனசூழவுமிருந்து
சொல்லுவோர்பெரிதாகவச்சொற்பயனிலாத
சொல்லும்போதறக்கடுகுமாய்ச்சொற்பயனினிய
சொல்லுவாரில்லைச்சொன்னசெய்வார்களுமில்லை. (௭௨)

மூத்துளோர்கள்சொன்முன்பினூர்பின்பனீதென்று
வார்த்தையுண்டதுமனத்தினிற்கொண்டியானுரைப்ப
வார்த்தையாகுமீதென்றுகொண்டறம்வழுவாமற்
பாத்துசெய்வசெய்பழிபடுகாரியஞ்செய்யேல். (௭௩)

தேவரக்கனர்தங்களைச்சிதைக்கியோர்
யாவராயினுமிம்மையிற்கெடுவர்மேன்மறுமைப்
பாவகாரியர்புகுந்திடும்பழியொடும்புகுவா
ராவர்செய்குவாவரொடும்பகைகொளாரறிவோர். (௭௪)

உம்பர்வானவராதியருனக்கிடைந்தலகிற்
றம்பமின்றியேதனர்க்குமெந்தன்மையுங்கேட்டேன்
வம்புசேர்பொழில்வந்ததுமடித்ததுங்கண்டேன்
றம்பியாலினித்தன்மைசெய்யாதொழிதக்கோய். (௭௫)

இமையத்தொருமுகத்திசைநோக்கியானெழில்சேர்
சிமையத்துத்தவஞ்செய்கின்றவேலையிற்சிவனொ
டுமையைக்கண்டிந்தவுத்தமியாவளோவெனவோர்
சமையத்தாங்கவன்சலித்தெனைத்தழலெழவிழிப்ப. (௭௬)

பார்த்தவென்னிடக்கண்ணதுபற்பமாய்விழ
வேர்த்துமெய்தொலைந்துவிட்டிருக்கயான்வெருவிச்
சீர்த்தவத்திகழ்சிலம்பின்வேறோரிடஞ்சேர்ந்து
போர்த்துமுன்புபோற்பெருந்தவம்புரிதனன்பேணி. (௭௭)

அரியதாய்விரதத்தினின்றாண்டிருநூறு
முரியவாகியேயொருதினம்போற்செய்துமுடிக்க
விரிபெருஞ்சடைவிமலனுஞ்சிவன்வெளிப்பட்டுப்
பிரியனாயெனைப்பேணிநோக்கினனிவைபேசும். (௭௮)

நின்னையொப்பவர்தவத்தினினியல்லதில்லை
யுன்னையொப்பவர்வானலாலொருவருமில்லை
மின்னையுந்தமத்தோழனாய்வேண்டுவன்யானு
மென்னையொத்தநின்றோழனாய்க்கொள்ளுதியென்றான். (௭௯)

மங்கைசீறிடலாய்த்தநின்வாமநேத்திரமும்
பிங்கலந்திகணிறத்ததாய்ப்பெறுதியென்று
கங்கைசேர்சடைக்கண்ணுதலாளிவைபுரிந்தா
னிங்குகேளெனவின்னமுங்கேட்டியானியம்ப. (௮௦)

வாசவன்முதலாகியவானவர்தாமு
மீசனன்னமாதவம்புரியிருடிகளெவரும்
கூசியின்வலிக்கோடினார்கூடினாருனக்கு
நாசமென்றுவர்தசமுகநாடொறுமிருந்து. (௮௧)

ஆக்கனன்னவைகேட்டதுமனமெழவுயிர்த்துக்
காத்திரேருடிகைப்புடைத்துவெங்கனல்விழிகாலப்
பார்த்திரேருங்கித்தன்பாடிருந்தவர்முகநோக்கி
யிரக்கமில்லவனிவர்களுக்கிவையிவையியம்பும். (௮௨)

ஆசில்லாதரனொப்பவனளகையிலவனு
மீசன்றோழனுமவையெலாமெனமுனஞ்சார்ந்து
பேசருந்தனூர்பெறுகெனவிவையெனவாளாஸ்
வீசினனவனிருந்தணியாகமண்வீழ. (௮௩)

அல்லகோபத்தவரக்கர்கோனளகையிலவனை
முன்னருஞ்சென்றுநான்முட்டியேமனத்தினைமுடித்துப்
பின்னைநின்றதுசெய்வனென்பெரும்படையெழுக
வென்னலுங்கடல்கிளர்ந்தெனவெழுந்ததுசேனை. (௮௪)

கட்டியிட்டபொற்கலைகழற்காலினர்கரிய
வட்டமொத்தமாமேனியர்வயங்கியவீரப்
பட்டநெற்றியர்பணைத்ததிண்டோளினர்படர்மார்
பிட்டபொற்கவசத்தினரிராக்கதரெழுந்தார். (௮௫)

தேர்களுற்றனசெம்முகக்கரியினைநெருக்கப்
போர்மதக்கரிபுரவியைநெருக்கிடப்புரவி
வீரரைக்கரிநெருக்கிடவீரர்கள்போகத்
தாரைபெற்றிலர்தங்களிற்றனித்தனிநெருக்கி. (௮௬)

பாழிசாலெயிற்றரக்கர்கோன்படையெழுதூளி
யேழுலோகமுமெய்திமீண்டிவ்வுலகத்தி
லாழியானவையடங்கலுந்தூர்த்ததேசெருக்கிச்
சூழுமாதிரத்தும்பிகைத்தூம்புசெம்மியதே. (௮௭)

அன்னமாப்படையளகையைநெருக்கிடவரக்கர்
மன்னன்மாநிலத்தலைவன்மேற்கறுவுகொண்மனத்தன்
பொன்னின்வார்கழல்பொலிவுறக்காலிடைப்புனைந்து
மின்னுமாமணிப்பஃறலைக்கச்சொடும்விசித்து. (௮௮)

கூர்மையிட்டவேல்விழியினர்குவிமுலைக்குறியு
மார்வம்விட்டபோரங்கவர்கண்களுநெருங்குஞ்
சீர்கொள்வட்டமார்பதனிடைக்கவசமுஞ்சேர்த்து
வீரபட்டங்கணுதலுறும்விளங்கிடவீக்கி. (௮௯)

உடன்றுடித்தெழும்படையினாலுலகுகீழிருப்ப
விடந்துடித்திடுவெள்ளெயிற்றரவுமெய்நடுங்கிப்
படந்துடித்திடபடைத்தொழிலளகைநாயகனுங்
கிடந்துடித்திடவிராவணனேறினனிரதம். (௯௦)

மாயைவல்லனுமகோதரன்வயப்பிரகத்தன்
றீயராஞ்சுகசாரணர்திறற்புகைக்கண்ணன்
சூயமாமன்மாரிசனவ்வறுவர்தற்சூழப்
போயினானளகையாம்பொன்னகர்நோக்கி. (௯௧)

சென்றசேனையைச்செறிபொழிலனைகளைச்செறுப்ப
நின்றுகாப்பவர்சேனுந்தசமுகனம்மே
லொன்றிவந்தரம்மணிகர்ப்புறத்தவந்தற்று
லென்றுடைறமாடிருந்தவர்க்கியக்கர்கோவியம்பும். (௯௨)

அறிவிலாதவற்கறிவுசொல்லுவாரவரா
லிறுதியெய்துவாரென்றுமதின்றலைகண்டோ
முறுதியாவினைகாரியமுரைத்துவிட்டோமான்
மறுகிநேர்பொரவந்தனன்வாளெயிற்றரக்கன். (௯௩)

என்றவாய்மடித்தெரிவிழித்திராக்கதர்கோமான்
வென்றிவீரமும்வாங்களும்படும்படிவின்றே
நின்றுகாண்பாரலெனவெழுந்திரும்பரியிரத
மொன்றுசேனைமுன்செல்கெனவுரைத்தனனுரவோன். (௯௪)

வேறு.

அரக்கரோடமரொன்றனகாறிய
னுரைத்தவாசகங்கேட்டலுமுழியிற்
றிரைப்பெருங்கடல்சிறியெழுந்தன
விரைத்துமண்டியெழுந்தசேனையே. (௯௫)

முரிமேகமுழங்கியவாமெனப்
பேரியம்பலபெரும்படைகதுடித்
தாரைகொம்பணிசங்குமுழங்கின
வீரராய்த்தணிவீதிநெருங்கினார். (௯௬)

தாள்களோடவர்தாடமோதின
தோள்களோடுயர்தோள்கடுரம்பின
வாள்களோடவர்வாள்கண்மயங்கின
கோள்களோடுயர்கொடிகள்பிணங்கின. (௯௭)

ஆனைதேர்பரியாளளவற்றதன்
சேனைசூழ்தரச்செறிகுழற்றேன்மொழி
மானைநேர்விழிமங்கையர்வாழ்த்திடத்
தானைசென்றனபதிதோன்றினான். (௯௮)

திரைப்பெருங்கடன்மேற்கடல்சென்றன
வரக்கர்சேனையொடும்மளைகப்படை
யிலைப்பமண்டியெதிர்ப்பவிமைப்பிலோர்
வெருக்கொளும்படிபூசல்விளைந்ததே. (௯௯)

சென்றதாக்கினதேர்களுந்தேர்களுங்
கன்றவேழமும்வேழமுங்காந்தின
வொன்றுமாவொடுமாப்பொரவுற்றன
வென்றிவீரரும்வீரரும்வெம்பினார். (௧௦௦)

கொற்றவீரர்கொடும்படையேவிட
வற்றகால்சிரமாய்கொரிந்தோங்கின
விற்றகைமெய்யிருஅணியாயின
வுற்றதாழியுதிரத்தின்வெள்ளமே. (௧௦௧)

ஆயகாலையளகைப்பெரும்படை
வீயநூறியவெம்புலைக்கண்ணறு
மாயம்வல்லமகோதரனும்முத
லாயவீராழலைழச்சிறினார். (௧௦௨)

ஏகவீரவரக்கரியக்கரைப்
போகநூறிப்புனல்பெருங்காற்றினு
ளுகமோழையினும்புகாடுபோர்
யோககண்டகனென்போனூறினான். (௧௦௩)

ஆயவன்னிலைகண்டவனோடடல்
மாயையாவையும்வல்லமாரீசனுந்
தியவன்சென்றுதாக்கலுந்திண்டிறல்
சாயமோதினன்றன்கரத்தண்டினால். (௧௦௪)

மயங்கிவீழ்ந்துதெளிந்துமாரீசனுந்
தயங்குபூண்வலிசாயவியக்கரைத்
தியங்கியோடத்துரந்தவன்சேனைமண்
முயங்கிவீழக்கதைகொண்டுமோதலும். (௧௦௫)

பற்றலார்கள்படுகளவம்மியிற்
கொற்றமேவுதண்டென்னுங்குழவியால்
வெற்றிவேலிலங்கேசன்வெருண்டெழுந்
தூற்றசேனையொருகுழம்பாக்கினான். (௧௦௬)

தானையெல்லாந்தரைப்படுத்துத்தம
ரானதியமகோதரனோடட
லேனையோர்புடைசூழவிராவணன்
வானைநேர்கிகர்வாயிலைமுட்டினான். (௧௦௭)

வானிமிர்ந்தமழைதவழ்வாயிலோன்
மேனிமிர்ந்தெழுமெய்யினன்சூரிய
பானுவென்னும்பெரியவன்பாதக
நில்லென்றெதிர்வந்தமர்நேர்ந்தனன். (௧௦௮)

இலங்குதோரணகம்பமிருகையால்
நிலங்குலுங்கிடவாங்கிருதன்மேல்
விலங்கல்மேலிடிவீழ்ந்தெனவீழ்த்தனன்
கலங்கலானிலங்காபுரிக்காவலன். (௧௦௯)

அன்னதோரணமேகொண்டரக்கர்தம்
மன்னன்மன்றுபெருவலிவாயிலோன்
றன்னைமெய்தெரியாவகைசாடினா
னென்னவீரனேவென்றிமையோர்சொல. (௧௧0)

வலின்மிக்கவன்விழவியக்கர்கோன்
காணவப்பனைக்கைகழிந்தோடிடத்
த[illegible]வொத்தபுயத்தினன்றானுரும்
மா[illegible]பத்திரன்வந்துவிலக்கினான். (௧௧௧)

விலக்கியாங்கவன்வெய்யவரக்கனைக்
கலங்கியோடக்களப்படக்கொன்றிட
வலங்கொள்வாளம்மகோதரனாதியோர்
நலங்கொள்சீயமெனவந்துதாக்கினார். (௧௧௨)

தாக்கிமேல்வருதானைசிந்திட
னாக்கவாயிரவாயிரனாழில்க
ளாக்கியாக்கியளைத்திடவப்படை
காக்குநாயகன்கண்ணெரிகான்றனன். (௧௧௩)

நன்றுநன்றாம்வீரமெனநகர்க்
கொன்றுமேல்வருகூற்றமன்னோர்களிற்
கன்றுவெம்புகைக்கண்ணனைக்கண்ணுருச்
சென்றுதாக்கினன்றேவர்திகைப்பவே. (௧௧௪)

தாக்குவெம்போரியக்கர்தலைவனும்
வீக்கும்பைங்கழல்வெம்புகைக்கண்ணனு
னாக்கிராட்டமெரியெழநோக்குவோர்
போக்கிலாதுபொருகின்றவெல்லையில். (௧௧௫)

மாணிபத்தமணிவலயங்களாம்
பூணுடைப்புயத்தம்பன்புகைக்கண்ணன்
மாணிபத்திரன்றன்வளாமார்பிடை
யேறுடைக்கதையான்முனிந்தெற்றினான். (௧௧௬)

அலகிலாற்றலியக்கனடித்திட
நிலைகலங்கலிலாதநிசாசரன்
றலைநெரிந்திடத்தண்டினடித்தலும்
மலைவிழுந்தெனவீழ்ந்தனன்மண்ணின்மேல். (௧௧௭)

ஆங்கவன்விழக்கண்டவரக்கர்கோன்
தாங்குதண்டினன்சென்றுதரைப்படப்
பூங்கழற்காலியக்கனும்போரெதிர்
நீங்கிலான்வந்தவனொடுநேர்ந்தனன். (௧௧௮)

அக்குரூரனுமாங்கவனுஞ்சின
மிக்கபோரிலிராவணன்மெய்யின்மேல்
றைக்கவெய்யவியக்கன்வெந்தண்டினாற்
பக்கமௌலிபறிந்திடமோதினான். (௧௧௯)

முடிபிளக்கத்தரிக்கிலனாய்முகி
லிடியெனக்கதறிக்கொடிராவணன்
கொடுமனத்தன்கொதித்தவன்மேல்விழ
வடுபுலிக்கிடையாடெனவோடினான். (௧௨௦)

ஈடுபட்டவியக்கரிரிந்துபோய்
நாடுவிட்டவர்சென்றந்தகனிலைக்
கோடுவிட்டகுராய்கெனக்கூடலார்
காடுவிட்டருங்கன்முனைமுநண்ணினார். (௧௨௧)

அன்னசேனைகெடவளகாபுரி
மன்னன்வாளமர்மாறெதிர்ப்போரிலாத்
தென்னிலங்கைக்கிறைவன்முன்சென்றவற்
கின்னவாயவிளியனசெப்பினான். (௧௨௨)

முன்னுனக்குமொழிந்தவுறுதிகள்
பின்னெனக்குப்பெரும்பகையானவா
கொன்னினைப்போர்மனத்தறங்கூடுமோ
வென்னுனக்கினிச்சொல்லுவதேழைகேள். (௧௨௩)

தந்தைதாயரைத்தம்முனைச்சார்நெறி
யந்தணாளரைச்சீறுமறிவிலோ
ரிந்தலோகத்திரும்பழியெய்திமே
லந்தலோகத்தருநரகெய்துவார். (௧௨௪)

என்னநீதியிராவணனுக்கவன்
சொன்னமாற்றஞ்சுவபொறியந்தென
வன்னவன்றுண்ணுமையாததைத்திடத்
தன்வினேரிலான்றண்டினைவாங்கினான். (௧௨௫)

வேறு.

நீதியானதோதினுநீசரானவர்க்கறம்
போதியாதெனத்தெளிந்துபோர்புரிந்துபொற்கலன்
ஏதியானசாதியாமிராவணன்றன்மெய்யின்மே
லாதினானமோதினானழன்றுதண்டுகொண்டரோ. (௧௨௬)

துன்றுதோளிராஜராஜன்மோதமெய்துளங்கலா
வின்றுகாணலாமிவன்றன்றிண்மையென்றிராவணன்
குன்றுசென்றதன்னவுட்கொதித்துமண்டிமேல்விழ்
வென்றிவீரர்தங்களுக்குவெய்யபோர்விளைந்ததே. (௧௨௭)

கோபமுந்துவாலிசுக்கிரீபருங்கொதித்தகன்
தோபகந்தரும்மெனச்சமுன்றுசாரிகைத்துறைத்
தாபமின்றியேசுக்கிரீவனுந்தமையனும்
பாவதன்மமும்மெனப்பகைத்தனோர்கள்போர்செய. (௧௨௮)

தேசாசமானதென்றுவித்தருமியக்கருங்
கூவாசவாதியோர்குலைந்திடச்செருச்செயும்
நீசன்மேலவ்வீசனன்பனிணைருப்பினுய்தம்
வீசவாலிபாசபாணிவாளியால்விலக்கினான். (௧௨௯)

வயமென்னமாயையொன்றியற்றியுன்மயக்கியத்
தீயவன்குபேரனைச்சிரத்தின்மீதடிக்கவத்
தூயவன்றளர்ந்துமெய்துளங்கியாவிசோர்தலும்
ஆயதன்மைகண்டுசேனையங்குநின்றகன்றதால். (௧௩௦)

வண்டுசேர்பொழிற்குபேரமன்னன்வாழுமாநகர்
கண்டகண்டமாடெலாங்கவர்ந்துகொண்டுபண்டைநாள்
புண்டரீகவாசனன்கொடுத்தபுட்பகத்தையுங்
கொண்டுவென்றிகொண்டரக்கர்கோனுவந்துபோயினான். (௧௩௧)

வேறு.

வெற்றிகொளரக்கன்விடுபுட்பகமெழிற்கயிலைவெற்பையணுகா
விற்றவலியச்சினவெனக்கருதியிற்றலைவிதற்குநடவாக்
குற்றம்வருகைக்குவழியெதற்றெனவுரைத்திடொனவுட்கொடியனு
யற்றதலைபெற்றிடுமரக்கனதுரைத்திடவமைச்சர்நினைவார். (௧௩௨)

அந்தணனிருந்தவமுயன்றதனதன்பெறவுவந்தருளொடுந்
தந்தபினவன்றனைநெடும்பகல்பிரிந்திலதுதங்குபிரிவாற்
சிந்தையலம்வந்துசெயலின்றியிதுநின்றதுகொலென்றுதெளிய
மந்திரிகள்சிந்தைசெயவந்தனுகியிந்தவுரைநந்திபயிலும். (௧௩௩)

சங்கமலையுந்தடுதடங்கடலனந்தசயனந்தனிலிருஞ்
செங்கமலையுந்திகழ்முகுந்தனுமயன்றனொடிருந்திரிபுரம்
மங்கழல்செய்சங்கரனுமங்கையுமகிழ்ந்தினிதிருந்தவிடமித்
தங்கமலையென்றிரதமிங்குவருகின்றிலதுதன்றுதிறலோய். (௧௩௪)

படிக்கழிவினைச்செய்திருபற்றலர்கண்முப்புரநெருப்பின்விழவோர்
வடிக்கணைதெரிந்தவன்மலைக்குமிசைபுட்பகநடக்கவரிதிங்
கடிக்கழிவினைச்செயலகப்படுகைநிச்சயமகற்றிரதமென்
றிடித்தவனுரைத்திடவிரக்கமிலரக்கனிதுரைத்திதுசெய்தான். (௧௩௫)

உரங்குடையவெஞ்சரமெனுஞ்சொல்பலவுஞ்சொலியுயர்ந்தகுணனு
மரன்றனதகத்திதன்மகந்தனையிகழ்ந்திடவன்குபிதனு
யிரங்கலெகுரங்குமுகமென்றனையிகழ்ந்தவுனிலங்கைநகரிற்
குரங்குகள்புகுந்துதவிகொன்றிடுகவின்குலமெயென்றுரைசெய்தான்.

சகட்டுருளையிற்றிரிபிறப்பிலிசலிப்பவெருவுற்றதவசிப்
பகட்டிறவெனக்கருதிரக்கமிலரக்கனோர்பழிப்பிலவர்மேன்
முகட்டெனதுபுட்பகம்விலக்குகயிலைக்கிரிமுரிப்பனெனவோர்
அகட்டுகெழ்படைக்கடிதெடுத்தனன்மிகைத்தவர்தனுக்குமுறவே. (௧௩௭)

சத்தவிருடிக்கணமகப்படவெழிற்றவமுனிந்தலைவரும்
சுத்தவிதையப்பிரமவிட்டருமிறப்பில்சுரர்கொத்தடையவும்
பித்தருமதித்ததவபத்தருமெழிற்பிரமதத்தலைவருஞ்
சித்தருமியக்கரும்வெருக்கொளுமனத்தரடையச்சிதறினார். (௧௩௮)

ஆடல்புரிபூண்முலையரம்பையர்கள்சிந்தையலம்வந்தலறினார்
பாடல்புரிதும்புருவுநாரதருமாதியர்பயந்தழுவினார்
கூடலைமுயன்றனர்விரும்பவழிகோபமொடுகூடிணையா
ஊடலைமறந்துமைமடந்தையரனைத்தனமுறத்தழுவினாள். (௧௩௯)

மறைத்தவர்மருக்கமுமடக்கொடிநடுக்கமுமனத்திலுணராப்
பிறைச்சடைமுடிக்கடவுள்பொற்றிருவடிப்பெருவிரற்றலையினால்
நெறுக்கெனவழுத்திடவுடற்பொறைபதைப்பநிருதர்க்கிறைவனுங்
கறுத்தவுருவத்தனுமறக்கருமனத்தனவெருவிக்கதறினான். (௧௪0)

காயவரையாலையிலைசபாய்பவரமுக்கியகரும்பதெனவே
சேயுயர்விசும்புநிலனுந்திரைகளுந்திசைகளோடுதிர்தர
வாயொருபதுங்குருதிபொங்கியிடவங்குவருடங்களவையோ
ராயிரம்விலங்கலுளடங்கினன்முடங்கியலம்வந்தலறினான். (௧௪௧)

வேறு.

வான்றிகழ்வெள்ளிவெற்பின்கீழுற்றுவருந்துகின்ற
வூன்றிகழ்வேலினானையமைச்சர்தாமுற்றுநோக்கித்
தேன்றிகழிதழியான்றன்றிருச்செவிசாரநின்கை
தான்றிகழ்வீணையாகப்பாடுதிசாமமென்றார். (௧௪௨)

அன்னதேகருமமென்னாவரக்கனுமறிவுட்கொண்டு
தன்னதுதலையிலொன்றைத்தடிந்துதன்கையிற்சேர்த்த
வின்னவின்னரம்பிற்றுத்தங்கிளைமுதலிசைகளேழாற்
பன்னருஞ்சாமகீதம்பரிவுடன்பாடலுற்றான். (௧௪௩)

அவ்வழியவனும்பாடவரன்மகிழ்ந்தழைத்துக்கொண்டு
மூவ்வகையுலகுமாளமூன்றரைக்கோடியாண்டு
மெவ்வகைப்படையும்வெல்லுஞ்சந்திரவாளுமீந்தான்
பொய்வகைநிருதன்பெற்றுவிடைகொண்டுபோகலுற்றான். (௧௪௪)

வேறு.

பொருப்பரையன்மடப்பாவையிடப்பாகன்பொருப்பின்கீட்கிடந்துபோகா
திரக்கமுறக்கதறுதலாலிராவணனென்றெனப்பெயருமியம்பிவாவென்
றரக்கனுக்குமுக்கோடியரைக்கோடிவாணாளுமளித்தப்போவென்
றுரைப்பவரனடிவணங்கியாங்கெழில்சேர்புட்பகத்திவர்ந்துபோனான்.

வேறு. மற்றவாளரக்கன்றனைமாயவன்கண்டு
பெற்றமுன்றனைக்கோடியுமொழியநீபேணி
யுற்றபோரைக்கோடிநாள்கேளெனவுவந்து
பெற்றவாகனவிடத்தவன்பின்னருஞ்சென்று. (௧௪௬)

முன்னமுன்றனைக்கோடியுமொழியநீமுதல்வ
வின்னமோராளைக்கோடிநாளிந்தருளென்ன
மன்றுமாகவைப்பாயலான்மாயமிதென்று
வுன்னிமாமலைமகளுடனுமாபதியுரைத்தே. (௧௪௭)

அன்னவாறனைக்கோடியேயளித்தனமென்றும்
இன்னருமமாயிராவணனெனவியமித்து
மின்னும்வார்சடைக்கண்ணுதல்விண்ணவன்விடுப்பப்
பொன்னின்மாமுடிப்புட்பகம்பொருந்தினன்போனான். (௧௪௮)

வரையெடுத்தபடலம்முற்றிற்று.

ஆ_திருவிருத்தம்—௩௩௦.

௩-வது—திக்குவிசையப்படலம்.

கங்கைசேர்சடைக்கண்ணுதல்காதலி
தங்குபங்கன்றனதருள்பெற்றவத்
துங்கமால்வரைத்தோணிருதன்றிசை
யெங்கும்போர்செய்தியவனமெய்தினன். (௧)

வாக்கினால்மனத்தால்மறைவல்லனைப்
போக்கிலேவறியாதபொற்பாவையை
யாக்குவேணியுமானுரியாடையும்
வீக்குமாதவவேடத்தினுடனை. (௨)

மைதவழ்ந்தகார்வல்லனைக்கண்ணுறச்
செய்தவம்புரிசிந்தையினுடனைக்
கைதவமிலாக்கற்புடைக்கன்னியை
யெய்தவந்தவிராவணனோக்கினன். (௩)

அன்னகன்னியைநோக்கியரக்கர்கோ
னுன்னைநோக்கியுலகஞ்செயுந்தவந்
தன்னைநீசெயத்தக்கதன்றன்பெய
ரென்னதார்மகனீயென்றியம்பலும். (௪)

கோதில்நீதிக்குசத்துவசன்னெனும்
மாதவன்மறையோதிடமற்றவ
னோதுவேதத்திற்பவித்தேனென்
தாதையேதவதியென்றுசாற்றினன். (௫)

பேசிவந்தவர்தங்களுக்கென்பிதா
மாசின்மால்வரனாயென்மகளுக்கு
வாசுதேவனெனவரித்தேனென
வாசையற்றங்கனைவரும்போயினார். (௬)

சம்புவென்னுந்தயித்தியர்கோன்மனம்
வெம்பிவெல்லியுறங்கிடும்வேலையில்
யென்பிதாவைவதைத்திடவெம்மனை
யும்பர்வாழ்த்தவுடனெரிமூழ்கினாள். (௭)

எந்தையெண்ணமுடிக்கவியற்றுமென்
சிந்தைமாதவன்றன்வழிச்செய்கையா
விந்தமாதவம்பூண்டனன்யானென
வந்தநீசனடாதனகூறினான். (௮)

இலங்கைமன்னனிராவணனென்பெயர்
புலன்கள்வென்றபுலத்தியன்பௌத்திரன்
கலங்கல்சிந்தையென்காதலியாய்த்தரா
தலங்களுக்குத்தலைவியுமாகென்றான். (௯)

குலத்தினான்மிகுங்கொற்றத்தினாற்பெரும்
பலத்தினாலோர்பழிப்பில்வடிவினால்
நலத்தினாலெனைநாரணனொக்குமோ
வுலத்தினாய்பயனென்கொலுடம்பைநீ. (௧௦)

வேறு.

ஓராதவரக்கனுரைத்தசொலச்
சீரார்மடவாள்செவியிற்கனல்காய்
நாராசநுழைந்தெனநண்ணுதலும்
வேராவிவளின்னவிளம்பினளால். (௧௧)

பையாடரவிற்றுயிலும்பானைக்
கையாழியனைக்கருணாகரனை
மையார்மழைவண்ணனைமாமலர்மேற்
செய்யாளுறையுந்திருமார்பினனை. (௧௨)

சேயோனையடைந்தவர்சிந்தையனைத்
தூயோனையெனாவிலையென்றுணையை
மாயோனைவரித்தனன்யானெனவும்
பேயேறினர்போலிவைபேசுதியோ. (௧௩)

நிலமன்னர்நெடும்பழிமேனிலாயம்
பலமன்னுவைபாரினினைந்திடிலும்
புலன்வென்றபுலத்தியன்மாமுனிவன்
குலமன்னவனுக்கிவையோகுணமே. (௧௪)

குயில்பற்றியசொல்லிவை கூறுதலும்
மயில்பற்றியமன்மதனேங்கினதன்
னுயிர்பற்றியரிந்திடவுன்னுறியுஞ்
செயிர்பற்றியசிந்தையவீறுசெயும். (௧௫)

மையார்குழலாடன்மலர்க்கையினைக்
கையாலவன்முட்டிடலுங்கனல்காய்
செய்யாமுலாமெனநின்றெரியச்
செய்யாள்வடிவாளிவைசெப்பினளால். (௧௬)

வேறு.

வாடாமலரோன்வரச்செருக்கால்மற்றென்னைக்
கூடாதனசொல்லிக்கூசாதுதீண்டினனீ
யோடாவனக்குயிலங்கைக்குமுன்னிலைக்குங்
கேடாகத்தோன்றுவேனென்றுள்கிளர்கினைத்தாள். (௧௭)

வானோர்மகிழ்ந்தமலர்மாமழைசொரிய
வேனோர்களெல்லாமினிப்பிழைத்தோமென்றியம்பக்
கானாருந்தவத்தோர்கண்டுவியப்பெய்தத்
தேனார்மொழிமடவாள்செந்தழலின்மூழ்கினாள். (௧௮)

வன்னியிடைமூழ்கிமாதவத்தான்மாச்சனகன்
றன்னுடையவேள்வித்தரணியிடைவந்துதிப்ப
வன்னவளைமுன்னாளமுதிற்பிறந்தானைப்
பொன்னொளிசேர்பூணினாய்வில்லிறுத்துக்கைபிடித்தாய். (௧௯)

என்றுமுனியுமியம்பவதுகேட்டு
வென்றிச்சிலைதரித்தவீரன்வியப்பெய்திக்
கன்றியசிந்தையரக்கன்கடைச்செய்த
தொன்றுமொழியாதுரைத்தியெனவுரைப்பான். (௨௦)

வேதவதிதான்சிறிவெந்தீயின்மூழ்கியபின்
போதமிலாவரக்கன்புட்பகத்தின்மீதேறி
யேதமிலாவிந்திரனேயாதியிமையவரு
மாதவருஞ்சேர்ந்தமருத்தன்மகமடைய. (௨௧)

வாசவனுஞ்சிமயிலுருவந்தான்கொண்டான்
பாசக்கரத்தான்பருந்தானோனன்னமாய்க்
காசினமன்கலங்கிக்காக்கைவடிவாகக்
கூசிக்குபேரனுங்கோம்பிவடிவானான். (௨௨)

மற்றையவரெல்லாமாயாவுருவங்கொண்
டெற்றிசைதிசையேயோடவுயர்சியமம்
பற்றியிருந்தபரமன்றனைநோக்கிக்
கொற்றம்புரிமனத்துக்கோளரக்கன்கூறுவான். (௨௩)

தோற்றேனுனக்கென்றசொல்லுதிநீசொல்லாயே
லாற்றலின்றேலென்றேடமர்பொரவாவென்றனாப்பச்
சீற்றமிகுமன்னனீயாரேயெனச்செப்பக்
கூற்றமனையோனவைத்தினையகூறினான். (௨௪)

மன்னன்குபேரனைமுன்வாளமரிற்போர்வென்று
பொன்னின்விமானமாம்புட்பகமுங்கைக்கொண்ட
வென்னையறியாயோவென்னவிறையுனக்கு
முன்னவனைப்போர்வென்றமூர்க்கனோதானென்றான். (௨௫)

வேறு.

என்றனாத்தெரியிற்பொங்கியெழுந்தமர்புரியுமீதிப்
புன்றொழில்கடிந்தவந்தப்புரோகிதனவனைநோக்கித்
துன்றியதிறலோய்நீயுந்துடங்கியமகமுற்றாது
குன்றியவினையதாகிற்கொல்லுநின்குலத்தையென்றான். (௨௬)

அன்னவனறையக்கேட்டவரசர்கோனமர்கைவிட்டு
வன்னிசார்ந்திருக்கும்வேந்தன்மாதவமண்டையநாதி
யென்னதுவெற்றியென்றார்த்திராவணனேகத்தேவர்
மன்னவன்பிழைத்தேனென்றோர்மயிலினைநோக்கிக்கூறும். (௨௭)

நீயவல்லரக்கன்சீறித்திகழுநின்றுருவங்கொண்டு
போயுயிர்பெற்றேனின்றபுகழினாய்புவனந்தன்னி
லோய்விலாமாரிபெய்யிலுவகையுமென்னைப்போல
வாயிரங்கண்ணுமுண்டாகென்றனனமரர்கோமான். (௨௮)

வனத்திலோர்காக்கைகண்டுமன்னுசிரியமன்கூறு
முனக்கொருஞாலநோயின்றியுலகத்திலிறந்தோர்தம்மை
யினைத்துணையூட்டவன்னோர்மகிழநீணிலத்தில்வாழு
மனைத்துயிர்களினுந்தீர்க்கவாயுவுண்டாகவென்றான். (௨௯)

பாலைநீரொழியவுண்ணும்பறவையைவருணன்கண்டுன்
கோலநீடுருவமெய்யைக்கொண்டுநான்பிழைத்துப்போந்தேன்
மேலைநான்முகத்தினுக்கூர்தியாய்விளங்கும்வெள்ளை
வாலிதாநிறமுமாகிவாழுதியாகவென்றான். (௩௦)

பொன்னிறச்செல்வன்கோம்பிபோவதைப்போற்றிக்கூறு
மென்னிறவதனைக்காத்தோய்க்கெதிருபகாரமுண்டோ
மின்னுறவிளங்கும்பூணாய்வேண்டுவேண்டுருவமாகி
யுன்னிறமெல்லாஞ்செம்பொன்னொளிநிறமாகவென்றான். (௩௧)

இந்திரன்முதலாயுள்ளோரிவ்வகைவரங்களீந்து
வந்துமன்னவனோடந்தமகத்தினைமுடித்துப்போனார்
வெந்திறலரக்கன்பாரிலெதிர்ந்தவர்தம்மைவெல்லா
வந்தகன்புரத்தினேற்றியயோத்திமாநகரஞ்சார்ந்தான். (௩௨)

வேறு.

எம்மாலுமிருக்காலுமொருக்காவுணரிமையோர்
தம்மாலுமொருக்காலுமிளைக்குந்தரமல்லா
விம்மாநகரனரண்ணியனென்போனெழின்மதில்சூ
ழம்மாநகர்மன்னற்கிவையுரைத்தானடலரக்கன். (௩௩)

போரஞ்சினனுனக்கென்னுதல்போர்செய்குதல்செய்கென்
றீரஞ்சினதெனவிஞ்சொளிமுடியோனிவைவிளம்ப
வீரஞ்சினமிருமன்னவன்மேகன்குமிறிடமைச்
சீரஞ்சினமயிலாலுயர்திருநாடுறைக்கும். (௩௪)

இருவோங்கியவிம்மாநகராசாண்டவர்நீயோ
வொருவோர்களுங்கேளாதசொல்லுரைத்தாயெனையினிநா
மிருவோம்பொரவிருவோம்படையிடைவந்துதவாமற்
பொருவோஞ்செருவெனவேவலும்புறப்பட்டதுபடையே. (௩௫)

பாழிப்புயத்தரக்கன்பரிவொடுதம்பியுந்தானு
மாழிப்பெருந்தேரான்மிடையனரண்ணியன்படையு
மூழிக்கனலெனவொன்றிடவுறுசேனையையரக்கன்
சூழிப்பெருஞ்சோரிக்கடலாருயிருஞ்சலமந்தான். (௩௬)

யானைப்பெருந்தேரான்மிடையளவற்றனபெரும்போர்த்
தானைக்கடல்பாழாயிடத்தரியாதவன்சலியா
மானத்தினனரண்ணியன்வளைவாளெயிற்றினன்மேற்
சோனைப்பெருமாரிக்கணைசொரிந்தான்மனமெரிந்தான். (௩௭)

வீரச்சிலையனரண்ணியன்விடுவாளிகள்வெய்யோன்
மார்பத்திடையுறத்தைக்கவுமதியாதவன்தடர்த்துப்
பாரப்பனைக்காத்தாலவன்பசைப்பப்புடைத்தாவி
சோரத்துயருறுவான்றனைமுகநோக்கினன்சொல்லும். (௩௮)

பொடிபட்டதுநின்றிண்படைபொரவந்தமராற்று
தடிபட்டுவிழுந்தாயெனக்கமாஞ்சினையென்று
மிடிகெட்டரசாளாதறவிளைத்தாயெனமிலைகயா
லடிப்பட்டிடநகைசெய்தலுமரண்ணியனியம்பும். (௩௯)

அன்விட்டதலைத்தன்மதிதோற்றுமெனவறப்போர்
கன்விட்டிடையிலாதாயெமைநகைசெய்தனைநாங்கள்
வென்விட்டிலமுனக்குன்னெடுவெம்போர்செயவென்கால்
முன்விட்டதுபின்விட்டிலனெனப்பின்னையுமொழிவான். (௪0)

காலத்தினைஞாலத்தவரொவரேசடப்பவர்தா
மாலக்கொடுமனத்தோயவமதித்தாயெனையதனுற்
கோலத்தசரதராமனென்குலத்தோன்கொடுங்கணையாற்
றூலக்குலைபோவின்றலைதரைவீழ்கெனச்சபித்தான். (௪௧)

இச்சாபமயோத்திப்பதிக்கிறைவன்சினத்திவம்ப
வச்சாபமனத்திற்கொளகில்லாதடலரக்கன்
மைச்சாபம்வளைத்துப்பலவிழியுங்கனல்பொங்க
நச்சார்கணைபலதூவிநடந்தான்பழிநடந்தான். (௪௨)

ஒன்னார்களிலங்காபுரியுடையானுடனொளிவாழ்
மின்னார்முடியனரண்ணியன்வெம்போரொழும்வேலைப்
பொன்னார்புரியாழ்கொண்டிசைபொன்னாடியல்புகலு
முன்னாதமுனிவந்திறையுடனேநக்கினன்மொழிவான். (௪௩)

வேறு.

போரார்வெஞ்சிலையரக்கபொருளல்லாதரியோடும்பொருமோசீயந்
தீராதீவினையாலடர்ப்புண்டுதின்பசிநோய்மூப்பினொடுநு [ற்
சோராவிம்மானிடரைத்தொடர்ந்திருத்தாயெனக்கேட்டோர்துன்னார்போரி
பேராதசிலையுடையோய்பிணம்வெட்டிவாள்முறித்துப்பெறும்பேறுண்டோ

பெற்றதாய்புரண்டலறப்பிள்ளையுயிர்தான்கொண்டும்பெருகுங்காத
லுற்றழவப்பாலர்தமையீன்றெடுத்துவளர்த்தாரையுயிரையுண்டுங்
குற்றமானதும்பெருக்குங்கொடுநமன்றன்வலைப்பட்டுக்குலைந்துவீழு
மற்றொராதரமில்லாமானிடரைக்கொல்லல்வழக்கன்றேயென்றான். (௪௫)

என்றுமுனியிவைகூறவிராவணன்கேட்டெம்பெருமானியம்பிற்றன்றே
யின்றுசெயுமிதுவல்லால்யானறிவதொன்றுண்டோவென்றுகூற
நன்றுபெரிதெனமகிழ்ந்துநாரதமாமுனிகூறுநல்லையின்னே
சென்றுநமன்றன்னோடுசெருச்செய்தியவன்றோற்கைதிண்ணமென்றான்.

அந்தமுனியிவையருளவவனுடையவடிவணங்கியரக்கர்கோமான்
சிந்தையினுங்கடுந்தெய்வத்தேரதனைத்தென்றிசைமேல்விடுப்பத்தேரின்
முந்துமுனிதனைக்கண்டுமுறையாலேயருச்சித்துமுனியேயிங்கு
வந்தபொருளுரையென்றுநமன்கூறமாமுனிவன்வரைந்துகூறும். (௪௭)

மின்னஞ்சுமொளிமுடியாய்விளம்பக்கேள்வேதியனும்விதியைநோக்கி
முன்னஞ்செய்தவச்செருக்கான்முனிவினன்மூவுலகுஞ்சுடுவான்கண்ணும்
வன்னெஞ்சவிராவணன்வாளமர்பொருவானின்றன்மேல்வரக்கண்டாற்றே
னென்னெஞ்சமெனையுந்தயான்வந்தேனிதுவிங்குப்புகுந்ததென்றான். (௪௮)

ஆதித்தன்றருமைந்தற்கந்தமுனியிந்தவுரையறையுங்காலைச்
சாதிக்கும்பொருளெல்லாந்தவத்தினாற்சாதிக்கத்தகுமென்பார்போற்[லாம்
சோதிப்பன்மணிநெடுந்தேர்ச்சுடர்மவுலியிராவணன்றொல்லுலகையெல்
வாதிக்குநமன்றனைவாதிப்பான்வளநகரிவந்துசார்ந்தான். (௪௯)

சீர்க்குமிழினிலைகலங்கித்திகழ்குழையைச்செலநோக்கிச்செறுத்துக்கோட்டி
பார்க்கும்விழிப்பாவையராம்படுகுழியில்வீழ்ந்தோர்க்கும்பற்றொன்றில்லா[ப்
நீர்க்குமிழியுடம்பென்றுநிலையறங்கள்செய்தோர்க்குநெறியினின்றோர்
யார்க்குமிழிவாஞ்சுவர்க்கத்தவ்வவர்களினிதுவீற்றிருப்பக்கண்டான். (௫௰)

பூதானக்கோதானமுதலானபூசுரர்கள்தம்மைப்போற்றி
மாதானஞ்செய்தோரும்வறியோராயிவைகொடுக்கமாட்டாராகில்
யாதானுந்தமக்கப்போசெய்தியதையிட்டுன்னுமிவருமன்ன
தாதாவுமுதலானதயாவிஞேர்வீற்றிருந்ததன்மைகண்டான். (௫௧)

சடங்கொடுக்கும்வினைகடிந்ததாபதர்களின்வீதங்குத்தங்கக்கட்டி,மடங்கொ
டுத்துமறையவர்க்குமனைகொடுத்துவைகாசிமாதந்தண்ணீர்க், குடங்கொடு
த்துங்குளிர்காலங்குளிர்ந்தவர்க்குப்போர்வையினைக்கொடுத்துந்தங்க,விட
ங்கொடுத்துமிங்கிவர்களொழின்மணிமாமண்டபத்திலிருக்கக்கண்டான்.

உடுப்பதுவுமுண்பதுவுமில்லாதோர்க்குடைகூறையுதவியுண்ணக்
கொடுத்தவர்நோய்தீர்த்தோருங்கொடியோராய்க்குணங்கள்பலசெய்துத
யடுத்தடுத்துவைதாலும்பொறுப்போருமந்தணரோடாவுக்குற்ற [ம்மைம
நடுக்கமறுதீர்த்தோருநல்லுலகினுயகராயிருப்பக்கண்டான். (௫௩)

மன்றுபறித்துண்டோரும்வழக்கல்லாதுரைத்தோருமனையாள்தன்னே
டொன்றியுடன்வாழாதேயோராதேபாதாரமுவந்துளோருங்
கொன்றுடல்கள்தின்றோருங்கோட்சொல்லித்திரிவோருங்கோலிச்செய்த
நன்றிதனைமறந்தோருநரகத்தினிடைக்கிடந்துநடுங்கக்கண்டான். (௫௪)

கற்றவரைக்காய்ந்தோருங்கைப்பிடித்தகாதலியைக்கனன்றுளோரும்
பெற்றவர்பசிகூரப்பெருவயிறுவளர்த்தோரும்பேணித்தம்மோ
டுற்றவருக்கறுதொருமந்தணரையிகழ்ந்தோருமமரிலாண்ட
கொற்றவனைவிட்டோடுங்கொடியோருங்கும்பியிடைக்குளிப்பக்கண்டான்.

கோபத்தால்வினையெண்ணிக்குடிகெடுத்தோருங்குலத்தால்வந்த
தாபத்தாலிறந்தோராத்தாமடர்ந்துவைதழிக்குந்தயாவிலோரு
மாபத்தாலபயமென்றேயடைந்தோரைவிட்டோருமாதியாய
பாபத்தாரும்பலைப்பழிப்போரும்படுநரகிற்பதைப்பக்கண்டான். (௫௬)

மாவிரிநீர்க்கடல்சூழ்ந்தமண்ணுலகின்மனிதராய்ப்பிறக்கப்பெற்று
நாவிலரியோநமோநாராயணாயநமவென்னமாட்டாப்
பாவியரும்பலதெய்வம்பழித்துரைக்கும்பாதகரும்பரந்துதங்கள்
வாய்வழியேபுழுச்சொரியமாநரகக்கும்பியிடைமறுகக்கண்டான். (௫௭)

கூறுபடுதசைமூளைகுருதியொடுகுடர்வழும்புகும்பியென்னுஞ்
சேறுபடுகொடுநரகிற்றீவினையோர்கிடந்துழைப்பத்தெரியநோக்கி
யேறுமினென்றவ்வரக்கனேறவிடவின்றெல்லாம்பிழைத்தோமென்றென்
றுறுதுயரின்றுஙியருநரகங்காவலர்களழன்றுவந்தார். (௫௮)

வேறு.

வெஞ்சினமுருக்கொண்டன்னமேனியர்வெய்யகண்ணர்
மஞ்சிடியிடித்தசொல்லர்மலைமுழைதிறந்தவாயர்
நஞ்சினுங்கொடியநெஞ்சர்நமன்றருஞாலமெல்லா
மஞ்சுறும்வலிக்கென்றஞ்சாரரக்கரோவெனவந்தார்த்தார். (௫௯)

என்றுரைத்தெரியிற்பொங்கியிராவணன்றன்னைச்சூழ்ந்து
கொன்றுயிர்குடித்துமென்றுகொதித்துமேன்மண்டிவிழ
வன்றிறலரக்கருமகோதரன்முதலாயுள்ளோர்
சென்றுதாக்கினர்களந்தச்செருக்கினர்சேனையோடும். (௬௦)

தருக்குடைத்தருமன்சேனைதாக்கியவரக்கன்சேனை
வெருக்கொளநெருக்கிப்புக்குவெங்களத்தவியநூறி
யரக்கர்கோன்கரியமேனியணிதிகழ்முருக்குப்பூத்த
பொருப்பெனக்குருதிபொங்கப்பொருபடைதூவியார்த்தார். (௬௧)

விரிகடலிலங்கைவேந்தன்மேவியவூழிகாலத்
தெரியெனவெழுந்துபொங்கியிருபதுகரங்களாலும்
பொருபடைவழங்கித்தெய்வப்புட்பகங்கடாவிவெம்போர்த்
தருமன்றன்சேனையெல்லாந்தரைபடச்சாடுங்காலை. (௬௨)

செருவழிந்தியமன்சேனைதிரண்டொருங்கெழுந்துசெல்லி
னுருவழியரக்கர்மேனியுள்ளுறப்படைகளுந்தி
யொருவழியொருவர்போகாவகையுறுபடையையோட்டிப்
பொருவழியரக்கன்சீறிப்புட்பகநின்றும்பாய்ந்தான். (௬௩)

வரிசிலைகையில்வாங்கிவாளெயிற்றரக்கனீசன்
பொருபடைவிடுதலோடும்பொங்கெரிபரந்துகண்ணிற்
றருமன்வெஞ்சேனைதாவத்தாவியதாலமென்னத்
திரிபுரமென்னவெந்துதீய்ந்ததுகாலன்சேனை. (௬௪)

போர்ப்படைபொடியாய்நூறிப்புனைகழலரக்கனார்ப்ப
வார்ப்பொலிசெவியினெய்தவனலுயிர்த்தழன்றுபொங்கித்
தார்ப்பொலிகுருதிவண்ணத்தாண்டுமாப்பூண்டுசெம்பொன்
றேர்ப்பொலிந்திலங்குமேனித்தென்புலத்திறைவன்சீறி. (௬௫)

நெற்றியிற்காலன்செல்லநீள்பெருங்காலபாசம்
மற்றைவெங்காலதண்டம்வந்திருமருங்குஞ்செல்ல
வுற்றபேரூழிகாலத்துருத்திரமூர்த்தியொப்பச்
சுற்றியசேனையோடுந்தோன்றினனுலகத்துட்க. (௬௬)

நட்டமாமுலகமின்றேநாமினிப்பிழைப்பதெங்கே
யெட்டனையறிவுமில்லாவிராவணவேள்வியின்று
பட்டதுபடுகவென்றுபயமுறப்பின்புபாராக்
கெட்டனரரக்கரெல்லாங்கெடாதிலங்கேசனின்றான். (௬௭)

நின்றவனிலைமைகண்டுநெய்சொரியழலிற்பொங்கி
வென்றனனன்றேவென்முன்வெருவலனின்றபோதே
யென்றுதென்றிசைக்குநாதனீட்டிவேல்குலிசமேவச்
சென்றவன்றிறத்திற்றைக்கத்தென்னிலங்கேசன்சீறி. (௬௮)

கார்முகம்வளையவாங்கிக்காலமும்மாரிபோலக்
கூர்முகவாளியாலேகுருதித்தலைதுணித்துவீழ்த்து
நேர்முகந்தெதிரிலாதநிருதனைநிறத்தில்வன்றி
யார்முகக்கணைகளுந்தியர்த்தகற்கலக்கஞ்செய்தான். (௬௯)

இருவருமிந்தவண்ணமேழுநாளிடைவிடாம
லொருவரையொருவர்வெல்லத்துடங்குவருபாயம்பார்ப்பர்
பொருவறியரக்கன்சீறிப்பொருந்துதேர்ப்பாகன்றன்மேற்
றருமன்மேற்காலன்றன்மேற்சரங்களாயிரங்கள்தைத்தான். (௭௦)

வேறு.

என்புலத்தியமென்னவிருந்தவன்
வன்புலத்தியன்மாற்றியமாமுனி
நன்புலத்தியனன்மகன்மைந்தன்மேற்
றென்புலத்தியமன்மிகச்சீறினான். (௭௧)

ஆலமென்னவனலென்னவந்தகன்
ஞாலமெல்லாநடுங்கக்கொதித்திடும்
வேலைவெங்கனலென்னவெகுண்டுவெங்
காலனன்னவற்கின்னகழறினான். (௭௨)

என்னையேவுதியெவ்விராவணன்
றன்னைநாளுயிருண்பன்றடையிலா
வன்னியன்னமதுகையிடவரா
மொன்னலாருயிருண்பதுணர்தியால். (௭௩)

காலனிவ்வகைகூறிடக்காணிவன்
காலமுண்பனெனநமன்கண்ணெரி
காலமன்றுயிரெல்லாங்கலங்கிடக்
காலதண்டம்விடுவான்கருதினான். (௭௪)

ஆயகாலையயனைத்துலகங்களு
மாயுமின்றெனவானவரஞ்சிடத்
தாயநான்முகன்றோன்றியால்லுயிர்
நாயகன்றனைநண்ணியிவைசொன்னான். (௭௫)

திண்டடம்புயத்தென்னிலங்காதிபன்
பண்டுபெற்றவரத்தின்பலத்தினாற்
றண்டுநீவிடிலாங்கவன்றன்னுயி
ருண்டிடாதுவிடுதலொழிதியால். (௭௬)

என்றுநான்முகனிவ்வாறியம்பலுந்
தென்றிசாதிபன்றீயவரக்கன்மேல்
வென்றிமேவியதண்டம்விடாதவ
ணின்றகாலைநிருதர்குலாதிபன். (௭௭)

வேறு.

வெற்றியெனதென் றுரைத்துமிக்கெழுந்தவுவகையினுய்விறலின்மிக்க
மற்றடந்தோண்மாரீசன்மகோதரனேமுதல்வரொடுமணித்தேரேறிப்
பற்றலரைவிலைகெடுப்பான்பாதாளத்திடைபுக்குப்பண்பினேடும்
பொற்றடமாளிகைவிளங்கும்போகபுரியெனுநகரிசென்றுபுக்கான். (௭௮)

அந்நகருக்கரசனுமடன்மிகுதோள்வாசுகியோடளவளாவி
மன்னியநல்லுறவாகிமணிமதியாம்வளநகரிவந்துசாரத்
தன்னிகரில்லாதோர்கள்சாதித்தபெருவாமும்வலியுஞ்சார்ந்தோர்
இன்னிலெனப்புறப்பட்டுநிவாதவாதியர்களைச்சென்றுநேர்ந்தான். (௭௯)

ஆங்கவர்களடர்ந்துவந்தார்த்தாக்கர்மேலளவிலாப்படையையேவுப் [த்
பூங்கழற்காலரக்கனுமப்பொருபடையைப்பொருபடைகள்விடுத்துமாற்றி
தாங்கரியபடைவிடுத்துமப்படையையவர்தடுத்துந்தளர்வொன்றின்றி
யோங்கியபேராற்றலர்களோரிரண்டுகைவிடாதுபோர்செய்ய. (௮௦)

புண்டரிகத்தயன்வந்துபொருமவரைப்போர்விலக்கிப்புகல்வானிங்கள்
பண்டுடையவரத்தினுற்பகைத்துநீர்பல்லாண்டுபடைசெய்தாலுந்
திண்டிறலிலொத்திர்களொருவரையுமொருவாமர்செறுக்கவொண்ணு
வெண்டிசையுமுங்கள்வலியேறியதாலினியுறவேயினிதிங்கென்றான். (௮௧)

பூமருவுநான்முகத்தோன்புகன்றவுரையதுபோற்றியவனைப்போக்கித்
தாமருவியெல்லாருந்தப்பாமற்றனித்தனியேசபதஞ்செய்யத்
தேமருவுதாரவுணர்சிறப்பொடுபூசனைசெய்யவரக்கர்கோமா
னேர்மருவுமந்நகரிலீராறுதிங்களினிதிருந்தகாலை. (௮௨)

அந்நகரிவிட்டரக்காடல்வருணன்றனைவெல்வானவன்றன்மேவுங்
கன்னகிரிதனைமுடிக்காலகேயரையெல்லாங்கணத்திற்கொன்று
தன்னுடையதங்கையாந்தடவரைத்தோடசூர்ப்பனகைதன்னைக்கொண்ட
மின்னனையசுடரிலைவேல்வித்துருசிங்கன்றனைவெங்களத்துவீழ்த்தான்.

புனலுறுவெண்மேகமெனப்பொலிந்திலங்கித்தோன்றுவதைப்பொருந்தா
ருரை, நினைவதன்முன்னெரிசெய்தநெடுஞ்சரத்தோனிருக்கின்றநெடியவெ
ற்புத், தனையுருவகிறுத்தினுலொக்குமெனத்தகுவதனைச்சாயாவென்றிக்,
கனைகழற்காற்றசக்கிரிவன்கடலரசன்மாளிகையைக்கண்ணிற்கண்டான்.

பைவிரிநாகத்தணைமேற்பரன்றுயில்கொள்பரந்தபாற்கடலிற்றந்த
தெய்வநெடுஞ்சுரபிதனைச்சென்னிநிலமுறவணங்கித்திறலின்மிக்க
மைவரைபோன்மெய்யரக்கன்வந்தனக்குத்தோற்றேனென்றுரைத்தலன்றி
வெவ்வெமர்செய்குதல்செய்யாதெங்கொளித்தான்வருணனெனவிளம்பும்
வேலை. (௮௫)

ஊழித்தியெனப்பொங்கியோங்கியசீர்வருணன்றன்றுயர்தோண்மைந்த
ராழித்தேர்படைசூழவரக்கர்பெரும்படையோடமர்செய்காலைச்
சூழிப்போர்மதகரியுந்தொகுபரியுமிரதமும்போர்துணியநூறிப்
பாழித்தோள்வாளரக்கன்பாசகரத்தினன்படையைப்பாரில்வீழ்த்தான்.

சேனைபடத்தரியாதுதிறல்வருணன்றன்மைந்தர்சீற்றம்பொங்கி
வானமதிற்புட்பகத்தின்மிசையின்றவளரக்கன்றன்மேல்வந்து
சேனைமுகிற்குலமாரிசொரிவனபோற்கணைமாரிதூவியார்ப்ப
வானவனைவிலக்குகையேபணியாகவடலரக்கனலக்கணுற்றான். (௭)

மதிகொன்றைவளர்சடையோன்வரையெடுத்தோன்வாருணிகளொடும்
போர்செய்ய,வதுகண்டமகோதரன்போழலென்னவாலமெனவழன்றுவேக
க், கதிகொண்டுவருணபலன்களைக்கொண்டுகளைதவியநூறக்கண்டு, குதிகொ
ண்டுவாருதிநீர்குளைகடற்கோன்மைந்தர்மனங்கொதித்துளோர்கள். (௮)

மாயமிகவல்லவனுமகோதரன்றன்மருமத்தில்வன்னிபோலுந்
சாயகங்களுறத்துறந்துதானையினைத்தறைப்படுத்துந்தசக்கிரீவன்
றியவன்றன்செறிவயிரத்திரள்புயத்துமார்பகத்துஞ்செந்நீரோதம்
பாயவடிக்கணையேவிப்பகிரண்டங்குலுங்கவுயிர்பலைதக்கவார்த்தார். (௯)

ஆலமென்னவனலென்னவழன்றரக்கர்கோன்சரங்களனைத்திருலகு
குலமயில்வெங்குலிசந்தோமரந்தண்டிலக்கைமுதற்படைகடேண்டிக்
காலனெனக்கதித்தாப்பிக்கடிதடர்த்துமேல்விழவருணன்றந்த
பாலரனைவருங்கெட்டுப்பயந்தோடும்பரியோடும்பதியில்வீழ்ந்தார். (௧௦)

வெவ்விடத்திற்கொடியோனும்விறலரக்கன்விளம்புவான்விளியினல்லா
தெவ்விடத்தான்வருணனெனவவனமைச்சரிரண்டுமுகத்தோன்வையகு
மவ்விடத்தானவன்குமாரமருக்கின்றுற்றாயழிந்துபோந்தா
ரிவ்விடத்தினினக்கொருவரெதிரில்லையிராவணனீயினிதேகென்றார். (௧௧)

அந்தவுரைகேட்டுவெந்தவடலரக்கன்பகிரண்டமதிரவார்த்து
வந்தவழிபுறப்பட்டுமதிலிலங்கைநகர்நோக்கிவழிக்கொள்வேலை
யந்தணர்தங்கன்னியருஞ்சுராசுரர்தங்கன்னியருமளவிலாத
கந்திருவர்கன்னியருமுதலாயகன்னியரைக்கண்ணிற்கண்டான். (௧௨)

ஆங்கவர்கள்பூனைவாயகப்பட்டகிளியென்னவளவிலாற்ற
லோங்குபுலிவாய்ப்பட்டவுழையென்னவுள்ளடுக்கமுற்றோர் கொன்றைத்
தேங்கமழ்பூங்குழலியரைத்தெய்வத்தேர்மிசையேற்றிச்சேனைசூழத்
தாங்கரியபேராற்றற்றசக்கிரிவன்றன்னகரிவந்துசார்ந்தான். (௧௩)

கன்னியர்கள்தாய்மார்கள்கண்ணிழந்தபசுப்போலக்கதறியேங்க
நன்னுதலார்தமையெல்லாநடுக்கங்கண்டிடுதலானுமென்கூந்த
லன்னநடையார்பொருட்டாலடலிலங்கைபாழாக்கியரக்கர்கோமான்
றன்னுடையமுடியோடுந்தலையற்றுவிழுகவெனச்சபித்தாரன்றே. (௧௪)

வேறு.

ஆயவன்றனனிகரமவனடையவுடல்கால
கேயரமர்பொருகளத்துக்கிளரரக்கர்பெருஞ்சேனை
சாயவமர்பொருகளத்துத்தன்கணவன்படக்கேட்ட
தீயகொடுஞ்சூர்ப்பனகைசெய்தனயாமுரைசெய்வாம். (௧௫)

சலமேவுதுயரினளாய்த்தான் விழுந்துபுரண்டலறித்
தலைமேலேகைவைத்துத்தன் கணவன் முன்கிடந்த
கொலைமேவுபோர்க்களத்தைக்குறுகியவன்மிசைக்கிடந்து
மலைமேலேவந்ததொருமலைவீழ்ந்ததெனவீழ்ந்தாள். (௯௬)

விழுந்தாளைநெடும்பொழுதுவெய்துயிர்ப்பொன்றில்லாளைக்
கழிந்தாள்தன்கணவனொடுமென்றிரங்கிக்காரிகையார்
செழுந்தாரைநீர்முகத்துத்தெளித்தெழுப்பச்செத்தவர்க
ளெழுந்தார்போலெழுந்தவள்தானிவைசொல்லிப்புலம்பினாள். (௯௭)

காதலாவியென்னைக்கைப்பிடித்தவன்றுமுதற்
பேதையேன்சொல்லியசொல்பிழைத்தறியாப்பேரவுணா
நாதனேயென்னைநீநடுக்கங்காணாதூரிற்
போர்தநீயெழுந்திராய்பொய்யுறக்கமுறங்காதே. (௯௮)

என்னிற்பின்சூர்ப்பநகையிருக்குமோவிராளோவென்
றுன்னிச்சோதிப்பானுள்ளுயிரடக்கிக்கிடந்தாயோ
பின்னிற்கும்பழிபூண்டுபெருந்துயரப்பட்டுநா
னுன்னிற்பின்னிருக்கிலேனெழுந்திராயுத்தமனே. (௯௯)

முன்னமேதானென்னைமுறைமையாலேகொடுத்துப்
பின்னெனைநாலிழப்பித்தவிராவணனுமென்றமையன்
றன்னைமூவுலகாளயான்கண்டுதாரவுணர்
மன்னனேயுடல்சுமந்துவாழ்வேனோவாழ்வேனோ. (௧௦௦)

கைமுறுக்கிவாய்மடித்துநீகிடந்தகருத்தறியேன்
மைமுகத்துக்கருமனத்துவாளரக்கர்கோமானே
மெய்முறிக்கப்பெற்றிலேனெனநினைந்தோமேவானை
மொய்முறிக்குமாற்றலாய்காரணமென்மொழியாயோ. (௧௦௧)

என்றினையபலபன்னியெழிற்கணவன்றனைப்புல்லிக்
கன்றியநெஞ்சினளாகிக்கதறுகின்றசூர்ப்பநகை
தன்றுணைவிமாரவளைத்தாங்கிக்கொண்டகம்போகக்
குன்றனையதோளானைவிதிமுறைதீக்கொளுத்தினார். (௧௦௨)

ஆயதன்காதலனையழற்படுத்தாரெனக்கேட்டுக்
காயும்வெங்கனலென்னக்காந்துகின்றமனத்தாளாய்
வாயொருக்காலோயாதேமழையடித்ததெனக்கதறிச்
சேயிழையாரெல்லாருந்தேற்றவுந்தான்றேறாது. (௧௦௩)

ஆக்குமவனையழிக்கையழகன்றென்றுணராதே
தாக்கியேகாதலனைத்தரைப்படுத்ததசமுகன்முன்
னாக்கினைநான்பிடுங்கியென்றனுடலைநோயதுதீரப்
போக்குவனென்றுயிரொன்றுசூர்ப்பநகைபுறப்பட்டாள். (௧௦௪)

மாத்தானையுரிபோர்த்தவளர்சடையோன்வாழ்கயிலை
பேர்த்தானைப்பெருவலியாற்பெரும்புவனங்களைவென்று
போர்த்தானைபுடைசூழப்பொன்னகரிற்புகுந்திருந்த
மூத்தானையிளையாள்கண்டிவைசொல்லிமுறையிட்டாள். (௧௦௫)

சொல்லெடுத்துப்பழிதூற்றித்துன்பங்கொண்டென்வீடு
கல்லெடுக்கநல்லூற்றூர்களைந்தேங்கக்கடைக்காலி
வில்லெடுக்கையுன்னுடையவீரத்துக்கழிவன்றே
வல்லெடுக்குந்தலைமாய்த்தவன்றேவோவன்றேவோ. (௧௦௬)

முலைப்பாலைநஞ்சாகிமுனைமுகத்திலொருக்காலுங்
கொலைப்பாலரல்லாத்தன்மைத்துனனைக்கொலைசூழ்ந்த
புலைப்பாவியுன்றமையன்பொல்லானென்றெல்லோரு
மலைப்பாலேயறவலைந்தேனன்றேவோவன்றேவோ. (௧௦௭)

காசக்கும்பொன்றுக்குமாழிக்குங்கடுஞ்சொல்லின்
வாசிக்குங்காலுன்றுமணவாளப்பிள்ளைகளைப்
பூசிக்கைபொருகளத்துக்கொன்றுபுரட்டிடுகையோ
வாசைக்கும்புறஞ்செலுத்துமன்றேவோவன்றேவோ. (௧௦௮)

மிகையெல்லாஞ்செய்தாரோயாயிடினும்விளையாட்டாம்
வகைவல்லாரொருக்காலுமைத்துனமார்தம்மோடு
பகையில்லையென்னுமந்தப்பழமொழியுங்கேட்டிலையோ
வலகயில்லான்வரையெடுத்தவன்றேவோவன்றேவோ. (௧௦௯)

வேறு.

இலங்கைவேந்தன்றன்முன்னேயென்றுசொல்லிமுறையிட்டு
விலங்கல்வந்துவிழுவதுபோல்விரித்ததலையும்வெறுங்கழுத்துங்
கலங்குமனமுமுடையாளென்செய்வேனென்றுகையெடுத்துப்
புலம்பியவன்றனடிபூண்டுபொடியிற்கிடந்துபுரண்டழுதாள். (௧௧௦)

தங்கைவிழுந்துபுரண்டலறத்தாங்கியெடுத்துத்தசக்கிரிவன்
மங்கையுனக்கிவ்வன்றுயரம்வந்ததென்காரணமென்னக்
கங்கைமுடியோன்வரையெடுத்தோய்காலகேயர்பொருகளத்துன்
னங்கைவாளாலென்கணவனாவியுண்டாயெனவழுதாள். (௧௧௧)

வேறு.

பெண்ணாகியுன்குலத்துப்பிறந்தாள்பேரிடும்பையுற
வண்ணாரியரசாளவரக்கர்குலத்தறனாமோ
வெண்ணாதென்காதலனையிகலமருளுயிருண்டாய்
விண்ணோரென்கூறுவாரெனவிம்மிவெய்துயிர்த்தாள். (௧௧௨)

இன்னபலவும்பன்னுமிவட்கிலங்கைவேந்தனீதுரைக்கு
முன்னையுடையகணவனைநானென்றுமுணராதுயிருண்டே
னென்னையமரின்மதிமயக்கியென்றலேயின்றவனாவி
தன்னையுண்டவிதியாரைத்தடுக்கவல்லார்தாமுண்டோ. (௧௧௩)

என்றுதங்கைமனமுவப்பவெல்லாப்பூசைகளுமியற்றி
யொன்றுகுணத்திருந்தாயருடனேபிறந்தாள்வயிற்றுதித்த
வென்றிவீரர்களுமவன்விரிந்தபடைக்குத்தலைவருந்
தன்றுவிற்கைத்தாடணையுந்தோலாவலிமுச்சிரத்தோரும். (௧௧௪)

இந்தமூவர்தண்டகமாமெழில்சேர்வனத்தாளிருப்பாரால்
முந்தியேநானவவர்க்குமொழிந்துவிட்டேனவரோடுஞ்
சிந்தையுவர்தாண்டினிருத்தியென்னத்தேவர்செய்தவத்தா
லந்தவரக்கியவ்வனத்திலவரோடுறையுமக்காலை. (௧௧௫)

நிருதர்கோமானிரும்பலையாரிடுவனத்தினுட்புக்கு
மருவியாங்குமகஞ்செய்யுமகனைக்கண்டுமனமகிழ்ந்து
கருதிநீசெய்காரியமென்கழறென்றுரைப்பக்கருதிவாய்ச்
சுருதிவேலைக்கரைகண்டதோலாவினைச்சுக்கிரன்சொல்லும். (௧௧௬)

அங்கிட்டோமங்கோமேதமிராசசூயமயமேதம்
பங்கப்படாதபஞ்சுவணம்வாசபேயம்பர்சுபத
மிங்கிப்பேராம்பெருவேள்வியேமுஞ்சமைத்தநின்மகற்குக்
கங்கைச்சடையோன்வெளிப்பட்டுக்காளையிவனைக்கண்டுகந்து. (௧௧௭)

அழிவில்லாதவடற்றேருஞ்சிலையுமாவநாழியையு
மிழிவில்லாதபெருங்கவத்தினின்பதன்பங்களையறுத்தோர்
மொழியுஞ்சாபமெனத்தப்பாமுரட்பல்லவமுமுனைமுகத்தி
லொழிவிலாதபகையறுக்குமொளிப்பத்திரமுமுவந்தளித்து. (௧௧௮)

இலங்காபரணத்திளமுலையாரிடுக்கண்மாயத்தகப்பட்டுக்
கலங்காநெஞ்சத்தியோகியருங்கலங்குமாயைகடிந்தியற்றி
யிலங்கால்குலையநீடமரர்நின்றுநடுங்கநேர்வெல்லும்
பலங்களுனக்குண்டாகவென்றுபரமன்கொடுத்தானெனப்பகர்ந்தான்.

பாகுபோலமொழியாளைப்பற்றிக்கொணர்ந்தபாவையளைச்
சோகமேவுசிந்தையளைத்துணைக்கண்ணருவிசோர்வாளைச்
சேகுபோலுமனத்தரக்கன்றிரளவழைப்பத்தீவினையைப்
போகமுயன்றவீடணனைப்பொல்லாச்சரிதற்கிவைபுகன்றான். (௧௨௦)

மாசிலாதகுடிப்பிறப்புமானங்கீர்த்தியிவைமாய
வாசைநோயானதுபெருகவனங்கசரத்தாலேவுண்டு
கூசலின்றிக்குலத்தவளைக்குலையச்செய்தார்குலத்தோடு
நாசமெய்திப்பழியோடுநரகமுறுவரெனவுரைத்தான். (௧௨௧)

ஏகவீரவிதுவிடக்கவியம்பக்கேண்முன்பெய்தியதை
மேகநாதன்வேள்வியுளான்கும்பகன்னன்விழிதுயிலும்
போகமேவியானதியேன்புனலின்மூழ்கியேகிடந்தே
னேகமதுவாமடலசுரனணிநீளிலங்கையரண்புகுந்து. (௧௨௨)

உற்றகரிதேர்பரிகாலாளுலையநூறியுயர்மௌலிக்
கொற்றவாகஞ்சிற்றவ்வைகும்பிநசியான்றுணைவதியைப்
பற்றிக்கொண்டுதன்னுடையபதியிற்புக்கானெனத்தம்பி
சொற்றவார்த்தைகேட்டழன்றுதுடிக்குநெஞ்சனிவைசொன்னான். (௧௨௩)

பூனைச்செவியையெலிமோந்துபுலியைப்புல்வாய்தொடர்ந்ததெனத்
தானைக்கடலைக்கலக்கிவெனதாயர்க்கிளையாடனைக்கொண்டென்
மானக்குலத்தைவரம்பழித்தான்மறவேகட்டம்வாழ்ந்தவரு
சேனைக்கடலைமறுபுரத்திற்செல்கவென்றான்சினமிக்கான். (௧௨௪)

நம்பிபுகழ்விடணன்றன்னைநகர்க்காவல்பெறவிருத்தி
வெம்புபோருக்கொருப்படுகமேகநாதனெனவிளம்பி
யெம்பிகும்பகன்னனைநீர்சென்றீண்டெழுப்புமெனவியம்பப்
பம்பைபேரிதுடிமுரசம்பலவுமுழக்கவவனுணர்ந்தான். (௧௨௫)

வையமோராயிரத்தேற்றிவந்தசோறுமதுவெள்ளம்
பெய்தகுடங்களாயிரமும்பெருங்கைவேழப்பெருந்தசையும்
வெய்யகோபனிவையெல்லாம்விழுங்கப்பசிபோய்மிகுத்ததாம்
நெய்யைநெய்யைச்சொரிந்தக்கானெருப்பையவிக்கவொண்ணுமோ.

பின்னுமோராயிரஞ்சகடஞ்செய்தசோற்றுப்பெருங்குவைகள்
தன்னையுண்டைச்சிறிதுபசிதணிந்துமகிழ்ந்துவாய்பூசி
மன்னனழைத்தகாரியத்தைக்கேட்டுமறுகுமனத்தினனாய்ப்
பொன்னின்மணித்தேர்போர்க்கோலம்பொலியவேறிப்புறப்பட்டான்.

கும்பகன்னனெழுந்துணர்ந்துகொடியவீதியுளானென்னக்
கொம்புபோலுநுண்ணிடையார்கோதைசரியக்குழல்சரியச்
செம்பொன்மாடத்தரமியத்துச்சிரார்மணிப்பொற்கோபுரத்தி
னும்பர்மடவார்தொகுத்தீண்டியொருவர்க்கொருவரிவையுரைத்தார்.

சன்றுவிவனையன்றந்தகனைக்காண்மேற்காண்பரிதென்பார்
விண்ணாடருக்கிங்கிவன்மேனிவிளங்கக்காணலாமென்பார்
பெண்ணானுள்தானொருத்திபெறும்பிள்ளையேயிங்கிவனென்பார்
எண்ணுமமரவர்க்கெதிர்ப்படுமேலிவன்கையாலென்படுமென்பார். (௧௨௯)

மண்கைதாழவருமிறவோர்மலையென்பாராண்வடிவென்பார்
திண்கையொன்றாலெடுக்குமரன்சிலையையென்பார்சினமுகத்திற்
கண்களென்பாரல்லவெழுங்கனலேயென்பார்கண்டமடப்
பெண்களானோரிவ்வண்ணம்பேசப்பெருவீதியைக்கடந்தான். (௧௩0)

கண்ணார்நுதலானருளியதிண்கவசமிட்டுக்கழல்கட்டித்
திண்ணாராவம்புறத்தார்த்துச்செம்பொற்றேரின்மிசையேறி
மண்ணோர்குலையத்தானவர்கண்மறுகியோடமனங்கலங்கி
விண்ணோர்வெருவச்சிலையேந்திமேகநாதன்புறப்பட்டான். (௧௩௧)

இலங்கைவேந்தவிலங்கியவாளிருகவீக்கியெதிரிகளாற்
கலங்கலில்லாத்திண்கவசங்கட்டிவீரக்கழலார்த்து
விலங்கன்மேன்மின்பரந்ததெனவீரபட்டநுதல்விசித்துத்
தலங்கொளஞ்சன்வரைநெளியவேறினன்பொற்றடத்திண்டேர். (௧௮௨)

தேருமாவுஞ்சினக்களிறுஞ்செறிந்துசெல்லவழிகாணார்
வீரராணூர்பின்னின்றோர்முன்னின்றோரைமிகநெருக்கிப்
பேரும்பேருமெனவுலைப்பப்பெரும்பெருமிடமில்லா
ஊருந்தேரும்வகுத்தவன்றோவென்றுமறியாவெனவுரைத்தார். (௧௮௩)

உமையாள்பாகன்வரையெடுத்தவுயர்தோளரக்கன்படையெழுச்சி
சமையாதுலகெங்கணுநிறையத்தூளியெழுந்ததடங்கூளி
யமையாதோங்கிக்கண்மறைப்பவகல்வானத்திலமரர்கள்கண்
ணிமையாதொழிபவெமையிழைந்தோனிடும்பைசெய்தானெமக்கென்றார்.

மேகநாதன்முன்செல்லவெய்யதம்பிபின்செல்ல
நாகமனையபுயத்திலங்கைநாதன்மருவின்புரநண்ணச்
சோகமேவுமனத்தினளாய்த்துணைக்கண்ணருவிசோரவிட
வேகமதுவின்றேவியவன்விளங்குங்கழற்கான்மிசைவீழ்ந்தாள். (௧௮௫)

தாளில்விழுந்ததாயர்தமைத்தாங்கியெடுத்துத்தசக்கிரிவன்
கேளிதென்சொல்லுன்மனத்திற்கேதமதனைவிடுதிநீக்
கோளைவிதியையார்கடப்பாரென்றுகூறக்கொடியிடையாள்
மீளவவன்றன்னடிவீழ்ந்துவிம்மிவிம்மியிவைவிளம்பும். (௧௮௬)

மக்களிழந்தவிடும்பையினுமனையாளிழந்தவிடும்பையினு
மிக்கவிடும்பைவெல்வேந்தேவிதவையிடும்பையெனவிளம்பத்
தக்கதனாலென்கழுத்திற்றாலிநீதந்தருளென்று
தொக்கமணிப்பூண்காலானைத்தொழுதுபின்னுமிவைசொல்லும். (௧௮௭)

விட்டுவிளங்குமணிமுடியாய்வேதஞ்சொன்னபிரமாதி
யெட்டுமணத்திலொருமணமாமரக்கர்குலத்தினியல்பதிவை
கட்டுமரியகாவலையுங்கலக்கிப்புக்குக்கன்னியரை
முட்டியிவரைக்கொடுபோந்துவேட்கைமுறையேயெனமொழிந்தாள்.

என்றுசிறுதாயிவைகூறவெல்லாப்பிழையுமுனக்காக
வின்றுபொறுத்தோமுன்கணவனிமையோருலகங்கைக்கொள்ள
வொன்றுமனத்தனாகியென்னோடொக்கநடிக்கவுரைத்தியென
நன்றிதென்றுதுயின்மதலைக்கும்பநசிபோய்நண்ணினாள். (௧௮௯)

உறக்கநீங்கியிராவணனின்றுறவுவேண்டியிந்நகரிற்
புறத்தினின்றானவனேனும்பொருந்தியினிப்புக்கன்றவற்குத்
துறக்கம்வெல்லத்துணைப்படுதியென்றுதூயமொழிசொல்ல
மறுக்கிலாதமதுவிலங்கைமன்னன்றன்னைவந்துற்றான். (௧௯௦)

கொற்றவரக்கன்மருவந்துகொண்டாடப்போயவனில்ல
முற்றுமதைச்செய்பூசனைகொண்டுவந்தங்கொருநாளினிதிருந்து
பிற்றைநாளகல்பெருஞ்சேனைசூழ்வேலைப்பெருவிலைக
ளற்றதவத்தோர்பயிலிமையினளகாபுரியினயலிறுத்தான். (௧௬௧)

அரவம்பெருகும்பெருஞ்சேனையரக்கர்கோமானளகையயலற்
குரவஞ்செருந்திநறைபுன்னைகோலத்தமாலங்குளிர்சந்த
மாவங்குருந்தம்பாடலஞ்சேர்மவ்வலதிமரநெருங்கி
யிரவும்பகலுந்தெரியாதவிருள்பூம்பொழிலையெய்தினன். (௧௬௨)

வஞ்சமில்லாயோகியர்தம்மனம்போற்றெளிந்தமங்கையர்தம்
நெஞ்சுபோலமிகவாழ்ந்தறிப்படாதநெடுநீர்ச்
கஞ்சமலர்ப்பாசடைப்பள்ளிக்காதற்சேவலன்னமதன்
றஞ்சமாயபெடையோடுதழுவித்துயிலுந்தடத்தினதே. (௧௬௩)

ஆடற்றெய்வமடந்தையருமமரர்களும்வந்துவிட்டுக்
கூடிக்கலவியமுதுண்டுகொழும்பூம்புன்னைக்குளிர்நீழல்
வாலடக்கன்றவர்நிசைப்பமயில்களாடவண்டினங்கள்
பாடக்கண்டாங்கினிதிருக்கும்படிகத்தலம்பூம்பள்ளியது. (௧௬௪)

அந்தவரக்கனப்பொழிலினழகைநோக்கியளவில்லா
விந்தமாயப்படைவெருச்சியாவர்மேலென்றறியாது
சிந்தைகலங்கிச்செஞ்சடையோனிவன்முனிந்தைதிதாமென்
றுந்துநொநீர்ப்பெருங்கடலுளொளிப்பார்போலக்குதித்தனனால். (௧௬௫)

மாலையடையமடவார்கண்மனமுங்கன்றும்வரிவண்டு
மாலையடையமடவார்கண்மனம்போற்செறிந்தவிருளினதாய்
மாலையடையவளர்புயத்துவயவாளரக்கன்வன்னெஞ்சு
மாலையடையவாடையொடும்வந்ததாழிவளர்திங்கள். (௧௬௬)

வெய்யபரிதியெனுமன்னன்விழக்கண்டவிருட்குறும்பன்
வையம்புரக்கவக்குறும்பைமாய்ப்பான்றோன்றிமதிமன்னன்
மைகொளாழிகிளர்ந்தார்ப்பமண்ணில்வாழுஞ்சராசரங்க
ளுய்யவிலவாம்படைபரப்பியுதயகிரிவாரணமேற. (௧௬௭)

ஐயஞானச்சுடர்விளக்குத்தோன்றத்தோன்றலில்லாத
மாயையெளவுமறந்தினையிர்வன்றீவினைமண்டிலமெனவும்
நேயவுலகங்காத்தளிப்பானேர்போர்புரியுநீண்முகத்துத்
தீயவரக்கர்நலமெனவுந்தீர்ந்ததந்தச்செறியிருளே. (௧௬௮)

ஆயகாலையினந்தென்றலசையவனங்கசரம்பாயப்
பாயநெஞ்சுபதைபதைத்துப்பனித்தோளரக்கர்பதியளகை
நாயகன்றன்மகனுபனைகூபரனைநண்ணுவான்
மேயகாதன்மின்கொடிபோல்விளங்குமரம்பைதனைக்கண்டான். (௧௬௯)

ஓடிப்போமினுடவர்களுயிரையிழவாதோடியாண்
டேடிக்கொண்மினென்பலபோற்சிலம்புபுலம்பும்பதத்தாளை
யாடற்கதலியிளந்தண்டினமுகையழிக்குங்குறங்காளை
வீடுற்றவரும்விரும்புமெழில்விளங்குமல்குற்றடத்தாளை. (கருo)

வனவாசச்சீர்மாதவரும்வானுளோருமற்றவரு
மனமாலுற்றுவிழுந்தழுந்துமலஞ்சேருந்திச்சுழியாளைத்
தனமாமலையைத்தாங்குவதொன்றில்லையாகினில்லாதென்
றநுமானத்தாலுண்டாகவடுக்குமென்னுமிடையாளை. (கருக)

பூணிற்பொலிந்துபுடைபரந்துபொங்கியெழுந்தமுலையுலகைக்
காணிற்கொல்லுமென்றவற்றின்கண்ணைமறைத்ததுகிலாளைச்
சேணிற்சுடர்சீராபரணந்திகழத்திகழுங்கழுத்தாளை
வாணித்திலத்தினிரைபதித்துவைத்தபவளவாயாளை. (கருஉ)

நீண்டுபரந்துகுழையோடுநெருக்கிமதர்த்தகண்ணாளைப்
பூண்டுகொலையிற்புரிசாபப்புருவத்தாளைப்பூரித்தல்
மாண்டமதிபோனுதலாளைமலர்த்தாமரைபோன்முகத்தாளை
யீண்டுமலருநறும்புகையுமின்றிக்கமழ்பூங்குழலாளை. (கருஙு)

வேறு.

கண்டுமனங்கவிழ்ந்துகாதற்கடல்பெருக
வெண்டிசையும்வென்றவிரவணனுர்தாமிற்ப
வொண்டிறன்மாரனுரத்தோர்கணையுய்ப்பத்
திண்டிறலோய்ந்தாங்கவனினையசிந்தித்தான். (கருச)

புண்டரிகமாதோபுனமயிலோபொற்கொடியோ
வண்டர்கடைந்தவமுதோவதன்சுவையோ
தண்டதரனிந்தச்சகத்தினைத்தானீடழிப்பான்
கொண்டதொருகோலமோகோலத்தின்கொள்கலமோ. (கருரு)

விண்ணோருலகெல்லாம்வெற்றவெறும்பாழாக்கி
மண்ணோரிலென்னைவழியடிமைகொள்ளவந்த
பெண்ணோநான்செய்தபெருந்தவத்தின்பேறோவென்
கண்ணோகளைகண்ணோகாமத்தினின்கனியோ. (கருசு)

ஆரோவறிகிலேனென்றவளைவந்தணுகிக்
காரோதிபேரழகைக்கண்ணிருபதாற்கவர்ந்திங்
கூரோதனக்கிங்குறவேவருன்னுடைய
பேரோதுபெண்ணமிர்தேபேசென்றவன்பேச. (கருஎ)

ஆயவளென்பேரரம்பையளகைக்கு
நாயகன்மைந்தனள்கூபரனென்னுந்
தூயவனென்பதியென்றுங்கவள்சொல்லத்
தீயவரக்கன்சிரித்தினையசெப்பினான். (கருஅ)

தேவரோதித்திரிபுவனத்துள்ளோர்கள்
யாவரோவிழைமெதிர்ந்தோரைவசிகரித்துப்
போவதேயல்லாற்பொதுமகளிராய்ப்பொருள்தேர்
பாவையர்க்குமுண்டோபதியென்றவன்பகர. (௧௫௯)

போரார்வேற்கையாய்பொதுமகளிராகியவக்
காரார்குழலியரைக்காதலித்துக்கைக்கொண்டோர்
யாரேனுமாகவவரளவுதாமென்றும்
பாராதபாவையர்கள்தம்பதியாய்க்கொள்வாரால். (௧௬0)

மெய்க்கொண்டவுள்ளத்துமேலோரேயாயிடினும்
பொய்க்கொண்டசிந்தையாரேனும்பொதுவாய
மைக்கொண்டகண்ணார்மனைவியராகித்தம்மைக்
கைக்கொண்டிருந்தார்க்குத்தப்பங்கடனன்றால். (௧௬௧)

என்றரம்பைகூறவிராவணன்மேல்வீழ்ந்து
சென்றவனைப்புல்கப்புகுமளவிற்சேயிழையாள்
நின்றுருகுக்கிநெறியல்லவைசெய்யேல்
குன்றனையதோளாயெனத்தொழுதுகூறுவாள். (௧௬௨)

சன்மங்கடிந்தபுலத்தியனுந்தாபதன்றன்
நன்மைந்தன்மைந்தன்றமையன்வயிற்றுதித்த
நன்மைந்தனெங்கோனளகூபரன்முறையால்
நின்மைந்தனாதலினீயென்குருவென்றாள். (௧௬௩)

அரிவையிவைவிளம்பவாற்றாதனங்கன்
றெரிகணைகள்பாயத்தன்சிந்தைதடுமாறி
யொருதலையாவின்றுஅகாமமெனவுன்னான்
புரிகுழலைத்தான்பற்றிப்போகவிடந்தானுண்டான். (௧௬௪)

வேறு.

வந்தியாகரீமாகிலமாதர்தந்
சிந்தையாலன்றியாவரைத்தீண்டினுஞ்
கந்தவார்குழலாள்கற்பெரியினால்
வெந்துவீழ்தியென்றேகினள்விம்மினாள். (௧௬௫)

வேறு.

மின்னனையாள்சாலவெருவிவிரைந்தேகித்
தன்னுடையகாதலற்குத்தான்புகுந்தவாறுரைப்ப
வன்னவனுமோகத்தினாயிழையைத்தன்வலியாற்
றென்னிலங்கைமன்னவன்றான்செய்தபிழையுட்டெளிந்தான். (௧௬௬)

நல்லார்புகழுநளகூபரனொருவ
வில்லாளைத்தோதுதீண்டியிராவணனும்
பொல்லாவொழுக்கத்தான்பொன்முடிகளோடுதலை
யெல்லாம்பொடியாகிவீழ்கவெனச்சபித்தான். (௧௬௭)

கோகனகமாதனையகொம்புதனைப்பிரிந்து
போகநெடும்பொழுதுபோனவழிபார்த்திருந்து
சோகமுறுமனத்தன்றுயணையின்மேலேறி
வேகமடங்குகளிறனையான்வெய்துயிர்த்தான். (௧௬௮)

நீடுமதியநிலாவலையைவீசியிட
வோடுமிடங்காணாதொளிப்பிடமுமொன்றின்றி
வாடியசிந்தைமதிளிலங்கைமன்னவனைக்
கோடியவின்மதனன்கொல்லத்தொடங்கினான். (௧௬௯)

வென்றிமதனன்விடுசரம்பாய்வெம்புண்வாய்த்
சென்றுநுழைந்துபுகுந்தென்றற்கனலாவி
நின்றவிடந்தேடநிலைகலங்கிநீடுயிர்த்தங்
கொன்றுமறியாதனைத்திங்கிவையுரைத்தான். (௧௭௦)

மின்னிடையினார்தம்மைவெல்லவரிதென்றெண்ணி
யுன்னிடையகாந்தியொழித்தவொளிமுகத்தாள்
தன்னிடைநீசேராய்தழல்சொரிந்துதண்மதியே
யென்னிடைநீசிறவுனக்கென்னபிழையான்செய்தேன். (௧௭௧)

தாழ்ந்தாரைக்கொல்லார்தயாவுடையார்தக்கேடு
சூழ்ந்தாரேயாயிடினுந்தோலாவலிமதனன்
சார்ந்தாரமென்மொழியாள்கண்ணம்பாலேவுண்டு
வீழ்ந்தாரைக்கொல்லுமதுவீரற்கழிவாமால். (௧௭௨)

நின்றலைக்குமாழிக்குநீளுமிரவுக்கு
மன்றிலுக்குந்தன்னையடக்குவாரில்லாத
தன்றலைக்கண்ணாயித்தனியேனுயிர்கொள்ளுந்
தென்றலுக்குமென்னோடுசீற்றமென்னோதேர்ந்திடிலே. (௧௭௩)

செம்பஞ்சின்சீறடியுஞ்சீர்க்குறங்குமல்குலுங்
கொம்பஞ்சிடையுங்குவிமுலையுமென்மனத்தைக்
கம்பஞ்செய்தோளுங்கழுத்துங்கவின்முகமு
மம்பஞ்சுக்கஞ்சுமென்னாவியகற்றுமே. (௧௭௪)

உம்பர்வளநாட்டுமொப்பிலாவுத்தமிக
ளம்பவளநீலமணிதரளமுன்னினைத்த
செம்பவளஞ்செவ்வாய்க்கரும்பவடன்செஞ்சொல்மதன்
வெம்பவளதாழ்புருவம்வில்லேவிளம்பிடிலே. (௧௭௫)

விண்ணோர்பெருமான்றன்வெற்பெடுத்தவென்விறல்தீர்த்
துண்ணோவுசெய்தென்னுயிருண்டாள்கேவலமும்
பெண்ணோவவளல்லள்பெண்ணுருவுகொண்டிருந்து
மண்ணோர்களையெல்லாமாய்க்கவருங்கூற்றே. (௧௭௬)

மதியாளிவணிகழ்ந்தவண்ணம்வேறுக
வதியாமையோரிரவோருழியாய்த்தென்னக்
கொதியாவரக்கனைமக்கோளிழைக்குங்கொல்லென்று
கதிரோனடுங்குவான்போலுதையக்கன்றுற்றான். (௧௭௭)

வேறு.

துன்னிருடீர்ந்தவெய்யோன்றோன்றிடத்துயரநீங்கித்
தன்னெதிரில்லாவென்றித்தசமுகன்றனைசூழப்
பொன்னுலகத்தைநோக்கிப்புறப்படப்புனாதிர்வானோர்
மன்னவனதனைக்கேட்டுமாயனைவந்துசார்ந்தான். (௧௭௮)

ஒருங்கியமனத்தனோர்களுள்ளெழுமொளியையும்ப
ரருந்திமுதையன்பற்கன்னையயகன்றுநீண்டு
திருந்தியகால்கள்கைகள்சிவந்தொளிதிகழ்தலாலே
கருங்கடல்கமலம்பூத்ததெனத்திகழ்காட்சியானை. (௧௭௯)

உண்டிலையென்றுதம்பிலுணர்வலோர்பிணங்கநின்ற
புண்டரீகக்கண்ணனைப்போக்கொடுவரவிலானைக்
கண்டனமென்றோர்க்கென்றுங்காண்பரியானையென்றுங்
கண்டிலமென்றோர்கண்டகண்ணனைக்கண்ணிற்கண்டார். (௧௮0)

கண்டடிவணங்கிநின்றகடவுளர்தம்மைநோக்கிக்
கொண்டலுங்கடலுமாலமருண்டிடுங்கோலமேனி
வண்டுசேர்துளவமாலைமார்பனுமனத்திற்பீடை
யுண்டதையுரைத்திரென்னவும்பர்கோனுரைக்கலுற்றான். (௧௮௧)

முன்பெமக்கிடலாச்செய்தமுராணுடையசுரரோடு
வன்படையரக்கர்வர்க்கம்வழிவழியறுத்துமாற்றிப்
பின்பெமக்கிதமேசெய்துபெற்றதாயென்னப்பேணு
மன்பவோரலக்கண்வந்தாலாருளார்நீயேயல்லால். (௧௮௨)

சொத்தொகையறுத்துத்தியக்குத்திருத்திசெய்தன்பாற்பெற்ற
வரத்தினன்வலியின்மிக்கோன்மண்ணுலகழித்தின்றெம்மை
நெருக்குவான்சேனையோடுநிருதர்கோன்வந்துநின்றான்
றிருத்திகழ்மார்பயாங்கள்செய்வதென்னென்னச்சொன்னான். (௧௮௩)

உரைத்தவாசகங்கள்கேட்டவுத்தமனுலகைக்காயு
மரக்கனாயவியறுதியிராவணனயன்பாற்பெற்ற
வரத்தையோர்வழியினாலேமாற்றிமற்றவனீரைந்து
சிரத்தினையறுத்துவீழ்த்துச்சிந்தைநோய்தீர்ப்பனென்றான். (௧௮௪)

என்றரியியம்பக்கேட்டவிந்திரனிமையோரோடுந்
தன்றிருநகரஞ்சென்றுசார்தலுந்தருக்கின்மிக்க
வென்றிவேலரக்கர்கோமான்விரிபெருஞ்சேனைசூழச்
சென்றுவிண்ணதிரவார்த்துத்தேவரைத்திடுக்கக்கண்டான். (௧௮௫)

சேனையோடரக்கனம்மேற்செருச்செயவந்தானென்று
வானவர்சேனைவெள்ளமறிகடலென்னப்பொங்கி
யானைதேர்பரிமாவுந்தியரக்கரோடமர்செய்வேலை
யானவர்பூசல்காண்பானுதரித்தயன்வந்துற்றான். (க௦௬)

கொற்றவானவர்கள்விட்டகொடும்படையரக்கர்சேனை
யுற்றனவாழித்தீயினுடன்றனதுடர்ந்துகொல்ல
விற்றனகைகால்பொங்கியெழுந்தனகுருதிவெள்ள
மற்றனதலைகள்பாடியாடினவலகைக்கூட்டம். (க௦௭)

மின்படையனேககோடிவிடுத்துவிண்ணோர்கள்செல்லத்
தன்படைமடியக்கண்டதசமுகன்சலித்துத்தன்மே
லன்படைநெஞ்சராயிவ்வவனியையழிக்குமாற்றல்
வன்படைத்தலைவர்வானோர்மேற்செலவருத்துவிட்டான். (க௦௮)

சூரியன்பகைவன்கோபத்துன்முகன்றூமகேது
காரியமறியாவென்றிக்கரன்றிரிசிரத்தோன்போரிற்
கூரியதூடணன்றீக்கொடுஞ்சுகசாரனொண்போர்
பாரியல்போதுமில்லாப்பசாசன்வெம்பாசக்கண்ணன். (க௦௯)

மங்கியபுகழ்மாரீசன்மகோதரனியாயகோபன்
பொங்கியவீரபக்கன்புகைக்கண்ணன்குருதிக்கண்ணன்
தங்கியவகம்பன்கும்பனிகும்பன்வெஞ்சம்புமாலி
துங்கநீண்மொய்ம்பினோடுஞ்சூழ்தரச்சுமாலிநேர்ந்தான். (கக௦)

விட்டெறிசூலந்தண்டுவிறன்மழுவுலக்கைகூர்வாள்
கட்டுநீள்பாசந்தோட்டிகப்பணங்கலப்பையீட்டி
வட்டவேன்முதலாவுந்திமழையிடிப்பென்னவார்ப்பக்
கெட்டனர்விண்ணோரோலைகிளர்ந்தனவரக்கர்க்கெல்லாம். (ககக)

பொருப்புறழ்களிறுந்தேரும்புரவியும்போகத்தூண்டி
யிருப்புறழ்தண்டுவாளேமுதனெடும்படைகளேந்திச்
செருப்புரிவானோரானோர்திரண்டனர்செறுத்துத்தம்மே
லொருப்புரிந்துங்கிலாதுடைந்ததவ்வரக்கன்சேனை. (கக௨)

இருபடைவீரருள்ளோரியாவருமெழுந்துசாய்ந்து
பொருவலிச்சுமாலிநோக்கிப்பொருகணைமாரிதூவி
வருபடைமாயங்கண்டுவசுக்களிலெண்மராவோர்
செருவலிமிகுபொற்றோளார்சென்றவனோடுநேர்ந்தார். (கக௩)

ஒண்டிறலோர்கட்டம்மேலுற்றமர்செய்யுங்காலைக்
கண்டவர்வியப்பஞ்சாரவிற்றிரன்கனன்றுபொங்கித்
திண்டிறற்சுமாலிதேனைச்சின்னஞ்செய்தவன்றன்சென்னித்
தண்டினைவாங்கியாற்றற்றடக்கையாற்சுழற்றிவிட்டான். (கக௪)

காலவெந்தண்டமென்னக்கடவுளர்சீற்றமென்ன
வாலமதென்னவூழியனலென்னவானோர்விட்ட
சூலமதென்னமாயோன்சுடர்விடுநேமியென்னச்
சீலமொன்றில்லான்றன்மேற்சென்றதுதேவர்வாழ்த்த. (௧௯௫)

குன்றின்வீழசனியென்னவமரர்கோன்குலிசமென்ன
வென்றிசேர்சுமாலிசென்னிவீழ்த்தவன்வெற்புமேனி
யொன்றியவங்கமெல்லாமுருத்தெரிவுறுதவண்ணங்
கன்றியகுருதிநீராய்க்கரைந்ததுகதையாங்கூற்றம். (௧௯௬)

பல்லினைகுளிப்பப்பண்டுபெடிக்கொருவீரனென்னச்
சொல்லினையுறப்போர்வென்றதுறுகழற்சுமாலியென்னும்
வல்லினைமுறியவோடும்வளர்படைவெள்ளந்தாங்கி
வில்லினைகட்டிப்போர்த்துவிலங்கினன்மேகநாதன். (௧௯௭)

பரியின்மேற்பதாதிதன்மேற்பாய்மதவருவிவேழக்
கிரியின்மேற்செம்பொற்றேர்மேற்கிளர்வலிப்பாகன்றன்மேல்
விரிவுமேற்பதாகைதன்மேல்விறற்கணைவிடுத்தான்வெம்போர்
புரியுமேற்புவனமூன்றும்பொடிசெயவல்லவீரன். (௧௯௮)

ஒட்டியபரிதேர்காலாளுலைந்திடக்கண்டுநின்ற
வட்டவெண்குடைமாமௌலிவாசவன்மைந்தன்சீறி
விட்டிலங்கெயிற்றுப்பேழ்வாய்மேகநாதன்றனோடு
முட்டினனவனுஞ்சென்றுமுடுகினபோரின்மூண்டான். (௧௯௯)

இருவருமேகநாதனிவனவன்சயந்தனென்று
தெரிவருங்கடுமையோரார்திரிபுவனத்துளோர்கள்
வெருவரவிருவர்சேனைவியந்துபோர்கண்டுநிற்ப
வொருவராயொருவர்வெல்லவுற்றமர்புரியுங்காலை. (௨௦௦)

ஏமுகமதியவல்லவிராவணியெதிர்த்தோருஞ்ச
மாமுகமதிர்ந்தாண்டுமோதலிமைந்தனூன
கோமுகனென்னும்பாகன்குலைந்திடவவன்றன்மெய்யிற்
றீமுகவயிரவாளிசெறிந்திடச்சயந்தன்சீறி. (௨௦௧)

ஏகவீரியனுயுள்ளவிராவணியேறுதிண்டேர்ப்
பாகன்மேற்பகழிமாரிதூண்டிடப்பாயுஞ்சோரி
வேகமாநொய்திற்பொங்கியோங்கியவெகுளித்தீயின்
மேகநாதன்றன்வாளிவிடுத்தனன்சயந்தன்றன்மேல். (௨௦௨)

இயங்கியவடவைத்தீயினெரிகணைவிரைத்திற்றைப்ப
மயங்கியசயந்தன்பாகன்மதன்வலிதப்பிலாமை
முயங்கியாங்கவனைக்கொண்டுமுனைக்களங்கடந்துபோகப்
பயங்கினர்வானோரெல்லாம்பாறினர்பரந்தாரொக்கும். (௨௦௩)

தன்மகன்மயங்கச்செய்யாடலைமகன்றந்தவர்தத்
தொன்மகன்மைமர்தன்றன்பாற்றோற்றியதூயமைந்தன்
புன்மகன்பயந்தவந்தப்புலைமகன்சயமும்போரிற்
றன்மகன்றளர்வுங்கேட்டசதமகன்சலத்தின்மிக்கான். (௨௦௪)

வருகதேரென்னவொல்லைமாதலிகொணர்ந்துநிற்பக்
குரைகழலணிந்துகோதைவிசித்துத்தன்கோலமார்பிற்
றிருமணிக்கவசம்விக்கித்திகழ்ந்ததற்பட்டஞ்சேர்த்தித்
தெரிவையர்திரண்டுவாழ்த்தவேறினன்செம்பொற்றிண்டேர். (௨௦௫)

ஆனகமுரசம்பேரியாகியகவின்களெல்லாம்
வானகமுழக்கிவின்றுமுழங்கமாகதர்களேத்தத்
தேனைகுகோதைமாதர்திரண்டனர்குனிப்பத்தெய்வக்
கானம்வந்தெழவந்தெங்குங்கலந்துகந்திருவர்பாட. (௨௦௬)

உருத்திரகணங்களானபதினொருவருமுற்றோத்
தருக்குறுமெண்மராயவசுக்களுஞ்சார்ந்துபோற்ற
மருத்துவரிருவர்தாமுமுதலினர்வானோரேத்தச்
செருக்களமதனைநோக்கிச்சென்றனனமரர்கோமான். (௨௦௭)

வேறு.

இந்துசேகரன்பொருப்பெடுத்ததோளிராவணன்
அந்தவிந்திரன்றன்மேலழன்றுபோரமர்ந்திட
விந்தையானதிண்புயத்துமேகநாதவில்லெனத்
தந்தையைத்தவிர்ந்துவந்ததானையோடுசீறினன். (௨௦௮)

வாரிமொண்டுகொண்டெழுந்துமாகமேவிவார்சிலைக்
காரதிர்ந்துகொண்டுதூவுகாலமாரியாமென
வீரவெஞ்சிலைத்தடக்கைமேகநாதன்விண்ணகந்
தூரவம்பர்சேனையம்புதன்றனின்றுதூவினன். (௨௦௯)

கால்துணிந்தகைதுணிந்தகந்தரந்துணிந்தநீள்
வால்துணிந்தமத்தகந்துணிந்தவெண்மருப்பொடுந்
தோல்துணிந்தவண்மையாவர்சொல்லுவார்துணிந்தவாள்
வேல்துணிந்தவிற்றுணிந்தவெம்மழுத்துணிந்தவே. (௨௧௦)

உரந்துணிந்தகால்துணிந்தவால்துணிந்தஉற்றமா
சிரந்துணிந்ததார்துணிந்தவார்துணிந்ததிண்பதக்
குரந்துணிந்தகூளியுற்றருத்துவாதைதீரவூண்
பரந்தவிந்திரன்பதாதிபட்டதேவர்பட்டுளார். (௨௧௧)

ஆழியற்றவாணியற்றவச்சுமற்றவற்றதேர்
ஊழியுற்றவாடையாலுலைந்தகுன்றையொத்தவால்
வேழமுற்றவீரர்விற்கைமேகநாதன்வெங்களத்
தாழியுற்றதேவர்வெண்டயிர்க்குமத்ததாயினன். (௨௧௨)

எண்ணகத்தனம்மைபவிரனேகருமியாயினும்
விண்ணகத்தும்விண்ணைமுடிவெற்பகத்தும்வேலைசூழ்
மண்ணகத்துமாதிரப்புறத்தகத்தும்வாழுளோர்
கண்ணகத்துமுள்ளமேமோர்கருத்தகத்துமாயினான். (௨௧௩)

சந்தவில்விருப்புரந்தமுற்படச்சரந்தொடு
மந்தவில்லியுஞ்சினத்தரக்கரோடுதானவர்
சிந்தவில்லிமைத்தெடுத்ததேவர்தேவனும்மலா
விந்தவில்லியொக்கும்வில்லியெங்குமில்லையில்லையே. (௨௧௪)

என்றுகூறிநான்முகத்தனுமிதேவர்யாவரும்
வென்றிவில்லிமேகநாதன்வீரமேவிளம்பியுட்
கன்றுதேவரோடுபோர்செய்காய்சினத்தரக்கர்போ
ரின்றொடேமுடிந்ததென்றியம்புமின்றவெல்லையில். (௨௧௫)

வேறு.

அம்பரமுமெண்டிசையுநின்றதிரவங்கணரவம்பெருகிடத்
தம்பமதுகொண்டொருதடங்கிரிகடந்துவருகின்றதெனவுங்
கும்பகருணன்குருதிகண்கள்வழிசிந்தவொருகுன்றெனநடந்
தம்பரனைதன்கையொருதண்டுகொடடைந்தனனுலந்துவிழவே. (௨௧௬)

அடற்பொருகளிற்றினையெடுத்தொருகளிற்றினையடித்துமணிதேர்
நடக்கையினெடுத்தொரிரதத்தினையடித்தும்வலிதாவுகொடியோன்
படப்பரியினைப்பரியினெற்றியுமெதிர்ந்தசுரரைச்சுரரொடுங்
கடற்கடையுமத்தெனமிகைப்பொருபடைக்கடல்கலக்கினனரோ. (௨௧௭)

கடித்தெயிறுறத்திருகியிட்டுவலிமிக்ககிமுட்டிதனிரு
லடித்தெனவுரத்தின்மிசைகுத்தியுமெதிர்ந்தசுரரைக்கரமெடுத்
தடித்துமடியிற்படமிதித்துமவரைப்படவுதைத்துமணியார்
முடித்தலைமுனைப்புரளவெற்றியுமுரட்படைகளைத்துதறினான். (௨௧௮)

முறிந்தனதகர்ந்தனபிளந்தனநெரிந்தனமுரண்டிரள்பணை
பறிந்தனதுகங்களுமொடிந்தனவிரிந்துபரிபாகரொடுபோய்
மறிந்தனவிழுந்தகலமாமெனவழிந்தனவலிந்துகடவுஞ்
செறிந்ததுணையாழிகளகன்றனசிதைந்தபொறிதேர்நிரைகளே. (௨௧௯)

முரண்டருமெலும்புகண்முறிந்தசிலகீள்வயிரமொய்கொள்பணையிற்
றிரண்டலைகநெரிந்தசிலநீண்பதமொடிந்தசிலவிண்பதவியி
னிரண்டுபிறைகொண்டுவிழுமஞ்செனவிழுக்கிரணமொன்றுகளரிப்
புரண்டசிலகொம்புகண்முறிந்தசிலபொங்குமததும்பியினமே. (௨௨௦)

பரிந்தவிரிவார்குசைபரிந்தமணிதார்கள்பருமங்களுடனே
நெரிந்தமுதுகென்புறநெரிந்தனகிடந்தனநெடுந்துரகமாச்
சொரிந்ததலைமூளையினதொங்குருடரோடமர்தொலைந்தவலியோர்
சரிந்தனர்கள்வானவர்கள்தானவரடர்ந்தனர்தயங்குபடையால். (௨௨௧)

அருக்கரும்வசுக்களுமுருத்திரருமுட்படவனைத்தமாரும்
வெருக்கொளநெருக்கொடுபொருக்கெனவுடற்றுகுடவெஞ்செவியரு
யிரக்கயிலரக்கனையடர்த்தவனாத்தடயிரத்தமெழலால்
முருக்கலர்பொருப்பினையிகர்த்திடவடிக்கணைமுடுக்கினர்களால். (௨௨௨)

முத்தலையயிற்கணையமுற்காமிரட்டியொடுகெற்கடைமுரட்
சத்திமழுவச்சிரமுலக்கைகதைசக்கரமுரட்கணைகளாம்
வித்தினைவிதைத்தருகளச்செறுவினிற்படுவினைப்பயிர்விளைத்
தொத்தலகைமொத்தமொடுணப்புதியதிட்டனர்களொந்தனர்களே. ()

பொழிந்தகணைமாரியுறவெங்கழியகண்டர்கள்புரண்டுடல்கலய்
கிழிந்தனபரந்தனசெழுங்குருதியெண்டிசையிடந்தமலைபோல்
விழுந்தனபெரும்பிணமெழுந்தனகவந்தவினம்வெங்களமெலா
மொழிந்தனரிலாதவகையோடமர்மலைந்தனருலைந்தனர்களே. (௨௨௪)

இப்படியரக்கர்களிமைப்பொழுதினிற்பொருகளத்தவிதலு
மைப்படிமனத்திரள்புயத்தசமுகத்தன்வடவைக்கொடியதீ
யெப்படிகொதித்தமனமப்படிகொதித்தெயிறதுக்கியிடையான்
வெப்படிமனச்சுரர்மிசைத்தனிரதத்தினைவிடுத்தனனரோ. (௨௨௫)

வேறு.

நீடுவார்சிலைநாணெறிந்துநிசாசரேசனிராவண
னோடையானையின்மேலுமாதலியோய்விலாதுயர்தேரினு
மாடன்மாவினும்வீராகியவவனிகாவலர்மேலுமா
வாடைகுடியகோடைமாரியின்வாளிமாமழைதூவினான். (௨௨௬)

வெஞ்சரங்கள்பரந்துசென்றுநெருங்குவிண்ணவர்சேனையைப்
பஞ்சரங்கியவங்கியாமெனநின்றுபற்றியெரிந்ததால்
மஞ்சரங்கியமங்கவந்துசெறிந்தகூளிகள்வார்மதக்
குஞ்சரங்களுருண்டதேர்கள்குலைந்தவாசிதொலைந்தவே. (௨௨௭)

அன்னவன்செயல்கண்டுசிந்தையழன்றுவெற்றிறலிந்திர
னின்னிலென்றெதிர்தேர்கடாவிநெடுந்திகந்தநடுங்கிடத்
தன்னெடுஞ்சிலைநாணெறிந்துதசக்கிரீவனுரத்தினுஞ்
சென்னிமீதும்விடத்தினோடுறழ்ந்தியவாளிகடூவினான். (௨௨௮)

அந்தவம்புவிறத்தழுந்தவுமாற்றலேதுமழிந்திலா
வெந்தசெம்பனகண்ணிராவணன்வெய்யவாளிகடேவவு
மிந்திரன்கணைமாரியாய்விரண்டுசேனையில்வீரருந்
தந்தமிற்சரமாரிதூவிடவெங்கணுஞ்சரமாயதே. (௨௨௯)

அரக்கர்சேனையைவாசவன்றனநீகவீரரழன்றுபோய்
நெருக்கிவேழமுமாளுமாவுநெடுங்களத்துவிழுத்தலுந்
தரிக்கிலாததசக்கிரீவன்வெகுண்டுசாரதியைக்குறித்
துரைக்குமென்னுரைகோடியாகிலுணர்ந்துகொள்ளெனவோதுவான்.

தேவர்சேனையினுட்புகுந்திடேர்கடாவுதியாகில்யான்
யாவரும்படநூறியிந்திரனைப்பிடித்தவனுதியா
மோவருமுயிருண்டுபின்னைமொழியமூவுலகங்களுங்
காவலென்னதுவாகவேடராசன்றிருவிதகொண்டியால். (௨௩௧)

என்றுபுன்மொழியோனியம்பவிசைந்தசாரதிமேருவாங்
குன்றுபோலுயர்தேரைவாளவர்கூடுசேனையினுள்விடச்
சென்றதேரதுகண்டுதீயவரக்கனன்னிலனென்னவே
வென்றிமேவியவிந்திரன்னிலைவன்மைவர்க்குவிளம்பினன். (௨௩௨)

என்னைவஞ்சனைசெய்துகொன்றிடவென்னுமிக்கவிராவணன்
றன்னைநானுமவன்றனைத்தளராப்பிணிக்குவனென்றவன்
முன்னிலாதவிலங்கியோடமுயன்றுதேவர்முடுக்கிய
தென்னிலங்கையரக்கர்கோன்மிருசேனைபாழ்படநூறினன். (௨௩௩)

அன்னகாலையினூறியோசனையுள்புகுந்தனிகெட்டடத்
தன்னெடும்படையாயநூறுதசக்கிரீவனைவாருனோர்
மன்னவன்படையோடுவெந்துவளைப்பவஞ்சவரக்கராத்
தென்னிலங்கைமன்வீடினனெனவொக்கசிங்கைதியங்கினர். (௨௩௪)

அந்தவேலையின்மேகநாதனமுன்றுபொங்கியடர்த்துறத்
தந்தைதன்னைவளைந்தவர்துநெருக்குதானையைநூறிய
விந்திரன்றனுரத்துமங்கவனேறுதேரினும்வேகமா
வுந்துமாதலிமேலும்வாளிகளோய்விலாவகையேவினன். (௨௩௫)

அண்டர்கட்கரசன்னெதிர்ந்தவமர்க்களத்தடையார்களாற்
பண்டுபட்டறியாதபாடுபடுந்தரிக்கிலனாயவன்
கொண்டலொத்தமுழக்கிடைப்பொருகுன்றையொப்பதைவென்றிசேர்
சண்டவக்கிரகிரியெனுங்கரிதன்னையோர்கொடியேறினன். (௨௩௬)

ஏறினனையிராபதத்தையினிப்பிழைப்பரிதின்றென
வாறிராவரக்கரவ்வழிபாகசாதனனைங்கியிற்
சீறினூறுபோரிலானியெனத்தசக்கிரீவன்மக
னேறினுயர்தேரின்மீதமரோசனும்பொரவுற்றனன். (௨௩௭)

வன்னிகொன்றைமிலைச்சுதும்பைதரித்தவீசன்வரத்தினு
லன்னெடுந்திறன்மேகநாதனடர்ந்தபோதகல்வானகந்
தன்றுபேரிருண்மூடமாயைவகுப்பநெஞ்சுகலங்கிவான்
மன்றுதேவர்களாயினோர்கண்மயங்கியொன்றுமுணர்ந்திலார். (௨௩௮)

செய்வதொன்றறியாதுசிந்தைகலங்கியிந்திரனின்றிடக்
கையுமெய்யுமகப்படத்தெறுகாலபாசமிதாமெனும்
வெய்யபாசமுறப்பிணித்தனன்மேகநாதன்விளைந்ததோர்
மையலெய்யவரக்கரானவராடினர்சார்வாடினர். (௨௩௯)

வேறு. வெந்திறலரக்கர்சேனைமேகநாதன்றன்பாசத்
திந்திரன்கட்டுண்டானென்றெறிகடலொலியினார்ப்பத்
தந்தையைவந்துசார்ந்துதரிப்பருமுவகைபொங்க
வெந்தைநீகேட்டியென்றுவிராவணனினையசொன்னான். (௨௬௦)

என்னெதிர்நிற்கமாட்டாவிந்திரனென்கைப்பட்டா
னுன்னெதிரொருவரில்லையுருப்பசிமுதலாயுள்ள
வன்னமென்னடையினாருன்னடியினைவருடவைய
வுன்னைவானவர்சேவிப்பவுலகெலாமாடியென்றான். (௨௬௧)

என்றவனியம்பக்கேட்டவிராவணனிருபதாய
தன்றிகழ்தோள்களாரத்தழுவிக்கொண்டினிதினின்று
பொன்றிகழ்மணிமாமோலிப்புரந்தரன்றன்னையின்று
வென்றதெவ்வுலகுமன்றோவென்றனன்விளைவினென்றான். (௨௬௨)

இன்னனபலவும்பன்னியிந்திரனோடுதங்கள்
பொன்னகரொழுந்துபொங்கியெதிர்கொளப்புகுந்துதேவர்
மன்னவன்றன்னைக்கட்டிவன்சிறைவைத்தகாலை
யன்னவாகனனைமுன்கொண்டமரர்களடங்கவந்தார். (௨௬௩)

வந்திலங்கேசற்கண்டுமலரயன்புகல்வான்வைவேல்
வெந்திறலுடையவீரவேறுனக்கெதிராருன்றன்
மைந்தனிந்திரனையிங்குவான்சிறைவைத்தலாலே
யிந்திரசித்தென்றெல்லாவுலகமுமியம்பவென்றான். (௨௬௪)

சந்திரமவுலியீசன்றடவரையெடுத்ததிண்டோள்
வெந்திறலரக்கர்கோவேவிண்ணவனொனைமுன்கொண்டு
வந்தகாரியமதாக்கும்வலியுனக்கேறிற்றெங்கு
மிந்திரன்றன்னையொல்லையிருஞ்சிறைவிடுதியென்றான். (௨௬௫)

என்றவனியம்பக்கேட்டவிராவணனியம்புவானிவ்
கின்றவன்றன்னைவிட்டாலியான்பெறும்பேறுவேண்டு
பொன்றிகழ்மேனியாயிப்புவனமுள்ளளவும்பொன்று
தென்றுநானிருப்பதாகவிவ்வரமருள்கவென்றான். (௨௬௬)

இராவணனினையகூறவிதையத்திலெண்ணிப்பார்த்துப்
பராவருமுலகமெல்லாம்படைத்தவன்பகரும்பாரிற்
சராசரமானயோனிசார்ந்தபல்லுயிர்கட்கெல்லா
நிராமயமானநித்ததத்துவமரிதிங்கென்றான். (௨௬௭)

ஆயவைவிரிஞ்சன்கூறவரக்கர்கோன்மைந்தன்கூறுந்
தீயிடைப்பிறந்ததெய்வத்தேரினின்றியான்போர்செய்ய
வாயுவுக்கிறுதிவாராவகையெனக்கருணீயென்ன
நீயிதுபெற்றாயென்னநிருதன்மற்றிதனைச்சொல்லும். (௨௬௮)

திட்கிழமரியைசெறானைவெல்வானெனெண்ணித்
துடங்கியவேள்விமுற்றுப்பெற்றிடற்றுன்னலார்க
ளடங்கலுந்தோற்கவேண்டுமெனவயன்பெற்றுயென்னத்
தடம்புயத்தரக்கன்மைந்தனருண்மகிழ்ந்திலையசெய்தான். (௨௪௯)

சிறையிடையிருந்தவத்தேவர்கோன்றன்னைவிட்டு
மறையவன்றனக்குக்காட்டிமானவேன்மருமத்தூன்ற
வுறுதுயர்பொறுக்கலாற்றுதொருவனையெடுத்துநோக்கான்
கறைகெழுவேற்கைவானோர்காவலன்கவிழ்ந்துநின்றான். (௨௫௦)

அன்னதன்மையனும்பின்றவமார்கோன்றன்னைநோக்கிக்
கன்னிகர்தோளாய்முன்புகவுதமனிட்டசாப
முன்னைவந்துறுதலாலேயுனக்கிதுவந்ததுன்றன்
பொன்னகர்புகுதியென்றுவிட்டயன்போயினனே. (௨௫௧)

திக்குவிசயப்படலம்முற்றிற்று.

ஆ திருவிருத்தம்—௫௫௧.

௪-வது—கார்த்தவீரியன்கையிற்கட்டுண்டபடலம்.

அரக்கர்கோன்விசையமடங்கலுங்கேட்டவாழியானதிவியப்பெய்தித்
திரைக்கடலுலகம்வெருக்கொளவரக்கனிருக்குநாட்டேசமன்னவரி
லொருத்தருண்டாகவுரைத்திலையடைந்தவவலியுடையானவனை
யுரைத்திநீயென்னவிராகவன்றவத்தாலோங்கியகுறுமுனியுரைக்கும். (௧)

மாயிருஞாலமடிப்படுத்தெதிர்க்குமருவலரின்றிமன்னுண்ட
வாயிராந்திண்டோளருச்சுனன்றனக்கும்வாலிக்குமழிந்தனனன்று
தீயவாளரக்கனெனமுனிசெப்பச்செறிபுகழிராகவன்மனத்துத்
துயமாமுனியேயக்கதைவிரித்துச்சொல்லெனமாமுனிசொல்லும். (௨)

உத்துகிர்வேலையுலகிடைவாழுமொளிமுடிமன்னனாயோட்டி
யத்தவாளரக்கனுயிராந்திண்டோளருச்சுனனவனிகரடைந்தே
யிந்தமாநகருக்கிறைவனெவ்விடத்தானிராவணனிகல்செயச்சமைந்து
வந்தனனெனவாங்குணர்த்துயினென்னமந்திரித்தலைவர்கள்மொழிவார்.

தெரிவையரோடுநருமதையென்றுந்திருந்தியநீர்விளையாட்டிற்
புரியுநெஞ்சினனாய்ப்போயினனரசனென்றவர்புகன்றிடக்கேட்டுப்
பொருகழலரக்கனவ்விடநோக்கிப்போகுவான்பூம்பொழிற்சாரல்
விரிபெருஞ்சிகரமாயிரமோங்கிவிளங்குசீர்விந்தத்தையடைந்தான். (௪)

மழைமுகின்முழக்கங்கேட்டெதிர்பொருதுவாளரியேறெதிர்முழங்கு
முழையுடையதனைமுனைவர்தானவர்கள்முகிணகையரம்பையரோடுங்
கழிபெருங்காதலொடும்விளையாடக்காமபோகத்தினைநுகரு
மிழிபுனலருவிதழுவினவரையிடைத்தவழ்சாரன்மேவியதை. (௫)

இன்னமாமலையினெழிலினைநோக்கியிராவணனெழினுரையாடை
மன்னியகாஞ்சிதிகழ்வளையல்குல்வஞ்சிநேரிடைசுழியுந்தி
பொன்னணியாரம்புளினமென்கொங்கைபொருகயல்கண்ணறல்கூந்த
லன்னமென்னடைநேர்நருமதையென்னுமரிவையைத்தெரிவுறக்கண்டான்.

அத்திருநதியிலமைச்சர்களோடுமரக்கர்கோனகமகிழ்ந்தாடி
மைத்திகழ்மிடற்றுவளர்சடையோனைமணற்குலவையருச்சனைசெய்ய
நெய்த்தருகுழலாரொடுமருச்சுனனுநீர்விளையாடுவானிமிர்ந்த
கைத்திரளதனாற்கடுவிசைநீரைக்கட்டினன்றேங்கிநின்றெதிர்ப்ப. (௭)

தேங்கியபெருநீர்நிருகரைபுரளச்சென்றுகுன்றிருபதிற்றிகழ்தோட்
டங்குடையரக்கனவன்செயும்பூசைசிதைந்திடத்திகைத்தனன்சீறி
யீங்கிதுவிளைந்தகாரணமெல்லாமிருவருமறிமினென்றியம்பப்
பூங்கழல்வானோர்புறங்கொடுத்தோடப்பொருசுகசாரணர்போனார். (௮)

போயவர்செறிதோட்பூமிமன்னவர்க்கும்புரிகுழற்பூங்குழையார்க்கு
நேயம்வந்தொன்றிநீர்விளையாட்டுநிகழ்வழிநெடுநிலமன்ன
னாயிரங்கையாலாற்றுநீரடைப்பவப்புனலெதிர்த்தமையறிந்த
தியவர்வந்துதென்னிலங்கேசற்கச்செயல்தெளிவுறச்சொன்னார். (௯)

ஆங்கவருரைப்பவமைச்சருந்தானுமருச்சுனனின்றிடமதிப்பப்
பூங்கழலரக்கன்பொருதுவெய்துயிர்ப்பப்புரவலனமைச்சரைநோக்கி
யீங்கமர்செய்யவிராவணன்வந்தானென்றுகுன்றுயிரமென்ன
வோங்கிருந்தோளாற்குணர்த்துமினென்னவுறுவலியமைச்சருரைத்தார்.

தன்றெரிவையர்பாற்றளர்ந்தநெஞ்சினனாய்த்தராபதியவர்களுந்தானு
நின்றுபோராற்றினீர்விளையாட்டினிகழ்வழிநீயமர்புரித
னன்றிதுவன்றுநாளைநீர்பொருமினென்றவர்நவின்றிடவரக்கன்
சென்றுமேல்விழச்சேதியவமைச்சரவனெதிர்தாம்பொரமூண்டார். (௧௧)

தருக்கிலர்மிக்கதராபதியமைச்சர்தம்மொடுந்தசமுகனமைச்சர் [ன்
நெருக்கிவந்தெதிர்ப்பநிகழ்ந்ததுபெரும்போர்நெடுஞ்சமர்நெருக்கினனிருப
செருக்கியசேனைநிருதர்மேலழன்றுசென்றுதாக்கியதுசெந்நீரால்
முருக்கலர்வனத்துச்சிவந்ததுபடைஞர்மூண்டமர்புரிமுனைக்களமே. (௧௨)

வக்கிரன்மனத்துமாபெரும்பக்கன்மகோதரன்வஞ்சமாரீசன்
செக்கராங்கருஞ்செம்மயிர்செறிதோட்டுப்புகைக்கண்ணனேமுதலோர்
சக்கரமுலக்கைதண்டுவேல்குலிசந்தடமழுவாகியசமரத்
துக்கரமுடையவாயுதம்வழங்கவுடைந்ததாலருச்சுனன்சேனை. (௧௩)

தன்படைசாய்ந்துதன்னிடைவீழத்தராபதிநீர்விளையாட்டி
னன்புடைமாதரஞ்சிமெய்நடுங்கவஞ்சலீரொன்றுகையமைத்து
மின்படைவேந்தன்விரிபுனல்விட்டுவெவ்வழலெனக்கொதித்திலங்கை
மன்படைதுரப்பவப்பிரகத்தன்மற்றவனோடெதிர்மலைந்தான். (௧௪)

கோடியமனத்துக்கொடுந்திறலரக்கன்கொற்றவன்மிசைக்கொலைவலியால்
நீடியவலக்கைநெருப்பெழத்தாப்பநீறுபட்டிடவதுதண்டாற்
சாடிமற்றவனைத்தரைப்படவடிப்பத்தடம்புயமகோதரன்முதலோ
ரோடியவொடுக்கங்கண்டிலங்கேசனூழிவெந்தீயெனவுடன்றான். (௧௫)

தண்டதுவாங்கித்தடக்கையாயிரத்தோன்றன்னெடுந்தசமுகனெதிரோ
மண்டியொன்றொன்றிற்கதுவுகொண்டிரண்டுமழவிடைமலைவனவெனவுங்
கொண்டலினதிர்த்துக்கொதித்துடற்றிரண்டுகுன்றுபோர்கூடியவெனவு
மெண்டிசைக்கரிகளிரண்டெதிர்மலைவவென்னவுமிருவரும்பொருதார்.

கூற்றுவனென்னக்கொடுங்கனலென்னக்கொதித்திருதண்டினாலெற்றி
யேற்றபோர்முகத்திலிராவணனரசனிருவரும்பொருவுழியரக்கன்
காற்றெனமுடுகிக்காவலனுதத்துக்கைகயினாலடித்திடக்கலங்கா
தாற்றினனின்றுங்கருச்சுனனடிப்பவரக்கர்கோனாற்றல்போய்வீழ்ந்தான்.

அன்னவன்றளரவறிந்தவாயிரந்தோளருச்சுனனாற்றலினவனைப்
பொன்னெடுந்தோள்களையர்வுறப்பிணித்துப்போகலுற்றானைவெம்போரில்
மன்னவன்கைப்பட்டானெனவின்றமகோதரனுதிவாளரக்கர் [ன்.
பின்னிலென்றவன்மேனெடும்படைதூப்பநரபதிநெருப்பெனக் கொதித்தா

தண்டுவாண்முசலஞ்சக்கரஞ்சூலந்தடமழுத்தோமரநாஞ்சில்
பிண்டிபாலங்கோன்முதலவாயுதங்கள்பெருங்கையாயிரங்களால்வாங்கிக்
கொண்டுமேல்வீழுங்கொடுந்திறலரக்கர்குலைந்துகெட்டோடிடத்துரந்து
திண்டிறனிருபன்றிருநகர்புகுந்துதீயவன்றனைச்சிறைவைத்தான். (௧௯)

கெட்டவாளரக்கர்மீளர்பெரும்பயத்தாற்கேடில்சீராவணனமரில்
பட்டபாடெல்லாம்வீடணற்குரைப்பப்பரிவுறுமனத்தினனவன்போய்ச்
சிட்டருளுள்ளபிதாமகற்குரைப்பச்சிந்தைநொந்தச்சிறைவிடுப்பான்
வட்டமாமதிற்சூழருச்சுனன்வாழும்வளநகர்மாமுனிவந்தான். (௨௦)

அந்தமாமுனிவனடியிணைவணங்கியருச்சுனனருச்சனைசெய்திங்
கெந்தைநீவந்தகாரணமென்கொலியம்புதியென்றவனிசைப்ப
விந்திராதியரைவென்றுறநெடுநாளீட்டியசெயமெலாமுனக்குத்
தந்திராவணனின்றலைக்கடைச்சிறையான்றராபதியாருனைத்தடுப்பார். (௨௧)

ஏறியவலியேயினியுனக்கிமையுமிறைவகேளிராவணன்றன்மேற்
சீறியசீற்றந்தவிர்ந்துநீயவனைச்சிறைவிடுகெனமுனிசெப்ப
வாறியமனத்தனாயவன்விடுப்பவரக்கனையிலங்கையில்விடுத்துத்
தேறியசிந்தைச்செழுமறைமுனியாந்திசைமுகன்றன்னுலகடைந்தான். (௨௨)

கார்த்தவீரியன்கையிற்கட்டுண்டபடலம்முற்றிற்று.

ஆ திருவிருத்தம்—௯௦௯.

௫-வது—வாலிவாலிற்கட்டுண்டபடலம்.

சீலமாமுனியாற்சிறைபேர்ந்தவன்
காலனென்னக்கனலென்னவெய்யதோ
ராலமென்னவவ்வியிழிந்துமா
வாலிமன்னும்வளநகரெய்தினான். (௧)

இங்குவாலியிருந்திலனோவவ
னெங்குளானென்றிராவணன்கூறிடத்
தங்குசீருடைத்தாரைபசாசரிற்
கங்குல்வாய்வந்தகாரணமென்னென்றாள். (௨)

வாலிதன்னொடும்வாளமர்செய்திடக்
கோலிவந்தனனென்றவன்கூறிடக்
காலனோடுகனன்றுபிழைக்கவோ
சாலநன்றெனத்தாரையியம்புவாள். (௩)

துந்துபிப்பெயரான்முதற்றன்னலார்
வந்துவாலியுடன்மலைந்தோருடற்
பந்தமேவியபல்லெலும்பிற்குவை
யிந்தமாமலைகண்டுகொளேழை நீ. (௪)

ஆசலாடல்வாலியொடும்பொரிற்
சாதநிண்மைமெண்சார்தருதிக்கினுந்
நீதிலாச்சிவபூசனைசெய்திடப்
பாய்தல்செய்யும்பதறலையென்றனள். (௫)

தரிக்கிலாயெனிற்றென்றிசைச்சார்பவா
யரக்கவேகுதியாலெனத்தாரையீ
துரைக்கவேகியுயர்சிவபூசையி
லிருக்கும்வாலியையெய்தினோக்கினான். (௬)

வேறு.

மேருவையொக்குமேனியன்விளங்கும்விரிதிரைப்பரப்பின்வந்துதிக்குஞ்
சூரியனொக்குமுகத்தினன்கடலைச்சுராசுரர்க்கமுதெழக்கடைந்த
வீரியனறியான்பரவசனாகிவிழிமுகிழ்த்திருந்திடவிதுவே
காரியமிவனைக்கட்டுவனென்னக்கருதினன்கருமனத்தரக்கன். (௭)

அவ்விடையவன்றன்கண்விழித்தந்தவரக்கனையறிந்தறியான்போற்
றெவ்விடைவெம்போர்த்திறன்மிகுவாலிதிரியவுங்கண்முகிழ்த்திருப்ப
விவ்விடையிவனைக்கட்டுவனென்னுவிராவணனுழைபுலியெனவும்
வெவ்விடையொதுங்கிவருகின்றதெனவுமெள்ளவந்தவனையேபற்ற. (௮)

வெய்யவாளரக்கன்கையிருபதினால்வீக்கவும்விறன்மிகுவாலி
கையினாலவனைநெருக்கெனவிறுக்கிவாலினாற்கடிதுறக்கட்டி
மையணிகண்டன்பூசனைமுகித்துவாலுடனிராவணன்றூங்கப்
பையராவதனைக்கவ்விவிண்பறக்குங்கருடனின்மேற்கடல்பாய்ந்தான். (௯)

வன்புலவாலிவல்விசைப்பாயமற்றவன்மெய்விசைக்காற்றால்
முன்புளமலையுமரங்களுமுறிந்துமுன்புசென்றனமுரண்சேரப்
பின்புளவையும்பறிந்துபின்சென்றபெருவலிமகோதரன்முதல
வன்புடையமைச்சரசேனையீட்டாளுடன்மிருவாலிபின்றொடர்ந்தார். (௧௦)

தாழ்வில்போராற்றற்றடவரைப்புயத்தோன்றரியலர்மயங்கிடவமரிற்
றூழமாமதையரக்கர்தம்விசையாற்றுடரவெண்டிறலமர்தொலையாப்
பாழிமைவாலிபாய்ந்திடவன்றன்பருவனாமெய்விசைப்பின்செல்
லாழிமாருதமேகொண்டுபோய்மலைப்பவரனழிந்தனைவரும்வீழ்ந்தார்.

பாரதவருடம்பார்த்தயோசனைகளொன்பதினாயிரம்பாய்ந்து
கீர்த்தகமுயங்குநெடுங்கடலிமையகிரியிரண்டாயிரநீக்கிக்
சீருடைப்பெருமைசிறந்தகிம்புருடமொன்பதினாயிரந்தீர்ந்தாங்
கோரணியேமகூடமோரிரண்டாயிரங்கிரியிமைப்பினிற்பாய்ந்து. (௧௨)

பொன்னரிவருடம்பொருந்தியோசனைகளொன்பதினாயிரம்போக்கித்
தன்னிலையிரண்டாயிரமுடைநிடதந்தாவிமேலைக்கடல்சார்ந்த
பின்னான்பூசைவிதிமுறைமுடித்துப்பெருகுசீரிமயவருட
மொன்னலர்காலன்வாலியோசனைகளொன்பதினாயிரமொழிந்து. (௧௩)

நீலமால்வரையிராயிரங்கின்றெளிர்பொன்மலைவருட
மேலுயர்கவேதமோசனைபதினோராயிரம்விரைவிற்பாய்ந்து
கோலநீள்ருரவஞ்செருந்திமுன்சொன்னவளவுபோய்வடகடல்குறுகி
யாலமாமிடற்றோனடியினைபேணியக்கிருந்தருச்சனைமுடித்து. (௧௪)

மேற்கடலொடுவடகடலுள்ளயோசனைவிசிந்துபோய்க்கிழை
மாற்கடலெய்திவளர்சடையோனைமகிழ்ந்தவனிருந்துபூசித்துப்
பாற்கடலொடுதென்கடலுள்ளயோசனைவிசையொடுபாய்ந்து
போர்க்கடல்வாலிபுனைமணிமாடப்பொன்னகர்கிட்கிந்தைபுகுந்தான். (௧௫)

ஆங்கவன்வரக்கண்டகமகிழ்ந்தானாயவனெடுவாலிடைக்கிடந்து
தூங்கியவரக்கன்றன்றுயர்கண்டுதூறுகழல்வாலியைநோக்கி
யிங்கிவன்யாவனிவனைநீபோகவிளிவிடுகெனமனமிரங்கித்
தேங்கமழ்குழலிசெப்பிடவிடுத்துத்தீயவன்றனக்கிவைசெப்பும். (௧௬)

பித்ருகன்பூசைபேணுதல்வேண்டிப்பெருங்கடல்தொறுஞ்செலவினையு
மத்திலையதனிலரக்கனிவந்தகாரியமறிந்திலனரக்கா
வென்னிடைவந்தகாரணமதனையியம்பவென்றிராவணனியம்பு
முன்னொடுபொருவான்வந்தகப்பட்டேனுன்கையிதெனவவனுரைக்கும். ௧௭

மின்றெளிர்முடியாய்வென்றவர்தோற்பர்தோற்றவர்வெல்வர்வெஞ்செருவி
லென்னொடும்பொருவானிச்சையுண்டாகிலிராவணபொருதியிங்கென்னக்
கன்னெடுந்தோளாய்கலங்கிலன்வாலாற்கட்டுண்டுபட்டதகிடக்க
வின்னமும்பொரவோவிச்செருவமையுமின்றுமின்றோழனென்றான்.

என்றிலங்கேசனியம்பிடவாலியெழுந்தபேருவகையாலிறுகத்
தன்றிரடோளாற்றழுவியாங்கவனைத்தன்னெடுநகரிடைக்கொண்டு
சென்றினிதூட்டிச்சிறந்தனசெப்பித்திங்களொன்றினிதுகொண்டிருந்தான்
இன்றைநாடுடங்கெயென்பிராதாநீயென்றிலங்கேசனைவிடுத்தான். (௧௯)

அலைதழுவுததியரவனைத்துயினீத்தயோத்திவந்தடைந்தடல்வீரச்
சிலைதழுவியகின்செஞ்சரமொன்றுநெஞ்சகம்பிளப்பவுந்திறலோ
னிலைதழுவியபூணிந்திரன்குலிசத்தேறுபட்டிருசிறகற்ற
மலைவிழுவதுபோல்வீழ்ந்தனன்வீரமற்றவனையொப்பவர்யாரே. (௨௦)

வாலிவாலிற்கட்டுண்டபடலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௯௨௩.

௬-வது—அநுமப்படலம்.

புலைவாளரக்கனிருநாலிரட்டியொருநாலுபெற்றபுயமுந்
தலையானபத்துமுறவால்விசித்தசயவாலிகொற்றமுழுது
மலையாசலத்துமறையோனுரைப்பவதெலாமனத்திலுணராச்
சிலையாலரக்கர்திறம்வேரறுத்ததிறலானுரைக்குமிவையே. (௧)

மறவாலிகொற்றமதுவோகிடக்கமருவார்வெருக்கொள்வலியா
னிறைவான்மிசைப்பொன்வரையீடழித்துநெகிழாதுநிற்குநிலையாற்
குறையாதவிச்சையதனாலளப்பில்குணநீதிகொற்றமொடுகூ
டறிவாலிவற்றிலனுமானையொக்குமவரார்சகத்திலினியே. (௨)

அங்காரதாரைகுடர்மாலைசூடியலைவேலைதாவியடையார்
தங்காரணங்கள்பொடியாகநூறிவருசம்புமாலிமுதலோர்
பொங்காரவாரமொடுநேர்பொருந்தவர்சேனையானைபரிதேர்
சங்காரமாடுமநுமானையொக்குமவரார்சகத்திலினியெ. (௩)

வரையோடுருத்திரனைமீதெடுத்தவயவாளரக்கன்மகனைத்
தரையோடரைத்துநகர்தீமடுத்துவருசேனையைச்சலதியிற்
றிரையோடமுக்கியொருதாவிலத்திவடதீரமுற்றதிசைமே
லுரையோடுவெற்றியனுமானையொக்குமுரவோர்சகத்திலுளரோ. (௪)

அருமாதவத்தின்முனிவாவுரைக்கிலநுமானையொக்குமவரார்
செருவார்சிலைக்கையிளையோனைமிக்கதிறல்வானரப்படையொடு
மருவார்மயக்கவடமேருவுக்குவடபான்மருத்துமலைகொண்
டொருநாழிகைக்குள்வருவாரொருத்தருளரோசகத்திலினியே. (௫)

இவனாலருக்கன்மகனோடெமக்குமினிதாயநட்புமியல்பு
மிவனாலளப்பில்பெருநீரடைத்ததிணையாவயத்தனுடனு
மிவனாலரக்கர்பெருமாயையுற்றவிடையூறகற்றியவெலா
மிவனாலரக்கர்குலம்வேரறுத்ததினியானுரைப்பதெவனோ. (௬)

பிரியாவிரதத்தினனுமானையுற்றபெருமேருவிற்பெரியனுந்
திரிதராவொடிக்குமெனின்மேனியற்பவனுவானகுற்சிறியனு
முயகாரணத்தினளவாமுருக்கொளுவர்வீரனுற்றவலிதா
னறியாதிருக்குமதவேதமுற்றுமறிவாறுரைத்தியெனவே. (எ)

மறவோர்குலத்தையறவோருத்தமனுநீதிபற்றியரசாள்
திறலோனுரைத்தவமுனாமுசொற்கள்செவிவாய்மடுத்துநகருங்
குறியானுரைக்குநெடியோய்குறிக்கொளெனமேதினிக்குளஃனிசி
றறிவோரின்மிக்கவனுமாருதிப்புமதிசெய்தவச்செயலுமே. (அ)

வேறு.

சூரியன்றருவரத்தினன்சுவணமேருவெனும்
பேரினன்செறிபெருவரைத்தோளினன்பேறும்
பாரிலஞ்சனைவயிற்றினிற்பவனனுக்குதித்தோன்
யாரினும்பெருவலியுடையெழில்மணிப்புதல்வன். (௯)

பிறந்தபொழிலேப்பின்னிதன்பெருவலியறிந்தே
சிறந்தராயருந்தந்தையுந்திந்தையுமகிழ்ந்தார்
மறங்கொளெஞ்சடைவாளெயிற்றரக்கர்தம்வாணாள்
குறைக்குமாறெனக்குறித்தனவானவர்கூட்டம். (௧௦)

அனிலனாமதியன்னையைப்புதல்வனுந்தொழுதிவ்
வினியதாமினையாதெனக்கியம்புதியென்னப்
பனியுலாவியசோலையிற்பருவத்திற்சிவந்த
கனியெலாமுனக்காவதென்றன்னைதான்கழற. (௧௧)

செழுமலர்த்திருவனையநாய்செழுங்கனிநாடிப்
பழுவமுற்றிடப்பசியினுற்பதைபதைத்திரங்கி
யழுதரற்றியபாலகனன்னைமுன்னுரைத்த
பழமதக்கினுவாமெனப்பருதிமேற்பாய்ந்தான். (௧௨)

பாயநோக்கினவானவர்தானவர்பழிப்பில்
ஆயமாதவர்முதலினோர்தோன்றியவியப்பால்
வாயுவேகமும்வயினதையன்றன்மாக்கதியு
மோய்விலாதிவனிடத்தினிலிருக்கவென்றுரைத்தார். (௧௩)

பின்னுங்கூறுவார்பிறந்தபோதேயிவன்பிதாவே
யன்னவேகத்தனுற்றலாலருக்கன்மேற்பாய்ந்தான்
மன்னுமாருதிவளர்ந்தபின்மருவலாரனு
சொன்னதாகியென்படுவரோவிவன்கையாலென்றார். (௧௪)

ஈதுவானவர்முதலினோரியம்பிடக்கேட்ட
வாதராசனியம்பினன்வாயுமென்மைந்தன்
மீதுவெய்யவன்வெங்கதிர்வெண்ணிலாவென்னச்
சீதசந்தனச்சீதளமாகுகவென்றான். (௧௫)

ஆய்ந்ததாதையிதியம்பிடவருக்கன்மேலேறப்
பாய்ந்துமண்டலம்பற்றினன்கவ்வலுமதனுங்
தேய்ந்தவெய்யவனிவன்சிசுவெனமனமிரங்கிக்
காய்ந்திலன்பெருங்கருணையாற்காதலனென்றுன். (௧௬)

அற்றைநாளிலவ்வலர்கதிர்மண்டலமதனைப்
பற்றுவான்சென்றுபற்றலும்பற்றியேயின்ற
கொற்றமாருதிதனைக்கண்டிருண்டுபோயிராகு
வெற்றிவிண்ணவர்கோன்றனைக்கண்டிவைவிளம்பும். (௧௭)

மன்னுஞ்சந்திரசூரியமண்டலம்விழுங்க
முன்னமேயெமைவிதித்தனைமற்றிக்கடவேறு
ரன்னியன்புகுந்தலர்கதிர்மண்டலங்கவ்வி
யின்னமும்விடானிவையென்னமாயங்களென்றான். (௧௮)

என்றுகூறிடவெரிவிழித்திந்திரன்வெள்ளிக்
குன்றுபோலயிராபதமேற்கொண்டுகுறுகிச்
சென்றிராகுவைத்தினகரற்பற்றெனச்செப்ப
நன்றதென்றவனுமிருதனைச்சென்றுநண்ணி. (௧௯)

இரவிமண்டலம்பற்றுவானெண்ணியவிராகு
வரவுகண்டனன்மாருதிமண்டலம்விட்டே
யிரவின்மேலுறப்பாய்தலுமாங்கவன்கதறி
வெருவியோடினன்விண்ணவர்கோனடிவீழ்ந்தான். (௨௦)

வெருவியோடினவெவ்வராவினைத்தொடர்வேக
வரியின்மேலரியழன்றயிராபதமூர்தப்
பெரியதோர்கனிபெற்றனனெனப்பெரிதுகந்து
கரியின்மேலெழப்பாய்ந்தனன்காற்றிலுங்கடியான். (௨௧)

இன்னகாலையினிந்திரனெதிர்வருங்கூற்ற
மன்னமாருதிமேற்கனலாலமாமெனவுங்
கொன்னுனைப்பெருங்குலிசம்விட்டெறிதலுங்கொண்ட
தன்னினைப்பினைமறந்துபோய்த்தரணியில்வீழ்ந்தான். (௨௨)

வேறு.

மைந்தனைவிழக்கண்டவாயுவானவன்றன்சீறி
யிந்தமூவுலகுதன்னையிமைப்பிடைக்கெடுப்பனென்று
சிந்தையினெண்ணியந்தச்சேயினையெடுத்துக்கொண்டாங்
கந்தரத்தியக்கமின்றியடங்கினனிருந்தகாலை. (௨௩)

உறுவலியில்லாமாயவுடம்பினையுள்ளோனின்று,
பிறிவிலாதியக்குகின்றபிராணவாயுககோவிப்ப
வறுகயிற்றூசல்போலவங்கொடுங்குன்னின்றுட்டு
பொறியறுபாவைபோன்றுவீழ்ந்தனர்புவனத்துள்ளோர். (௨௪)

இறைவர்கள்காப்போரின்றியிடும்பையாற்பெரிதுமொர்அ
கறைகெழுவேற்கனுணாக்காமுறுவோர்களின்றி
மறையொலியின்றிச்சந்திவந்தனையின்றிவேள்வித்
துறைகளுமின்றிவையந்துளியமயலிற்றன்றே. (உ௫)

மாத்திரைப்போதமேனிமிற்குமோவாயுவின்றி
மூத்திரப்புருடவாயிலடைத்தலான்முடுகுதோற்பை
காத்திரம்பெருத்துவிக்கக்கண்செவிமூக்குநாத்தோல்
குத்திரமற்றுச்சென்றுந்தொருமணிக்கோவைபோன்ற. (உ௬)

காமபோகத்தைநீத்துக்கற்சவருலர்ந்தகாட்ட
மாமெனவிருத்தலாலுமைம்புலனடக்கலாலும்
வாமமும்வலமும்வாயுவழங்குதலில்லையாது
மேமரிருலகிலுள்ளோரியோகிகளென்னலானார். (உ௭)

ஆயவைவிகழுங்காலையமார்தானவர்களாய
நாயமாதவர்கள்சித்தர்விஞ்சையர்துறக்கத்துள்ளோர்
வாயுகோபத்தினாலேமகோதராகியுள்ளோர்
நாயகனுகின்றநான்முகன்றன்னைநண்ணி. (உ௮)

ஆதிநாயகனேகேட்டியமார்கோன்குலிசத்தாலே
காதலனுயமைந்தன்காலன்வாய்விழக்கண்டு
வாதராயன்கோவிப்பவயிறுகள்பெருஞ்சாலென்னப்
பூதமதென்னவிக்கெப்புரண்டனர்புவனத்துள்ளோர். (உ௯)

என்றவரியம்பக்கேட்டவிரணியகருப்பனின்று
சென்றுநோய்தீர்ப்பனென்றுஞ்சிந்தையன்றேவர்சூழ
வன்றிறன்மாண்டசேயைமடியிலேவைத்துநோயாற்
கன்றியமனத்தனுவகாற்றினுக்காலைசக்கண்டான். (௩0)

இந்திரன்முதலாயுள்ளவிமையவர்சூழவந்த
வந்தனன்றன்னைநோக்கியகத்தெழுமன்பத்தோடு
வந்தடிபணிந்தோன்றன்னைமலர்க்கையாலெடுத்துவாயுத்
தந்தபாலனைத்தன்கையாற்றடவினன்றயாவின்மிக்கான். (௩௧)

நீடியமலரின்மேலோனெடுங்கையாவிவலோடும்
வாடிமண்மடிந்தபைங்கூழ்மழைவிழத்தளிர்க்குமாபோல்
வீடியமைந்தன்சீவன்பெற்றிடத்துயரின்வெந்து
கோடியநெஞ்சுதாவைதகுளிர்ந்தனனுணர்வின்மிக்கான். (௩௨)

இன்றிறன்மைந்தன்சீவன்பெற்றிடத்தேர்ந்தவாயுப்
பண்டுபோற்காலுமெங்கும்பாய்ந்ததான்மருத்தைப்பார்த்துப்
புண்டரீகத்தின்மேலோன்புரந்தரனுதியாரேர
ரண்டர்களெவருநோக்கியவத்தைமறையலுற்றார். (௩௩)

வேறு. சீர்பெற்றருளிற்பூணைந்தசலினைதன்சிறுவன்றன்னைமுகநோக்கிக்
கூர்பற்றியவென்றுலிசத்தாற்கூறுபடுபுண்வடுத்தீர்க
வார்பெற்றூர்நீபெற்றதின்னுவற்றிடலாலனுமனெனும்
பேர்பெற்றுலகமுள்ளளவும்பெறுதிபெயராப்புகழென்றான். (௩௪)

பொல்லாவிருளைக்கடிந்தோட்டுபுவனதீபன்புகல்வானென்
வில்லார்கரத்திற்சதகூற்றிலொருகூறுனக்குமேவிடுக
வெல்லாவிஞ்சைகளுந்தரிக்கவிலைசந்தசத்தியுண்டாக
நல்லாய்கேணீதருகின்றேனென்றுநவின்றானலயிக்கான். (௩௫)

இரணபூமியிடைநேர்ந்தாலென்பாசத்தாலார்த்தக்கால்
மரணமில்லையுனக்கென்றுவருணராசன்வரங்கொடுப்பக்
தரணியோராவிதிவழியேதண்டிப்போனென்றண்டத்தால்
முரணின்மிகுமாருதியாவிமுடியாதொழியவரமளித்தான். (௩௬)

தாதாவுரைக்குமிவன்பிரமதண்டாற்றுஞ்சாவின்றி
மேதாவியுமாயொருநாளும்விளியாநாளுமுறுகவென
வேதாவிதித்தான்வேறுக்குமிவன்றேவர்கடம்படைக்கிலடையா
வாதாவரசாய்வாழ்கவெனவானோர்தச்சன்வரங்கொடுத்தான். (௩௭)

வானோர்முதலாய்வந்துநின்றமறையோர்முனிவருள்ளா
ரானோரெல்லாமனுமானுக்கழிவிலாதவரமளிப்ப
நானுவகையசராசரமுமுலகும்படைத்தநான்முகத்தோ
னூனுருடலின்றியங்குமொருவன்றனக்கிங்குரைசெய்தான். (௩௮)

வன்னிசகாயனின்மைந்தன்வையத்தோர்க்கும்வானோர்க்கு
மின்னல்செய்யுமிராவணன்றனிலங்கைநகரினெரியூட்டி
மன்னவிராமன்முன்றுவப்பவயவாளரக்கர்குலமறுத்துப்
பின்னையவன்றன்பேரருளாற்பிரமபதமும்பெறுகென்றான். (௩௯)

என்றுமலரோன்முதலாயவிமையோர்கொடுத்தவரச்செருக்கால்
நன்றுதிதென்றிங்குணராநன்மாமுனிவருறைவிடத்துச்
சென்றுதயிர்பானெய்குடித்துச்சீரைச்சுருக்குச்சுருவமெலா
மொன்றுவலியோன்கொண்டெழுகவூழித்தீயினுடன்றவர்கள். (௪0)

பொன்மைவைத்தவயன்வரத்தாற்புவனமூன்றும்பொடிபடுத்தித்
தன்மைப்பிரமதண்டினாற்சாதிப்பரியோனவன்பொல்லாக்
கன்மத்தினையெம்மிடைச்செய்யுங்காற்றின்றனயன்கருத்தழிவுற்
றுன்மத்தனாய்த்தன்வலிதானுணராதொழிகவெனவுரைத்தார். (௪௧)

சாபமுணர்ந்துகருத்தொழிந்துசாந்தனாகியனுமான்வெங்
கோபமொழிந்தமாதவர்க்குக்கூசிக்குறிக்கொண்டொழுகுநாட்
டீபமனையானுலகுக்குத்திறல்வாரணத்தோனரியிதையத்
தாபனிருத்தவிரசதனுந்தனிப்போர்வீரன்றன்மைந்தர். (௪௨)

னின்றூர்காலீறும்வாலிசுக்கிரீவன்றோன்றியபின்
பின்றூர்மருவுற்றிருவென்னவிளங்குமுருமையவட்காக
வின்றூராகியிருவரும்போரெதிர்ப்பவிலையாலிலைத்தோடித்
தன்றூற்செய்யுஞ்செயலற்றுத்தளர்க்கமதங்கவனஞ்சார்ந்தான். (௪௩)

அந்தமுனிவன்சாபத்துக்கஞ்சிவாலியவ்வனத்து
வந்துபுகுதாநெறிதனால்வானூர்பெருஞ்சுக்கிரீபனுமிந்
செந்தகனுந்தசகியாகச்சேர்ந்ததன்னையுணராதே
யந்தணூர்சாபத்தாலனுமானடங்கியங்கிருந்தான். (௪௪)

வேறு.

வேதமொருநாலுடன்விளங்கியசடங்கமும்விரிந்தகலையு
மோதலிலவித்திசையேமுபரிபூரணனூவிலாதேர்
மீதுசெலும்வெங்கதிரவன்றனெருடயிர்ந்திரவியாகரணமு
மோதியொருநாளினிதுணர்ந்தனனிம்மாருதியுயர்ந்தபுகழோய். (௪௫)

தண்ணளியிறுன்மிகுசயாவுடைமையால்வருதருக்கறுதலா
லெண்ணுகருமங்களிலவயாவுமிடையூறறவியற்றுமியல்பால்
நண்ணலரிலவினைவர்களாயினுநடுக்குறுமிடுக்குடைமையால்
மண்ணுலகில்விண்ணுலகின்மாருதியைபொக்குமவர்யாருமிலையே. (௪௬)

அறந்தலைபெறத்தபுவிவானவர்களானவர்களாடினர்கடை
மறந்தலையிறக்கியவுவாலிமுதலானவர்கள்வாமநயனஞ்
சிறந்திரடோள்புருவமார்பிடையடித்தனசிறந்தபுகழ்
விறைந்தருணமாருதியினைத்திருவடித்தொழுதுநின்றபொழுதே. (௪௭)

தனக்குவமையற்றவனைவெற்றிமிகுமாருதிதனைத்தடையிலாச்
சினத்தொடுமனத்திறலரக்கர்கள்செருப்புரிகளத்தமலநீ
நினைத்ததுமுடித்தொருகணத்தினினினைத்தொழுதுநிற்பவனைநா
னுனக்கினியுரைப்பதெதினுத்தமவுனைப்பிரிவில்வித்தகனையே. (௪௮)

வாடைதருசெய்பிறவியுஞ்செயல்களும்பெருவரங்களுமிரிந்
தோடுவினைமாதவர்சபிப்பவிடைதன்னையுணராதவலகயு
நீடுதவமாமுனியுரைத்திடவியந்துதிருத்தேசர்மடியக்
கோடுவில்ராகவன்மகிழ்ந்தவனுமாருதிகுணம்புகழ்தலும். (௪௯)

தேடுதனமாருவனெனத்தெளியமாமுனிவர்சொற்களதுகேட்
டோடுமெதகண்டுகினமாறாசனுக்கிலவயுரைப்பவுணர்வா
லிடுவரவெங்கனியமங்களுளவாகினுமினைப்பிரிதலிற்
கூடுமிலதெங்கண்மனமென்றனுமகண்டபதிகூறுமிவையே. (௫௦)

உங்கணியமங்களிவைகுன்றுதலிலாதொழிகவுங்கள்பரமெங்களரசு
மிங்கிலவிருந்திடுமிருந்தவமருந்தவவெனப்புகறலு
மங்கிவனையாருளொடாசிகண்மொழிந்தினிதிருத்தியெனவாழ்
துங்கமறைமாமுனிவராச்சிரமமுன்விடேதிதன்றுபொழுதின். (௫௧)

முடிச்சனகர்கோனுலகைமுடிபடையோடுவகையோடணுகிடத்
தடுப்பரியபேருவகையோடுமகிழ்தாசரதியைத்தழுவிமுன்
படைத்தனமாபரணமாடைதிகழ்பாவையர்களாதியலவுங்
கொடுத்தபினிராவணகுலத்தினையறுத்தகதைகூறியிடலும். (௫௨)

ஆனைபரியாபரணமாடைதனமாதியுபகாரமொடுமா
சேனைமுடிமன்னவர்கள்சென்றடிபணிந்தயலிருந்தபொழுதின்
மானகுலபூரணனிராகவன்மகிழ்ந்துமுடிமன்னவர்களுக்
கானவுபசாரமொழிகூறியவரோடளவளாவியபினே. (௫௩)

வேறு.

சனகவாணுழுந்தன்னகரத்துவாழ்
சனகனிங்கிடத்தாபமடைந்தவன்
சனகன்மாமகளோடுந்தகாதவஞ்
சனகவான்வந்தவர்சபைவிட்டபின். (௫௪)

தாரணித்தனையாகுந்தரியலர்த்
தாரணிப்பெருந்தாபம்பெருந்தவத்
தாரணிப்பார்தீர்த்தவன்றன்னகர்த்
தாரணிப்புயமன்னன்றருந்தவம். (௫௫)

நூறுகோடிசுவணமுநன்கலை
நூறுகோடியும்பூணுமுதலினன்
நூறுகோடியிரதநுதற்கரி
நூறுகோடியசாபநன்னூலர்க்கே. (௫௬)

களமொழிந்திடச்சாலகடங்களைக்
களமொழிந்திடலங்கையிற்காதினன்
களமொழிந்தசீர்க்கையின்வழங்கினன்
களமொழிந்தரியாக்கதிராரமும். (௫௭)

அங்கதன்றனளவறியாவசு
வங்கதந்திகழ்மொய்ம்பனருமறை
யங்கதனிவ்வலிலாண்டநாயக
னங்கதன்றனக்கீய்ந்தானடியொடும். (௫௮)

பன்னகத்தின்மணியெனப்பண்டைநாற்
பன்னகப்பகவன்படர்வேலையைப்
பன்னகத்தணைசெய்பானிந்தவன்
பன்னகப்படைத்தானைப்பதிகட்கே. (௫௯)

அம்புயத்தயன்றந்தையணிநிக
ழம்புயத்தனரக்கன்படவுட
லம்புயத்தொடையுய்த்தோனளித்தன
னம்புயத்தணைசெய்தோற்கருந்தனம். (௬0)

மாவிலங்கைமன்மேற்றனராதி
மாவிலங்கையிருப்புமன்றுவென
மாவிலங்கலைவில்வாளிவிலட்டகோ
மாவிலங்கைமன்வாழ்வழங்கினன். (௯௧)

அந்தவானரகாரியரக்கர்கோ
னந்தவானரகேசரியாயினோ
னந்தவானரவானரமைப்பின
னந்தவானரமங்கையன்றார்களால். (௯௨)

திங்கள்வெண்குடையோனரிச்சேனைக்குந்
திங்கணொன்றொருநாள்போற்செலுத்தினன்
மங்கைபங்கன்வரையெடுத்தோன்பிர
மங்கைபங்கன்னருளையுண்டியே. (௯௩)

கங்கையேந்திவெண்காமணிந்தநற்
கங்கைதாங்கியவேணியன்கார்முகப்
பங்கனந்தப்பகைபதிதன்னெரு
பங்கன்செய்வினைபார்த்திதுசெய்தனன். (௯௪)

வேறு.

வெங்கதிரோன்மைந்தனையவ்விளங்குபுகழ்க்காருத்தன்விரும்பிநோக்கி
யங்கதனின்னடைக்கலமென்றடல்வாலியந்தியத்திலறைந்தவார்த்தை
தங்கியவென்றிதந்தைத்தான்விட்டுப்போகாதுதடந்தோள்வீர
விங்கிவனைக்குறிக்கொளெனவிதுரைத்தப்பின்றுயிலைவியம்பும்வீரன்.

தன்னுடையவலியறியாத்தடவரைத்தோண்மாருதியைக்குறிக்கொள்வா
மன்னுடையவமர்பொன்றவாளரக்கன்றன்னேடுமலைந்தகாலி [னோர்
லென்னுடையகாரணமாவின்றுயிரைவிட்டவிங்கிவர்களெல்லா
முன்னுடையகாவலெனவுரைத்தவனைமெய்யிறுகத்தழுவிக்கொண்டான்.

இரக்கமிலாவன்னெஞ்சத்திராவணன்றன்முன்பிறந்தானென்றுபாரா
தரக்கர்குலப்பிறப்பறுத்தாத்தனக்கடிமைப்பட்டானையன்னனோக்கித்
தருக்கறுமின்முன்னோனுந்தனதொடும்பகைகொள்ளல்தருமசீல
நிலைக்கடல்சூழிலங்கைநகரிருந்தரசுசெய்தியெனச்செப்புங்காலை. (௯௭)

முனைப்புரிந்தவாளரக்கன்முடித்தலைகளறுத்தருட்டிமுனிவர்வாழ்வு
மனைத்துலகுங்காத்தளிக்குமகிலாண்டநாயகனின்னடியேன்றேயந்
தனைப்பிரிந்தபின்னவுந்தாயிழந்தகன்றெனவுந்திரிப்பொன்றின்றி
புனைப்பிரிந்துவாழ்கிலேனுயிர்பிரிந்தவுடலென்னவுரவோயென்றான். (௯௮)

ஆகலாலின்னுடையவடிப்பிரியாதிடவேண்டுமடியனேனென்
றோதமாருதிக்குளாக்குமுத்தமணியித்தலையிலிருக்கில்வெய்ய
சோதியானமகனுயசுக்கிரீபன்றுணையிழக்குமதனாற்றூயோய்
போதுநீயவன்றனொடுமென்றவனையுயிர்பொருந்தப்புல்லிக்கொண்டான்.

இவ்வண்ணமிராமனைத்துயிடைகொடுப்பவிரவிசேய்முதலோர்த
மைவண்ணனடிவணங்கிவார்ந்தகண்ணீராருகிவாடுநெஞ்ச
மெவ்வண்ணமெம்பெருமானைத்தமைத்ததெமக்கிதமல்லாலிதமாமோ
வவ்வண்ணஞ்செய்துமெனவணிபொழில்சூழ்கிட்கிந்தையடைந்தாரன்றே.

வீடணன்வீடணனேவோர்க்குத்தான்றிறக்குந்தாளானவெய்யோனேவக்
காடணைந்தகருங்களிற்றைக்கமலவிணைத்தாமரைவணங்கிச்சனகமேருக்
கோடணைந்ததோளாரக்கொண்டணிறத்தவனவணைப்புல்லிச்செம்பொ
னுடணைந்தசுரர்போற்றநல்லரசுசெய்திடுயெனவிடுத்தநாதன். (௭௧)

அநுமப்படலம்முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௧௧௪.

௭-வது—சீதைவனம்புகுபடலம்.

இங்கதருணத்தோரேகச்சேடனின்சிரத்தின்பார
நீங்கியதெனத்தான்போற்றிநெடுங்கடலவனிபாரந்
தாங்கியவீரனுச்சிச்சந்தியினியமந்தான்செய்
தாங்குயிர்த்தம்பிமாரோடமுதுசெய்திருந்தகாலை. (௧)

கனமிடைவானத்திந்தக்கட்டிளையெழுந்ததோங்கிப்
புனைமணிப்பூணினுயான்புட்பகமெனக்குப்பண்டு
தனபதியுரைத்தகேட்டிதசரதராமன்றன்னாற்
கனைகழலரக்கர்கோமான்காலன்வாய்ப்படுதறிண்ணம். (௨)

ஆபவன்பொன்றநின்னுலாவதுசெய்தியந்தத்
தீயவன்பொன்றவேயென்சிந்தைநோய்தீருமென்று
தூயவனெனக்குமுன்புசொன்னதேமுடிந்ததின்று
போயவன்றன்னைக்கண்டுவருகின்றேன்புவனநாதா. (௩)

என்றதுகூறக்கேட்டவிராகவன்வியந்துசால
நன்றெனவியந்துகந்தநறுமலர்கொடுபூசித்துப்
பொன்றிகழ்விமானந்தன்னைப்போவெனவிடுத்தலோடுந்
சென்றதுதனக்குவேண்டுந்திசையின்மேற்சிந்தையென்ன. (௪)

அந்தவற்புதத்தைக்கண்டபரதனுச்சரியமெய்திச்
சுந்தரவில்லிதன்னைத்தொழுதிவைசொல்லுந்தூயோ
யிந்தமாநிலத்தைக்காக்குமிறைவனீயிசைந்தபின்பு
வந்தவற்புதங்களெண்ணில்வரம்பிலையென்றுகூறி. (௫)

அத்திராதிகளாற்சாக்காடில்லைவாளரியால்யானைச்
சத்துருவில்லைவேங்கையாவொடுமானைச்சார்ந்து
மித்திரமாகுநீரானெருப்பினுல்வீவோரில்லைப்
புத்திரர்மரணங்காண்பாரில்லையிப்புவனத்தெங்கும். (௬)

நோயுளார்களில்லைநோயுறமூத்தோருங்
காயும்வெங்கூற்றமில்லைக்கணவனைவிழப்போரில்லை
வாயுவுமுடனுந்தின்பமார்கவர்ந்தசையாகிற்கு
மாயிழையார்களெல்லாமாண்மகப்பெறுகின்றார்கள். (௭)

மன்னுலகுள்ளமன்னர்மைந்தர்கள்மங்கைமார்க
ளென்னிவெம்மெல்லாமிராமனேயாகச்செய்திக்
கன்னைகன்றாலங்காப்பாளென்றுகட்டுரைப்பரென்ன
வன்னையுமதனைக்கேட்டாங்ககமகிழ்ந்திருந்தகாலை. (௮)

சரிந்தவெங்கதிரோன்விழத்தராபதிசந்திசெய்யப்
புரிந்தசிந்தையருப்போகப்பூங்குழன்மடவார்தம்மைப்
பிரிந்தவர்க்காலமாகிப்பிரிவிலோர்க்கமுதமாகி
விரிந்தவெண்ணிலவைவீசிவெண்மதிதோன்றிற்றன்றே. (௯)

வேறு.

பிரிந்தகாளையராமாதரார்க்கொல்வான்போரவேளார்வழியிலாவண்ணம்
விரிந்தவெண்ணிலவாம்வலையினுள்வீசிவெண்கதிர்த்திங்களையேவிப்
புரிந்துவெங்கொலைசெய்கென்றுய்விட்டுப்பூங்கணைவேடன்வாயம்பு
தெரிந்தவன்னறிற்பெடையினையெட்டுத்திசையொடுங்கூப்பிடச்செய்து.

அங்கவைகருங்காலையிலாழியன்னையுமவனிபிற்பிறந்த
மங்கையுமாறிக்கல்வலைப்பட்டுமனங்களின்மாழினர்புகுந்து
கங்குலும்பகலும்பிரிவிலராகிக்காதல்வெள்ளத்திடையழுந்திப்
பங்கயப்போகருகுள்வந்துபுகுந்தபங்குனித்திங்கள். (௧௧)

கழிந்துவிழ்பழுத்தவிலையினவாகிக்காண்டொறுங்கவினுறத்தழைத்த
பழம்படாரீக்குப்புறப்படாம்போர்த்தயான்மைபோற்பாதவமெல்லாம்
பொழிந்தெனமலராற்பொன்னிறவாடையோர்த்தனபோன்றனகோங்கஞ்
செழும்படாஞ்சிவந்தபோர்த்தனவொப்பத்திகழ்ந்தனசெம்மலர்ப்பலாசம்.

பொன்னரிமாலைதூக்கினகொன்றைபுன்னைகள்பொரிமலர்பூத்த
கன்னுதலாரைநெடும்பகற்பிரிந்தநாடொறும்வினைநாயகர்தா
மன்னவரோடுகூடினகலவியமுதினையருந்துமாபோலப்
பன்மலர்தொறுமங்குறைந்துதேனினங்கள்பருகினபசுநறுந்தேறல். (௧௩)

அன்னமுமுதிற்பிறந்தவாயிழையுமணிகொள்பூம்பொழிலிடையடைந்தா
நன்னறும்புன்னைசண்பகஞ்செருந்திசாதிபூஞ்செண்பகந்தாழை [ர்
எண்ணருங்குருந்துபாடலமாதிவெழின்மரமிடைநெருங்கியதை
விண்ணவர்கோமான்கற்பகச்சோலைமேதினியிழிந்ததொத்துளதை. (௧௪)

தாவுமேழ்புரவிப்பூணுமோராழித்தேரவன்சார்வருமதனைக்
காவுஞ்செய்யகமலரூர்தங்கள்கண்களுக்கஞ்சிநீரொளிப்பத்
தேவியுந்தானுஞ்சேயிழையாருஞ்செழுந்துறைபடிந்துநீராடும்
வாவியும்வாவிக்கரைதொறும்விளங்குமணியுறைமண்டபத்தினதை. (௧௫)

இன்னதன்மையதாமனைமரக்காவினெழிலெலாமிரவிதன்குலத்து
மன்னவனிராமன்மலர்க்கணோக்கிலனைப்பெலாமனமுறக்கண்டு
வன்னமென்னடையாண்மின்னிடைமருங்குலணிதிகழ்மேகலையல்குல்
கன்னலுந்தேனுங்கலந்தன்மொழியாய்காணெனக்காட்டினனெல்லாம்.

மென்னடையன்னமின்னடைக்கஞ்சிவெளியிடைநின்றிடவெள்கித்
துன்னிடைமலர்பூஞ்சோலையின்மறையத்தோகைநின்சாயலுக்குடைந்து
தன்னடைகெட்டேயினியுயிர்தாங்கோமெனத்தழன்முழுகுவபோல
மின்னிடைப்பூணாய்விரிமலரசோகின்மேற்சென்றுவீழ்வனகாணாய். (௧௭)

உள்ளபோதினிதுண்டுறுதபோதவரோடுறவுவிட்டுறுமிடந்தேடு
மொள்ளியரல்லாருறவுபோனெடுநாளுயர்தருமலர்மதுவுண்டு
மெள்ளவம்மாம்பூமரமிடைவிட்டுவேறொருபூமரந்தேடிக்
கள்ளவிழ்கோதைகமழ்குழலாளேகளிவண்டுபோவனகாணாய். (௧௮)

ஐங்கணையானைவிட்டதிவிருபனருவிதியுடையனேனுவக்கு
மங்கைமார்மனம்போல்வாழைதன்மருங்குவர்துறமரகதமாகிப்
பொங்கியசெருந்திப்பூவுறப்பொன்னாய்நீலமாய்ப்பூவைவீபொருந்தப்
பங்கயமடுப்பச்செம்மணியாகும்பளிக்கறைபைந்தொடிபாராய். (௧௯)

பொருகயனயனப்புரிகுழலாளேபொய்ந்தவவேடத்தின்மறைந்து
விரிகடலுலகில்வேண்டியவண்ணம்வெவ்வினைசெய்பவொன்னத்
திரிதருமீனைத்தப்பறக்கொத்தித்தின்றிடுமுபாயமீதெண்ணிக்
கருதியகொக்குமெய்சலியாதுகண்முகிழ்த்திருப்பனகாணாய். (௨௦)

அடிமலர்வாழைகுறங்ககலல்குலரவுமின்னிடையணிக்கழுத்தோ
ளிடைநிரைதரளப்பவளவாய்வேற்கணெழினுதல்விரைகமழோதி
வடிவினிற்செய்யமங்கையரன்னவண்டுகண்மொய்த்தசெங்கமலங்
கடுவினைக்கொல்லனுலைக்கரிமூட்டுகனலினைநிகர்வதுகாணாய். (௨௧)

வெங்கதிர்நுழையாவிரிபொழிலுள்ளவேறுவேறாகியவிசேடஞ்
செங்கயற்கண்ணாய்காணெனக்காட்டச்செறிகழற்சேவடியிராமன்
பங்கயவாவிப்பளிக்குமண்டபத்திற்பசுநறுந்தென்றல்சேவிப்ப
மங்கையர்வாழ்த்தமாகதரோத்தமடந்தையோடினிதுவீற்றிருந்தான். (௨௨)

பொன்னிறமேனிப்பூமகளோடும்பொருதிரைப்பாற்கடனடுவட்
பன்னகவணைமேற்பண்டுதானிருந்தபடியெனத்தோன்றிமாய்ந்திடாத
மின்னொடுங்கூடிமேதினிபடிந்துவிளங்குகார்மேகமாமென்னச்
செந்நிறமேனிச்சீதையைத்தனதுசெம்மலர்த்திருக்கையாலணைத்து. (௨௩)

செய்வகையறியார்கண்டனர்திகைப்பத்திருந்தியதாளவாத்தியங்கள்
தைவரும்வண்ணமுவகைச்சதியுந்தப்பறத்தனித்தனிகாட்டிக்
கைவழிகண்ணுங்கண்வழிமனமுங்கலந்திடக்கற்பகநாட்டுத்
தெய்வமங்கையர்களுநாணினர்நிற்பச்சேயிழையார்நடமாட. (௨௪)

எழுவகையிசைக்காரணமுடைப்பண்ணுக்கிசைந்தனதாளவாத்தியங்
டமுலிடைவைத்துச்சராசரமுருகந்தாளத்தின்வழியுருவெடுத்து
விழிபுருவக்தோள்மிடறுகள்சலித்துவேறுபாடுறுவகையிசைநூல்
வழுவுதலின்றியாம்பியம்வினைமயங்கிடமாகதர்பாட. (உ௫)

அன்னசங்கீதமினிதுகொண்டாடியருந்தியாடையாபரண
மன்னவனிராமன்மாகதர்க்களித்துமாதொடுங்கோயிலின்வைகிப்
பன்மலர்பறித்துநீர்விளையாட்டிற்பரிந்துபின்னமுதினிதுண்டு
நன்னுதலாருந்தானுமப்பொழிலிருடொறுமாடுறுநாளில். (உ௬)

விழிபெரும்பசலைபூத்ததுமேனிவெளுத்ததுமெல்லியன்முலைக
தழுவியசரிகள்சரிந்தனகெற்பந்தரித்ததுசான்றவர்க்கெல்லா
மொழிவனகபோலமுலைகள்பால்பாயவவைமுகங்கறுத்தனவாக
வெழுதருஞ்சீதைக்கிவ்வகையாயவிலக்கணம்பலவுமுண்டாக. (உ௭)

அன்னவள்கெர்ப்பவிலக்கணமெல்லாமமைவுறநோக்கியவ்வனி
மன்னவனிராமன்மங்கையைநோக்கிமனத்திடைவேண்டிநீயிருப்ப
தென்னெனவியம்பநாவினள்சிரிப்பவிராகவன்பின்னையும்பலகாற்
சொன்னபின்வேண்டியிருப்பதீதென்றுதூய்மொழியாளிவைசொல்லும்.

துங்கமாதவத்தோர்கங்கையாந்தெய்வத்துறையிடைக்குளித்தருள்போகிப்
பொங்குநூல்புரளுமார்பினர்புனைந்தவற்கலைபுரிந்தசெஞ்சடைய
ரங்கவர்வாழுமாச்சிரமத்தையடைந்தவர்க்கேவல்செய்தொருநாட்
டங்குதும்வேண்டியிருப்பவென்றுரைக்கத்தசரதராமனிதுரைத்தான்.

காலைநாமுனக்குநற்றவத்தோர்களிருப்பிடங்காட்டுதுமென்று
நீள்குழலாளைக்கோயிலில்விடுத்துநிலமாமுகில்புரைநிறத்தோன்
வாளிவில்விசையபத்திரன்றந்தவத்திரன்சுமாதகன்சுராஞ்சி
காளியர்முதலோர்நீடுசொற்பரியாசகதைகொண்டாடியங்கிருந்தான்.

இக்கதைபிடக்கவிறைவர்களொன்றுமிடைவிடாதிராப்பகல்கேட்பத்
தக்கதுரைட்டினகரியிற்சனங்கடம்மிலிப்பொழுதுதானுரைக்கு
மங்கையுரையினென்றுவாள்சங்கோடாழிவிற்கதையிவையொழிந்து
மெய்க்குமாபுகழோடயோத்திவீற்றிருந்தோன்மொழிந்திடவவரிவை

வக்தெறிகடலைமலைகளாலடைத்துமதிளிலங்காபுரியழித்து [மொழிவார்
வெற்றிறலரக்கர்குலத்தைவேரறுத்துவிண்ணவர்கோன்றலையெடுப்ப
இந்திரசித்தைக்கொன்றிராவணனையீரைந்துதலையறுத்தருட்டுஞ்
சுந்தரவில்லிக்கெதிரிலையென்றுசொல்லுவார்தொல்லுலகுள்ளோர். (௩௨)

அங்கவரிவ்வாறுரைத்திடக்கேட்டவரசர்கோனவர்களைநோக்கி
நாங்களிந்நகரினுட்டிவிற்பிறக்குநன்மையுந்தின்மையுங்கேட்டுத்
தீங்கிவையகற்றிச்சிறந்தனசெய்துஞ்செப்புநீர்கேட்டதையென்ன
நீங்களேயுரைக்கக்கூசலிரென்னவிமலகெட்டியென்றுரைப்பார். (௩௩)

மன்னவனிராமன்மானபங்கத்தைமனத்திருனினைத்திலன்வாளோர்க்
கின்னல்செய்தொழுகுமிராவணன்கொடுபோர்திடைவிடாதிராவதிங்கள்
தன்னெடுநகரிதனிற்சிறைவைத்ததையலைத்தாரமாய்க்கொண்டு
பின்னையும்வாழ்க்கைபேரிழுக்கென்றுபேசுவார்பெருநிலத்துள்ளோர்.

ஒத்தவரிவ்வாறுரைத்திடும்வெஞ்சொலுள்ளுறநிறத்தினிலொளிர்வேல்
தைத்ததுபோலவுளைந்துதன்சிந்தைதளர்ந்தபின்மானபங்கத்தன்
வித்தகராயதம்பியர்க்கூவிவேறிடத்திருந்தனன்கேட்ட
கொற்றவனெல்லாந்தெரிவுறவவர்க்குக்கூறுவானிவையிவைகூறும் (௫௫)

என்னுயிர்நீங்களென்வலிநீங்களென்னுறுதுணைவருநீங்க
ளென்னெழினீங்களென்றவர்நீங்களென்பிராதாக்களுநீங்க
ளென்னரசினைப்பர்நீங்களேயாருமெலன்பழியும்பழிபுகழு
மன்னதேயாகுமானபினியானிக்கறைவனியனைவருங்கேண்மின். (௫௬)

தீயவாளரக்கன்சிறையிடையிருந்துசெந்நெறித்தீயிடைமூழ்கி, யேயு
மாதவர்க்குமிமையவரானோரியாவர்க்குமென்மனத்துக்கும், தூயளாயிரும்
தாளாயினுமுலகோர்சொல்லிடும்பெரும்பழிதனைக்கேட், டோயுமென்னுள்
ளமுண்மையாற்பயனென்னுலகுளோர்க்கொத்திடாதொழியில். (௫௭)

ஓதநீர்வேலையுலகுளோரில்லதுளதெனிலுள்ளதாமுள்ள
தியாதொருபொருளையில்லையென்றுரைக்கிலில்லையாமிதுவுலகியற்கை
யாதலாலவளையருந்தவத்தோர்களாச்சிரமத்தயல்விடுத்து
மீதுநான்றுணிந்தகாரியமினிவேறெண்ணுவதொருபொருளில்லை. (௫௮)

இவ்வகையிராமனியம்பிடக்கேட்டவின்னுயிர்த்தம்பிமாரொன்றுஞ்
செய்வகையறியார்தீயகைகேசிசீதையுமிராமனும்வனம்போ
மவ்வகையுற்றவன்றையிற்கலங்கியகத்தெழுந்துயரினராகி
யெவ்வகையாலுமிதுவிலக்கரிதென்றிருந்தனரிடிவிழுந்தென்ன. (௫௯)

கலக்குவனுலகமென்றையுமொன்றுகருதுமேற்கணத்திடைமுடுக்கு
மிலக்குவன்றன்னையிராகவனோக்கியிங்கியான்றுணிந்தகாரியத்தை
விலக்குவனென்னுஞ்சிந்தையைவிட்டுவெவ்வினைவேரொடும்பறிய
வலக்குவன்றவத்துமுனிவர்வாழ்வனத்துமடந்தையைவிடுதிசேலின்றும்.

கல்விசேர்முனிவர்தவவனமவட்குக்காட்டிவாவிசைந்தனளவளுஞ்
சொல்லியவ்வண்ணஞ்செய்குவனென்றேயுவந்திடுஞ்சுமந்திரற்குணர்த்திச்
சில்லுளைப்புரவித்தேர்மிசையேற்றிச்சீதையைச்செறிபுகழைய
னல்லுயிர்த்தோழனுயவான்மீகிநற்றவஞ்செறிவனத்துய்த்தி. (௬௧)

என்றடலிராமனியம்பிடக்கேட்டவிலக்குவனெழுந்துவெந்துயராற்
றன்றுணையில்லாச்சுமந்திரற்குணர்த்தித்தடமணித் தேர்பணிவியற்றிப்
பொன்றிகழ்மணிப்பூண்சீதைமாளிகையின்புனைமணிவாயிலிற்புகுத
லின்றெருப்பாடிதேதெனவினவுமேவலோர்க்கிலக்குவனியம்பும். (௬௨)

மன்னவன்பெரியோர்மலர்ப்பதந்தன்னைவணங்கிடக்காட்டெனவுரைத்தா
னென்னலுமவர்போயுரைத்தலுமெழுந்தவுவகையாலின்னுயிர்தளிர்த்தே
யின்னொளியாரமுதலவாபரணம்விளங்குசீர்கலமணியாடை
யின்னவைபிறவுந்தெரிந்துகொண்டிளையோனியம்பிடவேறினளிரதம். (௬௩)

சலக்கடல்கிழியச்சென்றிடுங்கலம்போற்றடமணித்தேர்செலத்தையல்
வலக்கணுந்துடித்துவயிறெரிவுற்றுமனமுழுந்தன்மேனியுநடுங்க
விலக்குவவெனக்குத்துற்குறியதனுலெல்லிவைவென்றுநானறியேன்
விலக்கிதாவிதியினுல்விளைக்கும்விளைவையார்மேதினியறிவார். (௬௪)

தாழுறுதுயரந்தையலாதியார்சார்ந்தவித்துற்குறியதனுற்
றூய்மனமுடையவென்சுவாமிக்குந்துணைவிலெலன்கொழுந்தமாருக்கு
மாமியர்தனக்கும்வான்கிளைதனக்கும்வளநகரத்தில்வாழ்வோர்க்குந்
தீமையொன்றின்றிநன்மையாய்விடுகதெய்வமேயென்றுகைதொழுதாள்.

அன்னவக்குறிகளாயிழைகூறவசந்தெழுந்துயரனுமிளையோன்
சொன்னவிக்குறியானங்கிளையாளோர்துயரின்றிச்சுகத்தினிதிருப்பா
ரென்னலுமெழுந்தவுவகையளாகியிருந்துயரொழித்தவளிருப்பப்
பொன்மணிநெடுந்தேர்தென்றிசைநோக்கிப்போயதுதூயவற்பொருத்து.

மாமதிமுகத்தின்மதுவருநற்பின்மங்கையும்வருவனவென்றுந்
அம்மதியமைச்சன்சுமந்திரன்றானுந்துயருறுமனத்திளையோனுங்
கோமதியென்னுநதியினைக்குறுகிக்கொடுங்கதிர்மேல்கடல்குறுகத்
தாமதில்வைகிப்பிற்றைநாளுச்சிதடம்புனற்கங்கையைச்சார்ந்தார். (௬௭)

கங்கையைச்சென்றுகாண்டலுமிளையோன்கண்கணீரரும்பிடக்காந்திப்
பொங்கியதுயரம்புறப்படாவண்ணமடக்கிடவுண்ணின்றுபொருமி
விங்குநீயிந்தவிடருறுவானேனிலக்குவவியம்புதியென்று
மங்கையிதுரைப்பமறுமொழிகொடாதுவாய்விட்டுக்கதறிடுங்காலை. (௬௮)

தூயவிக்கதியைக்கண்டவரெல்லாந்தொழுதுவந்தாடுவர்தூயோய்
நீயிடருறுவதென்னுலகத்தினிலிடர்செய்பவரில்லை
நாயகன்றன்னைப்பிரிந்தறியாதேனுளிரண்டுநான்பிரிந்தே
னுயவன்றன்னைவினைந்துதுயரொன்றடைந்திடவாயிழையுரைப்பாள்.

நன்றிவித்தாகுகல்லொழுக்குடையநற்றவமுனிவரையெல்லாஞ்
சென்றடிபணிந்துதிவிளையடத்தாத்திகழொளியாடையாபரண
மென்றுமனைத்தோழிமார்கட்குமவரையின்றெடுத்தோர்கட்குமுதவ
வின்றொருநாளுமிருந்துநாமின்றுயிலக்குவாவிடருறலென்றாள் (௭௦)

இவ்வாசகங்களேந்திழையியம்பவிலக்குவனிடரையுள்ளடக்கி
நன்னதிதனைநாவாயினிற்கடத்திடந்துபோய்த்தென்கரையண்ணி
மன்னவனிராமன்றேவியைமுறையால்வலஞ்செய்துமலரடிவணங்கி
யென்னுளங்கேட்டிடேழுலகுடையாயெனவவனியம்பெனவியம்பும். (௭௧)

வேறு. கடுந்துயர்மேற்கொண்டேறக்கண்ணினீர்வெள்ளஞ்சோர
வொடுங்கியவலியினீரற்றுலர்ந்திடுமுகத்தனஞ்சி
நடுங்கியமனத்தனீரிருத்தழுசழுத்துமெள்ளப்
பிடுங்கியமொழியன்மங்கைக்கிவையிவைபேசலுற்றான். (ருஉ)

உத்தமருணத்தோய்கேட்டியுலசமாதாவேகேட்டி
சுத்தனுஞ்சனகன்வேள்விதோன்றியதாயோய்கேட்டி.
வித்தகவிராமனேவிவிட்டகாரியங்களெல்லாந்
தத்துவமானவண்ணஞ்சாற்றுவனென்றுசாற்றும். (ருந)

வாடியமுகத்தன்வெய்யமானவேன்மருமத்தான்ற
நீடியவுயிர்ப்பன்முன்முன்விளைந்தகாரியத்தின்மேலே
யோடியமனக்காகுத்தனெல்லையினழைப்பவந்து
கூடியதம்பிமாரினெனைக்குறித்திளையகூறும். (ருச)

உலகத்தாருள்ளதென்றதுள்ளதாமொலிநீர்வேலை
யுலகத்தாரில்லையென்றதில்லையாமுணருங்காலை
யுலகத்தாருள்ளதென்றதில்லையென்றுரைக்குமாகி
லுலகத்துக்கவன்பேயாகுமுண்மையாற்பயனொன்றில்லை. (ருரு)

சீதையைக்கொடுபோய்வெய்யோன்சிறையிடைவைப்பமீண்டுங்
காதலாலவளைக்கொண்டுகாகுத்தன்வாழும்வாழ்விற்
சீதலேயழகிதென்றுசாற்றுவர்தரணியுள்ளோ
ராதலாலசுத்தையென்றேயறிந்துவைத்தவளைநீத்தோம். (ருசா)

என்றவனியம்பவெல்லாமெதிர்மொழிகொடுக்கவஞ்சி
நின்றவனடுங்கவந்தெடுந்தகையென்னைநோக்கித்
துன்றியமணித்தேர்தன்னைச்சுமந்திரற்பண்ணச்சொல்லி
யின்றிவனொடுநீயவ்வேயிழைதனைத்தேரேற்றி. (ருஎ)

நன்னெறிநகருநாடுங்கடந்துபோயடவிநண்ணித்
தன்னுயிர்தன்னைவிட்டுத்தடம்புகழ்கொண்டவைய
னின்னுயிர்த்தோழனாயவெழில்கொள்வான்மீகிவைகும்
பன்னகசாலையின்பாற்பாவையைவிடுதியென்றான். (ருஅ)

என்றவனியம்பவண்ணலேவலைமறுக்கவஞ்சி
யின்றுனைக்கொண்டுபோந்தேனென்றிவையிளையோன்சொல்லாங்
கன்றியகனலினூடுகாய்ந்தநாராசஞ்சீதை
தன்றுணைச்செவியிலேறத்தரணியிற்றளர்ந்துவீழ்ந்தாள். (ருகூ)

வீழ்ந்தனள்புரளுமந்தவெந்துயர்பொறுக்கமாட்டா
தெழுந்தனள்திரியவிழுமிருகையால்வயிற்றையெற்று
மழுந்திடுதுயரவெள்ளத்தழிவுறுமருவிக்கண்ணாள்
கழிந்தனள்சீதையென்றுகலங்கினர்கடவுளோர்கள். (சா0)

அன்னவளவத்துறைகண்டாங்கிளையவனறிவிழந்தான்
பின்னையும்பாடுசாலப்பெருகவுண்டாதலாலே
மின்றுயிரிதிற்பெற்றுங்கிருகணும்விழித்துமன்னர்
மன்னவனிராமன்றேவிவாய்விட்டுப்புலம்பலுற்றாள். (௯௧)

வேறு. அன்னேயோவையாவோவாருயிர்த்தோழிமீர்காள்
தன்னேரிலாதவென்றித்தசரதராமன்சொன்ன
வின்னாவிச்செயலைக்கேட்டபோதென்பருதி
வென்னேயிவ்வுலகத்தில்யாரேனுவிங்கிலைபடுவேன். (௯௨)

பையார்வெம்பணத்தலைவிற்பழியாலேபழிமறைத்து
மெய்யாலேநெருப்பவிக்கனிலத்திற்கண்டடியேன்
கையார்வெஞ்சிலைதரித்தகாகுத்தனிடைக்கண்டே
றுய்யாதென்மாமிமாரிவ்வுரைதஞ்செவியுறவே. (௯௩)

கன்னெஞ்சாயென்னைக்காட்டில்விடச்சொன்னவரோ
வன்னெஞ்சாயதனுக்கிசைந்துவிடவந்தவரோ
நன்னெஞ்சம்விழிக்கணிந்தகலைசமார்க்கைசெய்ய
வின்னெஞ்சாகாதிருந்தயாரேனெஞ்சார்வலியார். (௯௪)

பண்பிறந்தசொன்மடவார்பழித்தென்னைநகைப்பர்களோ
வெண்பிறந்தவன்னெஞ்சனிராகவனென்றியம்புவரோ
மண்பிறந்தமறிகடல்சூழுலகத்தில்வாழ்பவரிற்
பெண்பிறந்தார்யான்பட்டபெருந்துயரம்பட்டாரார். (௯௫)

கனிமனத்துக்காகுத்தன்கடலுலகிற்பழிக்கஞ்சித்
தனியொருத்தியான்கதறத்தனிக்காட்டில்விடுவித்தான்
பனியகற்றுமாதித்தன்பயர்தெடுத்துப்பழிப்பற்ற
மனுகுலத்திற்பிறந்தார்கட்கிலையோதான்மனுநெறியே. (௯௬)

கைகேசிமனந்திரியக்கற்பித்தகூனியைப்போல்
மைபார்கண்மடவாரோமைந்தரோமன்னுலகி
லையாவென்காதலனையாரோவிக்காரியத்தைச்
செய்வாயென்றிப்பொழுதுசிந்தையுறக்கற்பித்தார். (௯௭)

என்றினையபலபன்னியிருகண்ணீர்நதிபெருகக்
குன்றுகளுமரங்களுமக்கொடிமிருகங்களுங்குலைந்து
நின்றுருகவனதெய்வநெஞ்சழிந்துகண்பனிப்பக்
கன்றியநெஞ்சடைச்சீதைகதறுகின்றவக்காலை. (௯௮)

இளையவனுமொருவண்ணமிடர்க்கடலைக்கடந்தேறி
யுளைவுறுசிந்தையினுனக்குத்தமிகேளெனவுரைக்கும்
விளைவுறுவல்வினைப்பயனைவிண்ணவர்க்கும்வெலற்கரிதால்
வளைபயில்சூழ்கடலுலகின்மானிடரார்விலக்குமவர். (௯௯)

உலகுக்குநாயகனாயோராழிதனைநடத்தி
மலையொக்குமதகளிற்றின்மதிக்குடைக்கீழ்வாழ்ந்தநள
னிலைகெட்டுநேரிழையைநெடுங்கானத்திடைவிட்டு
மலையொத்தவினைப்பயனான்மடையனாய்வருந்தினனே. (எ0)

தன்னேரிலாதவரிச்சந்திரன்றன்மைந்தனையு
மின்னேரிலாதவிடைமெல்லியலையும்விட்டு
முன்னேசெய்விதியாலேமுடைப்பறையற்காளாகி
யென்னேதான்சுடுகாடுகாத்துநிலையிருந்தான். (எக)

இன்பத்திலிறுமாந்துதோளோங்கியின்றமத
துன்பத்திலழுந்துவார்தொல்லுலகிலறியாதா
ரின்பத்துன்பங்களேயெய்தியபோதிவையெல்லா
முன்பற்றுவிடாதவினைப்பயனென்பார்முழுதுணர்ந்தோர். (எஉ)

முன்செய்தவல்வினையான்முகில்வண்ணன்றனைப்பெற்றுப்
பின்செய்ததீவினையாலவனைநீபிரிவுற்று
யென்செய்யாவிருவினைகளிவ்விடர்நீயுறுவண்ண
மின்செய்யுஞ்செயலெலாநெடுந்தவமேசெய்யென்றான். (எங)

மாதவர்களடிபேணிமற்றவர்கள்விதிமுறையே
யோதியநல்வழிவழுவாதுபவசித்தங்குன்னுடைய
காதலனையெப்போதுங்கருத்திடைவைத்துயர்தவஞ்செ
யீதுனக்குக்கருமமெனவிளையோனுக்கவளுரைப்பாள். (எச)

நின்னுடையதமையனைநாளிழல்போலப்பிரியாதே
யன்னவனுநாளுஞ்சென்றடிபணிந்தவருந்தவர்க
டன்னுடையபிழையல்லதாரணியோர்தப்பல்ல
வென்னுடையசெயலாலிச்செயல்விளைந்ததெனவுணர்தி. (எரு)

நிறைந்தகடலுலகுனக்குநெடும்பழிக்குத்தானஞ்சித்
துறந்தனன்வெங்கனற்குளித்துத்தூயோளாயிருந்தேனைப்
பிறந்தபழியெனத்துறக்கப்பெருமாயையீதெனக்குச்
சிறந்ததுதற்பிரிவென்றுசெப்பினாளெனவுரைத்தி. (எசு)

இளையோனேயிருதுவாயீரிரண்டுதிங்களுள
வளையாழியுலகத்தைவாய்மூடவொண்ணாது
விளைவேதாய்முடியுமெனவறியேனான்மேனியினை
யுளையாதசிந்தையனாயுற்றதுநோக்கெனவுரைத்தாள். (எஎ)

என்றினையவவள்கூறவிருகண்கணீர்சொரிய
வன்றிறலோன்மனமயங்கிவாய்விட்டுக்கதறுதலோ
டின்றிந்தவுரைகேட்கவென்னகுறைசெய்தேனென்
றொன்றியவெந்துயரினையொருறுதயரிக்கிவையுரைத்தான். (எஅ)

கன்றியவிக்ரமவிருபன்கணைவறுனேக்கைப்பிடித்த
வன்றுமுதலினைரனைவுருன்றுடையவடிபணிந்தே
நின்றபொழுதினுத்தபோய்நின்மேனிகண்டதியே
விண்ணோர்தொழுங்கணவல்லதேனுவெனவுரைத்தான். (௭௧)

இருதயர்ந்தனேகோக்கிமங்கைமலரடிபணிந்து
மருவிவிதியுறுவல்கோர்சென்றுநின்கண்கையெயனும்
பெருந்திலயக்கட்டிநவிலப்பின்பார்த்துப்பின்பார்த்துப்
பொருந்தில்வெந்துயரினுறுப்போயினைகர்நோக்கி. (௮௦)

இன்னமிவர்போவாரோமீள்வாரோவெனநினைந்து
தன்னுடையகண்பதியாச்சானகிதான்பார்த்திருந்து
பொன்மணித்தேரோகானேன்போய்மறைந்தானிளையோனு
மென்னேயறக்கைவிட்டானெனக்கதறத்தொடங்கினள். (௮௧)

இலங்கையிலேநெடுங்காலமிருந்துசிறையிலேயிருந்து
புலம்பியழுதியான்பட்டபுல்லணவும்போதாமற்
றலங்குலைவுபழிசூட்டித்தனிக்கானில்விடுவித்து
விலங்கரியதுயர்விளைத்தவிதியேயோவிதியேயோ. (௮௨)

ஏதமுறுபழிசூட்டியிப்பிறப்பிலேயொழிய
மாதனையென்மனத்தாலுந்தொடேனென்றுவரந்தந்த
காதலனைமனங்கலக்கிக்காட்டிலெனைவிடுவித்து
வேதனைநோய்செய்வித்தவிதியேயோவிதியேயோ. (௮௩)

கண்ணறக்காருத்தனெனைக்காட்டில்விடக்கண்டிருந்து
மண்ணகத்தார்வன்கொடுமைவாய்திறவாமானமிலாப்
பண்ணறைச்சியென்றென்னைப்பழிதூற்றப்பண்ணுவித்தாய்
விண்ணவர்க்கும்வெலற்கரியவிதியேயோவிதியேயோ. (௮௪)

தாளார்செந்தாமரைத்தாட்டசரதராமன்மனத்தைக்
கேளாருளாயென்றுங்கேளாதவகைகலக்கிக்
கோணானநிடையாக்கர்கொடுவினையேனுக்கொருநாள்
மீளாதவனந்தந்தவிதியேயோவிதியேயோ. (௮௫)

துக்ககணவன்சிறந்தன்னைக்கைவிட்டகன்ற
புக்ககத்தார்கைவிடுவர்பிறந்தகத்தார்போற்றார்க
ளக்கணமேபழிபிடுவரன்னியர்களருவினையேன்
மிக்கொளிடல்காண்கிலேன்விதியேயோவிதியேயோ. (௮௬)

இன்னபலவும்பன்னியிடருறவாளிடர்கிர
வென்றுயிர்தான்போகாதோவெனக்கதறுமக்காலை
வன்னியிலுந்தூயளும்வான்மிகிலமர்ந்தர்கடா
ளன்னுதலாளழுமோசைவழிவந்தானணுற்றார். (௮௭)

அழுமவளைக்கண்டிரங்கியருந்தவனைக்கடிதணுகித்
தொழுதவர்கள்சொல்லுவார்சாருலகுதனிலின்னம்
வழுவியவள்விழுந்தாளோமண்ணுலகிலுள்ளாளோ
வெழுதரியமேனியாள்யாவளோவென்றறியோம். (௮௮)

ஒருவரில்லாக்காட்டிலேயுள்ளுருவசோகத்தாளோர்
தெரிவையோர்துணையின்றித்தெய்வமேதுணையாகி
யிருகண்ணினீர்பெருகவிழுந்தழுகின்றாளவளுக்
கருள்புரியவுனக்கடுக்குமருந்தவத்தோயெனவுரைத்தார். (௮௯)

வேறு.

அங்கவரோடும்போய்ச்சென்றழுகையாயோதுநெஞ்சிற்
றங்கியசோகமாறச்சானகிதன்னைத்தேற்றி
யிங்குநீயிருந்துசோகித்தென்பயனிடரைவிட்டு
மங்கைநீகேட்டியென்றுமாதவனுரைப்பதானான். (௯0)

அனகனுமிராமன்றேவியென்றுநீயமலையென்றுஞ்
சனகன்மாமகணீயென்றுஞ்சமாதியிலுணர்ந்தேன்றக்க
வுனையவன்காட்டில்விட்டானல்லனென்றுழையேவிட்டா
னெனநினையாங்கள்வைகுமிடத்திலெம்மோடும்போதி. (௯௧)

எங்களாச்சிரமத்தெல்லையிவ்விடத்தெல்லையில்லா
நங்கையர்தவவேடத்தைத்தாங்கிமாதவஞ்செய்தோர்க
ளங்கவருன்னைக்கண்டாலகமகிழ்ந்துடனேகொண்டு
தங்களாச்சிரமத்தேபோய்த்தாங்குவர்தளரலென்றான். (௯௨)

துங்கமாதவனிவ்வாறுசொல்லிடத்துயராகி
யங்கவனல்லறீர்க்குமடியிணைவணங்கிநிற்ப
மங்கையையுடனேகொண்டம்மாதவனுமதூயர்
தங்கியமுகட்டுப்பன்னசாலையைவந்துசார்ந்தான். (௯௩)

சீதையைக்கண்டமாதர்தெரித்திராகியுள்ளோர்
மாதனம்பெற்றாற்போலமகிழ்ந்தவள்வமைவக்கண்டு
சீதருமனத்தின்மிக்கதிருமகளிவளோவென்பார்
வேதனையுள்ளேயுண்டிம்மெல்லியலாளுக்கென்பார். (௯௪)

தாங்கருஞ்சினத்தால்விண்ணோர்சபிப்பவீழ்ந்தாளோவென்பா
ராங்கவரிந்தவண்ணமையுறுகின்றகாலை
யீங்கிவள்பிறப்பும்பேருமிவள்கணவன்றன்பேரு
நீங்கள்கேண்மின்களென்னநெடுந்தவமுனிவன்கூறும். (௯௫)

மனுகுலம்விளங்கத்தோன்றிமறிகடலலையாற்கட்டித்
தனுவினாலிலங்கைசெற்றதசரதராமன்றேவி
ஞானியறுசனகன்பெற்றதூயவள்சீதையென்பா
ளிணையவள்கணவனானோன்றுறந்திடவிங்குவந்தாள். (௯௬)

வேறு. மாதவத்தோனங்கிவ்வகையுரைப்பமன்னவையரனைவருமகிழ்ந்து
சீதையைப்போற்றச்சமர்திறனேறுமிளையவன்றிருநகர்புகுந்து
காதலைப்பணிந்துசெய்ததையுரைப்பநாட்டுளோர்சொல்வழிகேட்டு
வேதனையுற்றவன்றிருமிக்கவேதனைப்பட்டனன்வீரன். (௧௭)

அதிபழிபிரண்டுங்கேட்டதுசொல்லுமுலகையுமதன்வழியொழுகு
மதியையுநோவவடாதுமாசனகன்மகளையுநோவவங்கடாதா
லதிகுணவறியாயழலிலுந்தூய்யவவளையுமுன்னையும்பிரித்த
விதியினைநோவவடுக்குமென்றினையோன்விளம்பிடத்தெளிந்தனன்வீரன்.

சீதைவனம்புகுபடலம்-முற்றிற்று.

ஆ. திருவிருத்தம்-௭௧௨.

௮-வது—இலவணன்வதைப்படலம்.

நிறைகடலவனிபாரிக்கியநெடும்பொற்றிண்டோ
ளிறையவனிராமனன்போடிளவலையெய்தநோக்கி
யறைகழற்றுரோய்நாட்டிலன்புநாடோறுநாடி
முறைசெய்கையிராசதன்மமதனிருமுயல்துமென்றான். (௧)

சீரியமனத்தருஞ்சிறந்தசெங்கோலைவிட்டுக்
கூறவெம்பழியைநாடிக்குலைந்திடக்கொடுங்கோலோச்சி
யாரிலொன்றிறைகொள்கின்றதல்லவையகற்றிடாதே
யேறிறைகொள்வோனாட்டிலிருப்பவர்மூடரென்றான். (௨)

தண்டிக்கப்படுவோர்தம்மைத்தண்டியாதொழிந்துவிட்டுத்
தண்டிக்கப்படாதோர்தம்மைத்தண்டிக்குந்தாணிமன்ன
னெண்டிக்கும்பாருமூடுமிரும்பழியெய்தித்தீயோர்த்
தண்டிக்குந்தருமனாலேதண்டிக்கப்படும்பினென்றான். (௩)

அடற்பெருங்களிறுதிண்டோடுபரிசாலாடுன்று
கடற்படையுடையோன்மிக்ககருணையோன்காதலோடு
மிடர்க்கடல்வழியோரேறவிருந்திடியீவோனாட்டி
னடப்பதியாதுகெட்டநரபதியுளன்கொலென்றான். (௪)

கொற்றவனிருகன்கோடிகோடியாய்க்கொடுக்குங்காலை
நற்றவமறையோனுக்குநல்லதோர்பசுவைநல்க
மற்றதுதப்பிமன்னன்மாவினாவந்துகூட
வுற்றதையறியான்மற்றோருயர்மறையோனுக்கீய்ந்தான். (௫)

முன்பசுதானம்பெற்றமுப்புரிநூலன்கேட்டுத்
தன்பசுத்தன்னைக்காணான்றரணியிலெங்குந்தேடிப்
பின்பசுதானம்பெற்றபெருந்தவன்மனையிற்கொண்டு
தென்பசுவென்றலோடுமிருவரும்விவாதம்பண்ணி. (௬)

மன்னவன்கோயிறன்னின்மறையவர்விளாங்குவந்து
பன்னெடுங்காலமின்றுமுறையிடப்பார்த்துவேந்த
னென்னகாரணநீர்வந்துமுறையிட்டதென்னக்கேளா
வன்னவன்றன்னைக்கோம்பியாகெனச்சபித்தாரன்றே. (௭)

தாங்கருந்துயரமிக்கார்கூபத்திற்றலைகீழாகத்
தூங்கியீருகங்கள்சென்றதுவாபரந்தன்னிற்றோன்றுஞ்
சார்ங்கபாணியன்றன்செய்யதாமரைக்கண்ணுற்பார்க்க
நீங்கிடுஞ்சாபமென்றுநெடுந்தவமுனிவர்போனார். (௮)

போயிருவருமக்கோவைப்புரையறுதவத்தின்மிக்க
ஆயமாமுனிவற்கிய்ந்துதொன்றுகாரியத்திற்போனு
ராயமன்னவனுங்கோம்பியாகியாழ்கிணற்றில்வீழ்ந்தான்
தேயநாடோறுநாடாத்திறன்மன்னன்கேடிதென்றான். (௯)

தன்னிகரிலாதவென்றித்தசரதராமனுட்டிற்
சொன்னவக்கதையையுன்றுந்தோறுமாச்சரியமெய்தி
யென்னவற்புதமோவென்றுங்கிளையவனியம்பத்தூயோ
னின்னவற்புதமாயுள்ளதொருகதையியம்பக்கேணீ (௧௦)

மன்னவனிமியென்பான்சீர்மனுகுலம்விளங்கத்தோன்றும்
பன்னெடுங்காலமிந்தப்பாரினையாண்டுபோனைப்
பின்னவன்றுறந்துசென்றுபெருவனங்குறுகிக்கான
மன்னவல்வினைகள்பாறவருந்தவஞ்செய்யுநாளில் (௧௧)

சத்துருகாலனாகித்தரணியைக்காத்தோன்றீர்க்க
சத்திரயாகஞ்செய்யச்சமைந்துமாதவத்தின்மிக்க
வத்திரிபிருகுதூயவங்கிராவசிட்டனென்று
மித்திறன்முனிவர்தம்மைவரித்திடவியம்புமன்றே (௧௨)

என்னைமன்னவனேவானோரிறைமகஞ்செய்யவெண்ணி
முன்னமேவரித்தானந்தவேள்வியைமுடித்துபின்பாற்
பின்னையான்வருகின்றேனென்றம்முனிபோகப்பேணி
மன்னுகோதமனைக்கொண்டுமகத்தினைநடத்துங்காலை. (௧௩)

மாறிலாவானோர்மன்னன்மகத்தினைமுடித்துஞானந்
தேறுகோதமனைக்கொண்டுசெய்கின்றவேள்விகண்டு
சீறியேவசிட்டனந்தத்திறத்தினைக்காண்பான்செல்ல
மாறிலாத்துயிலனாகிமாமுனிசீற்றமிக்காய். (௧௪)

என்னைமுன்வரித்துப்போனயான்வருவதற்குமுன்போ
ரன்னியன்றன்னைக்கொண்டாங்கருமகநடத்துகின்ற
மன்னவன்காணநான்றான்வந்திடப்புறப்படாதோன்
றன்னுடல்விடுகவாவியெனமுனிசபித்தானன்றே. (௧௫)

அன்னவன் சபிக்கக்கேட்டவாசர்கோனமுனிற்பொங்கித்
தன்வரவறிபேன்பாயல்சார்ந்துநித்திரைகான்பன்னை
யென்னையக்கியாயத்தாலேயெரிவித்தசாபமன்றோன்
றன்னையுஞ்சார்கவென்றுசபித்தனனறவத்தின்மிக்கான். (௧௬)

இருவரும்விரோதராகியியக்குநாள்வசிட்டனுவி
தெரிவரும்பெருமைமிக்கதிசைமுகன்றன்னைநண்ணி
யொருவருந்தன்னையொவ்வாவுயர்தருமுனிசாபத்திற்
பிரிவருமுடலம்விட்டேன்பெறும்படியருணியென்றான். (௧௭)

ஒத்தவர்தம்மையில்லாவுருப்பசிநிமித்தமாய
மித்திரவருணன்விட்டவிரியந்தன்னையெய்தி
குத்திரயோனியில்லாக்கும்பமாந்தெய்வயோனி
புத்திரனாகவந்துதோன்றுநீபோதியென்று. (௧௮)

வேறு.

மலாயன்விடுப்பமாமுனியாவிமறிகடலெய்திடவருணை
விலையிடையின்றமித்திரன்செலுந்தனீள்குழலரம்பையரோடு
சலவிளையாட்டிற்குழ்ந்தனெருந்னொமுருப்பசிதடநெடுங்கண்ணும்
வலையிடைப்பட்டுமயங்கியமனத்தன்வருணன்மற்றவட்கிவையுரைத்தான்.

உன்னையானவரித்தேனென்றவனுரைப்பவுருப்பசிகூறுவாளுயர்ந்தோய்
முன்னமேயென்னைமித்திரன்கண்டுவரித்தனன்முறைகெடவந்து
பின்னைநீவரித்தல்பிழையென்வுரைப்பப்பெருகியகாமவெங்கனலாற்
றன்னுடலுருகிவீரியம்விழத்தையலுக்கவனிவையுரைத்தான். (௨௦)

மின்னிடைமடவாயென்னுடலுருகிவீழ்ந்தவீரியத்தினைக்கும்பந்
தன்னிடையிடுவன்றேனெனமகிழ்ந்துவருணன்மேற்றுழ்ந்தசிந்தையளா
யன்னமென்னடையாண்மித்திரன்றன்னையணுகிடவால்மதென்ன
வன்னியாமென்னக்கனன்றசீற்றத்தான்மற்றவளுக்கிவையுரைத்தான் (௨௧)

முன்னமேகண்டுவின்னையான்வரிக்கமுறைமையீதன்றெனவுணரா
யன்னியன்றனைக்கண்டன்புபட்டனைநீயாதலாலறிவிலாதாளே
பொன்னுலகின்றம்புவிடைநீபோய்ப்புதன்மகன்புருரவாவென்னு
மன்னவன்றனக்குமனைவியாய்நெடுநாள்வைகுதியென்றவன்சபித்தான்.

அன்னவீரியத்தையமரர்கள்வகுத்தகுடத்திடைவருணனுங்கிடவு
மின்னிடையாளைக்கண்டுமெய்யுருகிமித்திரன்விழ்த்தவீரியத்தை
முன்னமேகும்பத்திடுகையான்முன்புமுழுதுணரகத்தியன்பிறந்தான்
பின்னைவாருணத்தையிடுகையாற்பின்புபிறந்தனன்பெருந்தவவசிட்டன்.

என்றுலகேழுமுடையவனெறிந்தவிராக்கதர்குலத்தைவேரறுத்த
வென்றிகொள்வீரன்விளம்பியகதையைக்கேட்டலுமிகவியப்பெய்தி
யன்றுடல்பிரிந்தவசிட்டனுமியானதம்வேள்வியானதவு
மொன்றொழியாமலுரைத்தியென்றிளையோனுரைத்திடவுத்தமனுரைக்கும்.

நியசாபத்தாற்சேதனம்பிரிந்தநிமியுடல்சிறந்தநல்லடியா
ராயவராலேயாடையாபரணமுதலகொண்டலங்கரிப்பித்துச்
சேயவாகியவையாயிரத்தாண்டுசேதியிற்குறைபடாவண்ணந்
தூயமாமுனிவரந்நிமிமுன்னூட்டடங்கியவேள்வியைமுடித்தார். (௨௫)

அந்தவேலையில்வந்தமரர்கள்கூடியந்நிலையாவியையழைத்துச்
சிந்தையாலுவந்தோருருவமாம்வேண்டிக்கொள்ளெனத்தேவர்கள்செப்ப
விந்தமாநிலத்தோர்கண்களில்யானின்றியங்கிடவிவ்வரமெனக்குத்
தந்திடவேண்டுமெனவரந்தந்தோமென்றுதாமுறைவிடஞ்சார்ந்தார். (௨௬)

முனித்தலைவோர்களந்நிமியுடலைமுராணுடையரணியாற்கடையச்
சனித்தவன்றன்னைச்சனிக்கையினாலேசனகனென்றவர்பெயர்சாற்றி
யினித்தரணியைத்தாக்கென்றவர்கூறவிவ்வுலகாண்டனனென்றே
தனிச்சிலைதரித்தோனுரைசெய்துபின்னுந்தம்பியைக்குறித்திவைசாற்றும்.

ஒள்ளியதவத்தாற்கல்வியாலுணர்வாலுண்மையாலுணர்ந்தவருயர்ந்தோ
ரொள்ளியகுற்றமில்லவரொய்தும்வெகுளியாலிப்படிப்பட்டார்
தெள்ளியவீரச்சிலையினாய்ப்புறத்துத்திறற்பகைவெல்லலாஞ்சினமா
முள்ளுறுபகையையறிந்தவருலகத்தொருவரும்வென்றவரில்லை. (௨௮)

மூங்கிலிற்பிறந்தமுழங்குதீமூங்கின்முதலறமுருக்குமாபோலத்
தாங்கருஞ்சினத்தீதன்னுள்ளேபிறந்துதன்னுறுகிளையெலாஞ்சயிக்கு
மாங்கதன்வெம்மையறிந்தவர்கமையாலதனையுள்ளடக்கவுமடங்கா
தோங்கியகோபத்தீயினையொக்குமுட்பகையுலகில்வேறுண்டோ. (௨௯)

வேறு.

மனத்தினால்வாக்கால்வாய்ந்தசெய்கையான்மாசிலாதோய்
சினத்தினால்மிக்கோர்பண்டுசெய்தவக்கதையையெல்லா
முனக்கியானுரைப்பன்யாவுமுணர்ந்துகேளென்றுவாசப்
புனத்துழாய்மாலைமார்பனிக்கதைபுகலலுற்றான். (௩௰)

மன்னவனகுடனென்பான்வாசவன்மகமுஞ்செய்தோ
னன்னவன்புதல்வன்றந்தையனையவன்றவத்தின்மிக்கோன்
பன்னெடுங்காலந்தன்னைப்பார்மன்னர்முறைசேவிப்ப
விந்நகர்க்கிறைவனாகியிருந்தவனயாதியென்போன். (௩௧)

பார்க்கவன்கண்ணாயுள்ளோன்பகையறக்களைந்துகாத்தோன்
பார்க்கவன்றவத்தையென்றும்பண்ணுவான்விண்ணோர்தன்கை
பார்க்கவன்றந்தயாகம்பண்ணுவோன்சன்மிட்டைக்குப்
பார்க்கவன்பயந்ததெய்வயானிக்குப்பதியாயுள்ளோன். (௩௨)

தன்மிட்டனாயவந்தவயாதிக்குத்தடமென்கொங்கைச்
சன்மிட்டைவயிற்றிற்பூருச்சனித்தனன்றயித்தியர்க்குக்
கன்மிட்டனாகிக்காக்குங்கவிமகள்வயிற்றிற்காசில்
பொன்விட்டுவிளங்கும்பூணாயதுவெனும்புதல்வன்வந்தான். (௩௩)

இருவரும்வளருங்காலையதுவெருறும்பேரோன்வெள்ளந்
சொரிதருகண்ணினின்றோன்றியகோபத்தீயின்
வருபெருந்துயராமாறுவல்வினாந்தெய்தியந்தத்
தெரிவையர்திலகமானசேயிழைக்கினையசெப்பும். (௩௪)

தன்மமொன்றிலாதசிந்தைத்தயித்தியர்தலைவனுளேன்
றன்மகடனைக்கொண்டாடியவன்மகன்றனையேபோற்றி
யுன்மகனென்றுன்கோபத்தாலெனையுரப்பாகிற்குந்
துன்மதிமன்னன்றாயோய்கேளெனப்பின்னுஞ்சொல்லும். (௩௫)

போதமிலயாதிக்குற்றப்புருந்தவப்பாவந்தீரத்
தூயதானியுகாறுமிருந்தருந்துயரந்துய்த்தோ
மாதலாலென்றுமென்றுமானத்தாற்கவரிமாக்கள்
சாதலைக்கண்டேதேறுய்தளர்ந்தொருமயிருக்காக. (௩௬)

ஆயவரினையகூறவாயிழையழன்றுபொங்கித்
தூயநற்பவளச்செவ்வாய்துடித்திடக்கண்ணீர்சோரச்
சேயிளையுடனேகொண்டுசெறிபுகழ்த்தந்தைதன்பாற்
போயவனடியில்வீழ்ந்துபொருமியின்றழுதுசொல்லும், (௩௭)

சிந்தைசன்மிட்டைமேலேசெல்கையான்மன்னனன்றுள்
மைந்தனைக்கண்டாற்கையால்வரவினைத்திருகப்புல்லி
யெந்தைகேளென்னைக்கண்டாலென்னவென்மகனைக்காயு
மிந்தவெந்துயருக்காற்றேனெரியிடைவீழ்துமென்றாள். (௩௮)

குழன்றபூங்குழலாணெஞ்சுகோபத்திற்கூறவெள்ளிக்
கழன்றதுசிந்தைபோக்குமழிந்ததுசிவந்தகண்கள்
சுழன்றனபுருவமின்றுதுடித்தனதுயநல்லோர்க்
கெழுந்தனகோபமென்றால்யாரிதுதடுக்கவல்லார். (௩௯)

அவ்வழிவெள்ளிகோபித்தந்தமாற்றுட்டிக்கன்பரிய்ச்
செய்வனதயதியான்சிந்தைகலங்கவித்தெய்வயானி
யிவ்வகையிடராச்செய்தவயாதிதனிளமைநீங்கி
நாவளமொழியார்கண்டுநகைசெய்மூப்படைகவென்றான். (௪௦)

தளர்ந்துதான்பிணங்கிவெள்ளிசாபத்தாற்சாபம்போல
வளர்ந்தமெய்திரைந்துகேசம்பஞ்சுபோல்வெளுத்துநெஞ்ச
முளைந்திளைந்திருமிக்கண்ணீரொழுகநாக்குளறிப்பற்கள்
துளங்கிநெகட்டமூப்புத்தோன்றியதயாதிக்கன்றே. (௪௧)

இந்தமூப்பாலயாதியதுவினைநோக்கியென்பால்
வந்தவிம்மூப்பைக்கொண்டேவருந்திநோய்தீர்த்தியேலென்
சிந்தையினெண்ணமெல்லாந்தீர்த்துநல்லறங்கள்செய்து
மைந்தவிகாணமூப்பைமதித்துநான்கொள்வேனென்றான் (௪௨)

நேர்தடியற்றவாலநடுங்கிவீழ்கின்றதென்று
வந்தவீழூன்றிவீழாவகைநிலைவிளக்குமாபோல்
மைந்தர்கடமக்குநல்லவழியினான்மகிழ்ந்துசேர்ந்து
தந்தையைத்தளராவண்ணந்தாங்குவர்தவத்தினென்றான். (௪௩)

புத்திரனாவோனிதிபொருந்தித்தன்குலத்திலுள்ளோ
ரத்தனைவரையுந்தியவருநரகுறுமற்காத்துச்
சுத்தமாங்கதியிலுய்ப்பானென்றுசொல்வார்கடேயோ
யித்தைநீயுணர்ந்தென்மூப்பாமிடும்பையைத்தீர்த்தியென்றான். (௪௪)

என்றவன்விளம்பக்கேட்டயதுவிதுவிளம்புமெந்தா
யுன்றனக்குரியமைந்தன்றன்னைநீயுடன்கொண்டென்று
மன்றெனக்குரிமையில்லையாகுலத்துடனேயுண்மை
யின்றெனக்குரிமையுண்டேலிவ்விடர்நீக்கவென்றான். (௪௫)

ஈதவனியம்பித்தன்சொன்மறுத்திடவயாதிபோய்நற்
போதவனாயமைந்தன்பூருவையழைத்துக்கண்டு
கோதறுகுணத்தோய்நீயிக்கொடியமூப்பதனைக்கொண்டென்
வாதையைமைந்ததீர்க்கவல்லையோவென்னச்சொன்னான். (௪௬)

இன்னவையியம்பப்பூருவென்னிடர்தீர்த்தியென்று
மன்னவன்கூறப்பெற்றுவாழ்ந்தனனன்றேமண்ணி
லென்னையொப்பவராரென்னாவயாதிதன்மூப்பைக்கொள்ளத்
தன்னிளமையினைப்பெற்றதராபதியதுவைநோக்கி. (௪௭)

நீசுரரோடுவிண்ணோர்திகழுநின்மைந்தனோடு
மாசுரபாவஞ்சார்வாயாகெனச்சபித்துச்செற்றார்
கூசுரமுடையகோமான்கொடுவினையறுப்பான்கோலி
மாசுரமடைந்தான்மற்றைமைந்தனைமகுடஞ்சூட்டி. (௪௮)

ஒன்றியகோபத்தோர்களிவ்வகைகெடுதலுண்மை
யென்றுகார்வண்ணன்கூறவிளையவன்வியந்துசால
நன்றிதுவெனக்கொண்டாடிநாயிறுகடலின்மூழ்க
வென்றிகொள்வீரன்சந்திவிதிமுறைமுடித்தபின்பு. (௪௯)

அவ்விரவமளிநண்ணியாசையுமண்ணும்விண்ணுங்
கவ்விரவியமைவண்ணக்காரிருள்கலங்கியோட
வெவ்விரவியுமவ்வேலைமிசைவரவேதமென்னப்
பொய்விரவியசொல்லில்லாப்புரவலன்பள்ளிநீங்கி. (௫0)

சந்திகாரியங்களெல்லாஞ்சமைந்தபின்றழைப்பச்சார்ந்த
வந்தணர்க்கம்பொன்பூமியானிரையாதியாய
விந்திரைகொழுநனீர்தாண்டிருந்தபின்முனிவரெல்லாம்
வந்தனரென்னச்சொல்லவரியிலோய்கொணர்தியென்றான். (௫௧)

பொருந்திசெம்வாயில்காப்போன்போயவன்விடுப்பப்புக்க
விருந்தாமுனிவர்தம்மைவிதிமுறையருச்சித்தாங்க
ளருத்திமாதவத்துக்கிப்போதழிவொன்றிலையேயென்று
திருத்திகழ்மார்பன்கூறச்சிறைவிலாதவர்கள்சொல்வார் (௫௨)

மன்னவர்மன்னமுன்னாள்மதுவெனுந்தானவேந்தன்
றன்னெதிரிலாதவீரன்றருமமுந்தயாவுமிக்கோன்
பிஞ்ஞகனருளாற்பெற்றபெருவலித்திரிசூலத்த
னன்னதுகையதாகவிளிவிலாவாயுப்பெற்றான். (௫௩)

ஆயவன்றனக்குக்கும்பீநசிவயிற்றவதாரஞ்செய்
தீயவன்றேவராதிதிரிபுவனத்துள்ளோர்க்குஞ்
சாய்விலாவென்றிவீரன்றயாவொடுதருமத்தோடு
மேய்விலாவஞ்சநெஞ்சனிலவணனென்னும்பேரோன். (௫௪)

அன்னவன்கொடுமைகண்டுமதுமுன்னாளன்பாற்பெற்ற
விற்கொடுஞ்சூலமின்கையிருக்கவேயிமையோரோடு
முன்னொருநம்பொருவான்முனிவிலவொன்றுணர்த்தப்போற்றித்
தன்னெதிரிலாததந்தைகொடுத்திடத்தன்கைக்கொண்டான். (௫௫)

அங்கதுகைக்கொண்டத்தவவலியையடங்கநூறித்
தங்குமாதவத்தோர்தம்மைத்தவஞ்செயாவண்ணங்காத்தோ
னிங்கெமக்கிடையூறுற்றலிற்றகர்வருவதன்றிப்
பொங்காவலனையாய்வேறுபுகலிடமுண்டோவென்றார். (௫௬)

ஆங்கவருரைத்தசொற்கேட்டருந்தவமுனிவர்க்கெல்லாந்
தீங்குசெய்தீயோன்றன்னைத்தென்புலத்துய்ப்பன்றிண்ண
நீங்கள்போயஞ்சாதுங்களிலைகளினின்மினென்று
தேங்கமழ்த்தாரோன்றீயோன்றனைக்கொலுந்திறஞ்சிந்தித்தான். (௫௭)

இன்னுயிர்த்தம்பிமாரையிருவரையினிதினோக்கி
மன்னுயிரடங்கக்கொன்றமாதவர்க்கிடரைச்செய்தோன்
றன்னுயிர்தன்னைவாங்கித்தருமவர்யாரோவென்ன
வென்னுரைகேட்டியென்றுவிலக்குவனிளையசொன்னான். (௫௮)

மூவகையுலகிலுள்ளமுனிவர்தானவர்களாதி
யாவருமவனுக்காகியென்றொடும்பொருவரோடு
மேவினையாகிலென்னையிலவணனென்னுமந்தப்
பாவகாரியைநான்கொல்வனென்றனும்பரதன்கூறும். (௫௯)

அங்கமதுடையாய்நாயேன்சொல்லுவதுண்டுகேட்டி
வெங்கடுங்கானத்தேபோய்மென்கனிசருகுமூல
மங்கையையமுதுசெய்தற்காய்ந்தனனுண்டோமுங்
கங்குலும்பகலுமுன்னைக்கண்ணுறங்காதேகாத்து. (௬௦)

வற்றெதிர்பொருதமாயவரக்கரைமடியநூறி
யந்தகபுரத்திலேற்றியடலதிகாயனோடு
மிந்திரசித்தைக்கொன்றவ்விராவணற்கிடரைச்செய்து
தொத்தனையிளையோனந்தகோனைவீரோக்கல்வேண்டும். (௯௧)

பலபலவுரைத்தென்னெய்யபாதகவரக்கன்பற்றுத்
தலைகளுமிரட்டிதோளுஞ்சரந்தனாற்றடிந்தவீரச்
சிலைவல்லோயென்னையேவிற்றிவினைகளையேசெய்யு
மிலவணன்றன்னைநான்கொன்றிவ்விடர்தீர்ப்பனென்றான். (௯௨)

இன்னவைபரதன்கூறவிளையசத்துருக்கன்சொல்லு
மன்னவர்மன்னனீபோய்வனம்புகுவார்த்தைகேட்டு
நின்னையிவ்வரசுசெய்யப்பணித்தனிமறுப்பதின்றன்
பொன்னடிநிலையைக்கொண்டுபோந்தனன்சிரத்துவைத்து. (௯௩)

அரசிலாவயோத்தியெய்திலரசுநாஞ்செய்தோமென்றே
நரர்பழியிடுவாரொன்றுநந்தியிற்கிராமநண்ணி
மாவுரியுடுத்துவார்ந்தசடையனாய்க்கண்ணீர்மாறாப்
பரதனையேவலாமோபார்புகழ்பைம்பொற்பூணாய். (௯௪)

எஞ்சலில்கீர்த்திபூண்டவிளையவனியம்பும்பின்னு
மஞ்சனவரைபோன்மேனியழகனையருளிலாத
வீஞ்சன்மேலென்னையேவில்வானுலகவனையேற்றி
நெஞ்சிடர்முனிவர்நீங்கவிறுத்துவன்றவத்தையென்றான். (௯௫)

வளைதனுக்கையில்வாங்கிவானவரொளிரும்வெம்போர்
விளைகளத்தெதிர்ப்பாரகில்வெற்றிகொள்வீரப்பொற்றோ
ளிளையசத்துருக்கனிவ்வாறியம்பிடவிராமன்கேட்டுக்
கிளரொளிப்பவளச்செவ்வாய்கிளர்ந்திவைகிளத்தலுற்றான். (௯௬)

முனைக்களத்தெதிர்ப்பினிந்தமூவுலகத்திலுள்ளோ
ருனக்கெதிர்நிற்குமாற்றலுடையரோவுயர்பொற்றோளாய்
சினத்திறலசுரன்றன்னைத்தென்புலத்தேற்றித்தூயோர்
மனத்திடர்தீர்த்தியென்றான்மனுகுலத்துற்றவள்ளல். (௯௭)

இன்னவையிராமன்கூறவிலவணன்றன்னைக்கொல்ல
வென்னையேவிடப்பெற்றேனென்றெழுந்தபேருவகையோடு
மன்னவன்றன்னைமும்மைவலஞ்செய்துவணங்கிநிற்பத்
தன்னிருதோள்களாரத்தழுவினன்சகலநாதன். (௯௮)

அலகிலாமாவுந்தேருமடுகளிற்றினமுமாற்றல்
தொலைவிலாப்பெரும்பதாதித்தொகுதியும்போகவேவி
விலையிலாமணியுமுத்துமென்றுணாத்துகிலும்பூணு
மலைகுலாவியதோளாற்குவழங்கினன்கருணைவள்ளல். (௯௯)

பாதலைப்பதினுளான்பெரமலைக்காவல்பூண்ட
விரதனைவிளங்குசோதிவெய்யவன்குலத்தோர்க்கென்றம்
வரதனும்வரிட்டன்றன்னைவணங்கியவ்வஞ்சன்றன்னைச்
சாதகான்கொல்வனென்றுசமைந்தசத்துருக்கன்போனான். (௭௦)

வேறு.

எண்ணிலாக்களிறுபரியிரதநெடும்படையிவைவையெழுசென்றேவித்
தண்ணிலாவெண்முறுவற்றேனைகயர்பல்லாண்டிசைப்பத்தனதுமேனி
வெண்ணிலாவெறிப்பூசவெள்ளிமலைபொன்மலைமேல்விளங்கல்போல
மண்ணுலாவியபுகழான்மாமணித்தேரேறினான்வானோர்வாழ்த்த. (௭௧)

ஆனகதூரியமுழக்கவணிமுரசமுகிலனையவமலைபொங்க
வானகமுமண்ணுலகும்வளர்பெருந்தூளியின்மறையமலர்பூஞ்சோலைத்
தேனருப்பங்கயப்பழனத்திருநாடுகடந்துபோய்த்தெய்வகங்கை
வானதியின்மகிழ்ந்தாடிவான்மீகியருந்தவஞ்செய்வனத்தைச்சார்ந்தான்.

அங்குமுனியடிவணங்கியவன்செய்தபூசனைகொண்டினிதுதாங்கி
மங்கைசனகன்பயந்தமடப்பாவையவ்விரவில்வயிறுவாய்ப்பச்
செங்கமலமவிழ்செவ்வாய்ச்சிறுவர்பிறந்தாரிருவரென்றுசெப்பப்
பங்கமிலாமுனிவெழுந்துபரிவோடுபிள்ளைகளைப்பற்றிப்பார்த்தான். (௭௨)

மைவண்ணத்தாமரைக்கண்மன்னனிராமன்றன்னைவந்துகண்டோர்க்
கெவ்வண்ணமவனிருக்குமிலக்கணங்களவைபலவுமிலங்கித்தோன்ற
அவ்வண்ணத்தவ்வுருவாயவதரித்தபிள்ளைகளையருணோக்கிச்
செவ்வண்ணமறியாதசிந்தைமகிழ்ந்தவதரித்தோர்க்கிளையசெய்தான். (அ௩)

சீதைதனதிருவயிற்றிற்றிருவவதாரஞ்செய்தசிறுவர்தம்மைப்
பூதபசாசுகண்முதலானவைவந்துபொருந்தாமற்புனைநீர்காட்டிக் [ர்க
கோதறுமந்திரங்கள்சொல்லிக்குசலவங்களாற்றுடைத்துக்குறிக்கொண்டா
ளாதலாலம்மைந்தர்குசலவர்களென்றுபேராயினரே. (௭௪)

பிள்ளைகள்சானகிவயிற்றிற்பிறந்தார்களெனமுனிவர்பேசக்கேட்டாங்
குள்ளமகிழ்சத்துருக்கனன்றுவானுயர்மாடத்தயோத்தியென்னு
மொள்ளியமாநகரியிடையுற்பவிக்கப்பெறுதவகையொலியொன்றின்றிப்
புள்ளொலியேயிருகாட்டிற்பிறந்தார்கள்பொன்னகரிற்பிறந்தாராகில். (௭௫)

பொய்யாதவேதியர்க்குப்பூதானங்கோதானமுதலபன்னிக்
கையாரிதிவிசிக்காருத்தன்காளையர்கள்பிறந்தாரென்று
மையார்பூம்பொழினகரிமகிழ்வெய்தமணிமுரசமறைந்துநின்று
செய்யாடலாற்சனங்களென்படுவரின்றென்றுநினைந்துநைந்தான். (௭௭)

ஏதமிலாக்குலத்துதனோவிவ்வண்ணஞ்சிந்திப்பவிருள்கைவாங்கிப்
போதுவிடிந்தறியாமற்புறப்பட்டக்குதையத்திற்பொலிந்துதோன்ற
மாதவனையடிபணிந்துமன்னவனையடிவணங்கிமணிப்பொற்றேரின்
மீதுவந்துமேற்றிசையைக்குறித்துவழிமேற்கொண்டுவிரைந்துபோனான்.

ஏறுபுகட்சந்தருக்கனைமுனிவைத்தங்கியமுனிவனென்று
மாறுகடந்தக்கனாயினருந்தவனையடிவணங்கியவர்கணைந்த
மூரியவன்பொடுசெய்தபூசனைகொண்டுள்மகிழ்ந்தவ்குலவந்தால்லோர்
கூறியமாகலைதகேட்டுக்கொண்டாடியவரோடுங்கூடத்தங்கி. (௭௯)

சந்தியவந்தனைசெய்துதபோதனரோடிவிதிருந்தசமையந்தர்த
வந்தனையடிவணங்கியடலாக்கர்குலத்தினைவேரறுத்துவந்த
சந்தாவிஸ்வித்தினையோன்சொல்லுவாவிலவணன்கைச்சூலஞ்செய்யும்
வெந்தொழிலுமவன்வலியும்விரித்துரைப்பினனைவருமிளம்பலுற்றார்.

மனுகுலமாலியகுலத்துலவந்துதித்தோன்மாந்தாதாவென்றுமன்னன்
குனிசிலையைக்கைவாங்கிக்குனைகடல்சூழ்குவலயத்திற்கூர்வேன்மன்ன [ந்
ரினியொருவர்பிறைந்தோர்களிலையென்னக்குலந்தோடுந்தலைத்துப்பின்னை
தனியொருசக்கரநடத்தித்தாணிமுழுதுங்காத்ததனித்தோள்வீரன். (௮௧)

செறிமணிமாமுடிமன்னர்திறைகொணர்ந்துசென்றுபுகப்பெறுதுறங்குங்
குருகரியபெருங்காவற்கோபுரவாயிலையுடையக்குலவுசெல்வன் [ன்
றறுகணுடைவன்னெஞ்சன்றுங்கரியபேராற்றிற்றண்ணீர்தாகத்
தறுபுலியும்புல்வாயுமொருதுறையினீருண்ணவுலகமாண்டான். (௮௨)

இன்னபெருவலியுடையோனிந்திரனைப்போர்வெல்வானெழுந்துசெல்ல
வன்னவன்றன்கருத்தறிந்தவமரர்கோனுரைசெய்வானளவிலாற்றன்
மன்னவமண்ணுலகத்துன்வழியொழுகாவலியோன்மேற்செல்லமாட்டா
யென்னையமர்வென்றுநீயென்னுலகங்கொள்ளவுனக்கியல் போவென்றான்.

தேவர்கோனிவைசெப்பத்திரைக்கடல்சூழவனிதனைத்திருத்தியாண்ட
மாவலித்தோண்மணிமவுலிமாந்தாதாவிவையுரைக்குமண்ணின்மன்னர்
யாவருமென்வழியொழுகவெனக்கெதிராயென்வழிவாராததீயோர்
பூவலயத்தெவரவரைப்புகறியெனப்புரந்தாரும்புகலலுற்றான். (௮௪)

மண்ணுலகில்வலிமிக்கமதுவென்னுந்தானவர்கோன்பயந்தமைந்த
னண்ணரியவரனுடையமதுபுரியையாள்கின்றான்ஞாலமொன்றிப்
பண்ணரியபாதகத்தோன்பாருலகிற்பல்லுயிர்கள்பதைப்பக்கொன்று
வெவ்வுறுதிண்படையுடையோனிலவணனென்பவனுலகினெதிரிலாதோன்

சீரார்தேவருக்கரசனென்றினையசெப்பியசொற்செவியிற்காய்ந்த
நாராசமெனநுழையநவ்வுராத்துமானவேனடுக்கத்தைத்துப்
பாராளுமன்னன்மனம்பதைபதைப்பப்போக்கொழிந்துபாரின்மீண்டு
போரதழற்றறுகட்பெருங்கோபன்றாதவனுக்கினையபேசும். (௮௬)

இன்னுயிருக்கிடர்செய்யுமிலவணனுக்கிவ்வண்ணமுரைத்தியென்ன
வுன்னுயிர்நீவேண்டுதியேலுயர்தவத்தோர்க்கிடர்செய்யாதொழிகவென்று
மன்னுயிரைக்கொல்கையினித்தவிர்கென்றுமதுபுரம்புக்கவன்றன் வண்மை
சொன்னபொழுதவனைத்தன்சுடர்வாளிற்றலைதரிந்தான்றுன்றுதோளான்.

அதன்வாக்காறுறதோன்றியவெங்கோபத்தாற்றுடித்தநெஞ்சன்
மாதவருக்கிடர்செய்துமண்ணுலகிலுயிரெல்லாம்வாரித்தின்னும்
பாதகன்வைகச்சுடர்வாளாற்பட்டானேனுவென்றுபலவினைந்துபார்க்கு
காதனடற்படைகுமரன்மாடமதுபுரத்தைதான்ணுங்காலை. (௮)

ஆங்கவனுர்தன்னிலத்திலஞ்சாதேவந்தடைந்தானுரோவென்று
தாங்கரியபகைச்சூலத்தாளையொடுதலைப்பட்டுழந்தனைக்குமன்னன்
பூங்கணைமாமழைபொழியப்புன்முறுவல்செய்தவனும்பொருமைமெய்தித்
தேங்கமழ்தார்மன்னன்மிசைச்சிவனளித்ததிருச்சூலந்திருப்பிவிட்டான்.

எழிற்பெருலகமெல்லாமிப்பொழுதேமுடியுமெனவிமையோரஞ்ச
ஆழித்திரளார்ந்ததெனவுலகமெலாமெரிபரப்பியோடச்சென்றங்
காழித்தேர்மன்னவனையவன்சேனையொடுமுருக்கியளவில்லாற்றற்
பாழித்தோளிலவணன்றன்பாணிமிசைப்பண்டுபோலிருந்ததன்றே. (௧௦)

பொய்யிருக்குமனத்தவுணன்போர்வலியிதென்றுரைத்துப்புகல்வார்பின்னு
மெய்யிருக்குஞ்சொன்முனிவர்விரிசடையோனிடைப்பெற்றவெய்யசூலங்
கையிருக்கில்வெலற்கரியான்கையிராக்காலத்தையறிந்துகாதில்
செய்யிருக்குஞ்சுடர்வேலாய்பிச்சயின்கைப்படுவனிசனென்றார். (௧௧)

என்றுதிருமறைமுனிவரிலவணன்றன்வலியெல்லாமியம்பக்கேட்டு
வன்றிறற்போர்ச்சத்துருக்கன்மதுபுரமாமாநகரம்வழிக்கொண்டந்தக்
குன்றனையோனுயிரலைப்புறப்பட்டானெனச்சாரர்கூறக்கேட்டுச்
சென்றனைக்கச்செய்திச்செழுமதில்வாயிலின்முன்சேனைசூழ. (௧௨)

மன்னுயிர்க்குக்காலனும்மண்ணுலகிலுயிரெலாம்வளைந்துகொன்று
மின்னுயிர்க்கும்விரிசடைமால்விடையுடையோனருஞ் சூலமென்கைத்தாக
வென்னுயிர்க்கோரிறுதியிலையெனநினையுமிலவணன்றனகரியெய்தித்
தன்னுயிர்க்குக்காலனும்நின்றவிறற்சத்துருக்கன்றன்னைக்கண்டான். (௧௩)

தன்னுடையநகர்வாயிற்றுறுதானும்போர்செய்யச்சமைந்துநிற்கு
மன்னுடையமகவின்றவலிகண்டுவாய்மடித்துவஞ்சன்கூறு
மென்னுடையகாவலழித்தஞ்சாதேயென்னகரில்வந்தான்யாவ
னுன்னுடையபேரேதிவந்தகாரணமேற்குரைத்தியென்றான். (௧௪)

தயரதன்றன்றனையனியான்சத்துருக்கனெனும்பெயராமிராமன்றம்பி
புயலனையகருமனத்தோய்போர்வேண்டிவந்தனனியான்போர்தாராய்
பெயர்வரிதின்குனக்கென்னப்பெருகியவெங்கோபத்தாற்பெயராதோங்க
மயல்புரியுமனத்தவுணன்மற்றவனைக்குறித்திவையமாற்றஞ்சொன்னான்.

என்னுடையதமையனுமிராவணனையிருங்கிளையோடேன்றுகொன்ற
வுன்னுடையதமையனுமிராகவனென்றிருந்தவனையுணர்ந்திலாதே
னென்னுடையபழம்பகைவன்றம்பிநீயென்னிடைவந்தகப்பட்டாயின்
றுன்னுடையவுயிர்கொள்வனெனவுரைத்துப்பின்னுமீதுரைக்கலுற்றான்.

தெவ்வழிக்குஞ்சிலைதரித்ததிறலுடையமாந்தாதாச்சேனையொடென்
கைவழிவந்தகப்பட்டுக்கனலாகியொழிந்தமைமீகழறக்கேட்டு
முவ்வழியொன்றிலேயின்றுன்னுயர்சேனையதனொடுமென்றுனைமுவர்க்குற்று
யவ்வழியிற்பிறந்தோருக்கறியாமல்வாரவந்தவழகேதென்றான். (கஎ)

இன்னகாலிவ்வண்ணஞ்செப்பியசொற்செவிநுழையச்சீற்றம்பொங்கக்
கன்னெரிகான்றிடவூழிக்கடலென்னக்கடலாலகாலமென்ன
மன்னனிராமன்சுமந்தமாருகந்தலையதிரவஞ்சனெஞ்சத்
தென்னனிராவின்னனிராவிருந்திலையோகாணெனிந்தானிராமன்றம்பி. (கஅ)

இவ்வண்ணங்காணெனியவெயிறுகடித்திருகையோடொருகையெற்றி
மைவண்ணமனத்தவுணன்மலைபனையமராமரமன்குலையவாங்கி
யுய்வண்ணமரிதிவற்கென்றும்பர்கடுங்கிடவுரவோடுருத்தாவீசக்
கைவண்ணச்சிலையிளையோன்கணைகளான்மராமரத்தைக்கண்டங்கண்டான்

உற்றபெருவெகுளித்தீயுடனெழுந்தவாளரக்கனோங்கலென்ன
மற்றொருமாமரம்பிடுங்கிமண்ணடுங்கவிண்ணடுங்கவலியின்வீசக் [செய்து
கொற்றவன்வெஞ்சிலையிளையோன்கொடுங்கணையான்மராமரத்தைக்கூறு
செற்றமிகுமவனுரத்துச்செழுங்கணைகள்பலசொரிந்தான்றேவர்வாழ்த்த.

ஒன்றனையவாளவுணன்குருதிநீருடர்சொரியக்கொதித்துமண்டி
யொன்றின்மேலொன்றோங்கியுயர்மாக்களொவ்வாதுசெல்லவீச
வன்றிறலோன்விற்கையில்வளைத்தபடியேயிற்கவயிரவாளி
குன்றுமழைபொழிந்தவுணன்றுரந்தமராமரமடங்கத்துணித்துவீழ்த்தான்.

ஆராவனைமேற்றுயினீங்கியயோத்திமானகரெய்தியதனைக்காத்த
விராகவன்றன்றிருச்சரத்தாவிரவிமாமகன்றேறற்கெய்தவேழு
மராமரமொன்றொப்பதனைமந்தரமாமன்னதனைவஞ்சன்வாங்கித்
தராதலஞ்சேருயிர்கடுங்கசத்துருக்கன்மிசையெறியத்தளர்ந்துவீழ்ந்தான்.

இறந்தனனிங்கிவனென்றுவிலவணனென்பகையறுத்தேனென்றுமின்முன்
சிறந்தவலித்தன்குலஞ்சென்றுவாங்கிடவேதுஞ்சிந்தைசெய்யா
னறங்கைகொடுத்தெடுத்தளிப்பவாதிநாயகன்றம்பியமளிநீங்கி
யுறங்கியெழுந்தானென்னவுணர்ந்தெழுந்தானுயர்வானத்தும்பர்வாழ்த்த.

சினச்சிங்கமெனவெழுந்தங்கினித்தெய்வக்கணைதொடுப்பனெனச்சிந்தித்து
புனற்சந்தமலர்கந்தப்புகைதியமுதலாயவுபசாரங்கள் [ப்
மனத்தாலேவகுத்திந்தவஞ்சனுயிர்கொண்டென்பால்வருதியென்று
வினைப்பாவிமேற்றெய்வவெங்கணையைவின்னாணிற்றொடுத்துவிட்டான்.

விட்டபடையாலமெனவெவ்வூழித்தீயென்னவிரிந்துபொங்கி
யட்டதிசையும்பாருமருவரையுமம்பரமுமனந்தனோடு
நட்டமுறுமன்றோநாமினிப்போகவிடங்காணோமென்றுநாகர்
கெட்டனர்களுண்ணடுங்கிக்கேடிலான்முகற்கிளையகிளத்தலுற்றார். (உ௦௫)

ஊழிக்காற்றெறிந்தகூடிப்பூதித்திப்பரந்ததலகெல்குமென்ன
வேழிற்பெருலகமெலாமின்றவிழைறயிமைவிளம்புமெதிரிலாத
யாழித்தேரிலவணன்றனாருயிர்கொள்வாளுழியன்னைதம்பி
பாழித்தோட்சத்துருக்கன்விடுதெய்வப்படையிதரிப்பதறலென்றான். (௧௦௬

பெண்ணுருவிற்பாகன்பாற்பெறுசூலப்பெருவலியாற்பெருகும்பாவ
முன்னிருபியாவவுணராமுருவியுயர்வானகருவியோடி
மண்ணுருவிமண்ணின்கீழ்மாறுகருலகுருவிமறிந்ததமீண்டு
நண்ணியதோட்சத்துருக்கன்செங்கையில்வந்திருந்ததந்தத்தெய்வவாளி.

விண்ணவர்பூமழைபொழியவேதியராசிகள்கூறவேலைசூழ்ந்த
மண்ணவர்கண்மகிழ்ந்தாடவள்ளலிராமன்றம்பிமதுரையென்னு
மொண்ணகரியுள்புக்காங்கொளிபெறுமாமணிச்சோதியொன்றுயோங்கு
நண்ணிலையபொன்மாடகூடகோபுரமெல்லாந்தெரியக்கண்டான். (௧௦௮)

இலங்கைமானகருக்குமிந்திரன்றனகருக்குமெழில்கொள்சோதி
யலங்கன்மாறுமடுத்தனதனிநகர்க்குமின்னகர்போலழகுண்டாமோ
கலக்குலாவியவிந்நகரியினைகாம்புகழ்வதெங்ஙனென்று
தலைக்குலாவிடமீர்த்திச்சத்துருக்கனுளிமணிமண்டபத்தைச்சார்ந்தான்.

தையலர்பலாண்டிசைப்பச்சாய்மனைகள்பணிமாறத்தாளமோங்கும்
தெய்வமாலின்னிசைகள்செவிநண்முயமாதர்கள்திரண்டுபோற்ற
மெய்யெலாமாபரணம்விரிசோதியால்விளங்கவின்றோர்வாழ்த்தப்
பொய்யிலாவுள்ளத்தான்பொங்கணைமேல்வீற்றிருந்தான்புலவர்போற்ற.

இலவணான்வதைப்படலம்-முற்றும்.

ஆ திருவிருத்தம்-௬௦௨.

௬-வது—சம்புவன்வதைப்படலம்.

அன்னதன்மையருயாதிரண்டாண்டவ்வணிநகராசுவீற்றிருந்து
தன்னெடும்படையையங்குவைத்ததற்பின்றுணையுந்தலைவருந்தானு
மன்னவனிராமன்மலரடிபணிவான்வல்விரையெனும்விலங்கறுத்த
நன்னெறிகண்டகாட்சியான்மிகிலங்கொளாச்சிரமத்தைநண்ணி. (௧)

வண்மைவான்மீகிமையிலையவன்றன்னைவரன்முறைபூசித்தனாங்க
ணெண்ணியவெண்ணைமுடித்தனையென்னவெழின்முனியியம்பியவிரவிற்
புண்ணியகதைகளுரைத்தனகேட்டுப்புலர்ந்தபின்பூம்பொழிலயோத்தி
நண்ணிநன்னகரியெதிர்கொளப்புகுந்துநாயகன்திருவடிபணிந்தான். (௨)

தன்றிருவடிதாழ்தம்பியையெடுத்துத்தடக்கையாலுயிருறத்தழுவி
வென்றிகொள்வீரன்விளம்புவானுறங்காவில்லிதன்றறுவலியாலே
யன்றிராவணற்கொன்றப்பகையறுத்தேனலைகடல்குழுலகுய்ய
வின்றிலவணற்கொன்றிப்பகையுன்னாலறுத்தனைவினிப்பகையிலையே. (௩)

இன்னபலவுமினியவன்வலியேயிராப்பாலினிதுகொண்டாமத்
தன்னருள்பொழியுந்தாமரைக்கண்ணாற்றம்பிசத்துருக்கனைநோக்கி
தின்னெடும்படையுமனைவிலாநிதியுமன்றுவைத்தின்றுநீயிருத்தல்
நன்னெறியல்லவென்றுலகுக்குநாயகன்போவெனநவின்றான். (௪)

தேனகுமுளரித்தார்திகழண்ணல்செப்பியசெல்விமேற்சேர்த்தி
மானவன்றன்னைவலஞ்செய்துபணிந்துமற்றைமுன்னோனையும்வணங்கி
யானைகமுரசமாதியமுழங்கவடற்பெருந்தானைதற்சூழ
வானவர்கோமான்மானகரொக்குமதுகைமாநகரியிற்புக்கான். (௫)

இளையவனேகவிராகவனயோத்தியிருந்தரசாள்கின்றவெல்லை
விளைபெருமூப்புவெண்ணரைத்தலையோர்வேதியன்றாத்திரேறும்
வளர்தருந்துயரான்மரித்ததன்மகனைமடியிலேவைத்ததற்கெல்லாக்
களைகணுயுள்ளகாவலன்கோயில்வாயிலிற்கதறிடுங்காலை. (௬)

மைந்தனையிழந்துமனமறுக்குற்றுமயங்கியமறையவன்பாரி
யிந்தியமுதலதன்னிலைகலங்கியிறந்தனளிவனெனமடவாள்
சிந்தைவெந்துயரானொந்துகைகுலைப்பச்சேயிழையொருவகைதெளிந்து
வெந்துயராற்றுதேயுடல்வெதும்பிவெய்துயிர்த்திவையிவைவிளம்பும். (௭)

வேறு.

மணியேயென்றன்மாசறுசோதியழகுக்கோ
ரணியேயென்றன்னாருயிரேயாரமுதேவன்
பணியேதின்னாளேகவுனக்குப்பணிபாராப்
பிணியேதந்தாயீங்கிதுவோநான்பெறும்பேறே. (௮)

முன்னைச்சென்மத்திட்டடையேனுதவின்மோகத்
துன்னைப்பெற்றுப்போற்றிவளர்த்தின்றுனைவிட்டே
னென்னைப்போலப்பாவிகளுண்டோவினையில்லாப்
பொன்னைப்பெற்றுத்தப்பமுடிந்தேன்பொறியற்றேன். (௯)

பதங்களிலார்க்கும்பன்மணியார்க்கும்படியில்லாச்
சதங்கையுமொண்பொற்றண்டையுமம்பொன்னரைநாணும்
பதம்பலவாகுமைம்படையும்மெய்யழகெல்லாம்
பொதிந்தகழுத்துங்காறையுமம்பொற்புனைபூணும். (௧௦)

பட்டமுநெற்றிப்பன்மணிமுத்தின்படர்சோதிச்
சுட்டியுமம்பொற்சூடுமிலங்கென்றுனையேயொ
வெட்டனையுஞ்சார்பில்லவனுட்டினிடைவந்தாய்
கட்டியசுற்றிக்காப்பிடவாராய்களிறேயோ. (௧௧)

மண்ணாருசீருமானமுமங்கவசைபூண்டோன்
கண்ணறையன்காருத்தனெனுதிக்கடன்ஞாலம்
புண்ணூறுதியிற்புத்திரசோபந்தனைமாற்றிப்
பண்ணிறைநாய்தாய்செத்திலொன்றேபழிதூற்றும். (௧௨)

என்னைக்கைவிட்டேபோனீயோவெழின்மைந்தா
வுன்னைக்கைவிட்டின்றுபோவாராருமல்லேனே
தன்னைச்சொல்லிக்கூப்பிடவேறார்தகவில்லை
மன்னர்க்கெல்லாமன்னவனேயுனவயோரார். (௧௬)

ஒன்றுந்துன்பங்கொள்கலமானேனுயிரெல்லாங்
கொன்றுன்பாவிக்கூற்றுவனென்னைக்கொடுபோகான்
வன்றின்னிச்சைமன்னவனுமென்னினைந்தோரா
னென்றென்றிவ்வாறேந்திழையாளழவிடலுற்றாள். (௧௭)

வேறு.

வேதியனுந்தன்பாரிமேதினியில்வீழ்ந்துகிடந்தலறுமைந்த
மாதுயர்கண்டாற்றாதுமறுகியனெஞ்சினளுமாண்டமைந்தன்
மீதுவிழுந்துளமனந்தவெய்துயிர்ப்பொன்றில்லாதுமிகவுமிக்குப்
போதொரேகூடத்தெளிந்துபொருமித்தன்வாய்விட்டுப்புலம்பலுற்றான் ௧௫

கன்னெஞ்சராயுள்ளோர்காளையைத்தாமிழந்ததைக்கருதிற்பர்
மென்னெஞ்சராயுள்ளோர்வெந்துயரம்பொறுக்கலாவிடுவராவி
யென்னெஞ்சிலெரிமூட்டியென்னையறக்கைவிட்டவுன்னைப்போல
வன்னெஞ்சரேயானுமைந்தனேயுனைத்தொடர்ந்துவருகின்றேனே. (௧௬)

தனக்குநோய்வேண்டாதான்சந்ததிபெற்றிடாதொழிகதளர்வுமிக்கு
மனத்துநோய்தான்பெருகமலடனுக்கின்றியாம்படுமிம்மறுக்கமில்லை
யெனக்குநீசெயவிருந்தநீர்க்கடனினிற்பினிருந்துபிள்ளா
யுனக்குநான்செய்வதேசெய்யேன்காணுனைத்தொடர்ந்துவருகின்றேனே.

கண்ணிலான்பெற்றிழந்தானெனவுன்னைப்பெற்றிழந்துகாந்திப்பொங்கும்
புண்ணுளேனாராசம்புடைத்தனையபொறுக்கலாதாற்றேனாகி
மண்ணிலாப்பெரும்பாவத்தெங்களுக்குமகனாகவென்னபாவம்
பண்ணினாய்மகனேயென்பழிப்பற்றபேரழகாபகர்ந்திடாயே. (௧௮)

தேசற்றதீவினையேன்றிருவுடையோர்பிள்ளைகளைப்பெற்றுவாழ
வாசைப்பட்டாவிதளர்ந்தருந்தவங்கள்செய்தானனேகங்கால
மேசற்றேனேசறவுகெடவந்தாயென்றிருந்தேனெங்கேபோனாய்
மாசற்றமணியேயென்மறுவற்றவடிவுடையமைந்தரேறே. (௧௯)

தன்னாடுமேனியனாய்த்தனையனைநானிழந்தாவிதளர்கின்றேனைக்
கொள்ளாதகூற்றமென்னைக்கொடுபோகாதினியுனக்குத்தோழனாகி
யுள்ளார்களொடுதெருவில்விளையாடியுடம்பலசியுறங்கினாயோ
பிள்ளாயநீயேமூர்த்திராயிதுவென்னபேருறக்கம்பேசிடாயே. (௨௦)

கொஞ்சியவன்சொற்கேட்டுக்குழையுஞ்சுட்டியுமழகுங்குறித்துச்சால
நெஞ்சுகளித்திவணிருந்தநெடுந்தவத்தால்விதிமுறையின்மனையிற்கட்டு
முஞ்சியுநற்கோவணமுமுப்புரிநூலுந்தோளும்விளங்கித்தோன்ற
வஞ்சனேன்மைந்தாநீமறையோதிவரக்காணப்பெற்றிலேனால். (௨௧)

தராதலத்திலிதற்குமுதற்றந்தையர்க்குமுனைத்தனையர்மரித்ததில்லைப்
புராதனத்தாலல்லாதிப்புத்திரசோகத்தாலேபுலம்புமிந்தப்
பிராமணிக்குப்பிழைப்பரிதுபெரும்பிடையால்யாரும்பிழைக்கமாட்டே
னிராமனுக்கேபழியாகவிறக்கின்றேமிருவருமேயென்னுங்காலை. (௨௨)

விழுகண்ணீர்மெய்ந்நனைப்பவேதியன்றன்பாரியொடும்விம்மிவாய்விட்
டழுகின்றகாரணமுமருமகனையிழந்ததுவும்பொறுக்கலாற்று
மொழிகின்றவாசகத்தின்கொடுமைகளுமருந்துயருமுழுதுங்கேட்டுக்
கழிகின்றநெஞ்சினனாய்க்கையறவுகொண்டிருந்தான்கமலக்கண்ணன் (௨௩)

மந்திரிகடமைக்கூவிமற்றவருந்தம்பியருந்தானும்வாயில்
வந்திருந்துபுலம்புகின்றமறையவற்குமறுமாற்றஞ்சொல்லமாட்டா
தொந்திருந்தவேலைமறைநூன்பொருடேர்நாரதனேமுதலாயுள்ள
விந்திரியசயித்தாயவிருடியருமெல்லாருமிமைப்பின்வந்தார். (௨௪)

வந்தவரையடிவணங்கிவரன்முறையாற்பூசித்தங்கிருந்தமன்னன்
சிந்தையில்வெந்துயரறிந்துசெழுமறைநாரதமுனிவனினையசெப்பு
மிந்தவுன்றனிராச்சியத்திலிதற்குமுன்னிலாததிதொன்றுண்டாய்த்தெய்வ
வந்தணன்புத்திரன்மாளவதுவந்தகாரணத்தையறிவாயென்றான். (௨௫)

மாசில்பெரும்புகழினோய்தருமத்தின்வகைகேட்டிவருணதன்ம
மாசிரியதன்மம்வருணாச்சிரமதன்மமெனவருயித்தன்மங்
காசில்குணத்தன்மமொடுகழறினோர்பலரிவைகள்கற்றோரின்று
பேசியவித்தன்மத்தின்முதல்வருணதன்மத்தைப்பேசக்கேட்டி. (௨௬)

புண்ணியசென்மந்தராம்பூசுரர்தன்மஞ்சுருதிபுகன்றயாகம்
பண்ணுதல்பண்ணுவித்தல்பழமறையோதலோதுவித்தல்பரந்தநன்னூல்
கண்ணியதானங்கோடல்கொடுத்தலெனக்கட்டுரைப்பர்காவல்வேந்தர்க்
கெண்ணியதானங்கொடுத்தலியாகமதுபண்ணுவித்தலென்னச்சொன்னார்.

கோத்திரத்திற்கொள்ளல்விற்றல்கோக்காத்தலுழல்வேட்டல்வணிகர்தன்மஞ்
சூத்திரர்க்குத்தன்மமவர்சிச்சுருடையெனவுரைப்பரதுசெய்யாது
காத்திரத்தையறவுலர்த்தித்தலைகிழாய்க்கான்மேலாய்த்தனக்குவாய்த்த
சாத்திரத்திற்சொல்லாததவஞ்செய்வானல்வருமித்தவரேயென்றான். (௨௮)

அக்கிரமஞ்செய்தாரைவிதிமுறையேதண்டியாவரசனாட்டி
லக்கிரமங்களுங்கலங்கிமழைகுன்றுமருந்தவத்துக்கருகனல்ல
னுக்கிரமாந்தவஞ்செய்கைகாரணமாயிம்மரணமுண்டாய்த்தென்ன
விக்கிரமவான்மனத்தில்வெந்துயராம்விட்டிளையோற்கினையசொன்னான்.

நெஞ்சிடைவெந்துயராற்றுப்பாரியொடுமறையோனேநீபோய்த்தேற்றித்
துஞ்சியமைந்தனைத்தயிலத்தோணியினில்விடுவித்தியென்னச்சொல்லிக்
கஞ்சநயனக்கனிவாய்க்கார்வண்ணன்கதிரவன்றன்வடிவைவாட்டி
விஞ்சொளியபுட்பகத்தின்மீதேறிமேற்றிசையின்விரைவிற்போனான். (௩௦)

குடதிசையும்வடதிசையுங்குணதிசையுக்குதிக்கொண்டோடிப்பின்பு
தடமிசையுங்காகுத்தன்றென்றிசைமேன்மாதவனைத்தேடிச்செல்வான்
புடைபார்தபுண்டரிகப்பூவணைமேற்பேடையொடுமன்னம்வைகுந்
தடமருங்குகான்மேலாய்த்தலைகீழாய்த்தவஞ்செய்வான்றன்னைக்கண்டான்

இறைவாவருங்குனின்றசெதியெனத்தாங்குமவன்றன்னைச்சேர்ந்து
குறையாதபேரழருக்கொண்டவிறக்கருணைநெடுங்கோமான்கூறு
மறையவனேமன்னவனோவசியனேசூத்திரனேவாக்காற்பொய்மை
யறையாதிக்குனையுள்ளபடியெல்லாம்பகர்தியெனவவனுங்கூறும். (௯௨)

அம்பைமலர்தொடையலினாய்சூத்திரயோனியில்வந்துதோன்றியுள்ளேன்
சம்புவனென்பவனென்பேர்தவஞ்செய்யுங்காரியநான்சரீரத்தோடு
மும்பருறைபொன்னுலகமுறவென்றானுரைவாளையுருவியோச்சிக்
கம்படியில்விழவெறிந்தான்கருமுகிற்போற்றிருமேனிக்கலமலக்கண்ணன்.

விண்ணவர்பூமழைபொழியவேதியராசிகள்கூறவேலைசூழ்ந்த
மண்ணதனினிகழ்வருணதன்மத்தைவரம்பழித்தானின்கைமாண்டேன்
புண்ணியஞ்செய்தோரொன்றும்பொன்னுலகம்புகலரிதுபுனைநீர்கின்றாட்
கண்ணியதோர்வரம்வேண்டிக்கொள்ளென்னக்கார்மேனிக்கண்ணன்கூறும்.

மறுகுபெருந்துயருடையமறையவன்சேயத்தலத்தின்மாண்டோனுவி
பெறுவகைவேண்டுவனென்னப்பெருந்தவனுமவனுவிபெற்றானென்றான்
செறிவலியின்றிறலுதிதேவர்களுஞ்சீதானுந்தியபாவங்
குறுகரியமாதவருக்குறுமுனிவாழ்தவவனத்தைக்குறுகினால். (௯௫)

மறைமிகநல்லறந்தழைக்கவாளவுனர்குலமுழுதுமறைந்துநாச
முறவெழுஞாலம்பிழைக்கவொருகுடங்கையால்வேலையேமுழுமுண்ட
வறமுனிவனச்சிரமமறுகினாலடலரக்கன்றலைபிளாந்து
பிறமுனியுஞ்சிலையோனுமிந்திரனேமுதலானவிமையோர்யாரும். (௯௬)

வாசவனேமுதலானோர்மாதவத்தோர்விதிமுறையோர்மகிழ்ந்துசெய்த
பூசனைகொண்டாக்கவர்கள்பொன்னுலகிற்போனதற்பின்புனைதிருள்ளக்
கோசலைநாடன்காணக்கொண்டாடிப்பூசித்துக்குசலவார்த்தை
பேசியினிதிருந்ததற்பின்பெருந்தவத்தோனிவ்வயிவையேபின்புபேசும்.

வேறு.

கொற்றவில்லிதனதுகொடுத்தலின்
மற்றொருத்தர்மகிழ்ந்துகொடுத்திடப்
பெற்றதீதிபெறும்பலபாத்திர
முற்றபோதெனவோதினர்வேதியர். (௯௮)

வானவர்க்கன்றிமண்ணுலகத்தில்வாழ்
மானவர்க்கும்வருக்கவொண்ணாதது
தானவப்பகையாகியசார்ங்கினி
யானதற்பினினக்கணியாவது. (௯௯)

நீடுமாவிலத்தில்லதுநீன்மறை
பாடுபங்கயத்தோனுலகுள்ளது
தேடருஞ்சுடர்ச்செம்மணிப்பூணிது
கோடியென்றுகொடுத்தனன்கோதிலான். (சo)

அந்தவாபரணங்கண்டவாழியா
றுந்துதீவினையோர்முன்புனக்கிது
தந்துளோன்றனைச்சாற்றெனத்தன்னிடை
வந்தகாரணமாமுனிகூறுவான். (சக)

விரிந்ததானைவிறலரக்கன்றலை
பருந்துகாயும்பகுந்துணைப்பண்டுபோர்
புரிந்துளாய்முன்புகுந்ததுகேட்டிநா
னருந்தவஞ்செயவாமிடந்தேடுவேன். (சஉ)

சிங்கமாகியவல்விலங்கியாவையுந்
தங்கிடாததுசார்புள்ளகன்றது
துங்கமானுடர்தோற்றமிலாததோர்
கொங்குலாமலர்ச்சோலையைக்கூடினேன். (சங)

அன்னகானகத்தம்புயப்பூவனை
யுன்னம்பேடையொடன்போடுறங்குவ
தன்னகங்கடழுவியதாழ்கட
லன்னபூந்தடம்பொய்கைகண்டேனரோ. (சச)

ஆயபொய்கைமருங்கிடையர்ருமில்
தூயவாச்சிரமங்கண்டுதன்னிருள்
மேயவல்லதிற்றங்கிவிடிந்தபின்
காயமாகவொருசவங்கண்டனன். (சரு)

அன்னகாலையரம்பையராடிட
மன்னுமாதவர்சூழ்தரமாகதர்
துன்னியேத்திடத்தும்புருநாரதர்
என்னபோவெனவெங்கணும்பாடிட. (சசா)

இந்திராதியிமையவர்போற்றிட
வந்துதோன்றினன்மாமணித்தேரின்மே
லந்தரார்விமானத்தடந்தேரினின்
றிந்தமன்னனிழிந்திதுசெய்தனன். (சஎ)

சாரவந்தச்சவத்தினைத்தன்வயி
றாரவுண்டுபெயர்த்தணிபொய்கையில்
வாரிமொண்டுகுடித்துவாய்பூசிநற்
றேரிலேறிப்புகுதலுஞ்சென்றியான். (சஅ)

தேவிச்சவந்தின்றிபிங்காரனை
நீவிளம்புதிநின்பெயரோதி
யாவனென்னவெழின்மணிப்பூணினான்
பாவகாசவெனக்கிவைபன்னினான். (௪௯)

வேறு.

ஆங்கவனைத்தோள்வெற்பன்னசுவேதனென்போன்றொல்லுலகோர்
தங்குபுவனமீன்றெடுத்தாய்போகம்வளர்த்தோன்றனக்குரிய
மங்கைமாரின்முத்தவடன்வயிற்றிலுதித்தேன்சுவேதையென
வெங்குநிகழ்பேர்மின்னனையாளின்றுள்சுவேதனென்போனை. (௫௦)

எந்தைவானமெய்தியபினியானுமாண்டெறிகடல்சூ
ழந்தஞாலமினிதாண்டிங்கெல்லாப்பகையுமறுத்தென்பின்
வந்தசுவேதற்காசளித்தவருந்திமூவாயிரத்தாண்டு
சிந்தையொருங்கியருந்தவங்கள்செய்தகாலத்திவையடைந்தேன். (௫௧)

இந்தவனத்தினெடுங்காலமியான்செய்தவத்தாலெய்தரிய
வந்தனுளன்பேருலகமடைந்துமருந்தாகமும்பசியும்
வந்தாலியமழைவண்ணமாயோன்றனதுதிருவுந்தி
தந்தமலரோன்றனுடையதாளில்வணங்கியிவைசொன்னேன். (௫௨)

பெறுதற்கரியவிவ்வுலகம்பெற்றும்பெருந்தாகமும்பசியு
முறுதற்கென்காரணமினிநானுண்பதேதென்றிடவொஞ்சி
யிறுகற்றனத்தாலிரப்போருக்கிட்டிலுதேயுன்வயிறும்
பசியைத்தீர்த்தவளர்த்ததினாற்பசிநோயுன்னைப்பற்றியதால். (௫௩)

பன்னுமறையின்பொருடெரிந்தபடைத்தோன்பின்னுமிவைபகரும்
பின்னுந்தருவாரவ்வனத்துன்பிணத்தைநீயேபசித்திரத்
தின்னமாளாதவளருஞ்சென்றதின்னிற்குண்டமுனி
தன்னைக்கண்டாலுன்பசியுந்தாகமும்போமெனவுரைத்தான். (௫௪)

அன்றுதொடங்கியின்றளவுஞ்சமர்த்தமாயவிப்பிணத்தைத்
தின்றுதிரிந்தேனென்பசியைத்தீர்த்தியென்றுனதுதிரு
நன்றுபிழைத்தேனெனவுவந்திந்நல்லாபரணமெனக்கீய்ந்து
வெனதுயிரன்விமானத்துவிண்ணோர்சூழவவன்போனான். (௫௫)

இன்னதாமிவ்வாபரணமென்பால்வந்தவழியென்று
பன்னுவேதமாமுனிவன்பகரப்பரமன்வியப்பெய்தி
மன்னுயிருகம்பறவைகளார்வழங்காதொழிதலிவ்வனத்தி
லென்னநிமித்தத்தாலிதுநீயியம்பென்றியம்பமுனியியம்பும். (௫௬)

தண்டனென்போன்மனுகுலத்தோன்றருமந்தயாவொன்றில்லாத
மிண்டனவன்றன்புரோகிதனும்வெள்ளிதவஞ்செய்வனநண்ணி
வண்டுபடிம்பூம்பொழிலிடைத்தவளர்சிரந்தமுனிமகளைக்
கண்டுகாமப்பரவசனாய்க்கலங்குநெஞ்சன்கருதுவான். (௫௭)

செந்தாமரைமேற்றிருமகளோதேவருலகின்றிவ்வுலகில்
வந்ததெய்வமடமாதோமண்ணிற்பிறந்தமணிவிளக்கோ
வந்தாமரையின்முகத்தினளாரோவறிகிலேனென்று
சிந்தாகுலமாய்த்தேர்மன்னன்பின்னுமிவையெசிந்தித்தான். (௫௯)

பஞ்சினடியோவணிகுறங்கோபழிப்பில்பணைத்தோல்குலோ
வஞ்சியிடையோவனமுலையோதோளோகழுத்தோமதிமுகமோ
நெஞ்சுகவர்ந்ததெனைத்தானகைத்தபவளச்செவ்வாயோ
நஞ்சுகலந்தவேல்விழியோநறுமென்குழலோவறியேனே. (௬௧)

என்றுகலங்கியவள்பால்வந்தெழுதவரியவெழிலுடையோ
யொன்றுதவத்தாலுனைப்பெற்றோன்பேரோவுன்பேருமாயென்ன
வென்றிவேற்கணிவள்விளம்பும்வெள்ளிமகளுன்மேதினியி
னின்றபுகழோய்சரையென்னநிசழ்பேயொன்பேர்மிலத்தென்றாள். (௬௦)

கல்லிற்செறிதிண்புயவேந்தன்காமசரத்தாலேவுண்டு
புல்லுக்கவ்விமான்றோற்கப்பொருவேல்விழியைப்பொருப்புகழிற்
சொல்லுக்கஞ்சிக்கிளியொளிக்குந்துடிநேரிடையைத்தொழுதிரந்து
புல்லச்சென்றுபுகுமவனைப்பூவைகண்டிங்கிவைபுகன்றாள். (௬௧)

எந்தைதழீஇலேமுலகுமிமைப்பிற்பொடியாமென்னுரைகொண்
டிந்தவிடத்துநில்லாதேயிப்போதேநீயேகென்ன
வீந்தவவள்சொற்கொள்ளாதேயனங்கசரத்தாலறநொந்து
வந்துமடவாள்குழல்பற்றிவலிதிற்புணர்ந்தாங்கவன்போனான். (௬௨)

அன்னதியோனேகவவளலக்கணோடுமாச்சிரமந்
தன்னின்மன்னிப்புகுந்தபடிதந்தைக்குரைக்கத்தாழ்குழலே
யுன்னையிடர்செய்தவனேயுரைத்தியென்னவொளிதிகழும்
பொன்னின்மணிகள்பொலிந்திலங்கும்பூணாள்புகுந்தபடிபுகன்றாள். (௬௩)

அந்தவெள்ளியனலென்னவாலகாலவிடமென்னச்
சிந்தையெழுந்தபெருங்கோபந்தீராவிடும்பையென்மகட்குத்
தந்ததண்டன்வளநாடுந்தானுங்கிளையுந்தந்திரமும்
வெந்துபொடியாய்விழ்கவெனவெல்லாம்பொடியாய்வீழ்ந்தனவே. (௬௪)

அவன்றன்னாட்டிற்றண்டகமாமடவியாகியாரழலிற்
சிவந்தவெள்ளிசாபத்தானரர்புண்மிருகஞ்சேர்வின்றித்
தவஞ்செய்முனிவர்நெருங்குதலாற்சன்மத்தானமெனப்போரா
யுவந்தகருணைபொழிவிழியாயுற்றதிதுமுன்பெனவுரைத்தான். (௬௫)

குண்டமுனியிவ்வகைகூறவெய்யோன்குடபாற்கடற்குளிப்ப
பண்டைமறைநூல்விதித்தவிதிப்படியேசந்தித்தொழின்முடித்து
வண்டுமுரலுந்துழாய்முடியான்வாய்த்ததவத்தோனொடுந்துயில்கொண்
டெண்டிசாமண்டலமேழுமிருணீக்கியபின்னியைந்தெழுந்து. (௬௬)

சந்திரொமுறைதவத்தோன்றன்சரணவிணைகடாழ்ந்திறைஞ்சி
யந்தமுனியாசிகள்கூறவம்பொற்றேரின்மிசையேறிச்
சிந்தையுவந்துகொடிக்கட்டித்தெருவுதோறுமலங்கரித்து
வந்தநகரியெதிர்கொள்ளவள்ளலயோத்திநகர்புகுந்தான்- (௮௭)

சம்புவன்வதைப்படலம்-முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௯௩௧.

௧௦-வது—அசுவமேதயாகப்படலம்.

மாத்திரைக்கடன்மன்னுறைமனுமுதலாயதன்மந்
சாத்திரப்படிதப்பாமற்சரிப்பித்துச்சகலத்துக்கு
நேத்திரமாகிநின்றேனெடுநிலைவாயில்காக்கும்
வேத்திரக்கரத்தோன்றன்னைவிளித்திவையியம்பலுற்றான். (௧)

எம்பியர்தம்மையின்னேகொணர்கெனவியம்பவந்த
வம்புயக்கண்ணனேவவாங்கவன்றலைமேற்சூட்டி
யெம்பிரானிராமனும்மையழைத்தனனென்னவந்தத்
தம்பியர்தவிசினின்றுந்தாம்விரைந்தெழுந்துபோந்தார். (௨)

தாமரைப்பெருங்கானத்துத்தையலோடுறைந்தசெய்ய
தாமரைத்தடங்கணானைத்தன்னுறுஞ்சுரும்புசார்ந்த
தாமரைக்காணுமாசைதன்னுறத்தம்பிமார்கள்
தாமரைக்கழலைத்தின்னவர்தாழ்ந்தினிதிருந்தகாலை. (௩)

அன்னதம்பியரையண்ணலருட்கண்ணாற்குளிரநோக்கி
யென்னுயிரனையவும்மாலிராசசூயந்தான்செய்ய
வுன்னினனென்னலோடுமுறக்கநீத்திரோமாண்டு
தன்னைமுன்காத்தவென்றித்தடஞ்சிலைத்தம்பிகூறும். (௪)

சொற்பொருடெரியாமைந்தன்சொல்லியகுதலைச்சொற்கள்
பெற்றதாய்க்கினியவாகும்பெற்றிபோற்பெருஞ்சொன்னூல்
கற்றறிவொன்றுமில்லேன்கழறிடுமிந்தப்புன்சொல்
கொற்றவாவின்சொல்லாகக்கொள்ளுதியென்றுகூறும். (௫)

பொன்னையேநோக்கிநிற்பர்பொருவிலமகளிர்மாரி
தன்னையேநோக்கிநிற்குந்தரணியிற்பைங்கூழ்தந்த
வன்னையேநோக்கிநிற்குமரும்பெறற்குழவியன்ன
நின்னையேநோக்கிநிற்பர்நிலத்துள்ளோரெல்லாம். (௬)

அன்றியுமரசர்க்கெல்லாமாவிநீயவர்களோடு
கன்றியேபொருதவென்றுகாவலர்தனங்கள்வாரி
யின்றுநீயிராயசூயஞ்செய்வதிலிறைவசால
நன்றியசுமேதஞ்செய்கையதனையானிலக்கேகட்டி. (௭)

சத்திரியம்புலன்கள்வென்றதபோதனனாந்ததீசி
யத்தியாக்குலிசத்தாலேயடல்விருத்திரனைக்கொல்லத்
தொத்தியபாவந்தன்னாற்றுளங்கியசுரேசன்பண்டு
சுத்தனானதான்பண்ணுந்துரகமேதத்தாலென்றான். (அ)

கொற்றவன்பாலிகுலிகோமகன்கொம்பனாளாய்
மற்றவன்றேவிசொன்னவாக்கினன்மைந்தனாய
பொற்றொடியாயதிங்கள்புதனுக்குப்புரூரவாவைப்
பெற்றபின்சாபநீங்கப்பெற்றதிப்பரிமேதத்தால். (கூ)

ஆதலாலசுமேதத்தையமுகிதென்றிருந்தேன்செய்கை
நீதிலாக்குணத்தோயென்றுசெப்பவுமகிழ்ந்துசெப்பு
மாதியாயனந்தகோடிமுட்டையிட்டளவில்வேத
மோதியவன்னமானதன்னைத்தானுணர்கலாதான். (க0)

வலைபயில்கடல்சூழ்மண்ணின்மன்னரைச்செருவிலோட்டி
யுலைவன்செய்யும்வேள்வியொழிந்தனமென்றுஞ்செப்பி
லிலைபொருளுணரவல்லோய்விளம்பியவயமேதத்தி
னளவறுபெருமைகேட்டேமதனையேசெய்துமென்றான். (கக)

சந்திரனனையகொற்றத்தனிக்குடைநிழற்றப்பாரா
ளிந்திரைகொழுனனெல்லாவிலக்கணமுடையமாவை
மந்திரவிதத்தோர்தம்மான்மந்திரிப்பித்தமாவைத்
தந்திரந்தாங்கவேவித்தரணியிற்போகவிட்டான். (கஉ)

சிந்தையாலயமேதத்தைச்செய்வதாநினைந்தேன்சிரா
ரந்தணரெனக்குத்தெய்வமாதலாலகத்தியாதி
நந்தலிறவத்தோரெல்லாநைமிசாரணியந்தன்னின்
வந்துமுடித்துப்போகவருகவென்றழைத்துவிட்டான். (கங)

நன்னெறிவேள்விசாணைநைமிசாரணியந்தன்னி
லின்னநாள்வருகவென்றாங்கிலங்கைமன்னவற்குமாவி
யன்னசுக்கிரீவனுக்குமனுமாற்குமடன்மன்னர்க்குஞ்
செந்நெறிக்குகற்குமண்ணல்திருமுகஞ்செல்லவிட்டான். (கச)

வேறு.

வரமுனமுனிவனாவானரோசனை
யாளுடையனுமனையங்கதன்றனைத்
தருவிகர்சத்துருக்கினனைத்தாவெனச்
சுரமலியவ்விடைத்தூதர்ப்போக்கினான். (கரு)

துனிபரிநெடும்பரித்தூதர்கூறலு
முனிவருமமரருமூரித்தானையும்
வனைகழலிளவலும்வானரோசனு
மனுமனுமாக்கனுமயோத்திமேவினார். (கசு)

வேறு.

பொருதிரைக்கடற்கணீரும்புண்ணியத்தினீரும்
தருகவென்றுசெய்யதாமரைத்தடக்கணுதன்
ஆகமேசப்பேர்வேள்விதடங்குாளின்றெருடேழு
சாதமாமென்றுகாடுநகரமுஞ்சாற்றச்சொன்னான். (௧௭)

மந்தரமலைமத்தாகவாசுகிகயிறதாகச்
சந்திரன்றனைதாகத்தடங்கடலுழியாகச்
சுந்தரத்தோள்களாலேசுதையெழக்கடைந்தமாயோ
னிந்திரன்பகைவற்கொன்றவிளவலுக்கினியசொன்னான். (௧௮)

சீலமாதவரும்யாமுஞ்சிறந்தவோமஞ்செய்யாக
சாலையுமனுமானுக்குந்தபனன்மைந்தற்குந்தாழ்ந்த
மாலைதாழ்முடிமன்னர்க்கும்வானரப்படைவேந்தர்க்குங்
கோலவீடணற்குமாடக்குறைவறச்சமைப்பியென்றான், (௧௯)

நன்றெனவவன்போர்தந்தைமிசாரணியாண்ணி
யொன்றியபலவேர்பூட்டியுழுதொக்கிலஞ்செய்வித்துத்
தன்றனையற்றவேள்விச்சாலையுஞ்சமைப்பித்தோங்குங்
குன்றுறழ்மாடகூடகோபுரஞ்சமைத்தபின்னும். (௨௦)

மணிமுடிமன்னர்க்கெல்லாமாடகூடங்கள்செய்வித்
தணியுடைச்சேனைக்கெல்லாமகஞ்சமைப்பித்தவர்தோர்
தணிபெருஞ்சோற்றுச்சாலைசார்ந்தவர்விடாயுங்கூடப்
பணிநறுந்தண்ணீர்ப்பந்தர்முதலெலாஞ்சமைப்பப்பண்ணி. (௨௧)

ஆவணவீதிதோறுமணிபெறுகதலிபூகந்
தூவணக்கொடியுமாட்டித்தோன்றுதோன்றிடங்களெல்லாங்
காவணம்பரப்பிவெள்ளைமணலிட்டுக்கலங்காவாற்ற
லேவணைச்சிலையோன்வந்தங்கிராமனுக்கினியசொன்னான். (௨௨)

அமைந்ததுவேள்விச்சாலையண்ணலேயுனக்குக்கோயில்
சமைந்ததுமன்னர்க்கெல்லாந்தாவளஞ்சமைந்ததென்ன
நமைந்தெமரிடத்துநன்னூர்நண்ணிடனுகானுந்
சுமந்தபூபாரந்தீர்த்தனயவனிதுசெய்தான். (௨௩)

ஆயிரகோடிகோடிபொன்னுமத்தகையகோவு
மாயிரகோடிபாரமரிசியும்பயறுமென்னு
மாயிரகோடிபண்டிகறிகளுமிளகுநெய்யு
மாயிரகோடிபொன்செய்பாவையுமடங்கக்கொண்டு. (௨௪)

பாதனும்பதினுலாண்டுபகலிராவுறக்கநீத்த
வீரனுமுன்னர்ப்போகவிடைகொடுத்தருளிப்பின்னர்ச்
சாதனமாயவேள்விதடங்குாளின்றேடேழு
சாதமென்றெழிற்கொளுநகரமுஞ்சாற்றச்சொன்னான், (௨௫)

வென்றிகொளிராமன்வேள்விநடாத்திடவிருந்தான்று
வின்றுடனேமுராளென்றெறிபறையறையக்கேட்டுக்
குன்றுயர்செம்பொன்மாடக்குலவியநகருளாதி
யொன்றியவேலையென்னவொலியுறப்பெருகிற்றன்றே. (உ௬)

வேறு.

குறைவிலான்றில்லைக்கோசலநாட்டிற்சனமெல்லாம்
பிறைநுதன்வேள்விகாணவிசைந்தொங்கெங்கு
நிறைபொற்கும்பமுடனெய்விளக்குநின்றேத்தி
புரைசீர்மாடத்தொன்னகரஞ்சென்றுறுவாரும். (உ௭)

கேதுவிளங்கும்கேழ்கிளர்செம்பொற்குலைவாழை
சோதிவிளங்குந்தோரணமெங்குநடுவாரும்
வீதிகடோறும்வெண்மணலெங்கும்விடுவாரும்
வேதிகைமாடவாயில்விதானம்புனைவாரும். (உ௮)

காலையுதித்தகுழாமிதுபோலக்கனகத்தாற்
கோலமிழைத்தமாளிகைதோறுங்குடம்வைத்து
மேலொளிமுத்தின்றாமநிரைத்துந்திருவைம்பூ
மாலிகைதேகாவணமிட்டேமகிழ்வாரும். (உ௯)

சாலைகடோறுங்கோவலர்நெய்பாறயிர்வெண்ணெய்
கோலநெடுங்காவிற்கொணர்வாருங்குறைவற்ற
வாலரிசித்திண்பண்டிகள்கொண்டுவருவாரு
மூலபலங்காயுங்குளமுற்கந்தருவாரும். (௩௦)

வண்டாரைம்பான்மங்கையர்கண்ணுமனமுந்தாழ்
தண்டார்நாதன்சாலைகடோறுஞ்சமைவுத்தங்
குண்டாருண்டுமிக்ககல்சோறுமுயர்வெற்பிற்
கண்டார்கண்டகண்டிடமெங்குஞ்சொரிவாரும். (௩௧)

வந்தவரைச்சீர்மாநகருள்ளோர்மகிழ்வுற்றுத்
தந்தமனைக்கேகொண்டுபுகுந்தார்சனமெல்லாஞ்
சிந்தையுவப்பவின்னமிர்தாவதினிதூட்டிச்
சந்தனமப்பித்தண்ணறுமென்பூத்தருவாரும். (௩௨)

குதைகொங்கைச்சோருமிடைச்சென்றவர்வாயொண்
பேதையர்நெஞ்சம்பின்செலவன்பிற்பிரிவாரா
வாதைசெயும்போர்மாறுமஞ்சம்வடிவோர்மா
வீதிகடோறும்வீரர்விநோதம்பயில்வாரும். (௩௩)

கோழிப்போருங்கொண்டசினப்போர்த்தகர்முட்டும்
பூழிப்போருமஞ்சுதலின்றிப்பொருவோரும்
பாழித்திணேதோள்வீரர்பகற்கண்டிரவெல்லாம்
விழிச்செவ்வாயார்கலவிப்போர்மிகுவாரும். (௩௪)

கொஞ்சுகிளிச்சொற்கோபவிதட்டாம்குழலார்தங்
கஞ்சமுலைக்கோலஞ்செய்வகண்டாடவர்தாழ
விஞ்சொலிநற்பூண்மேனிவிளக்கப்புனையாமென்
பஞ்சியடிக்குப்பல்லணியெல்லாமணிவாரும். (௩௫)

படர்திருள்கேசப்பாரமதிற்பன்மலர்பெய்துந்
தடமிகுகொங்கைசந்தமணிந்துந்தகவில்லோர்
வடமிகுமுத்தின்கோவையணிந்தும்வலியின்றி
நுடங்குமிடைக்குண்ணோவுகளேசெய்திடுவாரும். (௩௬)

ஆளியனார்தம்மாருயிர்கொள்வாரணிநாகக்
கோளறுமுத்தங்கோவைகுலைத்துத்தெரிவாருங்
காளையர்நெஞ்சங்கொள்ளமனத்திற்கருவிக்கண்
வாளிகளுள்ளேமையெனுநஞ்சமிடுவாரும். (௩௭)

மென்றுணைநுண்பட்டாடையின்மெல்லவிரைசோஇக்
அன்விரைபைம்பொற்காஞ்சியரைக்குப்புனைவாரும்
பொன்றுணைகல்லிற்பொற்புரையென்னப்புனையாடி
யின்றுணைநல்லோர்தம்மெழில்கண்டுமகிழ்வாரும். (௩௮)

வள்ளலிராமன்வந்திலனோவந்தனனோவென்
றொள்ளிழையாளாவீதியிலோடவிடுவாரும்
கள்ளவிழ்கோதைக்காரிகையாரிவ்வழிநண்ணப்
பள்ளிகொளாழிப்பைவிரிநாகப்பாணிப்பால். (௩௯)

வேறு.

அரக்கர்கள்குலத்தினையறுத்தவடல்வீரன்
நெருக்கினடப்பரிதெமக்கெனநினைத்துச்
செருப்புரியெதிர்ப்படைபடச்சினவுவாளால்
முருக்கியகடற்படையைமுற்செலவுரைத்தான். (௪௦)

குன்றனையதேர்புரவிகும்பியொடுகாவல்
வென்றிபுனைவீரர்நெடுவீதிதொறும்விம்மிப்
பின்றுமெனமுன்பிலவர்போவழிகாணார்
நின்றபடியேயவர்கணின்றனர்நெருக்கால். (௪௧)

ஒன்றியபெரும்படைகருங்கடலுடைந்த
தென்றுசொலலாரும்வகைவாயிறொறுமேகித்
துன்றியெழுதூளிபடலந்திசையைமூடித்
தென்றிசையின்மேலினிதுசென்றதுபரந்து. (௪௨)

ஓய்வில்விசையோடுகடலோடிடுகலம்போன்
மேயமதிவெண்குடைநுரைச்சுழிகள்பாயப்
பாய்திரையுடைப்படர்படைக்கடலினுள்ளே
போயினவிசும்புறுபொருங்கொடியபொற்றேர். (௪௩)

வெம்பியமனத்தனவிழித்துணைமுகக்கா
ரம்புறந்திறத்தனமுழக்கெனவசைக்குங்
கம்பமுறழ்கைக்கறையடிப்பின்றமருப்பிற்
கும்பிகளிருட்குவடெனக்கடிதுபோன. (௪௪)

கலன்கலனெனுங்கவின்விளங்குகனகத்தாற்
பொலன்கொள்புனைபூண்கள்புனைதிர்குரவனைவல்
விலங்குதலிலாதவரின்மேல்வருதநாதன்
புலன்செல்வழியாகவழிபோம்பரிகள்போன. (௪௫)

எடுத்ததழைசத்திரமிடத்தவடையாளக்
கொடித்திகழ்தாக்கொலையயிற்கொலைஞர்சுற்றக்
கடற்படைசெருப்புரிகளத்தவியவொன்னார்.
படச்சிலைவளைத்தவர்படைத்தலைவர்போனார். (௪௬)

இறந்தகருமங்கொடுவருங்கருமமெண்ணிச்
சிறந்தவரசன்கருமநாடியதுசெய்வோ
ரறந்தழுவுநெஞ்சினரசஞ்சலர்பிழைச்சொன்
மறந்துமொழியாதவர்கண்மந்திரிகள்போனார். (௪௭)

பூசுகமழ்சாந்தினர்புனைந்ததிகழ்பூணோர்
மாசறவிளங்குமணியாரமணிமார்பர்
தேசுடையவில்லிதிருவேள்வியதுகாணு
மாசையினராய்விரைவினுடவர்நடந்தார். (௪௮)

கஞ்சமலர்விஞ்சுகவினஞ்சியமுகத்தோர்
கொஞ்சுகிளிமென்சொலியர்கொங்கைகள்சுமந்தே
வஞ்சிபுரைநுண்ணிடைவருந்தவழிகாணு
மஞ்சர்கண்மனந்துடரமங்கையர்கள்போனார். (௪௯)

தங்கள்விழியஞ்சியுழைதன்னினமொடோடப்
பைங்கிளிசொலஞ்சியினமோடவைபறப்ப
வங்கண்மயில்சாயலவையஞ்சியகலச்சீர்
பொங்குபுணர்பூண்முலையினார்கள்சிலர்போனார். (௫௦)

மத்தளமுடுக்கைதமருங்குவரவானத்
தாத்தமையுருப்பசியுமுட்குமுருவத்தோர்
சித்திரமணிச்சிவிகையோரரசனைத்த
மத்திரவிழிக்கொலைசெய்தாகுமவர்போனார். (௫௧)

மண்ணின்மறுவற்றொளிர்மணிச்சிவிகைமீதே
நண்ணிசையிலேமனநுழைந்திசையினுண்ணூல்
நண்ணினவர்தும்புருவுநாரதனுநாணப்
பண்ணிசைகலந்தவழிபாடுமவர்போனார். (௫௨)

குண்டிகையர்குந்தாடையோர்கள்குடையோர்கைத்
தண்டமேர்திரித்தண்டியக்கலையர்சாரப்
பெண்டிகைட்கையிராமாதமெனவந்தெப்
புண்டரிகவள்ளலையுளார்கள்போனார். (௫௩)

மூலமெனவாயவொருமூன்றுதொகையாலே
காலமொடுகோணிலையறிந்துகடிதாகிச்
சால்புடையசாயைசலசாதனமதாகக்
கோலியறிசோதிடவர்கூடியவர்போனார். (௫௪)

இளைக்கருவிவித்தகரிசைத்தவழிதான்கும்
குணக்கிரியையெட்டுமறிகோதறுகுணத்தோ
ரணைத்தொகைமலைச்செய்தசலத்தையறுவாக்குங்
கணக்கர்கண்மணிச்சிவிகையிற்கடிதுபோனார். (௫௫)

வானுடல்கொண்டவர்களோடுவருகண்டோர்
தேனையனின்சொன்மடமங்கையர்சிரிப்ப
வர்வியரிதேர்வரிலகப்படுவமென்றுக்
கூனருமருப்புகுறளருங்கடிதுபோனார். (௫௬)

மண்டலமதிர்க்கிடவறங்குவழியிற்க
ணுண்டுகள்படக்கிகரிதாழபடவெண்ணு
மெண்டிசைகளுங்கடகடென்றுமொலிவெய்தப்
பண்டமலைவெய்தவியர்பண்டிகள்பரந்த. (௫௭)

கரிக்கொடுதிரட்டியதெனக்கரியமெய்யர்
பெருத்துயர்தடக்கையறவிட்டபெருவாயர்
சருக்கியில்சரக்கைமலையிற்பெரிதுகுற்றுப்
பரித்தலைசிக்கமொடுப்பாவர்போனார். (௫௮)

நன்றெனவிளங்கிடநடந்துசெலுமம்பொற்
குன்றின்மிசைபேருசிலகோலமயில்போலப்
பொன்றிகழ்மணிப்புரவிபூண்டபுனைதேர்மேன்
மன்றல்கமழ்வார்குழலினார்கள்சிலர்போனார். (௫௯)

மேகநிறவண்ணல்பெருவேள்வியதகாணு
மோகைதமையுந்தவனிபூணெழிலிபாக்க
வேகமொடுபோகுமுகின்மின்னலினமெனக்க
னாகவெரின்மிசைசிலநாரியர்கள்போனார். (௬௦)

தாவிவிளையாடேயவருத்தக்கிளிவிளக்குந்
தாவியினவன்னவினமென்றுவகைமெசால்லக்
கூவுகுயின்மென்சொலவணிகோலைவிகர்வாயார்
வையபரியிற்றகும்மாதர்சிலர்போனார். (௬௧)

முடிசியிணைச்செலுமொருத்திமுகமுன்பே
வாடைகதுவித்திரையெடுப்பமறைமஞ்சின்
மாடுறவிளக்குமதியொத்தவெழின்மஞ்சு
கூடுமதியொத்ததுகுலைத்துதிரைவீழ. (௬௨)

ஒன்றுகருமங்கிடையிலொன்றொழியவொன்றே
வென்றிதிகழ்வில்லிபெருவேள்வியெழில்காணச்
சென்றகுமார்க்குமணங்கேமொழியினார்க்கும்
பின்றலிலாவகைவிளைந்ததுபெரும்போர். (௬௩)

வென்றவர்களோடுவர்கள்வேறொருநிலத்தே
யென்றுகொளலாமெழில்கோளைமையர்கணம்பாற்
சென்றுபகைவென்றதிறலாடவர்களேவுண்
டொன்றுமறியாதுவழிநின்றனருளைந்தே. (௬௪)

கஞ்சமலராளனையகாமினிகள்கண்ணால்
நெஞ்சுபறியுண்டுசிலவீரர்நெறிகாணார்
வஞ்சகமுமஞ்சமடமாதர்விழியென்னும்
வெஞ்சரமுநெஞ்சுறவுளைந்தனர்கள்வீரர். (௬௫)

தூமதிமுகத்தியர்களாடவர்துளங்கிப்
போமதியலத்தொடுபடைத்தலைவர்போய்நற்
கோமதிநதிக்கரையினைக்குறுகவிப்பால்
மாமதிகொடெட்டரியமாயனிதுசெய்தான். (௬௬)

வேறு.

செந்திறலினச்சேவடியிரண்டுஞ்செறிகழல்செறிந்திடச்சேர்த்திப்
பொன்னிறவாடைபொலிவுறச்சாத்திப்புனைமணிக்கச்சைபொருத்தி
மின்னிறவுடைவாள்கச்சொடுவிசித்துவிளங்குறுதரபெந்தனத்துக்
கன்னிறச்சோதிகதிரவன்சோதிகாட்டிடக்கவின்பெறக்கட்டி. (௬௭)

அஞ்சனவரைபோலழகியமார்பத்தாரமும்பதக்கமுமணிந்து
மஞ்சனிவாகுவலையமதணிந்துமாமணிக்கடகமுஞ்சாத்திக்
கஞ்சநன்மலர்போற்கைவிரலாழிகளைச்செறிகவினுறச்சாத்தி
வஞ்சிபோலிடையார்மாலுறக்கோலக்கழுத்தினின்மணிவடஞ்சாத்தி.

செந்துவர்வாயுந்தாமரைக்கண்ணும்புருவமுநெற்றியுந்திகழுஞ்
சுந்தரவதனந்துலங்கிடவிலக்குஞ்சுடர்மணித்தோடுகள்சாத்தி
யிந்திரநீலக்கற்றையைவிழுங்கியிரவிமண்டலங்கருவரைமேல்
வந்துதோன்றியதுபோன்றிடத்திகழவளரொளிமணிமுடிசாத்தி. (௬௯)

திருமணிமார்பன்றன்றிருநெற்றிதிகழ்திருநாமமுஞ்சாத்தி
யெரிமணிச்சோதியரியணைநின்றுமிழிந்திளையோர்கள்கைகொடுப்ப
வருமணியாரத்தவனியாண்மன்னனருள்வழிபுகுந்துபோயார்கள்
குருமணிமகுடகோடிகடேய்க்குங்கோபுரவாயிலைக்கடந்தான். (௭0)

மத்தளமுகிக்கைபேரியொண்படகம்வீணையொலிகொம்பொலிகாள
மெத்திசைதோறுமெழுதொலிதாளத்தெழுமொலிதுடியொலியெங்கும்
வித்தகர்பாடும்பாட்டொலியாழின்விளையொலிசச்சரிதாள
மொத்தொலியெல்லாமோரொலியாகியுலாக்கடல்கிளர்ந்தெனவோங்க.

மங்கையர்வாழ்த்தமாகதரேத்தமறையவராசிகள்கூறப்
பொங்கியகடலிற்புடைபரந்திரைத்துப்பொன்னகர்ச்சனம்புடைசுற்றப்
பங்கயில்கீரன்பங்கயக்கண்ணாற்பார்த்தபார்த்திடமெலாஞ்சனங்கள்
செங்கரங்கூப்பதேவர்களுவப்பவேதியன்செழுமணித்திண்டேர். (எ௨)

வேறு.

கம்புலவத்தரித்தகையிற்கார்முகந்தரித்தான்வந்தா
னம்புயக்கண்ணன்வந்தானம்பருக்கன்பன்வந்தான்
றம்பியர்க்கினியான்வந்தான்றசரதராமன்வந்தான்
உம்பருக்கமுதமுன்னுதவியவொருவன்வந்தான். (எ௩)

மனுகுலம்விளங்கத்தோன்றிவரிசிலையிளையோனோடு
முனியொடுபோனான்வந்தான்முப்புரமெரித்தவில்லி
தனுவினையிறுத்துச்சீதைதனைக்கரம்பிடித்தான்வந்தா
னனையவருடனேமீண்டுமயோத்தியிலடைந்தான்வந்தான். (எ௪)

தாயுரைதலைமேற்கொண்டுதையலையுடனேகொண்டு
தீயவெங்கானஞ்சேர்ந்தசெருவலிவில்லிவந்தான்
தூயமாமுனிவன்முன்பேதோன்றியதூயோன்வந்தான்
மாயமாரீசன்மாளவரிசிலைவளைத்தோன்வந்தான். (எ௫)

அருமனையடிமைகொண்டாங்காயிரங்கதிரோன்மைந்தற்
கினியனாய்வாலிமாளவெரிசரந்துரந்தான்வந்தான்
கினைவதன்முன்னமாழிகொலாநெருப்பதாகக்
குனிசிலைவளைத்தான்வந்தான்கோசலநாடன்வந்தான். (எ௬)

குன்றினாலாழிகட்டிக்கொடுந்திறற்சேனையோடு
சென்றிராக்கதரையெல்லாஞ்செருக்களத்தவியநூறித்
தன்றிறலழிந்துநின்றதசமுகன்வலிமைகண்டங்
கின்றுபோய்நாளைவாவென்றியம்பியவிறைவன்வந்தான். (எ௭)

முன்னநாஞ்சொன்னநாளில்முடுகிநாஞ்செல்லோமாகில்
வன்னியிற்பரதன்வீழுமென்றுதன்மனத்திலெண்ணி
யன்னவனெரிவீழாமலனுமனைமுன்னேயேவிப்
பொன்னகரடைந்தான்வந்தான்புவனமூன்றுடையான்வந்தான். (எ௮)

என்றுபின்னங்கடம்பிலிசைந்துடன்மாதிரூதத்
தன்றுணையிலாதவென்றித்தசரதராமன்றேர்மேற்
பொன்றிகழ்மாடவீதிபுகுந்தனனென்னக்கேட்ட
வென்றிவேற்கண்ணினார்கடந்திறம்விளம்பலுற்றேன். (எ௯)

இந்திரஞாலமொக்குமிடையினுமொய்சல்பெற்றோர்க்
கிந்திரபோகமொக்குமெழின்முலைத்தடந்தோல்கு
கிந்திரகோபமொக்குமிதழினுமொதிர்ப்பட்டோருக்
கிந்திரசாபமொக்குமிருகுழையெரியுங்கண்ணார். (௮௦)

இந்திரசாபமொக்கும்புருவத்தாரிருண்டுநெய்த்த
விந்திரநீலமொக்குங்குழலினாரெழுதவொண்ணா
விந்திரவடிவையொக்கும்வடிவினாரெதிரிலாற்ற
லிந்திராஇருவர்காணவெழுந்தபேருவகைமிக்கார். (௮௧)

சிலம்புகள்சிலம்பச்செம்பொற்சீறடிசிவப்பக்காஞ்சி
குலைந்திடமருங்குநோவக்குவிமுலையசையக்கூந்த
லலைந்திடவலம்புசோதியணிகளோடணிகடம்மின்
மலைந்திடவருந்தியோடிமங்கையர்மறுகின்மொய்த்தார். (௮௨)

பேதையராத்யாகப்பேரிளம்பெண்களீறு
மாதர்கண்மாடந்தோறும்வாயில்கடோறுமாட
வீதிகடோறும்வீதிவேதிகைதோறும்விம்மிக்
காதலானதுமிக்கோங்கக்கண்ணனைத்தெரியக்கண்டார். (௮௩)

வண்ணமாமுகிலோமையோமரகதவடிவோவள்ள
லொண்ணிறமிவையொன்றாகவுருக்கியவுருவோவென்பார்
கண்ணிணைசெவ்வாய்பாதங்கைத்தலங்கமலமென்பார்
புண்ணியஞ்செய்தாரிந்தப்புறக்கொடைதொழுவாரென்பார். (௮௪)

கள்ளமாமனக்கைகேசிகண்களாலிவனைக்கண்டு
முள்ளழற்கானத்தேவமுயன்றனண்முன்னாளென்பா
ரொள்ளழற்றூயகற்பாலுயர்ந்தகோசலையென்பாளிப்
பிள்ளையைப்பெறுதற்கென்னபெருந்தவஞ்செய்தாளென்பார். (௮௫)

சிறந்தசீர்முகமுங்கண்ணும்புருவமுஞ்செய்யவாயு
நிறைந்தபூண்மார்புமெங்கணெஞ்சுவிட்டகலாதென்பா
ரறம்புரிமனத்தளாகியருந்தவஞ்செய்துபெண்ணாய்ப்
பிறந்திலளிவனைப்பெற்றும்பெற்றிலள்சீதையென்பார். (௮௬)

பங்கயக்கண்ணாற்பற்றிப்பார்த்தனனம்மையென்பா
ரங்கவைபொறாநோக்காகுமவனியில்வந்துதோன்றுஞ்
செங்கயற்கருங்கட்செவ்வாய்ச்சீதையைப்பார்த்தகண்ணால்
நங்களைப்பார்க்குமோதான்ஞாலநாயகனின்றென்பார். (௮௭)

கயனெடுங்கண்ணாரிவ்வாறுரைத்திடச்சிலவர்காதல்
மயலுறக்கண்ணன்றன்மேல்வைத்தகண்வாங்கமாட்டார்
துயலுறுமனத்தராகிவளைகலைசோரத்தங்கள்
செயலறச்சேட்டையற்றுச்சித்திரம்போலநின்றார். (௮௮)

கொக்கவினைகுழலோர்மங்கைகொண்டலைக்கண்டனள்காமன்
கொக்கவனைக்குறத்திப்பாயமென்மயில்போலவிழ்ந்தா
ளக்கவனைப்புடையோர்தாங்கியெரிதினிற்கொடிபோய்மாதர்
பொக்கவளைக்கிடத்தித்தேய்ப்புனன்முகத்தெளித்துத்தேற்றுள். (௯)

கணக்கருகிறத்திருநான்கன்வழியருள்வந்தென்
மனத்திடைப்புகுந்தான்லந்தவழியவன்போகிற்பின்னை
யெனக்கவன்பிடிக்கொடானென்றிமைக்கதவடைத்தாளேழை
நினைத்ததுமுடித்தேனென்றுநெடுநிலைமாடம்புக்காள். (௧0)

போதையற்கொருத்திதன்கைபெய்வளைகழலின்று
காதலாற்றொழுதேனென்னையணிவளைகொண்டானென்க
வீதயன்கருணையான்சென்றிரந்திடத்தாரானேலென்
வாய்தவிலைவருவர்தால்வளைக்குநான்வளைப்பேனென்றாள். (௧௧)

புனைமலர்ச்சாயற்பைம்பொற்பூண்முலையொருத்தியந்தச்
சனமுடைத்தெருவைவிட்டுத்தசரதராமனென்றன்
மனத்திடைத்தவிபேவந்துபுகுந்தானானுறங்கும்போது
கனவிடைத்தோன்றுமேதான்கருத்தினைமுடிப்பனென்றாள். (௧௨)

இவ்வண்ணமடவாரெல்லாமினவளைகலைகள்சோரச்
செவ்வண்ணமரியார்தங்கள்சிந்தைமாலாகிநிற்ப
மைவண்ணமுகில்போய்மாடவளாகர்வாயினீங்கி
யுய்வண்ணமுலகையெல்லாமுன்புயிரொருவன்போனான். (௧௩)

ஆனைதேர்புரவிகாலாளடியிடவிடம்பெறாத
சேனைமாகடல்சுற்றுசூழ்ச்சிறந்தவர்மருங்குசெல்ல
வானமுமண்ணுமெல்லாம்வளர்துகள்கரவமன்னர்
கோனகர்நாதனைசென்றகோமதிநிலையையுற்றான். (௧௪)

வேறு.

நாயகன்யாகசாலையினமுகுநாவிலமன்னவர்முதலோ
ராயவர்க்கெல்லாமமைந்ததோரிடமுமவரவர்க்கிட்டகாவணமும்
வாயிலுமமருமண்டபமுங்கண்டுமகிழ்ந்தொளிதிகழுமால்வனையை
யேயுமண்டபத்தினினியவர்சூழவினிதிருந்தருளியகாலை. (௧௫)

வேறு.

காரைநெருங்குகொடையங்கர்வங்கர்கலிங்கர்காம்போசர்
வீரராயபாஞ்சாலர்விலாடரிலாடர்விறன்மிக்க
சூரராயமகதேசர்தோலாவென்றியாதவர்கள்
சேரசோழபாண்டியர்கள்சிந்துமன்னர்திரிகத்தர். (௧௬)

காருவைவேற்காம்பிரர்கங்கர்கொங்கர்கருநாடர்
சேதிமன்னர்குருமன்னர்சிங்களேசர்சாந்திகர்
சோதிமணிமாமுடிச்சனகர்துருக்கர்துளுவரெனவிவர்க
ளாதியாயமுடிமன்னரனவில்சேனையொடும்வந்தார். (௧௭)

தன்னில்வலியோரிலாவனலனிலனரன்சேர்சம்பாதி
யென்றுமமைச்சர்புடைசூழவெதிரிலாதசேனையொடு
மின்றுமணிமாமுடிச்சோதிவெய்யோனுதையவெயில்விரிப்ப
மன்னனிராமன்பெருவேள்விகாணவலிவிடணன்வந்தான். (கூஅ)

சங்கன்குமுதன்சதவலிபோர்த்தாரன்சாம்பன்சரபன்போர்ப்
பங்கமிலாதவங்கதன்றன்சங்கன்பனசன்பாருலவி
லெங்கும்வலியேறியநீலனிடபன்கவயனெதிகடலைத்
தங்கவணைசெய்தவன்மயிந்தன்றுமிந்தன்றுமிரன்றன்மருடன் (கூகூ)

ஊழிநெருப்புங்காற்றும்போலுடன்றுபொருகேசரியாதி
பாழிமிக்கபடைத்தலைவர்பக்கஞ்சேவித்துடன்பெருக
வேழுபத்தின்பெருவெள்ளமென்னுந்தகைவானரச்சேனை
சூழவென்றியநுமனுடன்சுக்கிரீபன்றோன்றினன். (க00)

ஆசையற்றதூயநெஞ்சத்தாங்கோவத்திரிமாயைக்
காசையற்றஞானக்காசிபன்கோசிகன்விதனப்
பாசமற்றமதக்கிரிபன்பரத்துவாசன்கோதமன்பன்
னேசமற்றுள்ளுறவடுவுண்ணெடியதவத்துச்சாபாலி (க0க)

காயங்குறியநெடுந்தவத்தோன்கண்ணுவன்றௌமியன்கனலிற்
றூயனுயபுலத்தியன்றன்சுவத்திதவத்தைத்துரந்தழிக்குந்
தீயபுலன்களைந்தடக்கித்தெளிந்தஞானப்பிருகுமுத
லாயமாயப்பிறப்பறுத்தோரகண்டவேதக்கரைகண்டார். (க0உ)

கையிற்றிகழும்பவித்திரர்கள்காதிற்றூங்குங்குண்டலத்தர்
மெய்யிற்றிகழ்ந்துதோன்றொளியாவிளங்குமாடைமரவுரியர்
பொய்யிற்புராணநாவினர்நற்பொருளுட்செல்லுந்தியானத்தோ
ரொய்விற்கரத்தோன்பெருவேள்விகாணவெழுந்தவுவகையினோர். (க0ங)

சின்னூல்வழியாமறுசமயச்சிலுகில்வீழாதுலகுய்யத்
தொன்னூலன்னமாயுரைத்ததூயோன்காணவச்சுருதி
நன்னூலெல்லாமுருக்கொண்டுநடந்துசெல்லுமாபோல
முன்னூறிகழுந்திருமார்பர்முனிவர்வேள்விவனம்புகுந்தார். (க0ச)

தேடுதனம்பூணுடைமுதலடங்கக்கொண்டுசேனையொடுங்
கூடியடங்கவருதலினலந்தக்குலமன்னவர்வாழும்
நாடுந்தூயநலமிக்கநைமிசாரணியமென்னுங்
காடுநாடாயினதென்றற்சனத்தையாரோகணக்கிடுவார். (க0ரு)

தொக்கமுனிவரானோரைத்தொழுதுதன்னைத்தொழுதோர்க்குத்
தக்கவுபசாரஞ்சொல்லித்தழுவித்தழுவிக்கொள்வோனை
மிக்கவுவகையொடுந்தழுவிவேந்தரொடுமாமுனிவரொடு
மொக்கவிருந்தவில்லியவற்குவகைசொல்லியுவந்திருப்ப. (க0சா)

படிமன்னியிராமன்றன்பணியினதுபரிதிகாத்ததென
முடிமன்னவர்க்குவிடைகொடுப்பமுன்னஞ்சமைத்தவிடத்தவர்கள்
விடும்வண்ணஞ்செய்தெல்லோர்க்கும்வேறுவேறுசமைப்பித்த
கடிமன்னியசீரிடந்தோறுங்களிக்கவிடுவித்தானிளையோன். (௧௦௭)

முட்டுமுத்தியந்தணர்கண்முதலாநீசர்கடையாக
விட்டுந்தனமார்பெருவேள்விக்கிளையோன்சமைவித்திடுமமுதம்
காட்டுமடியிற்றம்முடையகாதன்மடவாரன்பிலொடு
மூட்டவுண்ணுமாபோலவுண்டுகளித்தாருறுசனங்கள் (௧௦௮)

வாட்டமில்லாவனையானமாமந்தரத்தைமத்தாக
நாட்டிவெய்யவாசுகியாமாநாகத்தைநாணாகப்
பூட்டியாழிகடைந்தமுதம்புகழவானோரானோரை
யூட்டினுற்றிவ்வுலகுள்ளோர்தமைச்சோறூட்டலொருபொருளோ. (௧௦௯)

வேறு.

பாலொடுதயிருநெய்யும்பலசுவைக்கறியுஞ்சோறுஞ்
சாலகடோறுமுண்டசனமெலாந்தருக்கிமிக்குக்
கோலமின்வில்லிகோதில்குணங்களேயெடுத்துக்கூறி
வேலைசூழுலகிலிந்தவேள்விபோற்காணேமென்றார். (௧௧௦)

அரசருக்கமலன்பொன்னுமாடையும்பூணுநல்கி
யிரவிசேய்தனக்குஞ்சேய்க்குமிலங்கைமன்னவற்குமன்று
பருதிமேற்பாய்ந்தோனுக்கும்படைத்தலைவருக்குமைம்பொற்
குருமணிப்பொன்னும்பூணுமாடையுங்குகற்குமீந்தான். (௧௧௧)

வறியவர்வேண்டிற்றெல்லாம்வழங்குவன்வள்ளலென்றுஞ்
செறிபறையறைதலோடுமிரவலரானோரெல்லாம்
பறையறையோசைகேட்டுப்பழமரந்தன்னில்வீழும்
பறவையுமறவிழ்தேனிற்பலசனம்வந்துமொய்த்தார். (௧௧௨)

பொன்னைவேண்டினர்க்குப்பொன்னும்பூமிவேண்டினர்க்குப்பூவும்
பன்மணிவேண்டினோர்க்குமணிகளும்பலவுமற்று
மின்னதுவேண்டுமென்றுமிரவலரானோரெல்லாஞ்
சொன்னசொன்னவற்றையாங்கேதூமணிவண்ணனீய்ந்தான். (௧௧௩)

வேறு.

ஆசையற்றதுய்மனத்தினனஞ்சினனாகி
நேசமற்றுயர்மேவியவிரிடைமூழ்கிப்
பாசபத்தியறத்தினன்பல்லுயிர்க்காகக்
கூசியெய்த்தடியிடாதறக்குந்தியநடையான். (௧௧௪)

அன்னமாமுனியண்ணலையடைந்தவன்மொழிவான்
பொன்னும்பூமியும்பொருள்களுமெனக்கென்கொல்புகல
வல்லைவேண்டுவனுண்டெனக்கொடுக்கலாகுவதோர்
மன்னர்மன்னனேமாவரிவழங்கெனச்சொன்னான். (௧௧௫)

கடுத்தநீவினைகடிந்தவன்கழறிடக்கேட்டுத்
தடுக்கவொண்கலாவுலகையன்றசாதராம
னுடுக்கலாவனமாவுரியொருசகடுருட்டி
யெடுத்துவிட்டவற்றினினுரைத்திராகவனிருப்ப. (கக௬)

ஓதவேதமோருருவுகொண்டனவெனுமொருவன்
பூதமைந்தொடுபொருந்தியவுயிரெலாந்தம்மிற்
பேதமின்றியேகண்டிடும்பெருந்தவமுனிவன்
கோதினீதியான்கொடுத்தனன்கொள்கலான்கூறும். (ககஎ)

செய்க்கும்பூவைவீதிறத்திறேய்நீயெனக்கொள்கென்
றுய்க்கும்பல்பெருந்தனத்தினுளொருபொருளில்லை
வைக்கும்போதருளாதவலியதாக்கினதாக்
கைக்குநொய்யதோர்கமண்டலம்வேணுமென்றுரைத்தான். (கக௮)

பொருந்துமாமணிபொன்னினுற்றிகழ்வுறச்சமைத்துத்
திருந்துபேரொளிர்கமண்டலஞ்சீதான்கொடுப்ப
வருந்தவன்பெரிதகமகிழ்ந்தவனொடுமினிதா
யிருந்தவேலையினிருந்தவனொருவனியம்பும். (கக௯)

மன்னுகீர்த்திசேர்மன்னவென்பாரிதான்வாலை
சொன்னவார்த்தையொன்றுண்டதுசொல்லுவன்கேட்டி
மன்னர்மன்னனைவள்ளலையிராமனைக்கண்டாற்
பொன்னினம்மனைவேண்டுதியெனக்கெனப்புகன்றாள். (கஉ0)

சோதிமாமணிதுன்றவிற்சுடர்விடுதொழில
வேதபாரகன்வியந்திடவாங்கவன்விரும்பு
மாதராளிருகைதொழுமாறியாடிடவன்
னாதிநாயகனம்மனைவேண்டுவவளித்தாள். (கஉக)

மருடனைப்பெற்றமாதராள்சிறியபொழுது
கருடனைக்கண்டபாம்புபோற்கலங்குவோனவட
னருடனைப்பெற்றபோதறவாழ்ந்துவிற்றிருப்போன்
குருடனொப்பவக்கொடியவள்படுகுழிவீழ்ந்தோன். (கஉஉ)

தீதென்றுள்ளனவெவற்றினுஞ்சிந்தைசெல்லாதோன்
சாதுவேதியன்றன்மனைபுகுந்துதான்கொண்ட
மாதராடனைவல்விரைந்தெய்தியான்மாதே
யேதுவேண்டுவனிராமனையெனவவளியம்பும். (கஉ௩)

நெஞ்சிற்றூய்நிறைகுணத்திராமனைக்கண்டா
லஞ்சிப்பல்லிளித்தடலையாயகலகில்லாதே
பஞ்சிப்பாழ்த்தநம்மிடிசொலிப்பலவும்வேண்டாதே
கஞ்சிக்குக்கலப்பயறுவேண்டுதிகடிதென்றாள். (கஉ௪)

என்றுகூறுமிராமனைவேதியனெய்தி
நின்றபோதவன்வறுமையைமிகவுநினைந்து
குன்றுபோற்றனங்கோனிரைகொடுத்திடவிவையா
தொன்றும்வேண்டலேன்காரணக்கேளெனவுரைக்கும். (கஉ௫)

மாரிகிட்டப்பெற்றும்பெறுவன்பயிரொனவென்
பாரிகஞ்சிக்குப்பயறுவேண்டினள்சலமொழிய
பிரர்விரனேவேறொருபொருளேவேண்டுவனேற்
சேரலாளவனென்றெடுத்தீறுமென்றுரைப்ப (கஉசு)

அவாவில்வேதியனகத்தவன்கூறியவதனைச்
சவாவியாமறையாதுசொல்லினனிவனென்று
தவாநெடுங்கொடைத்தசரதராமனுண்மகிழ்ந்து
சவாசனங்களுந்தாறுமேமகிழ்ந்துகொண்டாடி (கஉஎ)

காயம்வெவ்வினைக்கலைவலோன்மனைவிறுள்கஞ்சிக்
காயநெல்லுநாறுயிரக்கலம்பெறவருளித்
ஆயாற்பயறத்தொகைகொடுத்திடச்சொல்லி
நாயகன்திகழ்ந்தற்றயற்களித்திடுங்காலை. (கஉஅ)

இந்தைபொய்முதல்கடிந்ததோரிருபிறப்பாளன்
மந்தைசவிரியநிறத்திறேயமாகதிதனக்கு
நஞ்சமாயபொருளிலோர்நசையிலேயெனக்குப்
பஞ்சகவ்வியங்கொள்ளவோர்பசுவருளென்றுன். (கஉகூ)

வேறு.

வேதநாயகனிவ்வாறுவேண்டினோர்வேண்டிற்றெல்லா
மாதனஞ்சுரபிபூமிமணிமுதல்வழங்காநின்று
போதுபோக்கிடுநாட்போயோராண்டையிற்புரவிமீட்டுக்
காதுவேற்காவலாளர்கட்டியகாளின்வந்தார். (கநO)

பதியில்வாழ்பசுக்களோடுபழுவத்துப்பசுக்கள்வேத
விதிமுறையலவையும்வாரிவிளங்குநீர்க்கங்கையாதி
நதிகளிற்றீர்த்தநீருநாற்பெருங்கடலநீருங்
கதுமெனக்கொண்டுவந்தார்கால்கடியோர்களெல்லாம். (கநக)

ஏதமிலிலக்கணத்தவெழுமூன்றுசாணளத்த
காதிரயூபமாறுங்காசிலபலாசமாறும்
வேதியர்விதியிற்சொன்னவில்லுவயூபமாறுந்
தீதறுதேவதாரமிரண்டுதற்செல்லுவாறும். (கநஉ)

யூகமுமேவழுமூன்றுமமைத்தனவாணிகுற்பஞ்
சோகஞ்சோமியஞ்சருக்குச்சாவஞ்சூர்திசமுமான்றோல்
மைகயாற்றகைவல்லோர்செய்கலமுதவாதியாக
மகபாத்திரங்கள்வந்தபணித்தனன்முகூர்த்தமெய்த. (கநங)

வேறு.

இன்னிசையிராகவற்கியாகசாலையுட்
பன்னியாங்கினிமையிற்பட்டுழந்தபின்
மின்னியநுண்ணிடையிறலைவல்லியாம்
பொன்னியல்பாவையும்புணர்ந்துசேர்த்தினார். (௧௩௪)

மாதிரநான்கினுள்வழங்குவான்புகை
மீதெழுந்தண்டகோளகையின்வீங்குற
வேதியாருமறைவேதநூலினி
லோதியதருவினால்தூபகாட்டினார். (௧௩௫)

எழுகதிரவன்பரியென்னவெண்ணிரு
செழுபரிகொணர்ந்தபின்றேவரியாவரும்
தொழுபரிசலகெலாஞ்சுருங்கவோடிடக்
கொழுகனகத்தினாற்குளம்புகட்டினார். (௧௩௬)

நீடியபதினாறுமுனிவர்நீள்கடல்
கோடியவுலகெலாங்குறையக்கூர்மறை
பாடியபதினாறுபவளப்பச்சைமா
வோடியவடிதொறுமோமம்பண்ணினார். (௧௩௭)

நலங்கிளர்புவியெலாநடவிமீண்டபி
னுலங்கிளர்தோளினானுவப்பயூபத்தில்
வலங்கிளர்மரகதநிறத்ததான்மணி
யிலங்குளைப்பரியெலாம்யாப்புறுத்தினார். (௧௩௮)

வரிந்தபைங்கழலினான்மகிழமாதவர்
தெரிந்தமந்திரத்தினைச்செவியிற்செப்பினின்
றரிந்தனரரிந்ததாரவனிசேப்புறச்
சொரிந்தனதிசையெலாந்துளைந்தசோரியே. (௧௩௯)

பருத்தடிதனையரிந்திட்டுப்பைம்புனக்
குருத்தழல்கொழுந்துவிட்டெரியக்கோதிலாக்
கருத்துடைமறையவர்கனிந்தகாதலா
லருத்தினராவுதியமரர்தம்மையே. (௧௪௦)

வேறு.

தேவர்களல்லறீர்த்தவிராமன்முன்செய்தசெம்பொற்
பாவையைத்தனுவகத்துப்பாரியாச்சங்கற்பித்தும்
பூவையையனையதன்மைப்புரோகிதன்சடங்குகாட்டத்
துவருந்தவர்களோடுந்துடங்கினான்வேள்வியென்ன. (௧௪௧)

வேறு.

இசைபுனையிராகவனினையவேள்விகண்
ணசையுறவேட்குமந்நாளினாண்டிறை
வசையறுமதுரவான்மீகிமன்னிய
குசலவர்வருகெனக்குறித்துக்கூறினான். (௧௪௨)

சுந்தரத்திருநிறத்தூயவெண்ணகைச்
செந்தாப்பவளவாய்ச்சிவந்தவாள்விழிக்
கொந்தணிகுழற்குசலவர்கள்கோதிலார்
வந்தனர்முனிவனைவணங்கிமன்னினார். (௧௪௩)

இடாமுனிவரனிகலிராகவ
னடல்புனைந்தேத்தியவளவிலாதபோ
ரிடிமொழிக்காப்பியமதனினிசை
படாதமாசவைபகர்திர்போயென்றான். (௧௪௪)

சந்தனிவிருபுயச்சனகர்கோமகள்
மைந்தவொன்றறிவுருவகைமறந்தனி
ரந்தணிருந்துழியாசர்சேர்ந்துழிப்
பைந்துவர்வாயினிர்பகர்திரென்றனன். (௧௪௫)

வேறு.

உழையினிவிளரிதாரங்குரல்கிளைதுத்தமென்னும்
பழையனவிசைகளேழும்பான்மையிற்றெரியப்பண்ணு
னிழுமெனவிசைக்குங்கோள்களேழவைதிவவுகாட்டி
மழவிடையனையநீரார்மாடகயாழ்கைக்கொண்டார். (௧௪௬)

கவிதருபவளச்செவ்வாய்க்காமனுஞ்சோமன்றானு
முனிவர்தம்வடிவங்கொண்டமுறைமையதாகுமென்னப்
பனிமலர்வேணிசாத்திப்பருவரையருவிபோல
விளியவெண்புரிநூன்மார்பிலிலங்கிடவலங்கரித்தார். (௧௪௭)

முனிவனைவணங்கிநீங்கிமுழுமலர்ப்பன்னசாலைச்
சனிமையைவிடைகொண்டிப்பாற்றருமிசைவருடைபாயும்
பனிமலர்ச்சோலைநீங்கிப்பலவரியுழுலைவக்காகக்
கனைகுரலுழைகண்டுஞ்சாக்கல்லதாத்தஞ்சேர்ந்தார். (௧௪௮)

காலவரம்பைமாய்க்குங்கல்லதாமூவநீங்கி
வாலவாம்பைமாதர்மணிபயில்குறங்குபோல
வானவரம்பைநீத்துமலாயனுலகுசேருங்
காலவரம்பைகுழுங்கடிமனற்கங்கைசேர்ந்தார். (௧௪௯)

பூந்தயின்கமலமீதுபொரியெரிப்பெய்தபோலக்
காத்தருபூகப்பாளைகதுமெனவுதிருங்கங்கை
யார்த்தனரேதியாங்கனருமறைமுனிவர்சூழ
வேத்தவையிருந்தகோலவியலெரிவேள்விசென்றார். (௧௫௦)

கோடகங்கொண்டகேள்விக்கோல்களோரேழுங்கோத்த
மாடகயாழையின்றிவரிசிலையுளதேயாகிற்
பாடகமலர்த்தாளன்னைபணிமொழிமறுதுபோகிக்
காடகமகிழ்ந்தமீண்டவண்ணலேபோல்வரென்றார். (௧௫௧)

வேறு.

வெம்பரிவேள்வியிலிருந்தவேந்தரு
மும்பருமுனிவருமுளமகிழ்ந்திட
விம்பரினிராகவனிசைகொளின்னிசை
தம்புருநாரதர்தலையப்பாடினர். (௧௫௨)

மாடகயாழிடத்தேந்துமைந்தராற்
பாடியவின்னிசைப்பனுவறஞ்செவி
யூடுறநிறைதலாலுருகுசிந்தையோ
டேடலர்தாரினாற்கெடுத்துக்கூறினர். (௧௫௩)

வேறு.

ஓதநீர்வண்ணவேள்விகாணியவ்வந்துவந்த
மாதவர்மன்னராதிமாசபைமைந்தர்பாடுக்
கீதமுதெய்வகானஞ்செவிமடுத்தினிதின்மாந்தி
யீதுநாமிதற்குமுன்புகேட்டறியாததென்றனர். (௧௫௪)

வேறு.

அனையவர்த்தருகெனவரசனேவலும்
புனைதுகிற்போர்வையர்புலிக்கண்பார்வைய
ரினநகைமுடியினரிடிக்குஞ்சொல்லினர்
அனைமலரடியினர்தொழுதுபோயினர். (௧௫௫)

ஆயசீராகவனருளிப்பாடென
வாயில்காப்பாளருமகிழ்ந்துகூறலு
மேயெனுமாத்திரையினையமைந்தரும்
போயவராசவைபுகுந்துமேவினர். (௧௫௬)

நான்முதலெழுவகைநரம்புகூட்டிய
விரல்கவர்ந்தடுத்துளவேதர்சீரியாழ்
கரமிசைவாங்கினர்கவின்கொள்காப்பிய
வுரைபயிலின்னிசையுரைப்பதாயினர். (௧௫௭)

பொன்னியல்சீதைதன்புதல்வர்பாடிய
வின்னிசைமருவியவியல்கொள்காப்பியந்
தன்னிசையாதலாற்றரளவெண்குடை
மன்னவன்மைந்தரைமகிழ்ந்துகூறுவான். (௧௫௮)

வயம்புனையிராகவன்மைந்தர்தம்மையம்
புயற்றிகழ்விழிமலர்புனைந்துநோக்கியிப்
பயன்கெழுகாப்பியப்பனுவலின்னிசை
யியம்பினரியாவர்நீர்யாவரொன்றனன். (௧௫௯)

நம்பெரும்புகழினைநனித்துக்கூறினன்
வம்புயர்கங்கைவான்மீகியம்முனி
தம்பமென்றவனுரைதலையிற்கொண்டுளோ
மெம்பெயர்குசலவரென்றுகூறினர். (௧௬0)

நீடியதன்றுருநேர்க்குமோரிரண்
டாடியபாலவயனுருக்கவ்வனே
பாடியபனுவலாற்பத்தின்மேலுமென்
கோடிசெம்பகம்போனேகொடுமினென்றனன். (கசுக)

வேறு.

மன்னவர்வலியின்வெளவாவளமனைக்கள்ளர்கொள்ளா
வின்னுயிர்க்கிறுதிசெய்யாவிழந்தபினிரங்கல்வேண்டா
நன்னியதுயிலையொட்டாத்தோகையர்காதல்கூட்டா
வுன்னியபொருளுநிட்டாமுடைமையின்மைமான்றல். (கசுஉ)

புரியர்தமைவேந்தாக்கும்புவிபுரப்பிக்குந்துய்க்குஞ்
சீரியவண்டிசேர்க்குந்தேவர்தம்முலகம்போக்குங்
காரியமனைத்துங்கூட்டுங்கருதலர்தம்மைவாட்டுங்
கூரியதிறன்மேலில்லைசொழும்பொனீர்கொண்மினென்றுர். (கசுங)

மூலமுஞ்சாகந்தாமும்பலங்களுமவற்றகொள்ளு
மாலையமுனிவரோடவ்வனத்துறைவோமதாலுங்
காலைநீரருகின்றகாஞ்சனங்காஞ்சிரங்காய்
போலுமதெங்கட்கென்றுபுகன்றனர்புதல்வர்தாமே. (கசுச)

குருதிவேற்றுனைவேந்தன்குசலவர்தம்மைநோக்கி
வருதிரோவெம்பாலின்னமைந்தர்நீரென்றுகூறப்
பருதிவேற்றடக்கைவேந்தேபாடுதுநாளும்வந்தென்
றரிமலர்த்தாரினையகன்றுமாமைந்தர்போனுர். (கசுரு)

பன்னியபனுவலின்சொற்குசலவர்பாடுகின்ற
வின்னிசைகேட்டுநாளுமியல்வழியொருநாளந்தப்
பொன்னியற்சனகிபெற்றபுதல்வரென்றறிந்துவாங்கித்
தன்னிகர்புதல்வர்தம்மைத்தழுவினனெழுவத்தோளான். (கசுசு)

மருந்தெனத்திகழுமின்சொன்மலிபுகட்கற்புக்கந்த
வருந்ததிகற்புநாளுமாதலையறிவனேனு
மிருந்தமுனைதனின்மூழ்கியிலங்கையிலமரர்காணப்
புரிந்ததுபுரியுங்காணப்புரிவிப்பனின்றுமென்று. (கசுஎ)

வேதியர்வேந்தர்க்கெல்லாம்விடைகொடுத்தருளிநின்ற
காதலர்தம்மைப்புல்லிக்கறுமெனவெழுந்துகாதன்
மாதுமைதிலிதனேடும்வாமுனிவருகவென்று
தூதரையேவிப்பைம்பொற்சுடர்மணிக்கோயில்புக்கான். (கசுஅ)

இருளெல்முழுதங்காணவெரியிடைமூழ்கியின்னும்
வருகெனமடந்தைதன்னைமன்னவனருளிவிட்டான்
வெருவுறுசழலினுள்ளல்வீழ்த்துறவண்ணங்காணு
சருளுடையகிலோடியருச்சனுமத்தஞ்சார்ந்தான். (கசுகூ)

வகைமிகுமன்னனென்னமறிந்தபின்வல்லியெல்லா
முகைகமழ்கமலமிழ்ந்தகண்ணீர்சொரிந்தனமுனிவோரின்
தொகைமிகுமாமும்புன்னையுமொடுங்கினதொல்லைவேலைச்
செகதலமென்னுமங்கைதிகழ்முகஞ்சிவந்ததன்றே. (௬௰)

வேறு.

தண்ணெனும்படிதன்னிழுன்றோன்றிடி
கண்ணிகந்தவர்கண்டனன்காரிரு
ளெண்ணிகந்ததிகாந்தமுமெங்கணும்
விண்ணுமண்ணும்விழுங்கினபோன்றதே. (௬௧)

ஆபமென்குழற்றோகையர்தம்முடன்
றூபமேவிடத்தாமவர்மேற்செல்வான்
கோபமென்பதென்முன்னர்க்கொளுத்திய
தீபமென்னவெழுந்ததுதிங்களே. (௬௨)

வேறு.

கொங்கவிழ்குமுதமுங்கூடிவாடிய
மங்கையர்நயனமுங்குவிந்தவாரணஞ்
சங்கொடுவலம்புரிதமரவண்டினும்
பங்கயம்பலவும்வாய்ப்படமலர்ந்ததே. (௬௩)

தகைமிகுமுலகினிற்சார்ந்துளோர்வயின்
மிகுகொடைபவர்புகழ்விளங்குமாறுபோல்
வகைமிகுபெரும்புகழ்வானமீமிசை
யகன்மதியொளிகெடவருக்கன்றோன்றினான். (௬௪)

காலையகடன்பலகழித்துக்காவலன்
மாலைவந்தடியிணைவணங்குமாதவர்
சாலமாவிதிபெறவளித்துத்தன்புனல்
வேலைசூழருக்கனில்விளங்கினானரோ. (௬௫)

நலந்திகழுலகொருநான்குமேவிய
வலந்திகழ்மன்பதைமருங்குசூழ்தரத்
துலங்கியநவமணிச்சுடர்கொளாடக
விலக்குசிங்காசனத்திராமனேறினான். (௬௬)

வடித்தபைங்குழலடிமறைப்பமாசற
வுடுத்தவெண்டுகிலினளொசிந்துபின்வரத்
தொடுத்தவெம்புற்றிடைத்தோன்றுமாமுனி
யடுத்தபேருலகுறையவையின்மேவினான். (௬௭)

விரிகதிரவனொளிவிளங்கவீசிய
வெரிமணிப்பூணினனிகரிலாதவன்
மருவுறவெதிர்செலவந்துதோன்றிய
வருமறைமுனிவனையடிவணங்கினான். (௬௮)

வணங்கியமுனிவனைமுன்வைத்துத்தானுமோ
ரிணங்கியவாசனத்திலிருந்தபி
னுணங்கியமுகத்தினனொன்றுநோக்கிலன்
அணங்கியபூமியைநோக்கிநின்றனன். (௧௭௯)

காதலிதற்பிணக்ககனமீதலாற்
பூதலமிசையருந்ததியும்போற்றுமா
லாதலாலரசனேயறிவன்யானெனக்
கோதிலாவருமறைமுனிவன்கூறினன். (௧௮௦)

அன்னதுவாய்மையேயன்றிக்கங்கைபோல்
மன்னியகுலத்தொருமாசுகூறுவோர்
அன்னியநரகிடைத்துய்ப்பராலெனா
முன்னியவருமறைமுனிவன்கூறினன். (௧௮௧)

முனிவனியருளியமொழியையானவ
ரினைவருமியானுமுன்னறிவமாயினுங்
கனைகடலுலகுளோர்காணடல்வேண்டுமென்
றினையனவிராகவனெடுத்தியம்பினன். (௧௮௨)

காட்டியவுலகொருநான்குமோரவை
யீட்டியசவைநடுவிசைத்தவம்மொழி
வாட்டடங்கயல்விழிமடந்தைமைதிலி
கேட்டனளினைதொறுங்கிளருஞ்சிந்தையாள். (௧௮௩)

ஒன்றியகேண்மையானுவந்தபோதினுங்
கன்றியபோதினுங்கலந்தபோதினு
மன்றெனவில்லெடாநலங்கொள்கற்பினை
யின்றொருபொருளினுமியம்பற்பாற்றதோ. (௧௮௪)

பூதலமிசையருந்ததியும்போற்றிய
நாதலையறிந்திருந்தவனிமீமிசைத்
தீதிலென்கட்டளைதிகழமேவிய
காதலன்றிதெனிற்கற்புண்டாகுமோ. (௧௮௫)

மருத்தினியுரைப்பதென்வாயின்வைத்தநஞ்
சிறக்கிடினலதுயிர்க்கிறுதிசெய்யுமோ
வறக்கொடும்பழியுரைத்தருள்வராயினோர்
பிறக்கெனுநெஞ்சினைப்பிளந்துகாட்டுகேன். (௧௮௬)

தேன்கமழ்குழலியைமுனிவன்சேறலென்
றுங்கவனுரைப்படியையந்தீர்கெனத்
தாங்கியகமண்டலத்தண்ணெனீரினை
வாங்கியாசமித்தினைவழங்கினளரோ. (௧௮௭)

வருந்தியேபயந்தமற்றென்கற்புமவ்
வருந்ததிகற்புமொன்றெனதென்றிடற்
பெருந்துதிமானிலம்பிளத்தியென்றனை
விருந்துதியமாருமேத்துங்கற்பினள்; (௧௮௮)

பலதலைமாசுணப்பள்ளிமேவிய
நிலைபெறுகற்பினணிதிகொண்மேனியாள்
மலைமுலையாகத்தாண்மாரிக்கூந்தலா
ளலைகடலாடையாளரிவைதோன்றினள். (௧௮௯)

சேணுலாவியதலமடந்தைசீதைதன்
பூணுலாவியபுயம்பொருந்தப்புல்லுறீஇ
வாணிலாவியகதிர்வழங்கல்செல்கலாக்
கேணிலைப்படலமுங்கிழியப்போயினார், (௧௯௦)

நீதலதென்வயிற்றிகழ்ந்தநின்மனை
யாதலிதென்கொலன்றையமெய்திடக்
காதலிபோனதோர்வழியுங்காண்கிலான்
பூதலமடந்தையைப்புலர்ந்துசீறினன். (௧௯௧)

முனிவனாங்கையின்முகந்துகொண்டவக்
கனைகடல்புடைத்திடக்கிடந்தகாசினி
பனிமதிவேணியான்பாவம்போக்கிய
புனிதனோடிக்கிடம்போந்ததில்லையால். (௧௯௨)

குயிற்றிடப்புனைந்தநன்மவுலிக்கோளகத்
துயிற்றிடைக்கிடந்ததுஞ்சுநாத்தினு
றெயிற்றிடைநாகத்துமெங்கணாயகன்
வயிற்றிடைக்கிடந்ததுமறந்ததென்கொலோ. (௧௯௩)

கடறிரைத்தூரப்பவுங்காண்கிலாமையன்
றடநெடுஞ்சிலைவளைத்தம்புநான்விடப்
படவெரிகொளுத்தியபவ்வந்தன்னிலோர்
திடர்கொலோமறைத்ததுசீதைதன்னையே. (௧௯௪)

பூதலந்தன்னையிப்புணரிசேறெழப்
பாதலத்தழுந்திடமிதிப்பன்பாவியென்
மாதவிதனைமிகவருத்தங்காண்குறு
மாதலினதற்கென்றுமாற்றலான்றனை. (௧௯௫)

இன்னனவுரைத்துரைத்திகலிராகவன்
றன்னியபுவியினைத்தணிப்பனென்றுழிப்
பொன்னிகர்சததளப்பூந்தண்கோயிலில்
மன்னியபிதாமகன்வந்துதோன்றியே. (௧௯௬)

வானகமாருநம்மவன்விதிதொறும்
போனகம்விரும்பியோராலின்பொற்றவிர்
மோனலத்துறுமயின்மேவிமேலைநாட்
கானிலத்துலகொருமன்றுங்கணபினாய். (௧௯௭)

ஒப்பருமிலமையாயுனக்குநான்சில
செப்புவதுளதுசிறிதுகேண்மதி
யெப்பொருளாய்மிகவிருண்டவானகத்
தப்புறமாயுமேயடங்குமின்றுரு. (௧௯௮)

மின்றுளேபிறந்தொளிர்மேகமாமென
நின்றுளேபிறந்தொளிர்நிலையில்யோனிக
ளுன்றுளேபிறந்திறந்தொளிப்பதல்லது
வென்னிலேபிறப்பிறப்பென்னலாகுமோ. (௧௯௯)

முந்தைநாட்புலத்தியமுனிவன்மைந்தனுர்
தந்தைக்கெசமுகன்றனைக்கொல்வதற்
கிந்தகாலமார்வந்திரந்ததாலவன்
வந்துமானிடவர்தம்வடிவிற்றோன்றினுய். (௨௦௦)

ஆதிநீயுலகெலாமளித்துக்காக்குநும்
போதுநின்றுந்தியிற்பூத்ததாமரைத்
தாதியுறமணியத்தலிப்பொருட்டினின்
மீதுநின்றுலகெலாம்விரித்ததல்லவோ. (௨௦௧)

வேறு.

ஆதலாலுனக்கன்றுவந்தவிப்
பூதலத்திடைபுக்கமங்கைநின்
காதன்மங்கையாலவனைக்காண்பதன்
றீதிலாநிலத்தென்றுசெப்பினுன். (௨௦௨)

ஆதலாலுனக்கறிவுமன்னினுற்
றீதனுன்றனைச்செய்கொணுதநற்
கேதுவாலினைவயியன்றதேயெனு
வேதநான்முகன்விரித்துக்கூறினுன். (௨௦௩)

அங்கண்வானகத்தமலனுமெனப்
பங்கயாசனப்பரனுரைத்தலுங்
துங்கவார்சிலைத்துணைநெடும்புயச்
செங்கண்வீரன்வெஞ்சினமொரீயினுன். (௨௦௪)

கதலிசூழ்பொழிற்கய்லைநாடறு
மிதிலைமெல்லியல்பயந்தமென்னகைக்
குதலைமென்மொழிக்குசலவப்பெயர்ப்
புதல்வரைத்தழீஇயேவியுக்கனன். (௨௦௫)

அம்புயத்திடத்தரிவையைப்புனை
யம்புயத்தில்வைத்தாருமன்பிருன்
வெம்பரித்தொகைவேதவேள்வியோ
ரைம்பதிற்றிரண்டவைமுடித்தனன். (௨௦௬)

சேடருயிரஞ்சிரமசைத்திடக்
கோடுலாமதிக்குழவியன்னகோட்
டோடையானைவிஞ்ம்பரோதியே
யாடல்வாசியானையோத்தியெய்திருன். (௨௦௭)

தன்குடைக்கிடத்தலமோரேழையும்
பொன்பெய்மாரியான்பொதுவறப்புரந்
தன்பர்சூழவாஎரசர்போற்றநீ
டின்பமேறுகர்ந்தினிதமேவிருன். (௨௦௮)

அசுவமேதயாகப்படலம்-முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௧௧௭௬.

-வது—கந்திருவர்வதைப்படலம்.

இன்னதன்மையாலினியவையகம்
மன்னியாருநாட்பலகழிந்தபின்
கன்னன்மென்மொழிக்கவிர்கொள்செய்யவா
யன்னகோசலைக்கந்தமுற்றதால். (௧)

பொன்னின்வையமும்புரவியீட்டமு
மன்னுவேழமுமறவர்வெள்ளமுந்
தன்னமன்னவர்தொழுபதாம்புய
னன்னடாளின்மேலழுதவிழ்ந்தனன்.

வேறு.

தொன்னேர்வைவேற்கோசலமன்னன்குலமங்கா
யன்னேயன்னேயத்தனுமுன்னேயகல்வுற்று
னின்னேநீயுமென்னையுநீத்தாயெனில்யானும்
பின்னேவந்தேன்வந்தனனென்றேபேதுற்ருன். (௩)

கொந்தார்கோலக்கோசலநாடன்குலமங்காய்
சந்தார்மார்பத்தசரதனின்பத்தனைவல்லி
யந்தோவந்தோவையனொடியடியேனும்
வந்தேன்வந்தேனென்றுதளர்ந்தேமாழ்குற்ருன். (௪)

பொன்னேமுத்தேபூதலமேழும்புகழ்மேவுந்
தன்னேரில்லாத்தசரதன்மார்பந்தனியாள்வா
யன்னேயன்னேயென்றிருகண்ணீரறவார
வென்னேயென்னேயென்றிளையோருமிடருற்ருர். (௫)

வேறு.

அழலிடையிருப்பபோலடிகிலத்தரு
விறையணிமுலைத்தடத்தெத்தியெற்றியே
குழலெனவிறைமற்றனைத்தேங்கிக்கோதிலா
மழலையஞ்சொல்லினார்மாழ்கிவாடினார். (௬)

செழுந்தடங்காவிலிறந்தசந்தட
வழுந்திடவிடமகமடுக்கியாடவர்
முழங்குசங்கொலியெழமுரசபேரிகை
தழங்கிடச்சடங்குகள்சமைந்தபின்னரே. (௭)

காத்தனிசிரத்தினர்கவிழ்ந்தகண்ணினர்
திரைத்தெழும்பலசனமிரங்கிப்பின்செல
வாத்தமென்கரத்தியரஞ்சொல்வஞ்சியர்
விரைக்கருங்குழலியர்விமானமேறினார். (௮)

இடரினையுழந்தழுதேங்கிக்கண்ணினீ
ரடலமர்மார்பகத்தருவிபோலுகக்
கடனவைகழிந்தபின்காதலன்னையைப்
படரெரிமயானமேற்பள்ளிசேர்த்தினார். (௯)

சேதனர்புகல்தரத்திலமைவார்புனற்
கோதினன்பிண்டமுங்கொடுத்துச்செல்கையாற்
பூதனங்கோதனம்பொலஞ்செய்பல்கலன்
மாதனமறையவர்பெறவழங்கினான். (௧௦)

இன்னநாள்சிலகழிந்திருந்தகாலையிற்
கன்னல்செய்மொழியள்கைகயன்மடந்தையுந்
துன்னியகுழற்சுமத்திரையுமென்றுமில்
வன்னையரிருவருமர்ந்தமெய்தினார். (௧௧)

மடங்கல்போன்மொய்ம்பினன்வரிசையின்வழா
தடங்கலும்விதிமுறையமைத்துமாரிபோற்
கடன்கருமறையவர்களிக்கநல்கியே
தடம்புனல்படிந்தாற்றனுஞ்செய்தனன். (௧௨)

வேறு.

தானைமன்னர்தொழுகழற்காற்சத்துருக்கன்றனக்குமிளை
வானரர்க்குமன்னனுக்குமகனுக்கும்மம்மாருதிக்கு
மீனமமருங்கடலிலங்கைவிடணற்கும்விடையருளி
யேனைமன்னர்புடைசூழவிலங்குமொளியாசனத்திருந்தான். (௧௩)

வேறு.

மொய்காமர்விழியார்தமுலைமுகடுபொருதடந்தோட்
கொய்கேயவரிமுரல்தார்க்கொடைப்பரதன்றிருமாமன்
கைகேயன்குலக்குருவாங்கலைமறைதேர்காசிபனும்
பொய்கேதமில்லாதபுகழ்முனிவனவைபுகுந்தான். (௧௪)

பூரணமாயகம்புறமும்புளகிப்பப்புனைதளப
நாரணன்றன்றிருநாமநவின்றொருகான்மறவாத
வாரணமாமறையோனையடிவணங்கிநீவந்த
காரணமேதனையென்றுகதிர்வடிவேலவனுரைத்தான் (௧௫)

போதுபுனைகமழ்தாராய்புகழ்புனைகந்திருவர்களுன்
மாதுலனையமர்தொலைத்தவவ்வினரால்வளநாட்டை
யேதியிலுலவாவெதிர்ந்தினிதாள்கையியல்பென்று
வோதுமறைமுறைதெரிந்தவுயர்முனியுமுரைசெய்தான். (௧௬)

தக்கனுடன்புட்கானைத்தடமகுடம்புனைவித்தாத்
திக்குநிகழ்காந்தவனைத்திறன்முருக்கிச்சென்றநா
டொக்கவுடன்றடிப்படுத்தியொருதனிநீவருகவெனு
மக்களுடன்பாதனையும்வான்முறையேசெலவிடுத்தான். (௧௭)

வேறு.

குறைமதியனையவெண்கோட்டுக்கோலமா
நிறைமதிபுரைவனதிலகநெற்றிய
சிறைமதுகரங்களுந்தேனினீட்டமு
மறைதருமும்மதத்தருவிவாரணம். (௧௮)

நிழலொடுமலைவனநீள்காத்தன
வழலுறுவிழியனவசலம்போல்வன
தழைசெவியுடையனசமரந்தீர்ப்பன
மழையெனவிதிர்வனமதகைவாரணம். (௧௯)

குட்டியமணியனதலங்குசெவ்வரக்
கூட்டியவருளையவொளிகள்பொன்னிறற்
கோட்டியகொடிஞ்சியகுதிரைநான்குடன்
பூட்டியசெழுமணிப்பொலன்கொடேர்பல. (௨௦)

நிறப்பலமணியெனுநிறங்களெண்ணில
உறப்பெரும்புவிபெறுதென்னவும்பரிற்
பறப்பனபோல்வனபதமத்தெண்ணன
பிறப்பனபெருங்கடல்பெரியதிக்கன (௨௧)

நிலத்தடியிடம்பெறுதென்றுநீண்டவா
றலத்திடைமிதிப்பபோற்றுவுங்கோளது
வலத்தினுமிடத்தினும்வாவுங்கொட்பது
குலத்தினுக்கிசைந்தனகுரகதங்களே. (௨௨)

ஒத்ததுபிறந்தனபூதத்தாயின
வெத்தகப்பிறந்தனவெள்ளைவாணிறம்
பத்தருமுகத்திலும்பயந்தபான்மைய
வத்தியிற்கடியனவாசியீட்டமே. (௨௩)

நார்முகத்தனனயம்பரோமாத்திரை
கூர்முகப்பகழியர்சொரிந்தனெருஞ்சினர்
கார்முகக்கரத்தனர்கழலர்கல்லென
தார்முகத்தெழுவுதோட்டுணைவீரரே. (௨௪)

இனையனகரிபரிவிரதம்வாளரி
யினையவரங்ககான்றமுன்செலப்
பனிமதிவெண்குடைப்பரதன்றனுமோ
ரினமிருகதிர்மணித்தேரிலேறினான். (௨௫)

அந்தரமதிர்வுறவார்க்குமார்ப்பொலி
யிந்திரன்றிசைமுதலெட்டுமெட்டிடத்
தந்திரத்தலைவருந்தமூவிச்சூழ்வர
மைந்தருமணியணிவையமேறினார். (௨௬)

அம்பொற்றிருநகர்தருமயோத்திமாநக
ரிம்பிறசைவாயில்விட்டேகுமப்படை
கமிழ்தருஅமூராய்மகக்கன்னியாறுகர்
தமிழ்தருமுலமினையொத்தவாமரோ. (௨௭)

முரசொலிவினையொலிமுழங்குவாழ்த்தொலி
புரசணியானையின்புனைந்ததேரொலி
யாசொலிநெடும்பரியமைந்ததேரொலி
பரசொலிசங்கொலிபரந்தெங்குமே. (௨௮)

பாதவநெரும்படைப்பாப்பினுலிந்தத்
தவாதினாசவதினசாற்றவேண்டுமோ
காதலைவழிந்னஅனியான்மறைந்
திரவிதனெழுபரியேமிற்றில்லையால். (௨௯)

பாகைவென்றடர்வனபடர்மருப்பின
மோகவெங்கரிசொரிமும்மதத்தினு
லோசைவெம்புனல்பரந்தோடநீடிய
வாகவெம்பாலையுமருதமானவால். (௩0)

எரிதவழ்பாலையுமிருங்குறிஞ்சியு
மரிதவழ்முல்லையுமபல்கொணெய்தலு
மொருதனிநீசழ்ந்தபின்றுடையானையான்
மருதமாஞ்சிக்நாட்டதனின்மன்னினான். (௩௧)

வேறு.

வந்தபரதன்றனதமைர்தருடனேயந்
சித்திரவனநாட்டினிடைவிட்டசெயலெல்லாம்
புந்தியுருகச்செவிபுகப்படுகதந்தாற்
சந்திருவர்கேட்டனர்கடுத்தலறனத்தார். (௩௨)

கரித்தெழுமினத்தினர்கரத்தொடுதாட்டலைப்
பொருத்திவடவெற்பனபுயத்திடைபுடைத்தே
முரித்தபுருவத்தினர்முழங்குகயனத்தோ
டெரிப்பொறிதெறித்திடவிடிந்நகைசெய்தார். (௩௩)

பன்னியபுகழ்ப்பாதனைப்படமுருக்கி
மன்னியதன்மைந்தனையும்வாளுடைவரத்தால்
வென்னிடமுருக்கியிவர்தம்மைவரவிட்டோன்
றன்னுடன்மலைப்பமிதுவேசாதமென்றார். (௩௪)

செழுமின்மணியோடையதிசைக்கரிகளோடுங்
குழுமினகுலக்கிரிகள்குலைதாகளைஞ்சேர்
கெழுமினவொடுங்கிசைகள்கிழிபடவுரப்பா
வெழுமினெனவுங்கடிதெழுந்தனபதாதி. (௩௫)

வேறு.

முடுகியதானைநான்குமுகிலெனமுழங்கியார்ப்பக்
கடுகியசேனைக்காவற்காவலர்கவசம்வீக்கிச்
சுடுபடைதெரிந்துவானச்சுடர்மணித்தேரினேறிப்
பொடிகடலேழும்போர்ப்பப்பொன்னகர்ப்புறத்திற்போந்தார். (௩௬)

அதிர்ந்திடுந்தலங்களுன்குமல்லிடைவில்லுக்காட்டு
முதிர்ந்திடும்பகலையும்பருடுவெலாமிரவிதன்றோ
டெதிர்ந்திடுந்திசைகளெட்டுமெழும்புகைககாயகூட
முதிர்ந்திடக்கூகைபாடுமுதியதுன்னிமித்தங்கண்டார். (௩௭)

அல்லொலிகடல்களுன்கிளர்ப்பொலியன்னவீரர்
சொல்லொலிதுவன்றியார்க்குந்துரியத்தொலிகைமாவின்
வல்லொலிகாகளத்தின்வயங்கொலிமறுகைவீரர்
வில்லொலிமயங்கவந்துவேந்தர்வெங்களத்தானார். (௩௮)

தூக்கியமதத்தவாயதோல்கொடுதோல்கடாறு
தூக்கியபுரவிதிண்டேர்றவல்பரிதன்னிறேடும்
வீக்கியகழற்கால்வீரர்வெஞ்சிளைச்சூரரோடுந்
தாக்கினவிரண்டுசேனைசரமழைமயங்கிற்றன்றே. (௩௯)

வேலினைச்சிலவர்வாங்கிவிடுதலுஞ்சிலவர்வில்லாற்
கோலினைவாங்கிக்கொன்றுகுறைப்பர்தங்குதிரையீதே
தோலினைவிடுவர்விட்டதோலினுற்றூகந்தன்னை
வாலினைப்பற்றியெற்றிமண்ணின்மேன்மலைதல்செய்வார். (௪௦)

இருவர்சென்றொருவர்தம்மேலிகல்செய்வரிகல்வாளோச்சி
யொருவரோடொருவர்தாக்கியுருக்குவருதிரமாரி
சொரிவர்முன்றோளுமார்புந்துளைப்பர்போர்விளைப்பரோடி
வெருவரவிழித்துநோக்கிவெங்கணைமாரிபெய்வர். (௪௧)

பையெடுத்தணைந்தனைத்தம்பங்கயத்தலையசெங்கண்
மையெடுத்தனையமேனிமாயவன்வருத்தசேனை
செய்யெடுத்திலங்குபாணனெருங்கலின்றெகிழிபோலக்
கையெடுத்தணைந்தகோடிகவந்தநின்றாடிற்றன்றே. (௪௨)

கார்தவர்சேனையெல்லாங்களத்திடைமடியக்கண்டு
வேந்தருஞ்சிலைகோல்வாங்கிவிரைபரித்தேர்மேல்விட்டார்
ஏத்தகவுழவன்பின்னோனவமணிக்கழற்கால்வீரன்
பார்த்தலின்பாரந்தீர்ப்பான்பாதனுமதனைக்கண்டான். (௪௩)

வேறு.

தந்திரமுஞ்சரிபரியுந்தாமமணித்தேருமிக
வந்தாரமுற்றிகழ்ந்தசெயலதிர்திருத்துமகலாதீ
ருந்தமதாருயிருந்தாவுப்புலித்துன்னலாருமாற்
கந்திருவர்போமினெனக்கலைத்தருமிதெனநகைத்தார். (௪௪)

வேறு.

உன்னையுயர்தானையுடன்றோடவொர்சாத்தால்
வென்னிடமுருக்கவரிதல்லவதுவேண்டே
மென்னவுரைசெய்தனகொலென்றுலகில்வாகை
மன்னவரின்மைந்தருடன்மறிலைதிடமென்றார். (௪௫)

வெங்கண்மதகரிரதங்கண்மிக்கவுளவேனுஞ்
சிங்கவிளங்குருளையொடுசென்றுசெருச்செயுமோ
விங்கிவர்களிளையரெனவிகழலெனவுலாயாத்
துங்கநெடுஞ்சிலைவளைத்துச்சுடுசரங்கடுரந்தான். (௪௬)

வேறு.

கரியற்றனகொடியற்றனககனத்துறுகவனப்
பரியற்றனபனையற்றனபடையற்றனவிடையே
வரியற்றனசிலையற்றனமாமற்றனவயவார்
திரியற்றனவெனவற்றனஒளிர்பொற்கொடியணிதேர். (௪௭)

பொருதக்கிரவிதமாயுளபுணரிப்படைவிரவா
வொருகற்கிரிவிதமாயுளவுயர்வெங்கணைவிடலால்
யிருகற்கிரிபோலுயர்மிகுதேரதன்மிசையே,
வருகாரிருவரும்வார்சிலைவளைத்தார்செருவிளைத்தார். (௪௮)

பாறாடினகழுகாடினபடர்சோரியின்றிரைப்பே
ராறாடினவலகைக்குலமடர்காகமுங்கழுதும்
மாறாடினர்வேறாடினர்மகிழ்ந்தாடினமறவோர்
கீறாடினதிசையெங்கணுமிமிர்த்தாடினகவந்தம். (௪௯)

வேறு.

உரமதுடையவுயர்தலைகள்புயமதறவுரியவலியதறுவலையவே
சரமதெதிரவர்தலைகடவிடுபடுதொறுதியெனமுடிகடறியவாள்
கரமொடிறவுலவைகழலவிகடதடகருணிகதறவெயிறுகமிகும்
புரவிகழறுணியவிரதவுருணெரிகொள்பொடிசெய்திடுமிவனெய்சரமரோ.

இருவரொருவழியினிகலியெதிர்விழியரியலவயில்களெதிர்விடுவரா [ற்
லொருவரொருவழியின்முடுகியுருமினொடுமுரசகனைமழைகள் பொழிவரா
பரதன்விடுபகழிமழையில்வெருவியுயிர்படுவர்விடுவர்சிலர்கெடுவிர்கா
ளராயிருயிர்பெறுகிலமுதணைவுளதெனுமுறையிலகனுமெனவோடினார்.(௫௧)

மறாகளபதளமகளிர்மகிணர்படர்மருவுமுடல்தழுவியிடைவிடா
ருதிரநதியிடையினெடுமுகியுயிரொழிவருரகபணகெழியவுடுவும்வெவ்
கதிருமதியுமுகவதிருமதகாடகரியுமிருகனவிரதமுந்
குதிரையுமியினொடுதனியவொருவனொருகொடியபகழிவிடுகொமெலாம்.

வேறு.

முறிதருஞ்சிலைமுன்றுகோடிகந்
திருவர்பட்டவச்செங்களத்திவிற்
பரிகள்பட்டவும்பக்ஷிபட்டவுங்
கரிகள்பட்டவுங்கணக்கொன்றில்லையால். (௫௩)

ஓரிடங்களுமொழிவுறுதவெம்
பேரிடங்களின்பிணையல்காதிடைக்
காரிடங்கள்வெங்கழுகுமோரியும்
பாரிடங்களும்பருந்துமானவால். (௫௪)

அந்தரத்தின்மீதகன்றகாகவெம்
பந்தரிற்றொடைபரந்ததங்ஙனே
கந்தமிக்கபைங்கமலக்கையினால்.
மைந்தர்தம்மையேவாகைசூட்டினான். (௫௫)

தாதுசேர்மலர்த்தாமவல்லிசூழ்
சீதமென்புனற்சிந்துநாட்டினி
லாதிவானவனளகைபோலவே
யேதமில்புரமிரண்டுசெய்வித்தான். (௫௬)

வேறு.

இக்குநிகழ்புகழ்ப்பரதன்றீதிலவாந்தினம்வார
மிக்கமறைமுறைமையினால்வேதியரோடினிதாய்ந்து
புக்கமிகைப்புட்கரற்குப்புட்கரமாநகர்போர்விற்
றக்கனுக்குத்தக்கசிலைநகரிவர்க்குத்தான்கொடுத்தான். (௫௭)

மானவனத்திருமகற்குமதியனையவெண்குடைக்கீழ்ச்
சோணைநதிற்சுரந்தோங்குந்தொகுபுனலால்வயல்விளையு
மானபுகழ்ச்சிந்துநாடடிப்படுத்தியெடுத்தங்க
னேனைமன்னர்தொழுதிறைஞ்சவெதிரறவீற்றினிதிருந்தான். (௫௮)

விம்பமதிவெண்குடைக்கீழ்விளையளியினிசையகவா
வம்பலர்தார்மைந்தர்க்கும்வளநாடுவளம்படுத்திக்
கம்பமதகரிபரிதேர்காலாளுமிகவருளி
யம்பொனெடுமணிமுடியானயோத்திமாநகரடைந்தான். (௫௯)

பனிமதியேநிகர்வதனப்பங்கயத்தப்பனிமொழியார்
கனகமணிபுனைகரம்பிற்கவரிகொடுபணிமாறத்
தினகரன்போலொளிவிரிக்குஞ்செழுமணியாசனத்தின்மிசை
யினிதிருந்தகனைகழற்காலிராகவனையடிபணிந்தான். (௬௦)

காரிருண்டதெனுநிறத்தரக்கர்திருவர்கடற்சேனை
போருடைத்துபுறங்காட்டப்பொருதவரைத்தொலைத்ததுவும்
வாரிருந்தகனைகழற்கான்மைந்தருக்கும்வளைகர
மோரிரண்டுவருத்ததுவுமுரைத்தனனவ்விரைத்தாரான். (௬௧)

காந்திருவர்வதைப்படலம்-முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௧௨௩௪.

௧௨-வது—சந்திரகேதுநகர்ப்படலம்.

அந்தவுரைகேட்டுமகிழ்ந்தடற்பரதன்முகநோக்கித்
தந்திரமுங்கரிபரியுந்தரைப்படவென்றிருகனையா
யிந்திரனையமர்தொலைத்தானின்மலக்கும்பெருந்திறலான்
மைந்தருக்கும்வளநாடுவகுத்தளித்தியெனவுரைத்தான். (௧)

காமலியக்கயநளுங்கழனிமிசைக்கதிர்விரிக்குஞ்
சரோருகமேற்சங்குதங்குசந்திராகாந்தப்பெயராற்
பாரவரியவளநாடுபணித்தியெனப்புகழ்ப்பரத
விராகவனையடிவணங்கியெழுமாசமறைவித்தான். (௨)

கந்தமிகுநறுந்தெரியற்கனைகழலங்கதனுக்குஞ்
சந்திரகேதுவுக்குமிலைகச்சமராயிருதவியாண்மை
யிந்திரனையமர்தொலைத்தோனிகல்தொலைத்தோன்பிதாவாகு
மைந்தரவரிவர்தமக்கேமணிமகுடம்புனைந்தானால். (௩)

மறங்காலுங்கரிபரிதேர்வயவீரரொடுநான்கு
திறங்காழ்ப்படையேவிக்கழல்புனையங்கதனைக்கொண்
டிறங்காதசிலையேந்தியேழுமண்டிடைபிரியா
தறங்காதவில்லியுமுடன்போகென்றுரைசெய்தான். (௪)

ஞங்கொலையாமாறனையவதிமதத்தவனலுமிழும்
பைங்கண்ணவேழுறுப்புப்படிதோயும்பான்மையென
வெங்கதவெண்டிசைக்கரியோடமர்விளைப்பதெனப்படுதந்
தங்குமணியோடையனதடக்கைமதத்தலிக்கரிகள். (௫)

திறல்செய்ததன்முசெவியபிலங்கேயாயுகிர்காத்த
கழல்விழியருந்பேயுந்தொகைப்பருந்தும்பின்செல்ல
வழல்விழியவதிமதத்தவயினமருப்பினடல்வீரக்
கழுமிக்கும்புகர்முகத்தகடகரிகள்பலகோடி. (௬)

இயல்வனத்திற்பிறந்தபேரிளங்கிளியினிறத்தனவு
மயினிறத்தவணிபிறத்தமணிநிறத்தமராநிறத்த
பயினிறத்தகடலகத்தும்பலதேசத்தும்பிறந்த
குயினிறத்தகொய்யுளையகுரகதங்கள்பலகோடி. (௭)

கோகனகமுகையனையகொழுங்கனகக்கொடிஞ்சியன
பாகனியற்றியவழிவும்பரிபூணும்பான்மையன
நாகவுலகங்குழைபடந்தோடுந்தடங்கால
மாகநெடுந்தவசமிசைமணித்தேர்கள்பலகோடி. (௮)

உருத்துநெடுங்கதிர்வேல்கொண்டுரங்கிழிப்பதல்லாது
மருத்துவரினுங்கூடிவென்காட்டிமீளாது
எதிர்த்தவருங்கழல்வீரதிரியமிலக்கிரியெறியும்
மருத்துவினைவிகராகும்வயவீரர்கணக்கிலார். (௯)

புனைமணியவியன்மார்பர்புரிவளைகள்மிகமுழங்க
வினையபரித்தானையுடனிகல்வடிவேலிலக்குவனுந்
துணைபரித்திண்டேரோதிச்சுடர்மடங்கத்தடந்திசைமேற்
கணைகழற்கான்மைந்தருடன்காரகாபதியமைத்தான். (௧௦)

வேறு.

மதமுகந்திடுமயனுடைமறைமுனிநெறியே
திதியும்வாரமுந்தினமுமென்றின்னனதெரிந்து
கதிர்நெடும்புனற்காரகாபதியினையமைத்தான்
றுதிமிகுந்தெழுவாகையன்றொடைபுனைதோளான். (௧௧)

நெடுந்தெருக்களுநியமமுநீளுறுமறுகுந்
தடங்கொள்கூலமுஞ்சந்தியுஞ்சதுக்கமுமணியி
னிடுஞ்சுடர்த்தொடிமிஞ்சியுமஞ்சவர்க்கறங்குந்
தொடுங்கிடங்குமேற்குள்கைவாயிலின்றொகையும். (௧௨)

கருதிரீடியகருமணிக்கூலங்களொருபாற்
பரிகணீடியபருமணிப்பந்திகளொருபால்
விரிநெடுங்கொடித்தேரணிவீதிகளொருபா
லுருவின்மேகத்திலுயர்மணித்தோரணமொருபால். (௧௩)

பனகர்வாழ்திருநகரமோபருமணியதனுற்
றினகராதிபர்நகரமோசித்தர்கணகரோ
வனகவிந்திரனகரமோவளகையோயாதோ
கனகமாநகர்க்குவமையோகணிப்பதற்கரிதால். (௧௪)

ககனமங்கையர்கழுத்தெனக்கமுகினநெருங்கு
வகைநெடும்புனல்வளநகர்வருபவர்க்கெல்லா
மகலருஞ்செழுநவமணியொளியினுன்மயங்கிப்
பகலுமேனையவிரவுமென்றெருபரிசிலதால். (௧௫)

படைத்தமாமுனிபரெலாமொருவழிப்படுத்தி
யடைத்ததொக்குமிவ்வனிகதேசியத்தனித்த
மடைக்கண்மங்கையர்முகமெனமதியின்மேன்மறுவைத்
தொடைப்பபோன்றனதுகிலணிதேர்மணித்துவசம். (௧௬)

மதுரமென்மொழிமடந்தையர்வடம்பரிந்திட்ட
கதிர்கொணித்திலப்பன்மணியெங்கணுங்கலந்தெ
யுதிர்தலாலும்பரிமூக்கிகீழ்த்தொழிகதிர்சிதறி
மதியுமீன்களுங்கிடந்தவாபோன்றனமறுகே. (௧௭)

அன்னமானகராங்கவற்கருளிபாங்கவற்குப்
பொன்னுமலையமும்புரவியுங்கரிகளும்புகர்வே
லின்னவிரத்தளித்துமீண்டிராகவற்றொழுவே
மன்னர்மன்னவனயோத்திமாநகர்வந்துபுக்கான். (௧௮)

நடங்கன்மங்கையர்தமனியச்சாமரையியக்க
மங்கலாசனத்திருந்தவானிராமனைவணங்கிக்
கடங்குருணைகரியற்றியவென்றுமமதலைக்
குடன்கொள்சேனைகாக்குடன்கொடுத்தனவெலாமுரைத்தான். (௧௯)

அன்னதம்பியோடியிருந்தமகிழ்ந்தொருநாட்
பன்னுசெஞ்சிலையிராகவன்பவிக்குடைப்பரதன்
றன்னைச்சந்திரகேதுவைச்சந்திரகாந்த
மென்னுநாட்டிடையிருத்திதிகுறியென்னுரைத்தான். (௨௦)

ஆனைதேர்பரியடற்படைத்தலைவரொன்றனைந்த
சேனைநான்குடனெமென்னித்தேர்தெரிந்தேறிச்
சோலைமாமுகிலமெனநதரியர்துவைப்ப
வானமைந்தருடனயோத்திமாநகரினையகன்றான். (௨௧)

பாழிவென்கொடிப்பருமணிக்கொடிஞ்சியநெடுந்தே
ராழியானெரித்ததுவரைகருக்கொலாமுடைவப்
பூழியாயினபுரவியின்விலாழியிற்புகர்வெகு
குழியானைமும்மதத்தினிற்றுகனடங்கினதால். (௨௨)

கான்குலாவிபகனவரைநெரிதாக்கழுவி
மின்குலாவியதனைநெடுந்தகனமுழவினாதேர்
வான்குலாநதிசுவறிடவழங்குநெம்படையி
னுன்கிளர்தையானாலவாயொலிடயங்கினதால். (௨௩)

பாலைமாவிலங்கடந்ததன்குறிஞ்சியிற்படர்ந்த
சாலமுல்லையுநெய்தலுங்கடந்துபோய்த்தமர
மாலைவண்டினமுரல்வனமருதமென்பணைகு
மேலவாரயொழிற்சந்திரகாந்தநாடிறுத்தான். (௨௪)

செம்பொற்கோபுரவாயிலிற்செழுமணிநிலத்
சம்பத்திற்குளிர்தராமெய்சாளரமுகப்பின்
விம்பகோபுரவேயினமாளிகைவிதான
வம்பொற்சந்திரகாந்தையென்றணிநகர்சமைத்தான். (௨௫)

வேறு.

சந்திரகேதுவைத்தானொன்றுட
னிந்திரனென்னமானசிருத்தியே
பந்திவெம்பரியினிற்பாதன்மீண்டுவந்
தந்தமிலிராகவனடியிறைஞ்சினான். (௨௬)

இயன்றவாறியம்பினனிருந்தகாலையிற்
பயின்றவேன்மன்னற்குப்பாதன்றன்னுடன்
வயின்றொழிலிடைகொடுத்தருளிமாமலை
குயின்றபொன்மாமதிற்கோயிலெய்தினான். (௨௭)

கனைகடலுலகெலாங்கலைகடன்றுடன்
றுனைபரிவல்லியர்தன்றிநீருண
வினையநாலாண்டரசியற்றிச்செல்லுழி
வனைகழலிராகவன்மகிழ்ந்திருந்தநாள். (௨௮)

தென்றிசைக்கடவுளுந்தேவனேவலா
லன்றுதன்னுருவொழித்தயோத்திமாநகர்க்
குன்றுநின்றனையதோர்கோயில்வாயிலி
னொன்றியமுனிவானுருவங்கொண்டுளான். (௨௯)

தடங்கைவேத்திரத்தினர்தமைத்ததாடிய
ரடங்குறுதிடியெனவார்க்குஞ்சொல்லிவர்
மடங்கலையனையவர்வரிந்தகச்சையர்
படம்புகுமிலேச்சரைப்பரிந்துகூறினான். (௩0)

மறங்கிளர்கனல்விழிவாயில்காவல
ரிறங்கினர்தொழுதபினிலங்குநூலினன்
முறஞ்செவியானையாய்முனிவன்வந்துநின்
புறங்கடையானெனப்புகறிபோயென்றான். (௩௧)

போயினகாவலர்போற்றிமன்னவ
வேயினதறவினோர்வேதமாமுனி
கோயிலின்மணிமதிட்கொடிகொள்கோபுர
வாயினின்றனனெனமதித்துக்கூறினார். (௩௨)

கடாசலக்களிற்றணிக்காவல்வேந்தனும்
விடாவருண்முனிவர்மேல்வைத்தமேதினி
யடாநெறியவுணராயருப்பதாதலாற்
றடாதிரிங்கவன்றனைத்தருதிராலென்றான். (௩௩)

பாருடைமன்னனைப்படர்ந்தனபயென
வேருடைமறலிவர்தெய்திற்றூதலால்
நீருடையுலகினிகழ்ந்தனோர்க்கெலாந்
சேருமென்றறிந்தமாதவங்கள்செய்மினே. (௩௪)

வள்ளலைப்பின்னருமறலிமாதவர்
கொள்ளருக்கொண்டுயிர்கோடன்மேவலா
லொள்ளியவுலகினிலுருவுகண்டபின்
னெள்ளலைபிறகாநீரொலவியப்பது. (௩௫)

ஓரில்வேறுவமையொன்றில்லையுன்னைவான்
வாருநீருலகிற்கண்டறிவதில்லையாற்
பாரையேருறத்தரும்பதுமத்தோன்றலைப்
பேரையுரையெனவிராமன்பேசினன். (௩௬)

ஆயவாளிராமனைத்தனைத்துநோக்கிய
மாயவனுருவிடைமறலிமாமுனி
சேயவர்மதுமலர்த்திசைமுகத்திரு
னேயவாசெய்வனென்றெடுத்துக்கூறினன். (௩௭)

உரைப்பதொன்றுள்ளதாலொருங்கியாமினி .
யிருப்பதுகாரணமியாவராயினுந்
தெரிப்புறவருவரோலவைத்திரவே
விருப்புறுதகற்றியேவிடுதல்வேண்டுமால். (௩௮)

இனையமாமுனிதனக்கிசைந்திலக்குவன்
றனைமுகநோக்கியதாசிராமனு
மினையிசைவார்களும்வருகினித்தலே
கனைமணிவாயிலைக்காத்திபோயென்றான். (௩௯)

இளவலைக்காவலிலேவியேடலர்
தளவருமதுமலர்த்தாரிராகவ
னுளமகிழ்ந்தருளிநீயுரைத்தியாலெனக்
கொளமறைமுனிவனைக்குறித்துநோக்கினன். (௪0)

மந்திரமுதுமொழிமறைவலாளனுங்
கொந்தலர்தாரவர்க்குறித்துநோக்கிநின்
றந்தமுவுலகினுக்களப்பதாயினன்
வெந்திறற்கூற்றுவன்விளம்பன்மேயினன். (௪௧)

வேறு.

அத்தத்திசைநான்முகனுயடைவே
பத்தப்பழநான்மறைபாடிடுவோ
னுந்திக்கமலத்திடையுற்றயனாய்
வந்திப்புவியேழும்வகுத்தனனால். (௪௨)

அன்றுறுரைசெய்ததமைந்தனுமே
னொன்றுலுமெதிர்ந்திமையோர்களகக
தன்றுலும்வெலற்கரியான்சடையோன்
மன்றுகமெடுத்ததொர்மாவலியான். (௫௩)

வில்லார்கதிர்வெல்மதிமீறுசெலா
வெல்லார்கதிர்சூழிலங்கையர்கோன்
மல்லார்புயமாவலிவானவரி
னல்லார்தொலையாததொராயுளினன். (௫௪)

தாமந்திகழ்செஞ்சடையோனிடையே
மாமஞ்சடைவாளதுபெற்றவனு
லேமந்திகழின்றவிராவணனு
நாமந்திசைநாலுகடந்துடையோன். (௫௫)

அன்றுயிர்கொள்வதமைந்தயில்வேல்
மன்றுகதிரோன்வருமாமரபிற்
பன்றுகலையோடுபயோததியும்
பின்றுகவிகந்துபிறந்தனையால். (௫௬)

அவ்வாறுமுடித்தனையாதலினின்
மெய்வானுலகெய்துதல்வேண்டுமெனு
மிவ்வாறுரைசெய்தனனிங்கிதுவே
செய்வாயெனநின்றுரைசெய்தலுமே. (௫௭)

வேறு.

இலங்குமணிப்பசுந்தண்டாரிராகவன்றனெழுபரித்தேர்
வலங்கிளருகனகமணிமாளிகையின்மதில்வாயி
னிலங்கியசெங்கனல்வேள்வியத்திரிதனிரும்புதல்வன்
றுலங்கியநூற்றுருவாசனெனுமுனிவன்சென்றினனால். (௫௮)

ஏற்றரியசிலைத்தடக்கையிலக்குவவேலிராகவன்பா
லாற்றமுளதொருமாற்றமுரைப்பதுளதாதலினாற்
போற்றரியவரமுனிவன்புறங்கடையினனென்று
சாற்றுகைநின்கடனென்னச்சதுமறையோனுரைசெய்தான். (௫௯)

வேனிரைத்ததெனவிளங்கும்வெண்பூவால்வியன்சுரும்பிற்
றேனிரைக்கும்பொழிற்கங்கைத்திருநாடன்றிருத்தம்பி
பானிரைத்தவெண்புரிநூற்பழமறையோய்குறையாமல்
யானுரைத்தபடிமுடிப்பனியம்புதியென்றிறைஞ்சினனால். (௬௦)

வேறு.

முனிவனெஞ்சின்முனிந்துநின்முன்னவர்க்
கினையவென்வரவென்றியம்பாயெனிற்
றனைவருங்கடந்தொல்குலமாள்வதோ
ரனையசாபமளிப்பனென்றோதினன். (௬௧)

வன்னமாமறைமன்னவன்கூறலுந்
தன்னெனெஞ்சினருகித்தனியுட
னென்னரியின்னதிராமற்குமாருமென்
றன்னல்வேலவனஞ்சிநடுங்கினன். (௫௨)

புன்றுமைப்பனிநீரும்பொழிமழை
மின்றுமம்மழைமேவியமொக்குறு
மன்னவின்னநிலையிலவாக்கைக
ளென்னவென்னரியிளவலுமேகினன். (௫௩)

வேறு.

பொறைமலியத்திரிபுதல்வன்போதமா
மறைமுனிவர்க்கின்வாயிலோனெனக்
குறைமலிகூற்றுவன்மாற்றங்கொள்ளுறு
மிறைவனையடிதொழுதிளவல்கூறினன். (௫௪)

வேறு.

கருமைக்கோட்டிக்கனலுமிழ்கண்ணுடை
பெருமைப்போத்தையிவரிவன்றேறிய
வருமைக்கூற்றையசத்திவருதமென்
பெருமைக்கூற்றிறைத்தனன்போக்கினன். (௫௫)

தன்னிச்சொன்னதுணையுடன்வந்தபின்
மன்னுமாமறையத்திரிமாமகன்
றன்றாளையிறைஞ்சிச்சதுமறை
யென்னைவந்ததையென்னிலென்றேஞன். (௫௬)

முன்னையோர்முறையேமுடிசூட்டிய
வந்தநாள்தொட்டோராயிரமாண்டிற்கு
வந்தநாளுன்வயினையின்றேகுற
விந்தநாளந்தநாளென்றியம்பினன். (௫௭)

வேறு.

நாவிருதிக்குடக்குலத்தால்
வாலுவர்நாலணிமார்பினர்மன்னர்
சாலுமனத்தொடுசாலையனுலா
வேலவழைத்திடுமென்றுரைசெய்தான். (௫௮)

தொடையணிமன்னவன்றூதனையேவக்
கடல்புரைசேர்கணத்திடையேகா
வடைவுறவோடியவண்டாவல்லே
மடைதொடுவாரவண்வந்துபுகுந்தார். (௫௯)

மாமுனியெம்வயின்வந்ததையன்றே
காமுறுமும்மறைகத்தொழில்காண்பா
னுமிவன்வந்ததமைத்திடுமின்னே
பூமலிவெய்தியபோனகமென்றான். (௬0)

வேறு. பொன்றும்வெள்ளியுமல்லதுபோக்கியே
மன்னுமாசுதடைத்துமணிக்குடந்
தன்னினன்புனல்கொண்டுபொற்சாடிக
டுன்னவெய்கனுத்துசிட்டுமுடினான். (௯௧)

வந்துமன்னர்மடைப்பளிதன்னுடை
வெந்தவெண்பலிநீக்கிவிளாமலி
சந்தனத்தொடுதண்ணகிற்கூட்டிநீஇ
யிந்தனத்திலெரியிடைமாட்டினார். (௯௨)

பொடித்தபோக்கிப்புழுகுசம்பாமணி
படித்தநூற்றுப்பத்தாயிரப்பத்திபொற்
றுடுப்பிற்கொண்டுதுமாவிப்பதத்துற
வடித்துக்கூட்டிலவையிலிறக்கினார். (௯௩)

அறுசுவைக்கறியாக்கியதற்பினே
செறியுந்தாளிகஞ்செய்துவைத்தானெயு
முறுகக்காய்ச்சிமுதிர்வுறுமுக்கனி
குறுகுபால்கன்னலானவுங்கூட்டினார். (௯௪)

வேறு.

அன்னவைசமைத்தவரமைந்தகாட்டலு
மன்னியமுதுமொழிமறைவல்லாளனைப்
பன்னியபோனகம்பற்றென்றோதின
னின்னிசையரியெழுந்திளைக்குந்தாரினான். (௯௫)

நிலமிசையாசனமிட்டுநீர்கொடு
தலமிசைதெளித்தொருதமனியப்பெருங்
கலமிசைமாமுனிக்கைகழீஇயபின்
பலமுறைபோனகம்படைத்துமேவினார். (௯௬)

மெய்யுறுமந்திரவிதியினாளினான்
மையறுபுனலினால்வலம்வளைத்தபின்
கையுறுபுனலதுகுடித்துக்காதலா
லைவகைமந்திரத்தமுதருந்தினான். (௯௭)

பலாக்கனிமாங்கனிபாலினோடுதே
னிலாப்பயில்கிரிநிகர்நிறைவெண்சோறளி
யுலாப்பயில்கொழுங்கனலோமமாமுனி
விலாப்புடைவிரிவுகள்விங்கமாந்தினான். (௯௮)

அங்கைநீராயின்றபினாரணத்தினன்
துங்கமாமணிமுடித்தூயமன்னவர்
செங்கையாலாடகச்சிரகத்தேந்திய
கங்கைநீர்கொண்டுசெங்கைகழீஇயினான். (௯௯)

தானுவிலதுகலைதனைப்பச்சாக்கனைப்
பாவிடையடிசிலின்பயின்றபான்மையி
னுலிருநிசையிறுகன்னலாதென
வாறுவத்தினைவாமற்றுக்கூறினன். (௭௰)

மனைவரிவையாமாபுல்கேள்மைய
பின்னதென்றிராகவனெடுத்துக்கூறலு
மன்னதுகேட்டுமகமகிழ்ந்தொரீஇ
முன்னியதிசையிடைமுனியும்போயினன். (௭௧)

வனைந்தபூண்மறலிதன்வார்த்தையென்னியுந்
தனைநகரன்பின்னவன்பிரிவுறுந்தனை
நினைந்துதனிருகணீர்நிலகனைந்திட
வினைநினைந்திராகவனிடரின்மூழ்கினன். (௭௨)

கருங்கயற்கேகயன்மகட்குக்காவலன்
வரங்கொடுத்தின்றுயிர்மறலிக்கீய்ந்தபின்
னிரங்கலியென்வயினென்றிலக்குவ
னலங்கல்வேலிராகவனடிவணங்கினன். (௭௩)

வேறு.

உன்னைவாய்மொழிகாத்தலாலுலகத்திலுளதாய்
தன்னைவாய்வரங்கொடுத்தனனுதவலாலிரங்க
லென்னைநீமறலிக்கருளெனவிசைவரங்க
டன்னையேயருடருதியால்விடையெனத்தளர்ந்தான். (௭௪)

வேறு.

அன்னதுகேட்டபினருவியாமெனத்
தன்னிருதடங்கணீர்தாழ்ந்துமார்புற
மன்னியவிழலெனமார்புநீக்குருப்
பின்னவன்பிரிவினுக்கஞ்சிப்பேதுற்றான். (௭௫)

வளனகர்மாந்தனாவசிட்டன்றன்னுடன்
றளமலர்த்தாரினீர்தருதிராலென
வளியினமெமுழக்கெழுந்தார்க்குமாமதத்
துளவணிமார்பினன்றூதுபோக்கினன். (௭௬)

போனபின்றூதுவர்புகன்றவாய்மொழி
யானதுகேட்டபினரசன்சென்றுறீஇ
மாநகர்மாந்தரும்வசிட்டன்றன்னுட
னேனையவிருவருமிருந்தவேலையில் (௭௭)

வேறு.

இருந்தபேரவையைநோக்கிவர்சடைமுனிவன்றன்னை
வருந்தருகென்றவாறுமந்திரிலமந்தனேயத்
தருந்தருமன்னதம்பிதன்னுறைவந்தவாறு
மரம்புனைநிலைத்துலவவேலடல்புனைபிராமன்சொன்னான். (௭௮)

மத்தகயானையானைவசிட்டனுநோக்கியுந்தை
தத்துறுபுரவித்திண்டேர்த்தசரதன்றன்பால்வந்த
வத்திரிபுதல்வன்றன்னையடியிணைவணங்கியேத்தி
யெத்தனபுதல்வரில்லேனென்னைகொல்செய்வதென்றான். (௭௯)

உறுபரிவேள்வியோம்பினானுடைமைந்தர்நால்வர்ப்
பெறுகுவையொருவன்றன்னதாருயிர்பிரியுங்காலை
மறுவறுமூவர்தாமுமடிகுவர்மன்னவென்ற
தறிகுவனியானுமென்றேயருமறையாளன்சொன்னான். (௮௦)

ஆதலால்விதியைவெல்வதரிதுநீயருணப்பைம்பூ
ணேதிவாள்கடகச்செங்கையிலக்குவற்கிரங்கவேண்டா
தாதவிழலங்கற்பைந்தார்த்தமனியத்தாணபைம்பூண்
மாதிவெம்புரவித்திண்டேர்மன்னவென்றின்னசொன்னான். (௮௧)

நங்குலக்குரவனானான்மறைமுனிவன்சொன்ன
திங்குநீகெட்டியன்றேயினிவிடைதருதியென்று
மங்கைதனுருவமாகவார்சிலைமீதுசென்ற
பங்கயவருணராகப்பதயுகமீதுவீழ்ந்தான். (௮௨)

தன்மத்தின்கன்றதாயதம்பிதான்பிரிவெனெஃக
மன்மத்தையீர்தலாலேமலர்க்கணீரருவிசோரக்
கன்மத்தின்விளைவையெண்ணிக்கட்டுரையொன்றுங்கூறு
றுன்மத்தனுயிருந்தானுணர்வுடனுயிர்ப்புமில்லான். (௮௩)

செறுமொழிவினைஞர்செய்தசித்திரப்பாவைபோல
வெதிர்மொழியொன்றுங்கூறுகிராகவனிருத்தலோடுங்
கறுமெனவெழுந்துமுன்னோன்கழலிணைதொழுதுவாழ்த்தி
யறுவிடையென்றுநில்லாதணிநகரகன்றுபோவான். (௮௪)

தேன்பிரியாதகானிற்சிலைகொடுகாத்தபின்னோ
னூன்பிரிகின்றகாலத்துயிரினையொத்தான்முன்னோன்
கான்பிரிகல்லாவோதிக்கைகயன்மடந்தைகூறத்
தான்பிரிகின்றநாளிற்றந்தைதன்றகையனானான். (௮௫)

நம்புநான்மறையோர்க்கெல்லாநல்கியேநடந்தான்கண்டா
லும்பரார்சொன்னவார்த்தையொழியுமோவுலகத்தென்பார்
கம்பியாநின்றதுள்ளங்கழிந்ததோர்காலமென்பார்
தம்பியாரின்றியாவிதரிக்குமோதமையனென்பார். (௮௬)

வலத்தியல்மன்னர்க்கெல்லாம்வரங்கொடுத்தாவிநீத்தல்
குலத்தியல்பன்றேயென்பார்கொள்ளுமோகூற்றமென்பா
ரலக்கணுற்றிடாதுவாழ்வோடமையுமோவயோத்தியென்பா
ரிலக்குவனுயிரிங்கிலிருக்குமோயாமுமென்பார் (௮௭)

இன்னானகரத்துள்ளோரினந்தினைத்தேல்லிமாழ்க
கன்னகர்வாயிலின்கிரவமணிகொழித்துமுத்தம்
பொன்பெறுவானதியெங்கும்புனல்பரந்துலகம்போற்றுந்
தன்னிகரதியொன்றில்லாச்சரயுப்பேராறுசார்ந்தான். (௮௮)

வேறு.

ஆசின்மணிமதில்சூழயோத்திநகருறைகின்ற
மாசனங்கபெருமுக்கமடந்தையர்செங்கனல்மூழ்கப்
பாசகவிவினில்லாப்பாதன்விழிப்புனல்மூழ்கப்
தாசரதியிடர்மூழ்கச்சரயுநதிமூழ்கினனால். (௮௯)

ஆசாத்தினெடுங்கோட்டாற்றணைப்புண்டயர்நீக்கிச்
சோரத்தவுலகாண்டதிறல்வெய்யோன்திருத்தம்பி
மோகரித்தமுதுபிணிநோய்முதலாயபெரும்பிறவிச்
சாகரத்தின்கரையேறத்தடங்கரையினேறினனால். (௯௦)

அறுபகையைவிலக்கின்றவைம்புலனுமகத்தடக்கி
யுறுவனவொன்பதுவாயவுயர்வாயுவுள்ளடக்கி
மறுவறுசங்கினைத்தவழும்வாருகத்தடங்கரைமே
லெறிகதிர்வேலிலக்குவனுமியோகத்தங்கிருந்தனனால். (௯௧)

போதிலங்குமாயிரஞ்செம்புண்டரீகம்பூத்தவொரு
சாதிலிங்கச்செழுங்கனிபோற்றமனியப்பூணிமையவர்கோன்
ரேதிலக்கைதிரளமுனிக்தோன்றன்பின்னோன்முன்
மீதிலங்குசெழுங்கனகவிமானத்தின்மேல்வந்தான். (௯௨)

தன்னையமர்தொலைத்ததாரக்கன்றன்மகனைப்
பின்னையமர்வென்றபெரியோனைப்பேசரிய
மன்னியமெய்யாக்கையுடனேமகிழ்ந்தேற்றிப்
பொன்னியதேர்மானமிசைகொண்டுபோயினனால். (௯௩)

மீதேறுதவேலைபுடைசூழ்வியனுலகி
லேதேனுர்புலம்பவிகல்வேலிலக்குவனு
மோதேறுடைவற்றுருவையாவுடம்பெய்தி
வானோர்புடைசூழவைகுண்டம்போய்ப்புக்கான். (௯௪)

அப்பாலியன்றதனிற்கவிங்கனே
இப்பாலியன்றதியம்புலனுனொன்றாலுந்
தப்பாததம்பிதனைநினைந்துசாய்துயர்க்கு
வைப்பாகியுள்ளமெலிந்தான்மறவேலான். (௯௫)

பார்த்தானிளையோனைக்காணான்பதைத்துள்ளம்
வேர்த்தான்றிருமேனியெல்லாமெலிவுற்றான்
காத்தாய்நெடுங்காலங்கைவிட்டாயோவென்று
பூத்தாமரைக்கண்புனலாய்ப்புலம்பினான். (௯௬)

விம்பக்கிளைகவிறல்மேகநாதனையோ
ரம்பிற்றடிந்தாயருவினையேனுருயிரே.
வம்புற்றதாரான்மகனேமதிவிலியென்
றம்பித்தனையேதறியேன்றரியேனே. (௯௭)

ஆற்றவனேவேந்தேயவையம்புரந்தானைக்
கூற்றுவனேவந்தருதுகாவலைகாத்து
மாற்றவனேர்விட்டவடிவேல்வரைமார்பி
லேற்றவனேயெம்பியிலக்குவனேயென்னுயிரே. (௯௮)

என்செய்வேனென்றென்றிலைவயிலவயேயின்றாற்றிப்
பொன்செய்மணிமார்பன்பொருப்பின்மழையென்ன
மின்செய்யருவிவிழவேயழுதனனால்
தன்செய்யதாளிணையேதந்தருளுந்தன்மையான். (௯௯)

வண்ணவரையழுதமாறுகமுமழுத
விண்ணுந்திசையும்வியன்ஞாலமுமழுத
வெண்ணிறினைவுற்றினைந்தினைந்திங்ஙனே
யண்ணலழுதானழாததுவொன்றில்லையால். (௧௦௦)

இன்னுயிர்போனுலிருக்குமோபொய்யாக்கை
பின்னவன்போந்தநெறியானும்போகுவனால்
றின்றுமணிமுடிசூடுவாய்நீயென்னப்
பன்னுமதுகைப்பரதனையேநோக்கினான். (௧௦௧)

நோக்கப்பரதனெறிவிற்காஞ்சிரத்தின்
மேக்கிற்குவிக்கவிரைத்தார்முடிவேந்தன்
காக்கப்புவனமுனக்கேகடனென்று
வேக்குற்றடியினிறந்தானெனவிழுந்தான். (௧௦௨)

வேறு.

நாதனென்னைநளிர்முடிசூடென
வேதமுள்ளறக்கூறியதெம்முடைத்
தாதைதன்னைத்தடக்கைகயன்பெற்ற
கோதைகொண்டவாத்திற்கொடியதால். (௧௦௩)

அண்ணனீபுரந்தாள்கின்றவையக
மெண்ணியென்வயினீந்ததுதெய்வத
நண்ணிநாகஞ்சுமக்குமிந்நானில
மண்ணில்நாகஞ்சுமக்கெனில்மாண்டதால். (௧௦௪)

இம்மிசெந்நெலினுக்கிணையாகுமே
லம்மிமற்றையருவரையொக்குமேல்
மிம்மினிச்சுடர்வெங்கதிரொக்குமே
லம்பிலொத்துலகாளுதலுண்மையால். (௧௦௫)

ஆதிநின்றுடையான்மொழின்மேயினர்
நீதியைநிகழ்த்திடவல்லராற்
சோதில்வன்மைக்குசலவர்தம்மைமீ
சோதிமாமுடிசூட்டென்றியம்பினன். (க0சு)

இன்னகூறியிளவலிறைஞ்சலு
மன்னர்கோனுமனமகிழ்ந்தவ்வயிற்
சொன்னவின்றகொலைவேற்குசலவர்க்
கன்னநாவிலவிர்தனன்காப்புநாண். (க0எ)

புனைசெய்மாமதப்போதகமீமிசை
யாசனீண்டினரந்தணர்சூழ்ந்தனர்
முரசதிர்ந்தனசங்குமுழங்கின
விரைசெய்பூங்குழலார்விளக்கேந்தினர். (க0அ)

அன்னயானையிலுடகப்பொற்றுடங்
கன்னினூற்றெட்டிற்கன்னைகையினீர்கொண்டே
மன்னினுசைதவிர்ந்தவன்மைந்தனைப்
பன்னினூலபிடேகம்புரிந்தரோ. (க0கூ)

நாடிமாமறைகூறியநாளினி
லாடகத்தவரியணைமீதரி
யோடையானையரொல்காருஞ்சென்னிமேற்
சூடமைந்தனைமாமுடிசூட்டினன். (கக0)

வேறு.

பாசிலையேய்ந்தபருஉக்குலைவாழைகள்
காசறுமாதர்கவானெனநீடிய
கோசலநாட்டிற்குசலவதியென்றோர்
மாசறுநீண்மதின்மாநகர்செய்தான். (ககக)

ஒத்தனநால்வகையுள்ளனதானையு
மத்தருசெல்வமொடமைவமைவாகக்
கொத்தலர்தார்புனைகுசனையமாநகர்
வைத்தனன்மாமுடிமன்னவர்கோமான். (ககஉ)

உத்தரகோசலவொளிர்திருநாட்டிற்
சித்திரமாய்சிரப்பதியென்றோர்
பத்திதரும்பருமாமணியாலுயர்
மத்தகமாநகர்மாளிகைசெய்தான். (ககங)

தன்னுடைநால்வகையாகியதானை
மன்னியசெல்வமுமாண்புறநல்கிப்
பொன்னினியன்றபுகழ்ப்புரிசைத்திரு
வந்நகர்தன்னிலவனையும்வைத்தான். (ககச)

வேறு.

இத்தினம்பிறந்தபினிலக்குவன்சென்ற
வத்திறமியாருஞ்சென்றடைவருமெனச்
சத்துருக்கினற்குநீர்சாற்றுமென்றுதேன்
மொய்த்தடைதாரினன்றூதுபோக்கினன். (௧௧௫)

மதுரைமாநகரிடைப்புகுந்தமன்னவன்
அதிர்கழல்வணங்கினின்றயோத்திமாநகர்ப்
புகுவதுநிகழ்ந்ததும்புகுந்தவார்த்தையுங்
கூறுமெனவுரைத்தனர்காலின்காட்சியார். (௧௧௬)

ஒட்டர்வந்துரைத்தனருரைத்தவாறெலாம்
கேட்டனன்செவிசுடக்கிழிந்ததெஞ்சமு
நாட்டமும்புனலுகநடுங்கிமெய்யெலாம்
தோட்டடங்களுமிகமெலிந்துசோர்ந்தவே. (௧௧௭)

தன்னிகர்பிறிதிலாத்தாரிராகவன்
பொன்னடிதொழுதுயப்போவனினி
யிந்நகராண்டினிதிருத்திநீயென
மன்னவன்மைந்தனைமகுடஞ்சூட்டினன். (௧௧௮)

மதிதொடுமாளிகைமதுபுரந்தனில்
விதிசெயுஞ்சிராப்பளியென்றுமிக்குள
புதுநகரியற்றித்தம்புதல்வர்தம்மையப்
பதிவயினிருத்தினன்பைம்பொற்றாரினன். (௧௧௯)

பாடகச்சீறடிபவளச்செய்யவாய்ச்
சூடகமடந்தையரினைந்துசோர்வுற
மாடமாமாளிகைமதுரைபிற்பட
வாடகமதிலணியயோத்திமேவினன். (௧௨௦)

மன்னனையிணையடிவணங்கிமைந்தர்க்குப்
பொன்முடிகவித்ததும்புரவியானைதே
ரின்னவைகொடுத்ததுமிலங்குமாமதி
லந்நகரளித்ததுமமையக்கூறினன். (௧௨௧)

அன்னதுகேட்டபினருவிக்கண்ணினன்
றன்னிகர்பிறரிலாத்தாரிராகவன்
முன்னைநாட்பெயர்ந்துமொய்ம்பிளவல்போகிய
நன்னெறிசெல்லுமாநாடுங்காலையே. (௧௨௨)

சந்திரனிகரொளத்தரளவெண்குடை
யந்தரமீமிசையழகெறித்திடக்
கந்தடுகரடவெங்கவளயானைமேல்
வந்தனன்வீடணனென்னும்வாய்மையான் (௧௨௩)

பயங்கெழுமிராவணன்பத்துமாமுடி
தயங்கியமணிபறித்தெழுந்ததன்மையா

வியன்கியவெழுபரித்தேரிலெண்டிசை
வயங்கியகதிரவன்மகன்வந்தெய்தினன். (௧௨௪)

கருத்துவர்தொழுகதிர்க்கடவுடன்னையோர்
பருத்தசெங்கனியெனப்பாய்ந்தபான்மையா
லுருத்துவந்துலகெலாமொருங்குகாதமா
மருத்துவின்மைந்தனும்வந்துமேவினன். (௧௨௫)

வரைபலவலிமிகவாங்கிவானவர்
திரைமிசைகொண்டனர்செல்லச்செல்லவோர்
கரமிசைக்கொண்டவர்கவித்துமோதிடு
நரலையையணைசெய்தநளன்வந்தெய்தினன். (௧௨௬)

குரங்கொடுபொரவெளிதென்றுகொண்டுதன்
சரங்கொடுபொரவருமரக்கர்தானையைக்
கரங்கொடுமலைகொடுக்கதிர்வெண்பற்கொடு
மரங்கொடுஞ்சாடியமயிந்தன்றோன்றினன். (௧௨௭)

கோல்பிடித்தெய்துசெங்குருதியாறென
வேல்பிடித்தெறிதருமரக்கர்வெள்ளத்தை
வால்பிடித்தெற்றிடவந்தமாமதத்
தோல்பிடித்தெற்றியதுமிந்தன்றோன்றினன். (௧௨௮)

நீலனுங்குமுதனுநிசாசரர்க்கெலாங்
காலனென்றமரெலாங்கடக்குமாற்றலாற்
றுலமெண்ணியபடைத்தலைவர்யாவரு
மூலமாகியமுழுமுதலைமுற்றினர். (௧௨௯)

தப்பறத்தசரதராமனுகவ
வைப்புறுபுவியில்வானரங்களாமெனச்
செப்பியதேவர்களியாருஞ்சேரவே
வொப்புரவந்துவந்தொருங்குகூடினர். (௧௩0)

ஏனையசேனைகளுமெய்திற்றதலாற்
போனவன்றன்பினேபோவதேயெனு
வானமர்மலரடிவணங்கினோர்க்கெலாந்
தேனமர்தெரியலான்றெரியக்கூறினன். (௧௩௧)

மின்பயில்தடக்கைகவேல்வீடணன்றனைப்
பொன்பயினகரினிற்போதிநீதல
மன்பதையனவுநீவாழ்தியாலென
வன்புடனுனையினகலநீக்கினன். (௧௩௨)

அன்னதுகேட்டபினருக்கன்மாமகன்
றன்னையும்விடுவதாகுமென்றுன்னியே
தன்னியல்கதிர்மாமகுடஞ்சூட்டிவைத்
தின்னணம்வந்தனையென்றிறைஞ்சினன். (௧௩௩)

ஏந்துவேலிராமனொடிரவிதன்மகன்
சேர்ந்துழிச்சேர்வதுதெளிந்துசெப்பினு
ளார்ந்தவராகினோரகிலமூன்றினும்
வாய்ந்தவர்செய்நன்றிமறக்கவல்லரோ. (௧௫௪)
மருத்துவின்மைந்தனைமகிழ்ந்துநோக்கிமுன்
புரைத்தமுணர்வியாலுலகில்வாழ்வுதன்
கருத்துமுண்டாதலாற்கனகத்தோளினு
யிருத்திநம்மாணையென்றிராமன்போயினான். (௧௫௫)
கனைகதிர்மைந்தனுங்கரடிவேந்தனுங்
குனிவுறுகுமுதனுங்கொலைமயிந்தனுந்
அனைதருதுமிந்தனுஞ்சூனிலனு
மெனையவரியாவருமேனைவேந்தரும். (௧௫௬)
வீரனதாணையின்விலங்கிநிற்கிலர்
தோரணமானகர்தொக்கமாக்களுங்
காரிகைமகளிருங்கடவுள்யாவையு
மாரணநான்குடையந்தணாளரும் (௧௫௭)
பின்னியகாதலிற்பிரிகலாற்றலர்
மன்னியதாளினில்வதிந்தவேட்கையாற்
றுன்னகர்பாழ்படத்துனைந்துசூழ்தா
வன்னவர்வாசல்விட்டகன்றுபோயினார். (௧௫௮)
உற்றதன்காதலாலுலகந்தன்னொடன்
பற்றவர்பிறந்தநாளயோத்திமாநகர்
முற்றுறுதமிழ்முனிமுகப்புமுன்னைநாள்.
வற்றியவரிமணல்வாரிபோன்றதே. (௧௫௯)
தடமலிசரயுத்தண்டுறையிற்றுழ்புன
லடியுறச்செல்வுழியலரினன்முகன்
யிடன்மிகுகணக்கிலாவிம்பலூர்திக
ளுடனணிவானகத்துச்சிதோன்றினான். (௧௬௦)
மெய்யனே துய்யனேவிளங்கும்விண்ணுளோர்க்
கையனேயமலனேயருணவாழியாங்
லையனேநின்பெருங்கடவுட்காயமோ
டெய்தனிவேண்டுமென்றிறைஞ்சிக்கூறினான். (௧௬௧)
துன்னியவானவர்துயரநீக்குவான்
மன்னியவுலகினிற்பிறந்தமாயையைத்
தன்னிகரிலாதவச்சரயுநீத்துத்தன்
பின்னவர்தம்முடன்பெயர்த்துமேவினான். (௧௬௨)
ஏதமில்சரயுமாநதியிகந்தபின்
காதலேற்றசரதன்காவல்கொண்டிடு

மாதிரானவர்பயிலரியசன்மறை
யோதுகாதலருவுமோருருவமானதே. (௧௪௩)

அழிவிலசெழுமணிச்சாயுப்பூசுறை
முழுமையும்பனிப்பவர்முழுகிமெய்த்தவி
னழிவிலவானவரிரியாவரு
பழையதங்கடவுடன்படிவமெய்தினர். (௧௪௪)

வணங்கியமலரயன்றன்னைநோக்கிமா
ணணங்கியகொடிமதிலயோத்திமாநகர்க்
கணங்கொடுவதிபவரியார்க்குங்காதலா
லிணங்கியபதியமைத்திடுதியென்றனன். (௧௪௫)

வேறு.

திறல்கொள்கரியமேனிநேமியானருள்கேட்டுத்
தறுகிசைமூலஞ்செய்யகமலமாமலரின்மேலோ
னறங்கிளர்கருணைவெள்ளத்தயோத்தியாள்பவருக்கெல்லாம்
பிறங்குசந்தானமென்னும்பெரும்பதியமைவித்தானால். (௧௪௬)

அமலனுங்கமைத்தபின்னரயோத்திமாநகரத்துள்ளார்
றியாநீர்ச்சரயுவென்னுந்திருநதியதனின்மூழ்கி
யிமையவர்வடிவமெய்தியெண்ணிலாதியங்குஞ்செய்ய
தமனியவிமானமேறித்தடங்கொள்சந்தானஞ்சேர்ந்தார். (௧௪௭)

ஆழியான்மகிழ்ந்தபூவினயன்மறைகொண்டுவாழ்த்தச்
சூழியானையின்மீதேறியிந்திரன்றுதிசெய்தேத்தப்
பூழிவாழ்மேனியானும்புகழ்ந்திடக்கணங்கள்போற்ற
வாழிவானவர்கள்கூறமருவிவைகுண்டஞ்சேர்ந்தான். (௧௪௮)

கலைமறைமுனிவர்வாழ்த்தக்காரிகையார்தங்கற்பு
நிலைபெறமன்னர்செங்கோனிலைத்தன்வில்வாழ்க
வலைகடலிலங்கைகழுதராக்கர்வேரறுத்தவவேற்
சிலைதொடுவில்லிகாதைச்செந்தமிழ்வாழ்கவென்றே. (௧௪௯)

இசையறக்காதைமுற்றுமெழுதினோர்வியந்தோர்கற்றோ
ரிசைவதன்னைச்சொல்வோர்க்கரும்பொருள்கொடுத்துக்கேட்போர்
வசைகடற்புடவிமீதேகாவலர்புகழ்வாழ்ந்து
வினையறுத்துமேலின்னவன்பதத்துச்சேர்வார் (௧௫௦)

சந்திரகேதுநகர்ப்படலம்-முற்றியது.

ஆகப்படலம். ௧௨௫- ஆ திருவிருத்தம்-௩௩௯௦.

ஆசாரியன்திருவடிகளேசரணம்.

உத்தரகாண்டம்முற்றிற்று.